வி. கிராஜெவ்

# புதிய எதார்த்தங்களும் கருத்துக்களின் போராட்டமும்

ML45
I-4-middle
2977

# வி. கிராஜெவ் புதிய எதார்த்தங்களும் கருத்துக்களின் போராட்டமும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

CENTURY BOOK HOUSE (P)
Rs 3-00
MADRAS-2

**В. Гранов**

НОВЫЕ РЕАЛЬНОСТИ И БОРЬБА ИДЕЙ

*На тамильском языке*

**V. Granov**

New Realities
and the Struggle of Ideas

*in Tamil*

© Политиздат, 1977 г.

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Г $\frac{0302020300—373}{014(01)—84}$ 342—84

## பொருளடக்கம்


முகவுரை . . . . . . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று

சர்வதேச உறவுகளில் திருப்பமும் பூர்ஷ்வா தத்துவங்களும் . . . . . . . . . . . 13

அத்தியாயம் இரண்டு

இன்றைய உலகில் மார்க்சிய-லெனினியம் . . 35

உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் விஞ்ஞானம் . . . . . . . . . . . . . . 35

யதார்த்தமான சோஷலிசம்—சித்தாந்தத் தாக்கத்தின் ஒரு தலையாய காரணி . . . . . . . . 48

மார்க்சிய-லெனினியமும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளும் . . . . . . . . . . . . . 63

மார்க்சிய-லெனினியமும் தேசிய விடுதலை இயக்கமும். . 79

அத்தியாயம் மூன்று

நவீன கம்யூனிச எதிர்ப்பின் உருமாற்றங்கள் . 96

மார்க்சியத்திற்கு எதிரான ''மார்க்சியவியல்'' . . 96

பூர்ஷ்வா சித்தாந்த மற்றும் அரசியல் போக்குகளின் நெருக்கடி . . . . . . . . . . . . . 131

பூர்ஷ்வா சீர்திருத்தவாதம்—முதலாளித்துவத்தை
''மேம்படுத்துவதற்கான'' ஒரு வழி . . . . . . 157

''சித்தாந்தத்தைக் கைவிடுவதா''? அல்லது ''சித்
தாந்தத்தைப் பலப்படுத்துவதா''? . . . . . . 185

அத்தியாயம் நான்கு

ஒரு ''சித்தாந்த மேற்கட்டுக்கோப்பைத்'' தேடிக்
கொண்டிருக்கும் சமூக-ஜனநாயகவாதிகள். . 209

# முகவுரை

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுக்கள் உலக வளர்ச்சியில் ஆழமான மாற்றங்களுக்குக் குறிப்பிடத்தக்க ஆண்டுகளாக உள்ளன. அவற்றின் பல்வகைத் தன்மையில் அவை மொத்தத்தில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கி மனிதகுலம் முன்னேறுகின்ற நம் காலத்திய முக்கியமான நிகழ்ச்சிப் போக்கின் தடுக்க முடியாத பலத்தை நிரூபித்திருக்கின்றன.

ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஏற்பட்ட பிறகு, அறுபத்தைந்து ஆண்டுகளில், சோஷலிசம் உலக வளர்ச்சியை மென்மேலும் நிர்ணயிக்கும் ஒரு சக்திமிக்க எதார்த்தமாக ஆகியிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் உருவாகியிருக்கும் சக்திகளின் புதிய இணைப்பானது சர்வதேச உறவுகளின் அமைப்பில் வளர்ந்து கொண்டிருக்கும் தீவிரமான புனரமைப்பின் சாரத்தை நிர்ணயித்திருக்கிறது. சர்வதேச விவகாரங்களில் வெவ்வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை வலுவாக்குதல் இப்புனரமைப்பின் பிரதான போக்காகியுள்ளது.

''சமாதானத்தைப் பாதுகாப்பது—நம் கட்சிக்கும் நம் மக்களுக்கும் உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குமே சர்வதேச அரங்கில் இப்பொழுது இதைக் காட்டிலும் முக்கியமான கடமை வேறு இல்லை'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசில் சமர்ப்பித்த அறிக்கையில் மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளரான லி.இ. பிரேஷ்னெவ் கூறினார்.

உலகம் முழுவதிலுமுள்ள முற்போக்குச் சக்திகள், பெருந்திரளான மக்களின் நடவடிக்கைகளினால் சர்வதேச

அரசியல் சூழலில் சகஜநிலைமையை ஏற்படுத்துவதில் முன்னேற்றங்கள் சாத்தியமாகியிருக்கின்றன. 1971ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரசால் ஏற்கப்பட்ட சமாதான வேலைத்திட்டம், அதனுடைய உள் தொடர்ச்சியான 1976ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் முன்வைக்கப்பட்ட சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு, மக்களினங்களின் விடுதலை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கான இன்னும் மேலான போராட்டத்தின் வேலைத்திட்டம் ஆகிய இரண்டும் பதற்றத் தணிவை வளர்ப்பதிலும் ஆழப்படுத்துவதிலும் விசேஷமான பாத்திரம் வகிக்கின்றன. சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் ஆக்கபூர்வமான முன்முயற்சிகள் எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றிருக்கின்றன. ஏனெனில் அவை எல்லா மக்களினங்களுடைய ஜீவாதாரமான நலன்களை வெளிப்படுத்துகின்றன.

பதற்றத் தணிவை நோக்கிய திருப்பமானது முக்கியமாக உலக அரங்கிலுள்ள சக்திகளின் அணிச்சேர்க்கையில் சோஷலிசத்திற்குச் சாதகமாக உள்ள மாற்றங்களுடன் தொடர்புடையது. மேற்கத்திய ஆளும் வட்டாரங்கள் இந்த எதார்த்தங்களைச் சந்திக்க வேண்டியிருந்தன.

1972—1974ல் உலகத்தில் வலிமை மிக்க நாடுகளான சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் இடையே பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.

இதைத் தொடர்ந்து ஒரு புறம் சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச நாடுகள் ஆகியவற்றிற்கும் மறுபுறம் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு மற்றும் பிற மேற்கத்திய அரசுகள் ஆகியவற்றிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட மற்ற பல உடன்படிக்கைகள் மத்திய ஐரோப்பாவில் எல்லைகளை மீற முடியாத தன்மையை உறுதிப்படுத்தியது, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை ஏகாதிபத்தியம் முற்றுகையிடுவதற்கு ஒரு முடிவு கட்டியது. இவ்வாறாக ஏகாதிபத்தியவாதிகள் உலகப் போர்கள் இரண்டையும் கட்டவிழ்த்து விட்ட இடத்தில் சகஜநிலைமையை ஏற்படுத்துவதை ஊக்குவித்தது.

பிறகு ஐரோப்பாவில் பாதுகாப்பையும் ஒத்துழைப்பை

யும் பற்றிய அகில ஐரோப்பிய மாநாடு 1975 ஆகஸ்டு 1ல் வெற்றிகரமாக நடந்தேறியது. பாசிசம் நிர்மூலமாகி முப்பதாண்டுகளுக்குப் பிறகு, இரண்டாவது உலகப் போரின் அரசியல் விளைவுகளை மாநாடு தொகுத்தது. உலகப் போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளில் ஐரோப்பாவில் ஏற் பட்டிருக்கும் ஆழமான மாறுதல்கள் மாற்றப்பட முடி யாதவை என்பதை அது உறுதிப்படுத்தியது. சோஷலிஸ்ட் தேசங்களின் கூட்டமைப்பு ஐரோப்பிய மற்றும் உலக அரசியலில் ஒரு தலைமையான சக்தி என்று அது காட்டியது.

இந்த மாநாடு ஐரோப்பாவிற்கு மட்டும் அதிக முக் கியத்துவமுடையதாக இருக்கவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடும் கானடாவும் இந்த மாநாட்டில் பங்குபெற்றன. ஆகவே மாநாட்டில் ஏற்பட்ட உடன்படிக்கையானது உலகத் தொழில்துறை உற்பத்தியில் கிட்டத்தட்ட எழுபத் தைந்து சதவீதத்தை உற்பத்தி செய்யும் நாடுகளையும் உலகத்தின் இராணுவச் செலவினங்களில் மாபெரும் பங்கினை ஏற்கும் நாடுகளையும் ஈடுபடுத்தியது. அகில ஐரோப்பிய மாநாட்டின் முடிவுகள் சர்வதேச நிலைமை முழுவதன் மீதும் தொடர்ந்து தீவிரமான தாக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

இவ்வாருக, எழுபதுக்களின் ஆரம்பத்தில் முதலாளித்துவ நாடுகள் கையொப்பமிட்ட சில முக்கியமான ஆவணங்கள் சோஷலிச நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற கோட்பாட்டை அங்கீகரித்தன. அதிகார பூர்வமான மேற்கத் திய ஆளும் வட்டாரங்கள் நீண்ட காலமாக ஒரு ''சூழ்ச்சிப் பொறி'', ''கம்யூனிச தந்திரம்'', இன்னபிற என்று விளக்கப்பட்டதும், முழுமையாகப் புறக்கணிக்க விரும்பிய துமான ''சமாதான சகவாழ்வு'' என்ற சொல்லும் அதைப் போலவே இந்தக் கோட்பாடும் இன்று சட்டபூர்வ இன மாகவும் சர்வதேச சட்டத்தின் ஓர் அடிப்படை விதி யாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

உலக முக்கியத்துவம் வாய்ந்த இந்த உண்மை சில நிகழ்ச்சிகளில் ஸ்தூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சோஷலிசத்திற்காகவும் தேசிய விடுதலைக்காகவுமான மக் களினங்களின் போராட்ட வரலாற்றில் வியட்நாமில் நடை பெற்ற வீரஞ் செறிந்த போராட்டம் தலைசிறந்த இடத்தைப்

பெறுகிறது. முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்ற இந்தப் போர் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் மீது முழுமையான வெற்றியில் முடிவடைந்தது. மிக நவீன ஆயுதங்களைக் கொண்ட 5,00,000 வலிமையான ஆக்கிரமிப்பாளர்களின் படை பின்வாங்க வேண்டியதாயிற்று. அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனுடைய வரலாறு முழுவதிலும் மிக மோசமான இராணுவத் தோல்வியை இந்தோசீனுவில் கண்டது. வியட்நாம் போர் அமெரிக்க சமுதாயத்தை அதிர்ச்சியடையச் செய்தது, பிற அரசுகளின் விவகாரங்களில் இராணுவ குறுக்கீடு போன்ற எதிர்கால முயற்சிகளுக்கான வாய்ப்புகளைப் பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆளும் மேல்தட்டினரிடையே கடுமையான கருத்து வேறுபாடுகளை எழுப்பியது. க்யூபாவைப் பொருளாதார முற்றுகையிட்டதை முறியடித்தது மற்றுமொரு முக்கியமான நிகழ்ச்சியாகும். மேற்கு கோளார்த்தத்தின் முதல் சோஷலிச அரசான க்யூபாவுடன் பல லத்தீன் அமெரிக்க அரசுகளும் பிற அரசுகளும் ராஜிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டன. சோஷலிஸ்டு க்யூபாவானது லத்தீன் அமெரிக்காவில் முற்போக்குச் சக்திகளைத் திரட்டும் ஒரு பிரதான காரணியாகியது, உலகத்தின் அந்தப் பகுதியிலிருக்கும் தேசங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மிகச் சிக்கலான சமூகப் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதற்கு ஒரு தெளிவான உதாரணமாகியது.

ஆப்பிரிக்காவிலும் தேசிய விடுதலை இயக்கம் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது: அங்கோலா, மொசாம்பிக் மற்றும் இதர முன்னுளைய போர்த்துகீசிய காலனிகள் தங்களுடைய சுதந்திரத்தைப் பெற்றுள்ளன. சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ்டு நாடுகளும் மக்களினங்களின் விடுதலைப் போராட்டங்களுக்குச் செயலூக்கமான ஆதரவை அளித்துக் கொண்டிருக்கின்றன, அவைகளின் விசுவாசமான நேசநாடுகளாகி அவற்றிற்கு எல்லா வகையான உதவியையும் அளித்துக் கொண்டிருக்கின்றன.

பதற்றத் தணிவு சமாதானம் மற்றும் முற்போக்குச் சக்திகளின் ஒரு பிரதான வெற்றியாகும். எவ்வாறுயினும் அது ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையிலோ அல்லது மனிதகுல வரலாற்று வளர்ச்சியில் அதனுடைய பிற்

போக்குப் பாத்திரத்திலோ எவ்விதமான மாற்றங்களையும் சுட்டிக் காட்டவில்லை.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகள் ஆயுதப் போட்டியை வேகப்படுத்திக் கொண்டிருக்கின்றன, சோஷலிச நாடுகளுக்கெதிரான சித்தாந்த சதிகளை ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கின்றன, கம்யூனிச எதிர்ப்புக் காய்ச்சலைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சமாதான சகவாழ்வின் கீழ் வர்க்கப் போராட்டம் தொடர்கிறது. இப்பொழுது அது புதிய எதார்த்தங்களுக்குப் பொருத்தமான வடிவங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. வர்க்கப் போராட்டத்தின் ஆதாரமையம் இப்பொழுது பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்தத் துறைகளில் அமைந்துள்ளது.

கம்யூனிஸ்டுகள் சித்தாந்தப் போராட்டத்திற்கும் உழைக்கும் மக்களிடையே வர்க்க உணர்வை வளர்ப்பதற்கும் அதிக முக்கியத்துவமளிக்கின்றனர். இதில் அவர்கள் விஞ்ஞான சோஷலிச தத்துவத்தை, அடித்தளத்திலிருந்து, அதாவது பொருளாதார, உற்பத்தி உறவுகளிலிருந்து ஆக்கப் பெற்ற மேல்கட்டுமான நிகழ்வுகளின் வட்டாரத்தைச் சித்தாந்த நிகழ்ச்சிப் போக்குகள் சார்ந்துள்ளன என்ற உண்மையை அவர்கள் வழிகாட்டியாகக் கொண்டிருக்கின்றனர். வர்க்கப் போராட்டத்தின் முக்கியமான களம் பொருளாதாரத்துறையாகும். புதிய சமூக அமைப்பின் வெற்றிக்கு உழைப்பின் உற்பத்தித் திறன் மிக முக்கியமான காரணியாகும் என்ற லெனினின் கோட்பாடு இன்று குறிப்பாகப் பொருத்தமாய் இருக்கிறது.

ஆனால் இரு சமூக அமைப்புகளுக்கும் இடையிலான போராட்டத்தில் பொருளாதார, அரசியல் காரணிகள் ஒரு தீர்மானமான பங்கை ஆற்றினாலும் கூட, வர்க்கப் போராட்டத்தின் சித்தாந்த வழிகளின் பாத்திரமும் முக்கியத்துவமும் இடைவிடாது வளர்ந்து கொண்டேயிருக்கின்றன.

சித்தாந்தக் காரணியின் பங்கு அதிகரித்துக் கொண்டேயிருப்பதானது, இருபதாவது நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் உற்பத்திச் சக்திகளும் சர்வதேச உழைப்புப் பிரிவினையும் அடைந்த அதிகமான மட்டம், அதன் காரணத்தால் இதுவரை கண்டிராத வளர்ச்சியடைந்த மக்களின் ஆன்மீகத் தொடர்புகளுக்கான தேவைகள்

மற்றும் சாத்தியப்பாடுகள் ஆகியவற்ருல் முன்னரே நிர்ண யிக்கப்பட்டது. விஞ்ஞானத்திலும் தொழில்நுணுக்கத்திலும் ஏற்பட்ட முன்னேற்றம் மக்கள் தொடர்புச் சாதனங்களில் ஓர் உண்மையான புரட்சிக்கு இட்டுச் சென்றது. அதன் விளைவாக, அச்சடிக்கப்பட்ட விஷயங்களை அடிப்படையாகக் கொண்ட மரபுவழிச் செய்திச் சாதனங்களின் விரைவான வளர்ச்சியுடன் வானொலித் தொடர்புகளும் குறிப்பாக தொலைக்காட்சியும் உலகம் முழுவதிலும் வளர்ச்சியடைந் துள்ளன. இது உலகம் முழுவதிலுமுள்ள மக்களை மண், விண் இரண்டிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குச் சாட்சி களாக்கியது.

உலகத்தின் பரந்த பகுதிகளில் ஆழமான சமூக சீர்திருத் தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலைமைகளில் ஏற் பட்ட வேகமான விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்ற மானது, கல்வி வளர்ச்சிக்கும் கலாச்சாரத்தின் பலன்களை இன் னும் கோடிக்கணக்கான மக்கள் பெறும்படி செய்வதற்கும் முக்கியமான காரணமாகும். குறிப்பாக, சோஷலிச அரசு கள் இந்தத் துறைகளில் மகத்தான சாதனைகளைச் சாதித் திருக்கின்றன, அங்கே உயர்நிலைக் கல்வி சர்வவியாபக மாகிக் கொண்டிருக்கிறது, பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக உயர்ந்திருக்கிறது.

ஆனால், பெரும்பாலும் சித்தாந்தக் காரணியின் அதி கரித்துக் கொண்டேயிருக்கும் பாத்திரமானது இதுவரை கண் டிராத வர்க்கப் போராட்டத்தின் வீச்சால் நிர்ணயிக்கப் படுகிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ், சமுதாயத் தின் சித்தாந்த வாழ்வை இயக்கும் செயலை முதலாளித்துவ அரசு மேலும் அதிக அளவிற்கு மேற்கொண்டிருக்கிறது. அது பல்வகை வழிகளில், பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் மற்றும் பிற சித்தாந்தத் தொடர்புச் சாதனங்கள் ஆகியவற் றின் வேலைக்கு வழிகாட்டுகிறது. அரசு சொந்த செய்திச் சாதனங்களை, குறிப்பாக பெருந்திரளான மக்களின் மீது மாபெரும் செல்வாக்கு செலுத்துகின்ற வானொலி, தொலைக் காட்சி ஆகியவற்றை மேலும் அதிகமாகத் திரட்டிக் கொண் டிருக்கிறது. அது அயல் நாடுகளை, முக்கியமாக சோஷ லிசக் கூட்டமைப்பை குறியாகக் கொண்ட சக்திமிக்க

பிரச்சார மையங்களை அமைத்து இயக்குகிறது. பிரச்சார செயல்களில் ஈடுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகள், அரசாங்க இலாகாக்கள், விஞ்ஞான மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. மேற்கத்திய உளவு ஸ்தாபனங்களின் செயல்களில் சித்தாந்த அழிவு வேலை பிரிக்க முடியாத பகுதியாகியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் நாடாளுமன்ற அறிக்கை ஒன்றின்படி சி.ஐ.ஏ. நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு, வெகுஜன செய்தித் தொடர்புகளுடனும் பிரச்சாரத்துடனும் பல ஆண்டுகளாக இணைக்கப்பட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் ஏகாதிபத்திய பிரச்சார இயந்திரம், முற்போக்குச் சக்திகளின் சக்திமிக்க செய்திச் சாதனங்களை நேருக்கு நேர் சந்திக்கிற சூழ்நிலைமையில் செயல்பட வேண்டியிருக்கிறது. சோஷலிச அரசுகள் மிகப்பெரும் பத்திரிகை அமைப்பையும் விரிவான வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சாதனங்களையும் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் மார்க்ஸ், லெனின் ஆகியோரின் கருத்துக்களையும் எதார்த்த சோஷலிசத்தைப் பற்றிய உண்மையையும் உலகத்தின் மிகத் தொலைவான மூலைகளிலும் உள்ள பகுதிகளுக்கு எடுத்துச் செல்லுகின்றன. முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளும் பிற முற்போக்கு ஸ்தாபனங்களும் இதே வழியில் மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றன.

கம்யூனிஸ்டுகள் தங்களுடைய புரட்சிகர நடைமுறையில் புரட்சிகரத் தத்துவம் மற்றும் மக்கள் திரளினரின் புரட்சிகரப் பயிற்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வரலாற்றில் இதுவரையில்லாத நிலைக்கு உயர்த்தியிருக்கின்றனர். உலகத்தின் உருமாற்றத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினிய தத்துவமானது, மக்கள் திரளினரின் உணர்வுகளை வெற்றி கொள்வதன் மூலம் ஒரு மாபெரும் பொருளாயத சக்தியாகவும் முற்போக்குப் பாதை வழியிலான மக்களினங்களின் இயக்கத்தின் ஒரு சக்திமிக்க தூண்டுகோலாகவும் ஆகியிருக்கிறது என்ற ஆய்வுரையால் அவர்கள் வழி நடத்தப்படுகின்றனர்.

சமீப ஆண்டுகளில் உருவாகியிருக்கும் புதிய நிலைமை சித்

தாந்தப் போராட்டத்தைப் பற்றிய புதிய தேவைகளை உரு வாக்கியிருக்கிறது.

எழுபதுக்களின் கடைசியிலும் எண்பதுக்களின் தொடக் கத்திலும் உலக அரசியல் அரங்கத்தில் இரண்டு திசை வழி களின் தீவிரமான போராட்டம் நடைபெற்றது. ஒரு பக்கத் தில் ஆயுதப் போட்டியைத் தடுத்தல், சமாதானத்தையும் பதற்றத் தணிவையும் பலப்படுத்துதல், மக்களினங்களின் அரசுரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் ஆகிய வற்றைப் பின்பற்றும் கொள்கை. மறு பக்கத்தில், பதற்றத் தணிவைச் சீர்குலைத்தல், ஆயுதப் போட்டியைத் தூண்டுதல், மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு அவர்களை பய முறுத்துதல், மக்களினங்களின் விடுதலைப் போராட்டங்களை நசுக்குதல் என்ற ஏகாதிபத்திய சக்திகளின் கொள்கை. ''சித்தாந்தப் போராட்டம் குறிப்பிடத்தக்க வகையில் கூர்மையடைந்திருப்பது உண்மையே. மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை இது கருத்துக்களின் முரண்பாடாக மட்டும் இருப்பதில்லை. சோஷலிச உலகத்தைச் சீர்குலைப்பதற்கு, அதைப் பிரிப்பதற்கு தங்களிடமுள்ள எல்லா வசதிகளையும் அவை பயன்படுத்துகின்றன'' என்று லி.இ. பிரேஷ்னெவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங் கிரசில் கூறினர். ஏகாதிபத்தியம் தன் சித்தாந்தத் தாக்கு தல்களை ஒன்றுகுவிப்பது அதிகரித்து வருகிறது. ஆனால் பழைய உலகத்தின் சித்தாந்திகள் மக்களின் உணர்வில் நஞ்சைக் கலப்பதற்காக எவ்வளவு பாடுபட்டாலும் சோஷ லிஸ்டு சித்தாந்தம் வரலாற்றுரீதியான தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. ''சோஷலிசத்தின் தாக்கத்தை ஏதா வது ஒரு அளவுக்குப் பெற்றிராத ஒரு நாடோ அல்லது பல நாடுகளைக் கொண்ட கோஷ்டியோ, சித்தாந்த அல்லது அரசியல் போக்குகளோ இன்று கிடையாது. இது இருப தாம் நூற்றாண்டின் யதார்த்தமாகும்.''

ஜனநாயகத்திற்கும் சோஷலிசத்திற்கும் சாதகமாக தற் கால உலகத்தில் ஏற்படும் மாற்றங்களின் செல்வாக்கின் கீழ் வளர்ந்து கொண்டிருக்கும் புதிய சித்தாந்தப் போக்கு கள் சிலவற்றைப் பற்றிய சுருக்கமான பகுத்தாய் வொன்றினை அளிப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

*அத்தியாயம் ஒன்று*

## சர்வதேச உறவுகளில் திருப்பமும் பூர்ஷ்வா தத்துவங்களும்

இன்று, சமாதானத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தும் கருத்திற்கு தனிப்பட்டவர்களும் சமூக கோஷ்டிகளும் மட்டுமல்லாது உலகத்திலுள்ள மக்கள் திரளினரும் செயலூக்கமான ஆதரவளிப்பது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. சமீபகாலத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புத் திட்டங்கள், முரட்டுத் துணிகரச் செயல்கள் ஆகியவற்றிற்கு எதிராக மக்கள் திரளின் வலுவான நடவடிக்கைகள் எல்லாம் இந்தக் காரணியின் மிகப் பெரும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டின. வியட்நாமில் நடைபெற்ற போருக்கு எதிராக உலகம் தழுவிய இயக்கம் இதற்கு உதாரணமாகும்.

சுரண்டும் வர்க்கங்கள் தங்களுடைய கொள்கைகளைத் திட்டமிடும் பொழுது புறவய வரலாற்று அனுபவம் கட்டாயமாக செல்வாக்கு செலுத்துகிறது. இருபதாவது நூற்றூண்டில் போர்களைக் கட்டவிழ்த்து விடுதலானது ஏகாதிபத்தியத்துக்கு மேலும் அதிகமான செலவை உண்டாக்கி ஏகாதிபத்தியத்தை மென்மேலும் அதிகமாக பலவீனப்படுத்தி ஒரு சமூக அமைப்பு என்ற வகையில் அதன் வீழ்ச்சியைத் தீவிரப்படுத்தி கொண்டிருக்கிறது என்பது இந்த வரலாற்று அனுபவத்திலிருந்து தெரியும்.

தற்கால வளர்ச்சியின் அடிப்படைப் போக்குகள் சமாதானத்திற்குச் சாதகமாக செயல் புரிந்து கொண்டிருக்கின்றன. வெவ்வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வு என்பது சர்வதேச உறவுகளில் ஒரு நிலையான காரணியாகும் என நம்புவதற்கு வலுவான காரணங்களை அளிக்கின்றன.

எவ்வாருயினும் உலக அரசியலில் பதற்றத் தணிவை நோக்கிய திருப்பமானது ஏற்கெனவே திரும்ப முடியாத

ஒன்ருகியிருக்கிறது என்று இது குறிக்கவில்லை. சிலியிலும் ஆப்பிரிக்காவின் தென்பகுதியிலும் மத்திய கிழக்கு பிரதேசத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை மாருமல் அப்படியே இருக்கிறது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றன. கூர்மையான சமூக நெருக்கடிகளின் கால கட்டங்களில் உள்நாட்டில் கொலைகாரத்தனமான சர்வாதிகாரத்தை நிறுவுதல், வெளிநாட்டில் இராணுவ சாகசங்களை ஆரம்பித்தல் ஆகியவற்றின் மூலம் புரட்சியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கும் ''பைத்தியக்கார'' கோஷ்டிகள் முதலாளித்துவ நாடுகளில் எவ்வாறு கையோங்கியிருக்கின்றன என்பதற்கு நம் காலத்திய வரலாறு பல எடுத்துக் காட்டுகளை அளிக்கிறது.

இடையருது கோடிக் கணக்கான மக்கள் ஒன்ருகச் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே, எல்லா கண்டங்களிலும் எல்லா நாடுகளிலும் உள்ள சமாதான ஆதரவாளர்கள் எல்லோருடைய தன்னலமற்ற காரியார்த்தமான ஒருங்கிணைந்த போராட்டத்தால் மட்டுமே பதற்றத் தணிவு நிலையானதாக முடியும்.

எனவே அகவயக் காரணியும் மக்கள் திரளினரின் உணர்வு பூர்வமான செயல்களும் சமாதானத்தைப் பாதுகாப்பதில் வழக்கத்திற்கு அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இதன் துணைகொண்டு, பதற்றத் தணிவின் பகிரங்கமான மற்றும் மறைவான விரோதிகளுக்கெதிராக மார்க்சிய-லெனினியவாதிகள் தற்பொழுது ஈடுபட்டிருக்கும் கோட்பாட்டு ரீதியிலான சித்தாந்த வாதம் தன்னுடைய முக்கியத்துவத்தை முழுமையாகத் தக்கவைத்துக் கொள்கிறது.

சமாதான சகவாழ்வைப் பற்றிய பிரச்சினைகளைச் சுற்றி எழுந்த விவாதம் முதலாளித்துவ முகாமில் நிலவும் வேற்றுமைகளைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. சோஷலிசம் நிலைத்திருக்கிறது, உலகின் பெரும் பகுதிகளில் அது பரவிக் கொண்டிருக்கிறது, அது பரவுவதை முதலாளித்துவத்தால் தடுக்க முடியாது என்ற உண்மையை சர்வதேச முதலாளித்துவம் எதிர்நோக்குகிறது. இளமையானதும் எப்பொழுதும் வளர்ந்து கொண்டேயிருப்பதுமான சோஷலிச அமைப்புடன் வரலாற்று ரீதியான விவாதத்தில் தன்னுடைய

நிலையை முதலாளித்துவம் எப்படித் தக்க வைத்துக் கொள்ள முடியும்?

இந்தப் பிரச்சினையைப் பற்றிய விவாதங்களின் ஒரு பகுத்தாய்வு முதலாளித்துவ உலகிலுள்ள கண்ணோட்டங்களின் பரிணாமத்தையும் வளர்ந்து கொண்டிருக்கும் நிச்சயமற்ற தன்மையையும் ஒற்றுமையின்மையையும் பற்றிய ஒரு கருத்தை வழங்குகிறது.

அநேகமாக சமீபத்தில், ''கெடுபிடிப் போரின்'' உச்ச கட்டத்தில் ''இறுதித் தாக்குதலை'' மேற்கொள்ளுதலையும் இரு அமைப்புகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாட்டை இராணுவ வழிகளில் தீர்த்தலையும் ஆதரிப்போர்கள் தங்களுடைய கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்டனர். அந்த நேரத்தில், ''கம்யூனிசத்தைப் பின்னால் தள்ளுவது'', ''பெருமளவு அணு ஆயுதத் தாக்குதலைத் திணிப்பது'' ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடுகள் மேற்கத்திய அரசாங்கங்களின் அதிகாரபூர்வமான போக்கை நிர்ணயித்தன. சோஷலிச அரசுகளுக்கு எதிராக வெளிப்படையான அச்சுறுத்தல்கள், அணு ஆயுத மிரட்டல், நேரடியான அழிவு வேலைகள், ஆயுதம் தாங்கிய ஆத்திரமூட்டல் ஆகிய யாவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் அதிலிருந்து உலக நிலைமை மாறியிருக்கிறது, இன்று பாசிச செய்தித்தாள்கள் கூட சோஷலிசக் கூட்டமைப்பிற்கு எதிராகப் போர் தொடுக்கும்படி பகிரங்கமாக அறைகூவத் துணிவதில்லை. நேட்டோ தளபதிகள் தொடர்ந்து தங்களுடைய ''அணு ஆயுத விளையாட்டை'' விளையாடிக் கொண்டு எதிர்காலப் போர்களில் அணு ஆயுதத் தாக்குதல்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் கூட, இவையெல்லாம் கற்பனையான ''கம்யூனிச அபாயத்திற்கு'' எதிரான ''பாதுகாப்பு எதிர் நடவடிக்கை'' என்று பிரதிநிதித்துவப்படுத்த தங்களால் முடிந்ததைச் செய்கின்றனர்.

பெரு முதலாளித்துவ வட்டாரங்களின் முக்கிய உலகக் கோஷ்டிகளின் செயல் தந்திரங்களைப் பின்வருமாறு வெளிப்படுத்த முடியும்: போரில் நமக்கு வெற்றி வாய்ப்புகள் இல்லாவிட்டால் போரைக் கட்டவிழ்த்து விடுவது வரை போகாமல் முதலாளித்துவம் கையோங்குவதற்கான ஒரு நம்பிக்கையையும் குறுகிய காலத்தில் கம்யூனிசத்தின்

புதிய வெற்றிகளைத் தடுக்கும் நம்பிக்கையையும் கொடுக்கக் கூடிய சமாதானத்தை நாம் சோஷலிச அரசுகளின் மீது திணிக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால் இந்தக் குறிக்கோளை அடைவது எப்படி? இங்கே ஏகமனதான கருத்து என்பது அசாத்தியமான ஒன்று; பலவேறுபட்ட கருத்துக்களிடையே மிகவும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போக்குகளைப் பிரித்தெடுப்பது மட்டுமே சாத்தியமாகும்.

வரலாற்று வளர்ச்சியில் முதலாளித்துவத்திற்குச் சாதகமான ஒரு திருப்பத்தைப் பெறுவதற்காகக் ''கெடுபிடிப் போர்'' நிலைகளுக்குத் திரும்ப விரும்புபவர்கள் அவற்றில் ஒன்றை ஆதரிக்கிறார்கள்.

அவர்கள், பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் மார்கரெட் தாட்சரைப் போன்று, ''சோவியத் அபாயத்தையும்'' ''உலகம் முழுவதையும் மேலாதிக்கம் செய்வதற்கான சோவியத் யூனியனின் விருப்பார்வங்களையும்'' சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிச நாடுகளின் பொருளாதார மற்றும் விஞ்ஞான வலிமை அதிகரிப்பதுடன், சமாதான சகவாழ்வின் கோட்பாடுகள் உறுதியாகிக் கொண்டிருக்கும் போது இந்த ''அபாயம்'' வளர்வதாகச் சொல்லப்படுவதைப் பற்றி மீண்டும் மீண்டும் தொடர்ந்து பேசுகின்றனர். நேட்டோ உறுப்பு அரசுகள் தொடர்ந்து இராணுவ வெறியைப் பெருக்கவும் தங்களுடைய இராணுவச் செலவுகளை அதிகப்படுத்தவும் வேண்டும் என்று கோருகின்ற பல்வேறு நேட்டோ ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளால் இத்தகைய கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என்பது அறிந்ததே.

பதற்றத் தணிவை எதிர்த்துப் போராடுவதில் இராணுவ—தொழில்துறைத் தொகுதியுடன் நெருக்கமாக இணைக்கப்பட்ட இந்த மிகத் தீவிரமான பிற்போக்கு வட்டாரங்கள் தங்களுடைய சொந்த நாடுகளில் ஏற்படும் சமூக அதிருப்தி அலையைக் கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு திசையில் திருப்ப விரும்புகின்றன. இதற்காக மேற்கு நாடுகளில் எல்லா பொருளாதார சீர்கேடுகளுக்கும் அரசியல் உறுதியற்ற தன்மைக்கும் முற்போக்குச் சக்திகளைக் குறைகூறும் பழைய முறையை அவை பயன்படுத்துகின்றன. பதற்றத் தணிவு என்பது ''கிரெம்ளினுக்கு இலாபகரமாக இருக்கக் கூடிய ஒரு வழிப் பாதை'' என்றும் பதற்றத் தணிவு என்ற

போர்வையில் எல்லா ஐரோப்பிய நாடுகளும் ''கம்யூனிஸ்டு களுக்கு இரையாகும்'' என்றும் இதுபோன்ற பிறவற்றை யும் கூறி அவை மேற்கு நாடுகளிலுள்ள பொது மக்களை நம்பவைக்க முயலுகின்றன.

இந்த வட்டாரங்களின் கருத்துப்படி, பதற்றத் தணிவு என்பது சர்வதேச உறவுகளில் எத்தகைய கணிசமான மாற் றங்களையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறு, சோவியத் யூனி யனுக்கான முன்னுளைய பிரிட்டிஷ் தூதர் வில்லியம் ஹேடர் என்பவர் சோவியத் யூனியனுடனுன உறவுகளில் ''சமா தான சகவாழ்வு என்பது உண்மையில் ருஷ்யனில் மொழி பெயர்க்கப்படும் 'கெடுபிடிப் போராகும்' '' என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுவது அவசியம் என் கிருர்.* அதன் விளைவாக ''கெடுபிடிப் போரின்'' போது சோஷலிச அரசுகளுக்கெதிராக பயன்படுத்தப்பட்ட அர சியல் போக்கும் கவிழ்க்கும் வழி வகைகள் முழுவதும் அடிப் படையிலேயே மாருமல் இருக்க வேண்டும் என்பதை இந்தக் கண்ணேட்டத்தை ஆதரிப்போருடைய வாதம் உணர்த்து கிறது.

பதற்றத் தணிவைப் பகிரங்கமாக எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகமில்லை. ஆனுலும் அவர்கள் மிகப் பெரும்பாலான மூலாதாரங்களை இன்னமும் கட்டுப்படுத்து கின்றனர், மிகவும் செயலூக்கத்துடன் பாடுபடுகின்றனர். தேசங்களுக்கு இடையில் சமாதானத்திற்கெதிரான சில கவிழ்க்கும் செயல்களில் அவர்கள் வெற்றி பெற்றிருக் கின்றனர். அவர்களுக்கு எதிர்ப்பைக் கைவிடும் விருப்பம் கிடையாது.

ஆனுல் இன்று சமாதானம், சர்வதேச நிலவரத்தை சீர் படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆதரவாக நிற்கும் சக்திகள் எங்கும் வளர்ந்துள்ள போது, 70க்களின் பதட்டத் தணிவின் நல்ல விளைவுகளை மேலைய நாடுகளிலுள்ள பரவலான பொதுமக்கள் உணரத் துவங்கியுள்ள போது, இத்தகையச் சூழ்நிலைகளில் அணு ஆயுத சச்சரவு, ''மட்டான'' அல்லது ''இழுபறியான'' அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதைப் பற்றிய வெளிப்படையான அச்சுறுத்தல்களால் ஒன்றும் செய்ய இய

* *The Times*, 7 September 1973, p. 17.

லாது. பதட்டநிலையைத் தூண்டிவிடும் பலர் இன்று சமாதான நண்பர்களாக மாறுவேடம் போட வேண்டியுள்ளது.

அவர்கள் அமெரிக்க செனட்டர் ஹென்ரி ஜாக்ஸனைப் போன்று ''மோசமான'' பதற்றத் தணிவும் ''நல்ல'' பதற்றத் தணிவும் உள்ளன என்றும், அதாவது உலகத்தில் ''அமெரிக்கத் தலைமையைத்'' தக்கவைத்துக் கொள்வதை சாத்தியமாக்கக் கூடியதும், சோவியத் யூனியனையும் அதனுடைய நேச நாடுகளையும் அவற்றின் அடிப்படையான நிலைகளிலிருந்து, முதன்முதலில் அயல்நாட்டுக் கொள்கையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திலிருந்து, பின்னர் சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்திற்குரிய மார்க்சிய-லெனினிய உள்நாட்டுக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லத் தூண்டுவதை சாத்தியமாக்கக் கூடியதுமான பதற்றத் தணிவு ''நல்ல'' பதற்றத் தணிவு என்றும் அறிவிக்கின்றனர். சமாதான ஆதரவாளர்களின் வேடத்தில் செயல்படும் இந்த நபர்கள் பதற்றத் தணிவை ஒழித்துக் கட்டுதல், சர்வதேச ஒத்துழைப்பை அரித்தழித்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட தங்களுடைய பழைய வழியிலான செயலைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

70க்களில் முக்கிய முதலாளித்துவ அரசுகளின் அயல்நாட்டுக் கொள்கைகளைத் திட்டமிட்டு அமுலாக்கும் பிரதான பொறுப்பு வாய்ந்த வட்டாரங்களின் கொள்கை குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்திருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிற்பட்ட வளர்ச்சியின் அனுபவம் ''கெடுபிடிப் போரை'' மேலும் நிறைவேற்றுவது ''ஆதாயமாக'' இராது என்பதைப் புரிந்துகொள்ள அவர்களை இட்டுச் சென்றிருக்கிறது. சோஷலிச நாடுகளுடன் உறவுகளை சகஜமாக்குதல், ஆக்கபூர்வமான ஒத்துழைப்பின் வணிக மற்றும் பிற வடிவங்களை வளர்த்தல் போன்ற அதிக எதார்த்தமான ஒரு போக்கை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது.

சில முதலாளித்துவ நாடுகளில் அரசாங்கத் தலைவர்கள் பதற்றத் தணிவின் நிகழ்ச்சிப் போக்கை ஆழமாக்கும் தங்களுடைய விருப்பத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்; அந்தத் திசையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, பல பொருத்தமான கருத்துக்களைப் பற்றிய பேச்சுகள் துவங்கியுள்ளன.

அதே நேரத்தில், சோஷலிச நாடுகளுடன் உறவுகளைச் சகஜமாக்குவதை நோக்கிய எதார்த்த நடவடிக்கைகள் ''கெடுபிடிப் போரின்'' உணர்வை நினைவூட்டுகிற செயல்களால் பன்முறை தடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அச்செயல்களாவன: சோவியத் யூனியன் மற்றும் அதனுடைய நேச நாடுகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள்; வியாபாரத் தொடர்புகளை விரிவுபடுத்துவதில் வேறுபாடுடைய நடவடிக்கைகள்; ''மனித உரிமைகள்'' பற்றி அக்கறை கொள்ளுதல் என்ற சாக்குப்போக்கில் சோஷலிச நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் முயற்சிகள், இதரவை. பதற்றத் தணிவின் கீழ் கூட, சோஷலிசத்திற்கெதிரான தங்களுடைய போராட்டத்தை ''சமாதான'' வழிகளில் தொடர அவை விரும்புகின்றன, சோஷலிச அரசுகளிடமிருந்து பதற்றத் தணிவிற்காக உச்ச அளவு ''கட்டணத்தைப்'' பெற விரும்புகின்றன என்ற உண்மையை இந்த வட்டாரங்கள் இரகசியமாக வைக்கவில்லை.

இதுகாறும் உள்ள சமூக நிலையைப் பாதுகாக்கும் கோரிக்கை குறிப்பிட்ட வற்புறுத்தலுடன் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; உலகில் முதலாளித்துவ நாடுகள் தங்களுடைய ''செல்வாக்கு மண்டலம்'' எனக் கருதும் பகுதிகளில் ஏகபோக மூலதனத்தின் நிலைகளைப் பாதுகாத்தல் என்பது இதன் அர்த்தம். இதற்காக சோஷலிச நாடுகள் குறிப்பிட்ட ''உத்திரவாதங்கள்'' கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறது. இவ்வாறாக, அங்கோலாவில் சுதந்திரத்திற்கான வெகுஜனப் போராட்டத்தின் உச்ச கட்டத்தில், போர்த்துகீசியாவில் பாசிசக் கும்பல் தூக்கி எறியப்பட்டதைப் பின்தொடர்ந்த நிகழ்ச்சிகளின் போது அமெரிக்க ஐக்கிய நாடு, சில மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள், போர்த்துகல் மற்றும் அங்கோலாவில் உள்ள முற்போக்குச் சக்திகளுக்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகள் தடையின்றி பழிவாங்குவதற்கு சோவியத் யூனியன் மற்றும் அதனுடைய நேச நாடுகள் ஆகியவற்றின் சம்மதத்தைப் பெறுவதற்கான அறிக்கைகளோடு உண்மையில் முன்வந்தனர். போர்த்துகல் மற்றும் அங்கோலாவில் உள்ள மக்களினங்களுடன் சோஷலிச நாடுகளின் மக்களினங்களின் ஒற்றுமையானது... ''ஹெல்சின்கி உணர்வை'' மீறுவதாகும் என்றும் பதற்றத்

தணிவுடன் முரண்பட்டது என்றும் உலக மக்களை நம்பவைக்க பூர்ஷ்வா பத்திரிகைகள் ஆரவாரமான இயக்கம் ஒன்றை ஆரம்பித்தன. தங்களுடைய சுதந்திரத்தையும் விடுதலையையும் பாதுகாத்துக் கொண்டிருந்த மக்களினங்களுக்கு சோவியத் யூனியனும் பிற சோஷலிச நாடுகளும் தங்களுடைய உதவியை நிறுத்தாவிடில் பதற்றத் தணிவு முடிவிற்கு கொண்டு வரப்படும் என்று நேரடியாக அச்சுறுத்தப்படு மளவிற்குக் கூட விஷயங்கள் சென்றன.

ஆனல் பாசிச சர்வாதிகாரங்களுக்கு எதிரான போர்த்து கல், கிரீஸ், ஸ்பெயின், சிலி ஆகியவற்றின் மக்களினங்களின் போராட்டத்தை நிறுத்தும்படியும் இனவெறியர்கள், அந்நிய குறுக்கீட்டாளர்கள், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் ஆகியோருக்கு எதிராக அங்கோலா, நமீபியா, ஜிம்பாப்வே ஆகியவற்றின் மக்களினங்கள் ஆயுதம் தாங்கிப் போராடுவதை நிறுத்தும்படியும் அம்மக்களினங்களை யார் கட்டாயப்படுத்த முடியும்? அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ மற்றும் நிதி பலத்தினல் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கப்பட்டாலும், இஸ்ரேலுடைய ஆக்கிரமிப்புடன் ''சமரசமாகப்'' போகும்படி அராபிய உலகத்தை யாராவது கட்டாயப்படுத்த முடியுமா? ஈரானில் ஷா மன்னரின் ஊழல் நிறைந்த சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடுவதிலிருந்து ஈரான் மக்களையும் சமோசாவின் இரத்த வெறி பிடித்த சர்வாதிகாரத்துக்கு எதிராகப் போராடுவதிலிருந்து நிக்கராகுவாவின் தேசபக்தர்களையும் யாராவது தடுக்க முடிந்ததா? முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர்களைச் சுரண்டலுக்கு எதிராகப் போராடுவதைக் கைவிடும்படி தூண்டவோ அல்லது வளரும் அரசுகளைத் தங்களுடைய சொந்த எதிர்காலத்திற்கும் தங்களுடைய இயற்கைச் செல்வத்திற்கும் தங்களுடைய விதியை நிர்ணயித்துக் கொள்ளும் உரிமைக்காகவும் ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கு எதிரான தங்களுடைய போராட்டத்தை நிறுத்தும்படி தூண்டக் கூடிய சக்திகள் எதுவும் இல்லை. பதற்றத் தணிவு என்பது அரசுகளுக்கிடையிலான உறவுகளைப் பொறுத்தது. எந்த விதத்திலும் அது வர்க்கப் போராட்ட விதிகளை அழிக்காது, நீக்க முடியாது, மாற்ற முடியாது.

அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருப்பதைப் பதற்றத் தணிவு குறிப்பிடுகிறது. சோஷலிச மற்றும் முதலாளித்துவ நாடுகளால் கையொப்பமிடப்பட்ட எல்லா ஆவணங்களிலும் இந்தக் கோட்பாடு கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆவணங்கள் பதற்றத் தணிவின் கோட்பாடுகளையும் போக்குகளையும் நிர்ணயிக்கின்றன. உலகத்தை சில ''செல்வாக்கு மண்டலங்களாகப்'' பிரிப்பதற்கான முயற்சிகள் எல்லாம் இந்தச் ''செல்வாக்கு மண்டலங்களுக்குள்'' சேர்க்கப்படும் அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதலைக் குறிக்கின்றன. எனவே அவை பதற்றத் தணிவுடனும் சமாதான சகவாழ்வுடனும் முரண்பட்டவையாகும். பிற நாடுகள் தங்களுடைய அரசியல் அமைப்பில் மாற்றங்கள் எதையும் செய்யும்படி சோஷலிச அரசுகள் கோருவதில்லை. ஆனால் இந்தச் சர்வதேச நடத்தை விதியை சோஷலிச நாடுகள் மட்டுமே கடைப்பிடித்தால் போதுமா?

பதட்டத் தணிவை வெளிப்படையாகச் சீர்குலைக்கும் நோக்கத்தோடு அமெரிக்க ஆளும் வட்டங்கள் கடைபிடிக்கும் கொள்கையையும் உலகை ''கெடுபிடி யுத்த'' காலத்திற்குத் திருப்பி இட்டுச் செல்லும் முயற்சியையும் அமெரிக்காவில் எண்பதுக்களின் தொடக்கத்தில் ''சர்வதேச பயங்கரவாதம்'' என்ற அர்த்தமற்ற கோட்பாடு தோன்றியிருப்பதையும், உலகத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களின் மாற்றப்பட முடியாத தன்மையைப் புரிந்து கொள்வதற்குத் தயங்குவதைக் கொண்டுதான் விளக்க முடியும். இக்கருத்தின் கூர்முனை ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள தேசிய விடுதலைச் சக்திகளுக்கு எதிராக நீட்டப்பட்டிருக்கிறது. இச்சக்திகளின் மீது ''பயங்கரவாதம்'' என்ற பெயரை ஒட்டுவதற்கு, அதன் மூலம் அவற்றை சட்டவிரோதமாக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து தேசிய, பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்காக மக்கள் நடத்துகின்ற போராட்டத்தை நசுக்குவதை ''சட்டபூர்வமாக'' நியாயப்படுத்துவதற்கும் உலகத்தின் எந்தப் பகுதியிலும் அமெரிக்க ஐக்கிய நாடு அல்லது நேட்டோ ஸ்தாபனத்தின் ஆயுத ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதற்கும் ''சர்வதேச பயங்கரவாதத்தைப்'' பற்றிய பிரகடனங்கள் பயன்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை மதிப்பிடுகின்ற

பொழுது லி.இ.பிரேஷ்னெவ் பின்வருமாறு வலியுறுத்தினர்: ''உலகத்தில் முற்போக்கான மாற்றங்கள் ஏற்படுவதைத் தடுக்க, மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் எஜமானர்களாக மறுபடியும் வருவதற்கு அவர்கள் முயற்சிக்கிறுர்கள், அதாவது செய்ய முடியாததைச் செய்ய முயற்சிக்கிறுர்கள்.''

முதலாளித்துவ உலகத்திலுள்ள செல்வாக்கு மிக்க ஏகாதிபத்திய சக்திகள் தங்களுடைய சொந்த ''செல்வாக்கு மண்டலங்கள்'' என்று தாங்களே கருத விரும்புகிற பிராந்தியங்களுக்குத் தாங்களே தனி எஜமானர்களாக இருக்க வேண்டும் என்று கோருவதோடு நில்லாமல் சோஷலிச நாட்டு மக்களினங்களின் அரசுரிமைகள் மீதான ஆக்கிரமிப்பு என்று மட்டுமே வர்ணிக்கக் கூடிய கோரிக்கைகளையும் முன்வைக்கின்றன.

முக்கியமாக,''கருத்துக்கள், மக்கள், செய்திகள் ஆகியவற்றின் சுதந்திரமான பரிமாற்றத்தின்'' மிகவும் விசேஷமான ஒரு வடிவத்தைப் பற்றிய பேச்சு அதிகமாக இருக்கிறது. இன்று ''கெடுபிடிப் போரைத்'' தொடர்வதற்குச் சாதகமாகப் பேசிக் கொண்டிருக்கும் அதே பத்திரிகைகள் ''செய்திச் சுதந்திரத்திற்காக'' தங்களுடைய குரல்களை உயர்த்திக் கொண்டிருக்கின்றன. ''சோஷலிசத்தைப் பற்றிய உண்மையை அமுக்கி வைக்கவும் திரித்துக் கூறவும் முதலாளி வர்க்கம் ஆயிரக்கணக்கான வழிகளைப் பயன்படுத்துகிறது. முதலாளித்துவ உலகில் ''செய்திச் சுதந்திரம்'' என்பது ஒரு சில ஏகபோகவாதிகளின் கரங்களிலும் தங்களுடைய சொந்த நலன்களைக் கவனிக்கும் முதலாளித்துவ அரசின் கரங்களிலும் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே இருந்து கொண்டிருக்கிறது. செய்தித்தாள், செய்தி ஸ்தாபனங்கள், வானெலி, தொலைக்காட்சி, சினிமா, மற்ற செய்தித்துறை ஸ்தாபனங்கள் ஆகியவை பல ஏகபோகவாதிகளின் சிறு குழுக்களுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் சொந்தமாக உள்ளன. அவர்கள் மக்கள் திரளினரின் உணர்வை விருப்பம் போல மாற்றுவதற்கான சாதனங்களாக அவற்றை மாற்றியிருக்கின்றனர்.

''கருத்துக்கள், மக்கள், செய்திகள் ஆகியவற்றின் சுதந்திரமான பரிமாற்றம்'' என்று முழங்கப்படும் சொற்களின்

உண்மையான அர்த்தத்தை முதலாளித்துவ முகாமில் அதிக வெளிப்படையாகப் பேசும் பொதுநபர்கள் இரகசியமாக வைத்திருக்கவில்லை. சகவாழ்வையும் பதற்றத் தணிவையும் மேற்கு நாடுகள் ஓர் அரசியல் ஆயுதமாகவும் கருத வேண்டும்; அதன் மூலமாக உள்ளிருந்தே கம்யூனிசத்தை வெற்றி கொள்வதற்காகக் கம்யூனிச முகாமில் ஜனநாயகப்படுத்துதலையும் மிதவாதப்படுத்துதலையும் மேம்படுத்த முடியும் என மேற்கு ஜெர்மானிய பிற்போக்குவாதத் தலைவர்களில் ஒருவரான ஸ்டிராவுஸ் என்பவர் அறிவித்தார். உள்ளிருந்தே அழிவு வேலை மூலம் சோஷலிசத்தைக் கலைத்தல்—இப்படிப் பட்டதுதான் இந்தச் ''செய்திச் சுதந்திர'' வீரர்களின் விருப்பங்களின் முக்கியத்துவமாகும்.

இந்தப் பிரச்சினைகளில் சோஷலிச நாடுகளின் நிலை நீண்ட காலமாக நன்கு தெரிந்ததே. கலாச்சார, விஞ்ஞான இணைப்புகளை விரிவுபடுத்துதல், இலக்கியத்தையும் கலையையும் விரிவாகப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றிற்கு அவை சாதகமாக உள்ளன. உதாரணமாக, சோவியத் யூனியன் எந்த நாட்டையும் விட மிக அதிகமாக அயல் நாட்டு விஞ்ஞானிகள் மற்றும் எழுத்தாளர்களின் நூல்களைப் பிரசுரிக்கிறது. நவீன மற்றும் மூலச்சிறப்புள்ள அயல்நாட்டு நாடகங்கள், திரைப்படங்கள், சங்கீதம், நுண்கலை இதரவைகளில் சோவியத் மக்களுக்குப் பரவலான பரிச்சயம் உண்டு. ஒவ்வொரு நாளும் சோவியத் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவை உலக மக்களினங்களின் வாழ்க்கையைப் பற்றியும் சர்வதேச உறவுகளின் பிரச்சினைகளைப் பற்றியும் விரிந்த அளவில் பல்வகைச் செய்திகளை அளிக்கின்றன. இந்த அடிப்படையில் சோவியத் பொதுமக்களின் மிக விரிந்த பகுதியினர் உலக அரசியலிலும் பொருளாதாரத்திலும் கலாச்சாரத்திலும் ஆழமான ஆர்வமுடையவர்களாகிக் கொண்டிருக்கின்றனர். இதைப் போன்ற போக்கை சோஷலிசக் கூட்டமைப்பின் எல்லா நாடுகளும் தொடர்கின்றன.

ஆனால் கலாச்சாரப் பரிமாற்றம் என்பது தேசிய அரசுரிமையை மதித்தல், ஒருவர் மற்றவரின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் ஆகியவற்றின் அடிப்படையிலான சமத்துவ சர்வதேச உறவுகளின் முக்கிய கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் ஈடுபடுவதாக இருக்க வேண்டும். நட்

புணர்வுடனும் சமாதான உணர்வுடனும் வருபவர்களுக்கு சோஷலிச அரசுகளின் கதவுகள் விருந்தோம்பலுடன் திறந்திருக்கின்றன. ஆனால் சோஷலிச சமுதாயத்தின் அமைப்பு, கலாச்சாரம், ஒழுக்கக் கோட்பாடுகள் மற்றும் நெறிகள் ஆகியவற்றைப் பற்றிய பகை வித்துக்களால் நிரப்பப்பட்ட நச்சான சித்தாந்தச் சரக்கை உடையோர்களுக்கு அக்கதவுகள் தடையின்றித் திறந்திருக்க முடியாது.

சமாதான சகவாழ்வைப் பற்றிய முதலாளித்துவ அரசியல்வாதிகளின் மறுப்புகளும் ''சந்தேகங்களும்'' அரசியல் விஞ்ஞானிகளால் ஆதரிக்கப்படுகின்றன. முதலாளித்துவ ஆளும் வட்டாரங்கள் நீண்டகால அரசியல் போக்கை வளர்க்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட தத்துவார்த்தக் கருதுகோள்கள், போர்த்தந்திரக் கணக்கீடுகள் ஆகியவற்றின் ஒரு தொகுதியை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

சர்வதேச உறவுகளைப் பற்றிய பூர்ஷ்வா தத்துவங்களும் உலக நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்களால் இயல்பாக பாதிக்கப்படுகின்றன. இந்த மாற்றங்களின் தன்மையை, ஐம்பதுக்களில் அமெரிக்க அயல்நாட்டு இலாகாவின் ஒரு பிரதான அதிகாரியாக இருந்தவரும் இப்பொழுது சர்வதேச உறவுகளின் தத்துவாசிரியராக உள்ளவருமான ஜார்ஜ் கென்னனின் கூற்றுகளால் மதிப்பிட முடியும்.

நாற்பதுக்களின் இறுதியிலும் ஐம்பதுக்களின் ஆரம்பத்திலும் கென்னன் வெறிபிடித்த ''கெடுபிடி போர்'' ஆதரவாளர்களின் கண்ணோட்டத்தை முழுமையாக ஆதரித்தார். அந்த ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படையாக நிறுவப்பட்ட ''தடுத்து நிறுத்தும்'' தத்துவத்தின் ஆசிரியர் அவர்தான். பின்னால், அமெரிக்க ''சோவியத் இயலாளரான'' ஆடம் உலாம் என்பவர், இந்தத் தத்துவம் சோஷலிச நாடுகளுக்கெதிராக ஸ்தல அளவில் போர்களையும் ஒரு பெரும் போருக்கான தயாரிப்பையும் எதிர்நோக்கியது என்று எழுதினார்.*

''கெடுபிடிப் போர்'' கொள்கையில் ஏற்பட்ட தோல்விகள் கென்னனை அமெரிக்க அயல்நாட்டு இலாகாவிலிருந்து

---

* Adam B. Ulam, *Expansion and Coexistence. The History of Soviet Foreign Policy, 1917—1967*, London, 1968 பார்க்க.

விலகும்படியும் விரிவுரையாளராகும்படியும் தூண்டின. அவருடைய சொற்பொழிவுகளில் அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையின் விளைவுகளை நம்பிக்கையில்லாத வகையில் அவர் தொகுத்தளித்தார்.

மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், அதனுடைய குறிக்கோள்களை அடைவதற்கு முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான பகிரங்க இராணுவ மோதலை ஒரு வழியாக ஒரு விதத்திலும் கருதவில்லை என்பதை ஒப்புக் கொள்ளும்படி கென்னன் நிர்ப்பந்திக்கப்பட்டார். சோவியத் யூனியனின் தலைவர்கள் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கத் திட்டமிட்டனர் அல்லது இராணுவ மோதலில் வெற்றியை அடையலாம் என்ற நம்பிக்கை எதையும் வைத்திருந்தனர் என்பது சோவியத் யூனியனின் வரலாற்றில் ஒருபொழுதும் இருந்ததில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார். வேறு வார்த்தைகளில் கூறினால், எதிரெதிரான இரு சமூக அமைப்புகளுக்கு இடையிலான உறவுகளில், ஒரு புறம் சோஷலிச நாடுகளுக்கும் மறு புறம் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மோதல் தவிர்க்க முடியாத ஒன்று என அவர்கள் கருதவில்லை என்பதை கென்னன் குறிப்பிட்டார்.* இவ்வாறாக, இந்த முக்கியமான விஷயத்தில் ''கெடுபிடிப் போர்'' காலகட்டத்தின் அமெரிக்கப் பிரச்சாரம், அரசியல் விஞ்ஞானத்தின் முன்னணிப் போக்குகளிலிருந்து, அதாவது சோவியத் யூனியனை ஆக்கிரமிப்புச் செய்யும் நாடு என்று குற்றம் சாட்டியதும், மார்க்சிய-லெனினிய போதனையின் ''சமரசமற்ற'' தன்மையில் இத்தகைய ''ஆக்கிரமிப்பு'' இருக்கிறதா என்று காண முயன்றதுமான மனப்போக்குகளிலிருந்து கென்னன் விலகுவதாகத் தோன்றியது.

கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டம் என்பது உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்ததாகத்தான் இருக்க வேண்டும் என்பதைத் தன்னுடைய ஒப்புதல்களிலிருந்து கென்னன் முடிவு செய்தார். அப்படியானால் அதன் அர்த்தம் என்ன?

சோவியத் யூனியனின் உள்நாட்டுக் கொள்கையை வாஷிங்டன் விரும்புகின்ற திசையில் மாற்றுவதற்கான

* *An Atlantic Monthly Press Book*, 1961 பார்க்க.

முயற்சிகளைக் கென்னன் ஆதரித்தார் என்பதை அறுபதுக் களில் Foreign Affairs என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப் பட்ட அவருடைய கட்டுரை ஒன்று காட்டியது. சோவியத் யூனியன் தன்னுடைய ''அரசியல் சிந்தனை மற்றும் கூற்று களின் வறட்டுச் சூத்திரத்தையும்'' அந்நிய வணிகத்தின் மீதான அரசாங்க ஏகபோகத்தையும்கூடக் கைவிட வேண் டும் என்று அவர் கூறினார். ஏனெனில் பிந்தியது ''மேற்கு நாடுகளின் கண்ணோட்டத்தின்படி எதை நியாயமாக எதிர் பார்க்க முடியுமோ அதற்கு உச்சவரம்பு இடுகிறது'' என்று கென்னன் இராஜ தந்திர ரீதியாக விளக்கினார்.* இன்னும் எளிமையாகச் சொன்னால், சோவியத் மக்கள் மார்க்சிய-லெனினியத்தைக் கைவிட வேண்டும் என்றும் சோவியத் மார்க்கெட்டில் கெட்டிக்கார அந்நிய வணிகர்கள் தடை யில்லாமல் செயலாற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் கென்னன் விரும்பினார். இவற்றிற்கெல்லாம் மகுடம் சூட்டியதைப் போல் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நிறுவிய புதிய கிழக்கு ஐரோப்பிய சோஷலிச அரசு களின் சட்டபூர்வத்தன்மையைக் கென்னன் மறுத்தார்.

ஆனால் அறுபதுக்கள் முடிந்த பின்னர், எழுபதுக்களின் ஆரம்பத்தில் கென்னன் உலக அரசியலில் புதிய மாற்றங் களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதிய தோல்விகளை யும் கண்டார். அவர் மீண்டும் நிலைமையை எடைபோட் டார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் அயல்நாட்டுக் கொள் கையை மேலும் வகுக்கும் முயற்சியில், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைக் கைவிடும் உள் எண்ணம் சோவியத் யூனி யனுக்கு இல்லையெனினும் சோவியத்-அமெரிக்க உறவுகளில் போர் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டிய எந்த அரசியல் பிரச்சினைகளும் இருந்ததில்லை என்ற முடிவிற்கு வந்தார். கருத்து வேறுபாடான பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்க்க சோவியத் யூனியனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்து வதற்குச் சாதகமாக கென்னன் முன்வந்தார். அறுபதுக் களைப் போல் அல்லாமல், அவர் சோவியத் யூனியன் முன் எந்த முன்கோரிக்கைகளையும் இப்படிப்பட்ட பேச்சுவார்த் தைகளுக்கு நிபந்தனையாக வைக்கவில்லை.**

---

* *Foreign Affairs*, Vol. 38, No. 2, 1960, pp. 187, 189.

** *Foreign Affairs*, Vol. 51, No. 1, 1972, pp. 210-227.

இருப்பினும் அமெரிக்க ஐக்கிய நாடு இராணுவ, பொருளாதார, அரசியல் ரீதியாக முழு பலத்தைக் கொண்டு தன்னுடைய வலிமைக் கொள்கையின் நிலையை விடாமல் தொடர்ந்தால் மட்டுமே இத்தகைய பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க முடியும் என்பதைச் சோர்வில்லாமல் கென்னன் நினைவூட்டினர். சோஷலிச நாடுகள் மீது நிர்ப்பந்தத்தைத் திணிக்கும் ஒரு வழியாக, அந்நாடுகளிலிருந்து அரசியல் மற்றும் பிற சலுகைகளைப் பெறும் ஒரு வழியாக, வெளிப்படையான வலிமையானது கென்னனுடைய கருத்தோட்டங்களின் முக்கியமான உட்கூருக தொடர்ந்து இருக்கிறது.

வலிமையை அடிப்படையாகக் கொண்ட கொள்கை அவசியமான ஒன்று என்று கருதுவதில் மிகவும் அனுபவசாலியான கென்னன் எல்லா விவரங்களையும் பூர்த்தி செய்ய விரும்பவில்லை என்று அவருடைய கற்றறிந்த கூட்டாளிகளில் பலர் அவரைவிட மிகவும் வெளிப்படையாகப் பேசுகின்றனர். இன்று கூட சமாதான சகவாழ்வை சோவியத் யூனியனுடனும் அதனுடைய நேச நாடுகளுடனும் பேரம் பேசும் விஷயமாக அவர்கள் கருதுகின்றனர், பேரம் பேசும் நிகழ்ச்சிப் போக்கில் சோஷலிசக் கூட்டமைப்பிற்குள் முதலாளி வர்க்கம் விரும்பத்தக்க மாற்றங்கள் நடைபெற வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

உதாரணமாக, ஜோசப் கோர்பெல் என்ற அமெரிக்க அரசியல் விஞ்ஞானி சமாதான சகவாழ்வு கிழக்கு ஐரோப்பாவில் ''மிதவாதப்படுத்தலுக்கு'' இட்டுச் செல்ல வேண்டும் என்று அறிவிக்கிருர். அவருடைய கண்ணேட்டத்தில் ''மிதவாதப்படுத்தல்'' என்ருல் சோஷலிச அமைப்பில் படிப்படியான உள்மாற்றங்களின் மூலமும் சோவியத் யூனியனுடனை தங்களுடைய தொடர்புகள் பலவீனமடைவதன் மூலமும் முதலாளித்துவத்தை நோக்கி கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகள் நழுவும் என்பதாகும். ''கிழக்கு ஐரோப்பிய சோஷலிசமானது'' முதலாளித்துவத்துடன் ''ஒன்றிணையும்'' என்ற நம்பிக்கையைக் கோர்பெல் வெளிப்படுத்துகிருர். ஐரோப்பாவில் தற்பொழுது வளர்ந்து கொண்டிருக்கும் பாதுகாப்பு அமைப்பின் கீழ் ஒருங்கிணையும் சந்தர்ப்பங்களின் வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் எண்ணுகிருர்.*

---

* Josef Korbel, *Detente in Europe. Real or Imaginary?*, Princeton, 1972 பார்க்க.

சோஷலிச நாடுகளின் ''சமரசமற்ற சித்தாந்தத் தன்மை'' தான் சமாதான சகவாழ்வை வலுவாக்கும் பாதையில் பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது என்று மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகள் மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறார்கள். இவ்வாறாக கிளாவுஸ் மெனேர்ட் என்ற மேற்கு ஜெர்மனியின் ''சோவியத் இயலாளர்'' சமாதான சகவாழ்வின் தற்கால கட்டம் எவ்வளவு நாள் நீடிக்கும் என்று நிர்மாணிப்பது சாத்தியமில்லை, ஏனெனில் சோவியத் யூனியன் தன்னுடைய சித்தாந்தப் போராட்டத்தைத் தொடர்கிறது என்று கூறுகிறார்.*

ஓர் அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான மார்ஷல் ஷுல்மான் என்பவர் இதே போன்ற வாதங்களை இன்னும் அதிக ஆழமான அடிப்படையில் வளர்க்க முயற்சிக்கிறார். ''சமாதான சகவாழ்வு'' என்ற சொற்றொடரானது உண்மையில் ''நீண்டகால சோவியத் போர்த்தந்திரத்தின் ஒரு கோஷமாகிக்'' கொண்டிருக்கிறது, ஆனால் அது முன்பு தற்காலிக மற்றும் செயல்தந்திரக் காரணியாக மட்டுமே இருந்ததாகச் சொல்கிறார். இந்தத் துணிபுரையானது உண்மையானதுமாகும், பொய்யானதுமாகும். சமாதான சகவாழ்வுக் கோஷம் உண்மையில் சோவியத் அயல் நாட்டுக் கொள்கையின் ஒரு போர்த்தந்திரக் கோஷமாகும். ஆனால் அரசியல் சூழ்ச்சிக்கான, ஒரு தற்காலிக மற்றும் செயல்தந்திர வழிகளுக்கான ஒரு கருவியாக சோவியத் யூனியனுக்கு அது ஒருபோதும் இருந்ததில்லை. முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகவாழ்விற்கு சோவியத் யூனியன் எப்பொழுதும் சாதகமாக இருந்திருக்கிறது. கருத்து வேறுபாடான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழியாக அது ஒருபொழுதும் போருக்குத் திட்டமிடவில்லை. மேலே சுட்டிக் காட்டியதைப் போல் ஜார்ஜ் கென்னன் கூட இன்று இந்த அடிப்படைக் கருதுகோளை ஒத்துக்கொள்கிறார். 1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சமாதான சகவாழ்வு என்பது உடனடியாக சாத்தியமில்லாமல் போனது சோவியத் யூனியனின் தவறில்லை. அதைத் தொடர்ந்து இருபதுக்களிலும் முப்பதுக்களிலும் கூட சமாதான சகவாழ்வை அமுலாக்குவதற்குச் சூழ்நிலைமைகள் சாதகமாக இல்லை. அப்

---

* *Osteuropa*, Nr. 4, April 1974, S. 270-274.

பொழுதும் தவறு சோவியத் யூனியனுடையதல்ல, சோஷலிசத்தை இராணுவ வழிகளின் மூலம் நசுக்க நினைத்து இரண்டாவது உலகப் போரின் போது அவ்வாறு செய்ய முயற்சித்த ஏகாதிபத்தியத்தின் தவருகும். சோவியத் யூனியனுடன் சமாதானம் என்பது ஏகாதிபத்தியத்திற்கு வெறும் செயல்தந்திர விஷயமாக மட்டுமே இருந்தது, அவ்வாறு இருக்கையில் அதனுடைய போர்த்தந்திரத் திட்டங்கள் சோவியத் யூனியனுக்கு எதிரான போரை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்திலும் ''கெடுபிடிப் போர்'' ஆண்டுகளிலும் மேற்கத்திய அதிகார வட்டாரங்கள் சோவியத் யூனியனுடன் சமாதானத்தை முழுக்க தற்காலிகமான, நிலையற்ற ஏற்பாடாகக் கருதின. மேற்கே அந்தக்கால கட்டத்தில் நிலவிய ''கெடுபிடிப் போரை'' ஓர் உண்மையான போராக மாற்றும் திட்டங்கள் இருந்தன என்பதைப் பற்றி இன்று நமக்கு நிறையத் தெரியும்.

சோவியத் யூனியனுடனன உறவுகளில் சமாதான சக வாழ்வைத் தங்களுடைய போர்த்தந்திரமாக மேற்கத்திய ஆளும் வட்டாரங்கள் இப்பொழுது பேச ஆரம்பித்திருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம் போரின் மூலம் சோஷலிசத்தைக் கலைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட அவற்றின் முன்னைய போர்த்தந்திரம் முழுமையாகத் தோல்வி அடைந்ததேயாகும்.

ஷுல்மான் சமாதான சகவாழ்வைப் பற்றிய அமெரிக்கத் தத்துவஞானத்தை வகுக்க முயற்சிக்கிருர். கம்யூனிச எதிர்ப்பைப் பற்றிய முன்னைய கொள்கை திருத்தப்பட வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறுகிருர்.

அமெரிக்க சமுதாயத்தின் ''மதிப்புகள்'' மெய்யாக நிலைத்திருக்கவும் வளரவும் கூடிய ஒரு நிலைமையை உருவாக்குவது அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பது ஷுல்மானின் நம்பிக்கையாகும். கம்யூனிச எதிர்ப்பைக் கைவிட்டு சோஷலிசத்துடன் சமாதான சகவாழ்விற்குத் திரும்பும்படி அமெரிக்க ஆளும் வட்டாரங்களை அழைக்கையில் ஷுல்மான் எதார்த்தமான, நிதானமான நிலைகளை ஏற்றுக் கொள்கிருர்.

ஆனல் அவருடைய எதார்த்தமும் அரைகுறையானது,

உறுதியற்றது. சோஷலிச அரசுகளின் ''சமரசமற்ற சித்தாந்தத் தன்மையானது'' இறுக்கங்களைத் தளர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளைத் தடுக்கிறது, சமாதான சகவாழ்வின் ''ஆன்மாவை'' அரித்தழிக்கிறது என்று ஷுல்மானும் கருதுகிறார். எனவே கூட்டுப் பாதுகாப்பின் ஒரு நிலையான அமைப்பை ஏற்படுத்துதலானது சோவியத் அமைப்பில் சில அடிப்படையான உருமாற்றங்களை முன்னனுமானிக்கிறது என்று அவர் கூறுகிறார்.* அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆளும் வட்டாரங்களைக் கம்யூனிச எதிர்ப்பைக் கைவிடும்படி அழைக்கும் ஷுல்மான் கம்யூனிஸ்டுகளை... கம்யூனிசத்தைக் கைவிடும்படி அழைக்கிறார். ''அடிப்படை உருமாற்றங்களுக்கான'' அவருடைய அழைப்பு வேறு எதற்காக? கம்யூனிச எதிர்ப்பை நிராகரிப்பது என்பது, ஷுல்மானைப் பொறுத்த அளவில், முதலாளித்துவ சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் அடிப்படைகளை நிராகரிப்பதை உணர்த்தாது. அதற்கு மாறாக, சோவியத் அமைப்பில் ''அடிப்படை உருமாற்றங்கள்'' என்பது ஒரே ஒரு விஷயத்தைத்தான் குறிப்பிட முடியும். அதாவது சோவியத் மக்கள் முதலாளித்துவ ஒழுங்கை மீட்டமைப்பதற்கு இட்டுச் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஆலோசனையைத்தான் குறிப்பிட முடியும். இது சோஷலிச நாடுகளைச் சோஷலிசத்தைக் கைவிடும்படி தூண்டுதலைக் குறிக்கோளாகக் கொண்ட அதே பழைய ''ஒன்றிணைப்பு'' தான்.

சமாதான சகவாழ்வை எதிர்ப்பதை சற்றும் விட்டுக்கொடுக்காத எதிரிகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் அதை உலக அரசியலில் முக்கியமான அடிப்படை விதிகளின் வெளிப்பாடாகக் கருதுவதில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட, அநேகமாகத் தற்செயலான சூழ்நிலைகளின் தொகுப்பாக, ஒரு மேலெழுந்த புலப்பாட்டின் ஒரு விளைவாகக் கருதுகிறார்கள். எனவே அது நீண்டகாலத்திற்கோ அல்லது நிலையானதாகவோ இருக்க முடியாது.

தங்களுடைய கருத்தோட்டங்களை நியாயப்படுத்துவதற்கான முயற்சியில் அவர்கள் வரலாற்று உண்மைகளை நேரடியாகத் திரித்துக் கூறுமளவிற்குக்கூட செல்லுகிறார்கள். இவ்வாறாக, அமெரிக்க அரசியல் விஞ்ஞானி ஏ. வீக்ஸ் என்

* *Foreign Affairs*, Vol. 52, No. 1, 1973, pp. 49-50, 55.

பவர், ''எல்லையை விரிவுபடுத்துவதை'' நோக்கிய விருப் பார்வங்களையுடைய ஜாரிச ருஷ்யாவின் அயல்நாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியே சோவியத் அயல்நாட்டுக் கொள்கை என்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதத் தைப் பொறுத்த அறிக்கைகள் எல்லாம் இதை மூடி மறைப் பதற்குத் தான் என்றும் அறிவிக்கிறார். இத்தகையதொரு அடிக்கோள் சர்வதேச உறவுகளில் எந்த நிகழ்ச்சிப் போக்கு களையும் விளக்குவதை எளிதாக்குகிறது. உதாரணமாக, இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்கா, பிரிட் டன் ஆகிய இரு நாடுகளுடனுமான சோவியத் நாட்டின் ''அசாதாரண கூட்டணி'' என்பது மார்க்சிய-லெனினிய தத்துவஞானத்திலிருந்து சோவியத் யூனியனின் விலகல் மற்றும் சித்தாந்த நலன்களைப் பாதித்தது தேசிய நலன் களுக்கு அளிக்கப்பட்ட சலுகை ஆகியவற்றின் விளைவு என்று ஏ.வீக்ஸ் கருதுகிறார். அவருடைய கருத்தின் படி ''கெடுபிடிப் போர்'' என்பது சோவியத் யூனியனின் ''நாடுபிடிக்கும்'' கொள்கையின் விளைவு என்பதாகும். அது மேற்கத்திய நாடு கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கட்டாயப்படுத் தியது. இறுக்கங்களைத் தளர்த்தும் குறிக்கோளையுடைய சோவியத் கொள்கையானது, மேற்கு ஐரோப்பாவை இறுதி யாக வெற்றி கொள்வதற்காகப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் இராணுவ பலத்தை வலுவாக்குவதற்கு மான காலத்தைப் பெறுவதற்கான விருப்பத்தால் உந்தப் பட்டிருக்கிறது என்று இறுதியாக வீக்ஸ் வாதிடுகிறார்.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கும் இடையிலான இப்போதைய சமாதான சகவாழ்வானது அணுகுண்டைத் தாங்கிக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஆயுதங்களை இரு நாடுகளும் பெற்றிருக்கின்றன என்ற ஒரே உண்மையின் அடிப்படையில் உள்ளது என்றும் எனவே அமெரிக்க மக்களுக்கு ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே உள்ளது, அதாவது கம்யூனிஸ்டுகள் மேற்கு நாடுகளை அடிமை யாக்கிக் கொள்வதை அனுமதிக்காமல் இருக்க ஆயுதப் போட்டிக்குப் பணம் செலவிடுவதைத் தடுக்காமலிருக்க வேண்டும் என்றும் வீக்ஸ் கூறுகிறார்.* வீக்ஸிற்கு சமா

---

* A. L. Weeks, *The Other Side of Coexistence: an Analysis of Russian Foreign Policy*, New York, 1970 பார்க்க.

தான சகவாழ்வு என்பது போதுமான அளவு அடிப்படையில்லாத மிகவும் நம்ப முடியாத அபாயகரமான விஷயமாகும்.

மேற்கத்திய ''சோவியத் இயலாளரான'' ஜி. வெட்டர் என்பவர் சமாதான சகவாழ்வுக் கொள்கையை மறுப்பதற்காக மார்க்சிய இயக்கவியலையும் கூட தன்னுடைய உதவிக்கு அழைத்துக் கொள்கிறார். 70க்களில் பன்முறை வெளியிடப்பட்ட இன்றைய சோவியத் சித்தாந்தம் என்ற தன்னுடைய புத்தகத்தில் வெட்டர் சமாதான சகவாழ்வின் கோட்பாடுகளை ஆழமாகப் பார்க்க விரும்புகிற வாசகர்களுக்கு 1959லேயே பிரசுரிக்கப்பட்ட அவருடைய கட்டுரை ஒன்றைச் சுட்டிக் குறிப்பிடுகிறார்.* பூர்ஷ்வா போலிவாதத்திற்கும் சமாதான சகவாழ்வுக் கொள்கை புரட்சிகரமான மார்க்சிய-லெனினிய போதனையுடன் ''முரண்பட்ட தன்மையுடையதாக'' உள்ளது என்று கூறப்படுவதை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கொள்கையை மறுக்க எடுக்கும் முயற்சிக்கும் இந்தக் கட்டுரை உண்மையில் ஒரு சுவையான எடுத்துக்காட்டாக இருக்கிறது.

மார்க்சிய இயக்கவியலின்படி பகைமை முரண்பாடுகள் பலாத்காரத்தால் தீர்க்கப்படுகின்றன என்று வெட்டர் வாதிடுகிறார். சோஷலிச நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் பகைமையானவை, எனவே அவற்றைப் பலாத்காரத்தால், ஒருவேளை ஆயுதம் தாங்கிய மோதலால் மட்டுமே தீர்க்க முடியும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

இயல்பாகவே சோஷலிச அமைப்பிற்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் இடையிலான முரண்பாடுகள் பகைமையானவை, சமரசப்படுத்த முடியாதவை. ஆனால் அவற்றைத் தீர்ப்பதற்குப் போர் மிகவும் அவசியம் என்பது அதற்குப் பொருளல்ல.

உண்மையில் முதலாளித்துவ அமைப்பே, முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும், சமூக உற்பத்திக்கும் உற்பத்திப் பொருள்களைத் தனியார் தனதுரிமையாக்குவதற்கும் இடையிலான சமரசப்படுத்த முடியாத உள் முரண்பாடுகளைக் கொண்டதாகும். முதலாளித்துவ வளர்ச்

* *Schriftenreihe der Bundeszentrale für Heimatdienst*, Nr. 42, 1959 பார்க்க.

சியை ஆளுகின்ற விதிகளே அதனுடைய கலேப்பையும் அந்த இடத்தில் அதை விட அதிக முற்போக்கான சோஷலிச அமைப்பை நிறுவுவதையும் தவிர்க்க முடியாமல் உருவாக்கு கின்றன. ஆகவே சோஷலிச—முதலாளித்துவ முரண்பாட் டின் இரு கட்சிகளில் ஒன்ருன முதலாளித்துவ அமைப்பு தன்னுடைய சொந்த வளர்ச்சியின் விதிகளால் வரலாற்று அரங்கிலிருந்து வெளியேறுகிறது. இதற்கு இரு அமைப்பு களுக்கிடையேயும் போர் அவசியமில்லே.

சமாதான சகவாழ்வு சகாப்தத்தின் ''காத்திருந்து பார்த் தல்'' என்ற மனப் போக்கு ''லெனினியத்தின் இயல்புட னேயே முரண்படுகிறது'' என்று உறுதியாக வெட்டர் நம்பு கிருர்.

மார்க்சியம் வரலாற்றில் மிகப் புரட்சிகர வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தமாகும். ஆகையால் மார்க்சிய-லெனினியம் போர்க் குணமிக்க, செயலூக்கமுள்ள எதிர்த்துத்தாக்கும் தன்மையுடையது என்பதை ஒரு பூர்ஷ்வா தத்துவஞானி ஒப்புக்கொள்கிருர் என்பதைக் கேட்க உண் மையில் மனநிறைவுடையதாக உள்ளது. இருப்பினும் இந்த விஷயத்தில் கூட வெட்டரால் குழப்பத்தைத் தவிர்க்க முடிய வில்லே (அல்லது அவர் தவிர்க்க விரும்பவில்லே).

பெரும் வரலாற்று நிகழ்ச்சிகளேப் பற்றிய ''தன்னிறை வான எதிர்பார்ப்பு'' உண்மையில் எப்பொழுதும் மார்க் சிய-லெனினியத்திற்கு உறுப்பமைப்பிலேயே பகைமையா யிருக்கிறது. சோஷலிச நாடுகளால் வழங்கப்படுகிற சமா தான சகவாழ்வு என்பது சோஷலிசமும் முதலாளித் துவமும் ஒன்றுசேருவதைக் குறிப்பிடவேயில்லே. மனித குலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் இடைப்பட்ட காலகட்டத்தின் போது நடைபெறுகிற வர்க்கப் போராட்டத்தின் வடிவம் சமாதான சகவாழ் வாகும். ஆயுதச் சக்தியின் வழிகளால் அல்லாமல் முழுக்க முழுக்க சமாதானமான வழிகளால் அது நிறை வேற்றப்படுகிறது என்பது அதனுடைய குறிப்பிடத்தக்க அம்சமாகும். சோஷலிசத்தினுடைய சொந்த உதாரணத் தின் பலத்திலும் முதலாளித்துவத்துடனுன சமாதானப் போட்டியில் அதனுடைய வெற்றிகளிலும் அதனுடைய பெரும் அனுகூலம் அடங்கியுள்ளது. முதலாளித்துவத்தை

விட சோஷலிசம் உயர்ந்த தன்மையுடையது என்பதை அது பொருளாதாரப் போட்டியால் நிரூபிக்கிறது.

சோஷலிச நாடுகளின் மக்களினங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகவும் அதிக வேகத்துடனும் கம்யூனிசப் பாதையில் முன்னேறுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்த வளர்ச்சிப் பாதையின் அனுகூலங்கள் மனிதகுலம் முழுமைக்கும் தெளிவானதாகும்.

முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான கருத்து வேறுபாட்டினைப் போர் மூலமாக இல்லாமல் சமாதான போட்டி மூலம் தீர்ப்பதற்கு உண்மையான சாத்தியப்பாடு இருக்கிறது; வேறு வார்த்தைகளில் கூறினால், சோஷலிசத்தின் கீழ் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதன் மூலமும் மனிதனுடைய ஆற்றல்களின் முழு வளர்ச்சி மூலமும் அக்கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குச் சாத்தியப்பாடு உள்ளது. சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான சமாதான சகவாழ்வுக் காலகட்டத்தின் போது சோஷலிச அரசுகளின் கொள்கையின் சாரம் தங்களுடைய நாடுகளில் இயன்ற அளவுக்கு வேகமாக கம்யூனிசத்தைக் கட்டச் செயலூக்கத்துடன் போராடுவது என்பதாகும்.

## அத்தியாயம் இரண்டு

# இன்றைய உலகில் மார்க்சிய-லெனினியம்

### உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் விஞ்ஞானம்

பிரபலமாகிக் கொண்டும் உலக வளர்ச்சியில் வலிமையான அரசியல் மற்றும் ஆன்மீகச் செல்வாக்கை செலுத்திக் கொண்டுமிருக்கின்ற சித்தாந்தப் போக்குகளைப் பற்றிய பல உதாரணங்களை வரலாறு வழங்குகிறது. வெவ்வேறு காலங்களில் உலகக் கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கு சக்திவாய்ந்த தூண்டுதலைக் கொடுத்த கருத்துக்களை உருவாக்கிய மகத்தான சிந்தனையாளர்களின் பெயர்களை மனிதகுலம் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கும்.

எனினும் மார்க்சியம் போல் எந்தப் போதனையும் அவ்வளவு செல்வாக்குடையதாக, விரிந்து பரந்ததாக, வரலாற்று முக்கியத்துவமுடையதாக இருக்கவில்லை. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் பெயர்களை விட மகத்தான பெயர்களை உலக நாகரிகம் அறியாது. இதுவரை கண்டிராத மிகக் குறைவான காலகட்டத்தில் மார்க்சிய-லெனினியமானது, கண்டங்கள் எல்லாவற்றையும் கடந்து எல்லா தேசங்களுக்குமிடையில் உலகத்தில் மிகச் சிறந்த செல்வாக்குள்ள சித்தாந்தமாகப் பரவியிருக்கிறது.

விஞ்ஞான சோஷலிசத்தை நிறுவியவர்களின் நூல்கள் வருடாவருடம் அவற்றின் பதிப்புகளின் எண்ணிக்கையையும் அளவையும் பொறுத்தமட்டில் முன்னணி இடத்தை வகிக்கின்றன. அறுபத்தொன்று நாடுகளிலிருந்து யுனெஸ்கோவினுல் பெறப்பட்டு 1976ல் பிரசுரிக்கப்பட்ட செய்தியின்படி, அயல்நாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்களிடையே லெனினின் நூல்கள் முதலிடத்தை வகிக்கின்றன.

1976ல் அமெரிக்க ''லாரென்ஸ் ஹில் கம்பெனி'' பதிப்பகத்தாரால் பிரசுரிக்கப்பட்ட லெனினைப் பற்றிய நினைவு

களின் தொகுப்பில், தற்கால சகாப்தத்தின் குணும்சத்தை யும் உலகக் கண்ணேட்டத்தையும் பற்றி எந்த வரலாற்று நபர்களையும் விட லெனின் அதிகமாக நிர்ணயித்திருக்கிருர் என்று குறிப்பிடப்பட்டது.

பிரின்ஸ்டன் பல்கலைக்கழக பேராசிரியரும் நியூயார்க் பெரும் பதிப்பகத்தால் பிரசுரிக்கப்பட்ட லெனின் தொகை நூல் என்பதன் தொகுப்பாசிரியருமான ராபார்ட் சி. தக்கர் என்பவர், ''இருபதாவது நூற்றுண்டு உலகத்தின் பல நாடு களில் புரட்சிகரமான நிகழ்ச்சிகள் பரவியிருக்கிற காலமாக இருக்கிறது, இந்தக் காலகட்டத்தின் போது முன்னணிக்கு வந்த புரட்சிகரமான தலைவர்கள், தத்துவவாதிகள் ஆகி யோரிடையே பல வழிகளில் குறிப்பிடத்தக்கவராகவும் மிகச் செல்வாக்குடையவராகவும் உள்ளவர் லெனின் தான்'' என்று அறிவிக்கிருர்.

மார்க்சியம் ஈடு இணையில்லாமல் பரவுவதற்குக் காரணங் கள் என்ன?

மார்க்சியம் என்பது அறிவின் மாபெரும் கருவியாக வும் உண்மையான விஞ்ஞான உலகக் கண்ணேட்டமாகவும் உள்ளது; அது சமூக வளர்ச்சியின் விதிகளை வெளிப்படுத்தி யிருக்கிறது, உலகத்தை மாற்றியமைக்கும் ஒரே எதார்த்த வழியைச் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பது முதன்மையான காரணமாகும். உலக விஞ்ஞானம் விட்டுச் சென்றதில் மதிப்புள்ள ஒவ்வொன்றையும் கிரகித்துக் கொண்டும் விமரி சன ரீதியாக மறுபரிசீலனை செய்து கொண்டும் மார்க் சியம் உலகத்தை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்வதில் ''ஒரு சில மாபெரும் முன்னேற்றங்களை'' அடைந்துள்ளது. லெனின் கூறியது போல் மார்க்சியமானது, ''வரலாற்று, பொருளாதார மற்றும் தத்துவஞான விஞ்ஞானம் முழு வதின் மிக உயர்ந்த வளர்ச்சியாகும்''. *

மார்க்சிய-லெனினியத்தின் உண்மை, அதனுடைய அடிப்படையான தீர்க்கதரிசனங்கள் மற்றும் முடிவுகளின் உண்மை, அடுத்துவரும் நிகழ்ச்சிகளின் போக்குடனை அவற் றின் உடன்பாடு ஆகியவை வரலாற்றுல் நிரூபிக்கப்பட்டிருக் கின்றன. முதன்முதலில் முதலாளித்துவத்தை அகற்றுவதற்கு வந்து கொண்டிருக்கும் அமைப்பான சோஷலிசத்தின் தவிர்க்க முடியாத வெற்றியைப் பற்றிய அதனுடைய முக்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 20, p. 204.

கியமான மற்றும் தீர்மானமான முடிவு உண்மையானதாகும். மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்தில் வெறும் தத்துவமாக மட்டுமேயிருந்த சோஷலிசம் இப்பொழுது உலகத்தின் பெரும் பகுதியான பிரதேசங்களில் ஓர் எதார்த்தமாகியிருக்கிறது; மென்மேலும் அதிகமான நாடுகள் சோஷலிசப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதனுல் அதனுடைய ஆதிக்க வட்டாரம் சீராக விரிவடைந்து கொண்டிருக்கிறது.

சோஷலிசமானது, எல்லா நாடுகளிலும் பொதுவான அடிப்படை விதிகளுக்கேற்ப வளரும் என்றும் அது பிரிக்க முடியாத அமைப்பு என்றும் கூறிய மார்க்சிய-லெனினியத்தின் தீர்க்கதரிசனம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதை சோஷலிச அரசுகளின் உலகக் கூட்டமைப்பின் அனுபவத்தின் மூலம் வரலாறு நிரூபித்திருக்கிறது.

உலக வளர்ச்சியின் மனப்பாங்குகளையும் போக்குகளையும் நிர்ணயிப்பதில் சோஷலிச அமைப்பு தீர்மானமான காரணியாகும் என்ற மார்க்சிய-லெனினியத்தின் தீர்க்கதரிசனமும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அவ்வாறே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் உலக மாற்றத்தில் தொழிலாளி வர்க்கம் தீர்மானமான அரசியல் சக்தியாகும், அது மனிதகுலம் முழுமையையும் வர்க்கமற்ற கம்யூனிச சமுதாயத்திற்கு இட்டுச் செல்லும் என்ற மார்க்சிய-லெனினியத்தின் தீர்க்கதரிசனமும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை வெளியான நேரத்தில் மிகவும் வளர்ச்சியுற்ற நாடுகளில் கூட பாட்டாளி வர்க்கம் மக்கள் தொகையில் சிறுபான்மையாகவே இருந்தது; உலகின் பெரும் பகுதியில் பாட்டாளி வர்க்கமே இருக்கவில்லை அல்லது ஆரம்பக்கட்டத்தில் மட்டுமே இருந்தது. அந்த நேரத்தில் உலகம் முழுவதும் பாட்டாளிகள் மொத்தத்தில் ஒரு கோடிக்கும் குறைவாகவே இருந்தனர். 20வது நூற்ருண்டின் ஆரம்பத்தில் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை கிட்டத்தட்ட மூன்று கோடியாகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுக்களின் இரண்டாவது பகுதியில் அது 60 கோடியாக அதிகரித்திருந்தது; இன்று அதனுடைய அணிகள் வேகமாக விரிவடைந்து கொண்டிருக்கின்றன. சோஷலிச நாடுகளில் தொழிலாளி வர்க்கம் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கிறது, மற்ற நாடுகள் எல்லாவற்றிலும் அதனுடைய நிலை

வலுவடைந்து கொண்டிருக்கிறது, அதனுடைய ஸ்தாபனங்களின், முக்கியமாக அதனுடைய புரட்சிகர முன்னணிப் படையான கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கையும் சக்தியும் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன.

கடந்த நூற்றாண்டின் மத்தியில் கம்யூனிஸ்டுச் சங்கத்தில் இணைந்து கம்யூனிசத்தைப் பின்பற்றுவோர்கள் அப்பொழுது மிகச் சிறிய எண்ணிக்கையில் இருந்த போராட்ட வீரர்களாவார்கள். இன்று, கம்யூனிச இயக்கம் உலகம் முழுவதிலும் மிகச் செல்வாக்குள்ள அரசியல் இயக்கமாகியிருக்கிறது. தொண்ணூற்று நான்கு நாடுகளில் பல கோடிக்கணக்கான எண்ணிக்கையுடைய உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள், உலகத்தின் முக்கியமான மண்டலங்கள் மூன்றிலும், அதாவது சோஷலிச நாடுகள், வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள், தேசிய விடுதலை இயக்கங்களைக் கொண்ட நாடுகள் ஆகிய மூன்றிலும் சக்தி மிக்க நிலைகளுடனான ஒரே அரசியல் போக்காகும்.

முதலாளித்துவத்தின் காலனி அமைப்பு தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியுறும், காலனி மற்றும் அரைக்காலனி மக்களினங்கள் முதலாளித்துவத்தின் துணைப்படைகளாக இருப்பதிலிருந்து சோஷலிசத்தின் நேச சக்திகளாக மாறுவார்கள் என்ற மார்க்ஸ், லெனின் ஆகியோரின் தீர்க்க தரிசனம் முழுமையாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இயல்பாகவே, விடுதலை பெற்ற நாடுகளில் வர்க்க சக்திகளை வரையறுத்துக் கூறுவது ஒரு நீண்ட சிக்கலான நிகழ்ச்சிப் போக்காகும். எவ்வாறாயினும் பெரும்பாலான விடுதலை பெற்ற நாடுகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தங்களுடைய அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை அதிக ஆற்றலுடன் பாதுகாத்துக் கொண்டு வருகின்றன, அவைகளுடைய சுதந்திரத்தை வலுவாக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. லியனித் பிரேஷ்னெவ் பின்வருமாறு கூறினார்: ''சமாதானத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் ஓர் ஆழமான பொதுக் கடப்பாட்டாலும் ஆக்கிரமிப்பு மற்றும் ஆதிக்கம் ஆகியவற்றின் எல்லா வடிவங்கள் மீது கொண்ட வெறுப்பாலும் ஒரு நாடு பிற நாட்டைச் சுரண்டுவதன் மீது கொண்ட வெறுப்பாலும் நாமும் காலனி அமைப்பின் அழிவிலிருந்து தோன்றிய மிகப் பெரும்பான்மையான அரசுகளும் ஐக்கியப்படுத்தப்படுகிறோம்.

அடிப்படை விருப்பார்வங்களில் இந்த ஒற்றுமை செழிப்பான பலனளிக்கும் அஸ்திவாரமாகியிருக்கிறது. இந்த அஸ்திவாரத்தில் நம்முடைய நட்பு இனிமேல் தொடர்ந்து வளர்ச்சியடையும், செழுமையடையும்!''*

கடைசியாக, முதலாளித்துவத்தையும் சமரசம் செய்ய முடியாத அதன் முரண்பாடுகள் மற்றும் வரலாற்று ரீதியான அழிவு ஆகியவற்றையும் பற்றிய மார்க்சிய-லெனினியப் பகுத்தாய்வினை வரலாறு முழுமையாக உறுதி செய்திருக்கிறது. முதலாளித்துவம் மட்டுமே உலகளாவிய ஓர் அமைப்பு என்பது அறுபதாண்டுகளுக்கு முன்பே ஒழிந்து விட்டது. அது முதலாக அதனுடைய ஆதிக்க வட்டாரம் சுருங்கிக் கொண்டேயிருக்கிறது, எல்லா விஷயங்களிலும் முதலாளித்துவ சமுதாயத்தின் நெருக்கடி மென்மேலும் பலமாகவும் கூர்மையாகவும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

சமூக சிந்தனையின் மற்ற போக்குகள் எல்லாவற்றையும் விட மார்க்சிய-லெனினிய போதனை மிகவும் சரியானது என்று நடப்பு நிகழ்ச்சிகள் சான்று காட்டுவதோடு மட்டுமல்ல, உலக வரலாற்று வளர்ச்சியின் ஸ்தூலமான உள்ளடக்கம், வேகம் மற்றும் வடிவங்கள் மீது ஆழமான செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் மார்க்சிய-லெனினியத் தத்துவமானது ஒரு புதிய, சக்திமிக்க உருமாற்றும் சக்தியாகியிருக்கிறது என்பதையும் அவை காட்டுகின்றன.

மார்க்சிய-லெனினியம் ஒரு மகத்தான பொருளாயதச் சக்தியாகியிருக்கிறது. ஏனெனில் பல கோடிக்கணக்கான மக்கள் அதனுடைய சரியான தன்மையை உறுதியாக நம்புகின்றனர். மேலும் உலக வளர்ச்சியின் எல்லா வட்டாரங்கள் மீதும் உண்மையிலேயே தாக்கம் செலுத்த அது, சோஷலிச அரசுகளின் அமைப்பு, சோஷலிசமல்லாத நாடுகளில் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் என்ற இத்தகைய சக்திமிக்க கருவிகளைப் பெற்றிருக்கிறது. வளர்முக அரசுகளில் பல புரட்சிகர ஜனநாயக கட்சிகளுக்கும் மார்க்சிய-லெனினியம் தத்துவார்த்த வழிகாட்டியாக ஆகிக் கொண்டிருக்கிறது.

ஒரு சமூக தத்துவம் கோடிக்கணக்கானவர்களின் மன உணர்வுகளில் ஊடுருவுவதற்கு மக்கள் திரளினரின் தேவைகளை அது வெளிப்படுத்த வேண்டும். மனிதகுலத்தின்

---

* *Documents and Resolutions. XXVth Congress of the CPSU*, p. 20.

மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் திரளின ரின் நலன்களைத் தத்துவார்த்த ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் மார்க்சிய-லெனினியம் வெளிப்படுத்துகிறது என்பதில் அதன் பலம் இருக்கிறது. மற்ற எந்தப் போக்கு களையும் போலல்லாது மார்க்சிய-லெனினியம் அதனுடைய வெளிப்படையான கட்சிசார்புத்தன்மையாலும் முனைப்பான வர்க்கத் திசையமைவாலும் வேறுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தன்மைதான் அது தொழிலாளி வர்க்க இயக்கத் துடன் இணைவதற்கு உதவியிருக்கிறது. அங்கே தான் ஒரு புறம் மார்க்சியத்திற்கும் மறு புறம் முதலாளித்துவப் போக்கு களுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு இருக்கிறது; முதலாளித்துவத் தத்துவங்கள் வழக்கமாகத் தங்களுடைய முழு விசேஷ கட்சி சார்புத்தன்மையையும் வர்க்கசாரத்தை யும் ''புறவயத்தன்மை'' மற்றும் ''கட்சிசார்பற்றதன்மை'' என்ற போர்வையின் கீழ் மறைக்கின்றன.

எந்தச் சமூகத் தத்துவமும் அதனை உருவாக்கியவர் களின் உள் எண்ணங்களைப் பொருட்படுத்தாத ஒரு வர்க்க குணாம்சமுடையதாகவுள்ளது; அதனைப் பின்பற்றுவோர்கள் அதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது தன்னியல் பாகவே கட்சிசார்புடையதாக இருக்கிறது. இதற்கு முன் னால் இருந்த,மற்றும் நடப்பில் இருக்கும் எல்லா சித்தாந்தக் கருத்தோட்டங்களுக்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடையிலான உறவை முதலில் சுட்டிக்காட்டியதும் அவற் றின் உண்மையான சமூக முதற்கோள்களைப் புரிந்து கொள்ள வழிகாட்டியதும் மார்க்சிய-லெனினியத் தத்துவ ஞானமே. எல்லாத் தத்துவஞானங்களின் கட்சிசார்புத் தன்மையையும் அது வெளிப்படுத்தியது.

மார்க்சியத்தின் எதிரிகள் எல்லோருக்கும் பிடித்தமான கேள்வி ஏறத்தாழ பின்வருமாறு ஒலிக்கிறது: எல்லா விஞ் ஞானங்களையும் போன்று உண்மையை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் எப் படி ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்குப் பணிபுரிய முடியும்? அதனுடைய நலன்களுடனும் அதனுடைய வர்க்க நோக் கங்களுடனும் தன்னை முழுக்க எப்படிப் பிணைத்துக் கொள்ள முடியும்?

ஆனால் வர்க்க சித்தாந்தமும் விஞ்ஞானமும் ஒன்றுக் கொன்று எதிரானதாக இருக்க வேண்டும் என்பது அவசிய

மல்ல. முன்னேக்கிச் செல்லும் வர்க்கங்களின் சித்தாந்தம் எப்பொழுதும் அதனுடைய காலகட்டத்து முற்போக்குச் சிந்தனையின் சாதனைகளைக் கிரகித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சாதனைகள், அப்பொழுது வளர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான அறிவின் உச்ச கட்டத்தின் சாதனைகளாகும். முதலாளி வர்க்கம் ஒரு முற்போக்கான, முன்னேறிக் கொண்டிருக்கும் வர்க்கமாகிய பொழுது இப்படித்தான் இருந்தது. அந்தக் காலகட்டத்து முதலாளித்துவத் தத்துவ வாதிகள் பிரபலமான விஞ்ஞானிகளாவார்கள். அவர்களுடைய நூல்கள் உலக விஞ்ஞானத்திற்குப் பங்களித்துள்ளன. எனினும் முதலாளித்துவம் ஒரு பிற்போக்கு அமைப்பாகியிருந்த பிறகு பூர்ஷ்வா சிந்தனை அதனுடைய வர்க்க நலன்களைச் சகாப்தத்தின் புறவய வளர்ச்சியுடன் ஒரு பொழுதும் சமரசப்படுத்திக் கொள்ள முடியாது. இவ்வாறாக, பூர்ஷ்வா சித்தாந்தத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையிலான எதிர்ப்பு தப்ப முடியாத, வென்று சமாளிக்க முடியாத ஒரு செயலுண்மையாகியிருக்கிறது.

தொழிலாளி வர்க்கம், நம் காலத்தின் மிக முற்போக்கான வர்க்கமாகும். அதனுடைய நலன்களும் வர்க்க நோக்கங்களும் உலக வரலாற்றில் உள்ள தீர்மானமான வளர்ச்சிப் போக்குகளுடன் பொருந்தி இணைகின்றன. அதனுல் தான் தொழிலாளி வர்க்கம் — விஞ்ஞானமும் சித்தாந்தமும் பிரிக்க முடியாத ஒரே மொத்தமாக இருக்கின்ற —ஓர் உலகக் கண்ணேட்டத்தைப் பெற்றிருக்க முடிகிறது. வரலாற்று வளர்ச்சியின் முதன்மையான இயக்கும் சக்தியாகத் தொழிலாளி வர்க்கம் இருக்கிறது என்ற காரணத்தால் மார்க்சியம் அதனுடைய தலைவிதியைத் தொழிலாளி வர்க்கத்துடன் பிணைத்திருக்கிறது. உண்மையில் சமூக விஞ்ஞானம் மேலும் முன்னேறுவது என்பது உழைக்கும் மக்கள் திரளினர் படிப்படியாகச் சேர்ந்து கொண்டிருக்கும் வர்க்கத்தின், தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை அது உணர்வுபூர்வமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் அளவிற்கே சாத்தியமாகும்.

எல்லாக் காலங்களிலும் மார்க்சியத்தின் எதிரிகளும் திருத்தல்வாதப் புரட்டர்களும் மார்க்சியத்தில் ''தேக்கம்'' மற்றும் அது வெறும் ''வறட்டுச் சூத்திரங்களின் தொகுப்பு'' ஆகி விட்டது என்பதைப் பற்றியும் இன்ன பிறவற்றைப்

பற்றியும் விவாதிக்க விரும்பினர். இன்று கூட அவர்கள் சோஷலிசத் தத்துவம் மார்க்ஸ், லெனின் ஆகியோரின் காலகட்டம் முதல் முக்கியமாகப் புதியது எதையும் அளிக்க வில்லை என்றும் மார்க்சியத்தை நிறுவியவர்களின் தத்துவக் கூறுகள் மாறிவிட்ட சூழ்நிலைமைகளுக்கு இனிமேல் பொருத்தமாக இராது என்றும் இன்னும் பிறவற்றையும் விடாப்பிடியாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

எனினும் உண்மை என்னவெனில் தெளிவாக பூர்ஷ்வா சிந்தனையின் ''மிகப் புதிய'' கருத்தோட்டங்கள் தங்களுடைய வரலாற்றுப் பொருத்தமற்ற தன்மையை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளன. சோவியத் ஆட்சியதிகாரத்தின் வீழ்ச்சி, கிழக்கு ஐரோப்பாவில் சோஷலிசப் புரட்சிகளின் தோல்வி, பொருளாதார அதிர்ச்சிகள் மற்றும் சமூக நெருக்கடிகள் இதரவைகளிலிருந்து முதலாளித்துவம் விடுதலை பெறுவது ஆகியவற்றைப் பற்றிய பூர்ஷ்வா தீர்க்க தரிசனங்கள் எல்லாவற்றையும் உண்மையில் வரலாறு நிலை குலையச் செய்திருக்கிறது என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். இருப்பினும் மார்க்சியம் சோதனைகள் எல்லாவற்றையும் எதிர்த்து வெற்றி கொண்டு இன்னும் அதிகப் பக்குவத்துடனும் வலிமையுடனும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக, உலகத்தை மாற்றுவதற்கான விஞ்ஞானக் கருவியாக அதை நம்பலாம் என்பதை உறுதி செய்திருக்கிறது.

மார்க்சியக் கோட்பாடுகள் நிலையற்ற அற்பாயுளை உடைய சித்தாந்தக் கருத்துக்களின் தாக்கத்துக்கு உட்படக் கூடியவையல்ல. முதலாளித்துவ சமுதாயத்தின் நெருக்கடி ஆழமடைகின்ற பொழுது பூர்ஷ்வா தத்துவங்கள் தான் நடைமுறை நிகழ்ச்சிகளால் தொடர்ச்சியாக நிராகரிக்கப் பட்ட பிறகு ஜுர வேகத்தில் ஒன்று மற்றதை மாற்றீடு செய்கின்றன. உருவகப்படுத்திக் கூறுவதானால், அவை மேல்மட்டத்திற்கு வருகின்றன. பிறகு நிரந்தரமாக மறைந்துவிடுகின்றன. அவற்றை உருவாக்கியவர்கள், ஏமாளியான பொது மக்களைச் சிறிது காலத்திற்குத் தங்களுடைய புதிய தீர்க்கதரிசனங்களின் பரபரப்பூட்டும் தன்மையால் எப்பொழுதாவது திகைக்கச் செய்கின்றனர் என்பது உண்மை. ஏனெனில் பிறகு அவர்கள் இந்தத் தீர்க்க தரிசனங்களை மேலும் மெய்மையாக்குவதற்கு வழக்கமாகப்

பொறுப்பேற்பதில்லை. அப்படிச் செய்வது அவர்களுடைய குறிக்கோளாகக் கூட இல்லை. பொதுவாகச் சொல்லப் போனுல் இந்தத் ''தத்துவங்களின்'' தொடர் வரிசை ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் எல்லைக்கு அப்பால் செல்வதில்லை. அது அறிவுஜீவிகளிடையே விவாதப் பொருளாகவும் பத்திரிகைத் துறையில் ஆரவாரமான விளம்பரமாகவுமுள்ளது.

ஆனுல் மிக முக்கியமான பொருளாதார மற்றும் சமூக சாதனைகள் முன்னதாகவே திட்டமிடப்படுவதும் ஒரு விஞ்ஞான அடிப்படையில் அரசியல் போக்கு திட்டமிடப்படுகிறதுமான சோஷலிச சமுதாயத்தில் தத்துவத்தின் ஒவ்வொரு கூறும் உடனடியாகவும் பரிபூரணமாகவும் நடைமுறையில் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. நடைமுறை அதன் பங்கிற்குத் தத்துவத்தின் வழிகாட்டலுடன் இடையருது சரிபார்த்தல் மூலம் முன்னேறுகிறது.

இருப்பினும் இதற்கும் வறட்டுச் சூத்திரவாதத்திற்கும் சம்பந்தமில்லை; அதற்கு மாருக, தத்துவம் மற்றும் நடைமுறை ஆகியவற்றின் பரஸ்பரச் செயலானது மார்க்சிய-லெனினியத்திற்கு எந்தச் சித்தாந்தத்தையும் விட மேலான ஆக்கபூர்வமான சக்தியையும் உயிராற்றலையும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

எந்தச் சித்தாந்தப் போக்கிற்கும் மார்க்சியத்தைப் போன்று பலனுள்ள ஆக்கபூர்வமான வளர்ச்சி ஒருபொழுதும் ஏற்படவில்லை. புரட்சிகரமான நடைமுறையே இதற்கு மிகச் சிறந்த சான்று பகர்கிறது. மார்க்சியம் வரலாற்று அரங்கிற்கு வந்து ஒரு நூற்ருண்டிற்கு மேலாகி விட்டது. அந்தக் காலகட்டத்தின் போது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் உலகமானது அதனுடைய முந்திய வரலாறு முழுவதின் போது அனுபவப்பட்டதைவிட அதிகமான அளவு பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

அந்தக் காலகட்டத்தில் வர்க்கங்கள், கட்சிகள், அரசுகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளிலும் சர்வதேச உறவுகளின் அமைப்பிலும் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் பொதுவாக வாழ்க்கை ஆகியவற்றிலும் தீவிரமான மாற்றங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ''பெரியதும்'' சிறியதுமான பல தத்துவங்கள் வரலாற்றின் இடுகாட்டில் புதைக்கப்

பட்டிருக்கின்றன. இன்று, அவை வரலாற்று ஆசிரியர்கள் மட்டுமே அக்கறை காட்டக்கூடியனவாக உள்ளன.

அதே நேரத்தில் மார்க்சியம் எல்லா சோதனைகளிலிருந்தும் உறுதியாகவும் தோற்கடிக்கப்படாமலும் வெளிவந்ததோடு மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் தன்னுடைய பதாகையைப் பறக்கவிட்டு சக்தி மிக்க சித்தாந்தமாகியிருக்கிறது. ஏனெனில் மார்க்சியத்தின் உள்ளடக்கம் அதனுடைய கோட்பாடுகளில் மாறுமலிருந்து கொண்டு, புதிய வரலாற்று அனுபவத்தின் துணையால் இடையறாது செழுமையடைந்து கொண்டும் ஆக்கபூர்வமாக வளர்ச்சியடைந்து கொண்டுமிருக்கிறது என்பதால் மட்டுமே இது நடைபெற முடியும்.

லெனினின் மறைவிற்குப் பிறகு உலகப் புரட்சிகர இயக்கமானது மிகச் சிக்கலான பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது. இந்த நடவடிக்கையின் விளைவு சோஷலிசப் புரட்சிகளின் பெரும் வெற்றிகளும் உலக அரங்கில் இப்பொழுது சக்திமிக்கதானதாகவும் வளர்ச்சியுற்றதுமான முழு இளமையுடனான சோஷலிசத்தின் தோற்றமுமாகும். புரட்சிகரத் தத்துவம் இயங்காத நிலையில் இந்த விளைவுகளைப் பெற்றிருக்க முடியும் என்று வேண்டுமென்றே தவறாகக் கூறுபவர்கள் அல்லது விவகாரங்களின் நிதர்சனமான நிலைமையை சிந்திப்பதைப் பற்றி கவலைப்படாத மக்கள் மட்டுமே கூற முடியும்.

எதார்த்தத்தில், தற்கால கம்யூனிசத் தத்துவம் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் அடிப்படைக் கோட்பாடுகள் எல்லாவற்றிற்கும் விசுவாசமாக இருந்து கொண்டே சமீபகாலத்தில் மேலும் சக்திமிக்க வளர்ச்சியை அடைந்திருக்கிறது. தற்கால மார்க்சிய-லெனினிய தத்துவம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்காக வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயத்தைக் கட்டுதல் மற்றும் கம்யூனிசத்திற்கு மாறுதல் ஆகியவற்றைப் பற்றிய தத்துவம், சோஷலிசம் அரசுகளின் ஓர் உலக அமைப்பாக வளர்வதைப் பொறுத்த பிரச்சினைகள், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மிகச் சமீப கட்டங்களின் பகுப்பாய்வு, எதிரெதிரான சமூக அமைப்புகளின் சகவாழ்வின் கீழ் வர்க்கப் போராட்டத்தின் விசேஷ பண்புக் கூறுகள், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கால

கட்டத்தில் காலனி அமைப்பின் அழிவுகளிலிருந்து தோன்றிய வளர்முக அரசுகளின் பாத்திரம், சமூக வளர்ச்சியில் விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் செல்வாக்கு போன்ற தற்கால மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் அடிப்படைப் பிரிவுகளை மேற்கோள் காட்டுவது போதுமானது.

இந்தப் பிரிவுகள் எல்லாவற்றிலும் விஞ்ஞான சோஷலிசத்தின் ஸ்தாபகர்களால் நிறுவப்பட்ட அடிப்படைத் தத்துவக் கூறுகளிலிருந்து தற்கால புரட்சிகரத் தத்துவம் தோன்றுகிறது. ஆனால் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படுவது சமீப காலத்தில் தான் சாத்தியமாகியிருக்கிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் காலத்தின் போது இத்தகைய ஆராய்ச்சிகளைச் சாத்தியமாக்கக் கூடிய நிகழ்ச்சிப் போக்குகள் பக்குவமடைந்திருக்கவில்லை, நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

கடந்த பத்தாண்டுகளில் பொருத்தமான ஆய்வுகள் சர்வதேச மார்க்சிய சிந்தனையால் பூர்த்தியாகியிருக்கின்றன. சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுக் கட்சியானது லெனினால் விரித்துரைக்கப்பட்ட பாதையைப் பிறழாமல் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இக்கட்சி, அதனுடைய காங்கிரசுகள், மத்திய கமிட்டி, தத்துவாசிரியர்கள் ஆகியோரின் பங்கு சான்று பகர்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொழிலாளி வர்க்க இயக்கம் அதனுடைய மகத்தான ஆசான்களான மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரை இழந்த பிறகு, லெனின் பின்வருவனவற்றை வலியுறுத்தினார்: ''மார்க்சின் தத்துவம் பூர்த்தியடைந்ததாகவும் அதை மீறக் கூடாததாகவும் நாங்கள் கருதுவதில்லை; அதற்கு மாறாக, சோஷலிஸ்டுகள் வாழ்க்கையோடு இணைந்து செல்ல விரும்பினால் அவர்கள் எல்லாத் திசைகளிலும் கண்டிப்பாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அது நிறுவியது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.''*

இன்று, மார்க்சிய-லெனினிய விஞ்ஞானம் அதனை உருவாக்கியவர்களால் நிறுவப்பட்ட அடிக்கற்களை மட்டும் தன்னுடைய இஷ்டத்திற்கு செயல்படுத்தக் கூடியதாகப் பெற்றிருக்கவில்லை. அதனுடைய செல்வாக்கு மனிதகுல அறிவு,

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 4, pp. 211-212.

இலக்கியம், கலை மற்றும் நெறிகள் ஆகியவற்றின் எல்லாத் துறைகளையும் தழுவியிருக்கிறது. அதனுடைய ஸ்தூலமான செய்முறைகள் வெவ்வேறு நாடுகளில் பல்வகையான முரண்பட்ட நிலைமைகளின் கீழ் சரிபார்க்கப்பட்டிருக்கின்றன. மார்க்சிய இலக்கியம் விரிந்து பரந்ததாகும், எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் கிடைக்கக் கூடியது. உலக வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினைகள் எல்லாம் எவ்வளவு அவசியமான முக்கியத்துவமுடையவையானாலும் அதனுடைய பார்வையின் எல்லைக்குள் இருக்கின்றன.

எவ்வாறுயினும் மார்க்சிய-லெனினியத்தின் இன்னும் ஆக்கபூர்வமான வளர்ச்சியானது தொழிலாளி வர்க்கம், அதனுடைய புரட்சிகரமான கட்சிகள் ஆகியவற்றின் தலையாய பணியாக முன்போலவே இருக்கிறது. கொந்தளிப்பான இயக்க ஆற்றலுள்ள நம் சகாப்தத்தின் தேவை இப்படிப்பட்டதாக உள்ளது. இடையறாது வளர்ந்து கொண்டேயிருக்கும் விஞ்ஞானத்தின் தேவையும் இப்படிப்பட்டதே.

மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துவோர்களும் தவறாகக் கூறுவோர்களும் மார்க்சியத்தின் ''ஆக்கபூர்வமான வளர்ச்சி'' மற்றும் ''இளமையை மீண்டும் பெறுதல்'' என்ற கோஷங்களால் செப்பிடுவித்தை செய்கின்றனர். எனினும் பிரச்சினை என்னவெனில் வரலாற்றின் ஒவ்வொரு திருப்பத்திலும் பின்வரும் கேள்விக்குச் சரியாக பதிலளிக்கக் கூடியதாக இருப்பதாகும். அக்கேள்வியாவது: உலகத்தை மேலும் ஆழமாகவும் முழுமையாகவும் விளக்குவதற்காக, அதைப் பயனுள்ள வகையில் மாற்றியமைப்பதற்காக எந்த ஸ்தூலமான திசையில் மார்க்சியம் வளர்ச்சியடைய வேண்டும்?

பத்தொன்பதாவது, இருபதாவது நூற்றாண்டுகளின் வரலாறு மார்க்சியத்தை ''வளர்க்க'', ''மேம்படுத்த'' எடுக்கப்பட்ட எண்ணற்ற முயற்சிகள் நிறைந்ததாகும். இத்தகைய முயற்சிகள் செய்த சிலர், சமூக வளர்ச்சியின் சில விசேஷமான புதிய பண்புக் கூறுகளைத் தனி முதலானதாகப் பாவிக்கவும் இந்த ஒரு தலைப்பட்ச அடிப்படையில் முழு போதனையையும் ''நவீனப்படுத்தவும்'' முயற்சி செய்தார்கள். இந்த அணுகுமுறை முக்கியமாக பல்வகையான இடதுசாரி மார்க்சிய திரிபுகளின் குணம்சமாகும்.

புரட்சிகரமான நிகழ்ச்சிப் போக்கின் பாதையிலுள்ள சாத்தியமான சிரமங்களைக் கண்டு அஞ்சுகிறவர்கள் மார்க்சியத்தின் புரட்சிகரமான உள்ளடக்கத்தை நீக்குவதன் மூலமும் ''வர்க்க சமாதானத்தின்'' தேவைகளுக்கு அதைத் தகவமைப்பதன் மூலமும் மார்க்சியத்தை ''மேம்படுத்த'' முயன்றனர். இது வலதுசாரி சந்தர்ப்பவாதத்தின் பல வகைகளின் குணும்சமாகும்.

இன்னும் பிறர், முதலாளி வர்க்கத்திற்கு வெளிப்படையாகப் பணி புரிந்து கொண்டு முதலாளி வர்க்கத்திற்கு அபாயம் இல்லாமலிருக்கவும் மார்க்சியம் பிரபலமடையாமல் இருக்கவும் மார்க்சியத்தை உணர்வு பூர்வமாகத் திரித்துக் கூறத் தயங்கவில்லை.

* * *

இன்று முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு உலகம் மாறும் சூழ்நிலைமைகளின் கீழ் லெனினியம் மட்டுமே மார்க்சியத்தின் உண்மையான தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் இருக்கிறது. மார்க்சியத்தின் அடிப்படையான ஆரம்ப கோட்பாடுகளைப் புதிய சூழ்நிலைமைகளுக்கு விஞ்ஞான ரீதியாக ஆழமாகவும் வரலாற்று ரீதியாக ஸ்தூலமாகவும் பயன்படுத்துவதன் விளைவாலும் அறிவின் எல்லாத் துறைகளிலும் சேகரிக்கப்பட்ட பிரமாண்டமான தகவல்களை ஆக்கபூர்வமாக கிரகித்து விமரிசன ரீதியாக மறுபரிசீலனை செய்வதன் விளைவாலும் இந்த வளர்ச்சி நடைபெற்றிருக்கிறது. மார்க்சிய சிந்தனை வளர்ந்து வருவதற்கு லெனினின் அணுகுமுறையின் சரியான தன்மை வரலாற்று நடைமுறையால் முழுமையாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. லெனினியக் கோட்பாடுகளால் வழிநடத்தப்பட்ட புரட்சிகரமான சக்திகள் இருந்த நாடுகளில் மட்டுமே சோஷலிசப் புரட்சிகள் வெற்றி பெற்று உறுதியாகி இருக்கின்றன. குட்டி முதலாளித்துவ மற்றும் திருத்தல்வாத மார்க்சிய ''மேம்பாடுகள்'' ஒன்றன் பின் ஒன்ருக விழுந்தன, புரட்சிகரமான நடவடிக்கைக்கு வழிகாட்டிகளாக இருப்பதற்குரிய அவற்றின் முழுமையான தகுதியற்ற தன்மையை வெளிக்காட்டின.

மார்க்சியம்-லெனினியம் மட்டுமே இன்றிருக்கும் மார்க்சியமாகும். மார்க்சியம், லெனினியம் இரண்டையுமே

மறுப்பவர்களால்தான் ஒன்றை மற்றதிலிருந்து பிரிக்க முடியும். மார்க்சிய-லெனினியத்தால் வழிநடத்தப்பட்டு சோஷலிசத்தை நோக்கிச் சென்ற புரட்சிகரமான சக்திகளின் வெற்றிகளாலும் அதிலிருந்து விலகிச் சென்றவர்களின் தோல்விகளாலும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

### எதார்த்தமான சோஷலிசம்—சித்தாந்தத் தாக்கத்தின் ஒரு தலையாய காரணி

மார்க்சிய-லெனினியமானது, மனிதகுலம் சோஷலிசத்திற்கு மாறும் நிகழ்ச்சிப் போக்கை விரைவுபடுத்தி வழிநடத்தும் ஒரு மகத்தான பொருளாயத சக்தியாகியிருக்கிறது. எனினும்,ஓர் அரசு சமூக அமைப்பில் உள்ளடக்கப்பட்ட எதார்த்தமான சோஷலிசமானது, மார்க்சிய தத்துவத்தின் அதிகாரபூர்வத் தன்மையை உயர்த்துவதிலும் உலகம் முழுவதிலுமுள்ள பொது மக்களின் உணர்வில் அதைப் பதிய வைப்பதை விரைவுபடுத்துவதிலும் ஒரு முக்கியமான காரணியாகியிருக்கிறது என்பதும் உண்மை. சோஷலிச அமைப்பின் செயல்களும் சாதனைகளும் மென்மேலும் கோடிக்கணக்கான மக்களை மார்க்சிய-லெனினியக் கொடியின் கீழ் ஈர்த்துக் கொண்டிருக்கின்றன.

வெவ்வேறு வரலாறுகள், மரபுகள், பொருளாதார ஆற்றல்கள் இதரவைகளை உடைய பல நாடுகளில் மார்க்சிய-லெனினியமானது அரசு சித்தாந்தமாகவும் தத்துவார்த்த வழிகாட்டியாகவும் ஆகியிருக்கிறது. அதன் அடிப்படை மீது அந்நாடுகளின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் அமைந்துள்ளன. நடைமுறையில் மார்க்சிய-லெனினியத்தின் உண்மையான தன்மைக்கும் வலிமைக்கும் சோஷலிச நாடுகளின் கூட்டமைப்பு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும்.

விசேஷமாக, நவீன உலகத்தின் மீது சோஷலிசத்தின் சித்தாந்தச் செல்வாக்கை எங்கு காண முடியும்?

உலகத்தில் மிகப் பெரியதும் மக்கள் தொகை மிக அதிகமாக உள்ள நாடுகளில் ஒன்றுகவும் உள்ள ருஷ்யாவில் சோஷலிசத்தின் தோற்றத்தை அறிவித்த மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி, 20வது நூற்ருண்டின் பிரதான நிகழ்ச்சியாகும். 1917 அக்டோபரானது ஒரு புதிய சகாப்தத்திற்கு, அதாவது முதலாளித்துவம் வீழ்ந்து கம்

யூனிசம் நிறுவப்படும் சகாப்தத்திற்குக் கட்டியம் கூறியது.

ஆட்சியதிகாரமானது, சுரண்டும் சிறுபான்மையோரிடமிருந்து மார்க்சிய-லெனினியக் கட்சியின் வழிகாட்டலின் கீழ் தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் உழைக்கும் மக்களுக்கு மாறுவது; உற்பத்திச் சாதனங்களை உழைக்கும் மக்களின் கரங்களுக்கு மாற்றுவது; தேசிய செல்வங்கள் எல்லாவற்றையும் மக்களுக்கு மாற்றுவது; வர்க்க சலுகைகளை ஒழிப்பது; பால், சமய, இன மற்றும் தேசிய இனவேறுபாடு இல்லாமல் எல்லாக் குடிமக்களுக்கும் முழு சமத்துவத்தை அறிவிப்பது; அடிப்படையான தனிநபர் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் தேசிய இனங்களின் உண்மையான சமத்துவத்திற்கும் உத்திரவாதமளிப்பது ஆகிய இந்தக் காரணிகள் எல்லாம் சோஷலிச ஜனநாயக சமுதாயம் ஒன்று உருவாவதைக் குறிப்பிடுகின்றன.

பொது மக்களினுடைய மற்றும் அரசினுடைய விவகாரங்களை நிர்வகிப்பது சுரண்டும் வர்க்கங்களின் தனியுரிமையல்ல என்பதை சோஷலிசம் காட்டியிருக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் இருக்கும் எந்த அரசாங்கத்தையும் விட, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஆட்சி அதிகாரமானது முன்னேற்றத்திற்கு அதிகமான பயனுள்ளதும் நம்பத்தகுந்ததுமான கருவியாகியிருக்கிறது. சோஷலிசத்தைத் தவிர வேறு எந்த சமூக அமைப்பும் பொருளாதார மற்றும் கலாச்சார பிற்பட்ட தன்மைக்கு அவ்வளவு விரைவாக முடிவு கட்டியிருக்க முடியாது, மிகவும் சிக்கலான அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியாது.

வெகு காலத்திற்கு முன்பே மார்க்சியத்தால் தீர்க்க தரிசனமாகக் கூறப்பட்ட ஒரு சோஷலிச சமுதாயத்தின் தோற்றமானது எல்லா தேசங்களிடையேயும் சோஷலிசத் தத்துவம் பரவுவதற்கு பலமான தூண்டுவிசையை அளித்தது. சோஷலிசத்தின் வளர்ச்சி மார்க்சியத்தின் வளர்ச்சிக்கே ஒரு முக்கிய காரணியாகிறது. சோஷலிச எதார்த்தமானது, புதிய வரலாற்று அனுபவத்தை ஆராய்ச்சி செய்யும் பணியையும் பல கடுமையான பிரச்சினைகளைத் தத்துவார்த்த ரீதியாகத் தீர்க்கும் பணியையும் மார்க்சியத்திற்கு அளித்தது.

ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் வெற்றியால் சித்

தாந்தப் போராட்டம் ஒரு புதிய குணும்சத்தைப் பெற்றது.

1917க்கு முன்னுல் இப்போராட்டமானது இரு சித்தாந்தங்களின் மோதலாக இருந்தது. அவற்றில் ஒன்ருன பூர்ஷ்வா சித்தாந்தம் உலக முதலாளித்துவ அமைப்பின் பெரும் சக்தியைச் சார்ந்திருந்தது. அதே வேளையில் இதற்கு எதிரிடையான பாட்டாளி வர்க்க சித்தாந்தம் சமூக வளர்ச்சியின் வழிகளைப் பற்றிய ஒரு விஞ்ஞான தத்துவத்தைப் பெற்றிருந்தது. ஆனுலும் முதலாளித்துவத்தை விட சோஷலிசம் மேலானது என்று நடைமுறையில் நிரூபித்துக் காட்டக் கூடிய ஒரு சோஷலிச சமுதாய வடிவத்தில் எதார்த்தமாக உறுதிபடுத்தும் சான்றும் ஆதரவும் அப்பொழுது இல்லை.

1917க்குப் பிறகு சித்தாந்தப் போராட்டம் முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான உலகளாவிய எதிரெதிர் தன்மையின் ஒரு பகுதியாகியது. மார்க்சிய-லெனினியமானது நிதர்சனமாக நிலவியிருக்கும் சோஷலிசத்திலிருந்து தன்னுடைய பலத்தையும் ஆதரவையும் பெற முடிந்தது. தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் முதல் அரசு மூர்க்கத்தனமான ஏகாதிபத்தியத் தாக்குதல்களை எதிர்த்தடிக்க வேண்டியிருந்த போதிலும் வேறு எந்த அமைப்பும் பொறுத்துக் கொள்ள முடியாத சோதனைகளை எதிர்த்து நிற்க வேண்டியிருந்த போதிலும் அந்தக் கடுமையான சோதனையை அது வெற்றிகரமாகக் கடந்தது.

இரண்டாவது உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றி சோஷலிசத்தின் பெருவெற்றியைக் குறிப்பிட்டது. பாசிச சித்தாந்தமானது முக்கியமாக ஏகாதிபத்திய சித்தாந்தத்தின் மிக நெஞ்சீரமற்ற ஆக்கிரமிப்பு வகை என்பதனுல் அது ஏகாதிபத்தியத்தின் மிகவும் பிற்போக்கான மற்றும் ஆக்கிரமிப்பு சக்திகளின் சித்தாந்த மற்றும் இராணுவத் தோல்வியாகும்.

அந்த நாட்களில் மிகக் கடினமான நிலைமையில் தோன்றிய மிகச் சிக்கலான மற்றும் கடுமையான பிரச்சினைகளைத் தீர்க்கும் தன்னுடைய திறமையால் சோஷலிசம் முதலாளித்துவத்தை விட மேலானது என்பதை மீண்டும் நிரூபித்தது. சோவியத் யூனியனின் வெற்றிக்கு சோவியத் சமுதாயத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் ஐக்கியமானது தலையாய முக்கியத்துவமுடைய காரணியாக இருந்தது. சோவியத்

மக்கள் தங்களுடைய மிகப்பெரிய வீரத்தினுல் உலகம் முழுவதையும் ஊக்குவித்தனர். ஆனுல் இது தனிநபர்களின் அல்லது ஆயிரக் கணக்கானேரின் வெறும் வீரம் மட்டுமல்ல, கோடிக்கணக்கான சோவியத் ஆண்களின் மற்றும் பெண்களின் வீரமாகும். அவர்களில் பெரும்பான்மையோர் புரட்சிக்குப் பின் வளர்ந்தவர்கள், கல்வி கற்றவர்கள் கல்வி புகட்டப்பட்டார்கள். ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் சோவியத் யூனியன் தான் முன்னணியான, ஒன்றுபடுத்தும் சக்தியாக இருந்தது. சோவியத் யூனியனும் அதனுடைய சேனையும் போரில் சேர்ந்த போது நிலைமை மிகவும் நெருக்கடியாகவும் அச்சந்தரத்தக்கதாகவும் இருந்தது; இருப்பினும் அது தொடர்ந்து சோவியத் யூனியன் நிலையை மாற்றி புது முடிவை செய்வதில் வெற்றி பெற்றது, சுதந்திரத்தை நேசிக்கும் பிற மக்களினங்களுடன் ஒன்ருகச் சேர்ந்து போர்களின் வரலாற்றில் இது வரை கண்டிராத வெற்றியைப் பெற்றது. பாசிசத்தை நிர்மூலமாக்கியதானது மார்க்சிய-லெனினியம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றின் கௌரவத்தை ஒரு புதிய நிலைக்கு உயர்த்தியது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் சக்திகளின் அணிச்சேர்க்கை சித்தாந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டமான அரசுகளின் இரு உலக அமைப்புகள் ஈடுபடும் கட்டத்தை நிர்ணயித்தது. அதற்குப் பிறகு சோஷலிசம் பல நாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. அந்நாடுகளின் வளர்ச்சியானது, சோஷலிச நிர்மாணத்தில் அதனுடைய நிகழ்ச்சிப் போக்கின் பொதுவான விதிகளை எல்லா நாடுகளுக்கும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்பதையும் அதே நேரத்தில் ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டின் ஸ்தூலமான விசேஷ பண்புக் கூறுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் தத்துவ ரீதியில் மட்டுமின்றி நடைமுறை ரீதியாகவும் நிரூபித்திருக்கிறது. மனிதகுலம் எல்லாவற்றிற்கும் வளர்ச்சியின் பிரதான பாதையாக சோஷலிசம் இருக்கிறது என்பதும் மார்க்சியம்-லெனினியம் எதிர்காலத்தைச் சரியாக கணிக்கிறது என்பதும் நிரூபிக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போர் முடிவடைந்ததிலிருந்து சோஷலிசமானது எல்லாத் துறைகளிலும் மாபெரும் தாவுதலை அடைந்திருக்கிறது, முன்னேற்றப் பாதையில் மனித

குலத்திற்கு உறுதியாகத் தலைமை தாங்குகிறது. இப்பொழுது பாட்டாளிகளின் முதல் வெற்றிகரமான புரட்சிக்குப் பிறகு அறுபது ஆண்டுகளுக்கு மேலாக முடிந்திருக்கும் போது சோஷலிசத்தின் மகத்தான விளைவுகள் மிகத் தெளிவாகி யிருக்கின்றன.

நெருக்கடியில்லாத, இடையறாது வளர்ந்து கொண்டே யிருக்கும் பொருளாதாரத்தாலும் பக்குவமடைந்த சோஷ லிச உறவுகள் மற்றும் உண்மையான சுதந்திரம் ஆகியவற் றாலும் வேறுபடுத்தப்பட்ட ஒரு புதிய சமுதாயம்; விஞ் ஞான பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் நிலவுகிற சமு தாயம்; எதிர்காலத்தில் ஓர் உறுதியான நம்பிக்கை, பிரகாச மான கம்யூனிச நல்வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான சர்வாம்ச முன்னேற்றத்தின் வரம்பற்ற எல்லைகள் ஆகியவை உள்ள சமுதாயம் உருவானது முதல் விளைவாகும்.

சோவியத் யூனியனில் சோஷலிசப் புரட்சி எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றதோ அதைவிட பாதிக்கும் குறைவான காலத்திற்கு முன்பாக சோஷலிசப் புரட்சிகள் நடைபெற்ற தோழமை நாடுகளில் இது ஒரு வளர்ச்சியுற்ற சோஷலிச சமுதாயத்தை நோக்கிய தொடர்ச்சியான இயக்கத்தின் காலகட்டமாக இருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் வலுப்படுத்தலுடன் சமூக உற்பத்தியின் துரித வளர்ச்சியும் பொருளாயத, கலாச்சார வாழ்க்கைத் தரங்களின் தொடர்ச்சியான மேம் பாடும் நடைபெற்றன. ஒவ்வொரு சோஷலிச தேசமும் தொடர்ந்து செழிப்படைவதால் அவற்றின் பரஸ்பரத் தொடர்புகள் நெருக்கமாக வளர்கின்றன; அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் அவைகளுக்குள்ள பொது வான பண்புக் கூறுகள் அதிகம் தோன்றுகின்றன; அவற்றின் வளர்ச்சியின் மட்டங்கள் படிப்படியாக சமமானதாகின்றன. இவ்வாறாக, மார்க்சிய-லெனினியத்தால் கண்டுபிடிக்கப் பட்ட சமூக முன்னேற்றத்தின் விதிகளின் சர்வவியாபகத் தன்மை முழுமையாகவும் மிகத் தெளிவாகவும் வெளிப் படுத்தப்படுகிறது.

சோஷலிச வளர்ச்சியின் இரண்டாவது விளைவு முதலா ளித்துவ சமுதாயத்திலிருந்து தீவிரமாக வேறுபட்ட உள் ளார்ந்த கோட்பாடுகளும் மதிப்புகளுமுடைய ஒரு புதிய வாழ்க்கை வழியை உருவாக்குவதாக இருந்தது. உண்மை

யான கூட்டுத்தன்மை, தோழமை ஆகியவற்றைக் கொண்ட சூழ்நிலை, சமூக ஐக்கியம், முன்மாதிரியான ஒழுக்கங்கள், மக்களினங்களிடையேயுள்ள நட்பு ஆகியவை இந்த வாழ்க்கை வழியின் குறிப்பிடத்தக்க பண்புக் கூறுகளாகும். இந்தப் பண்புகள் எல்லாம் இதற்குமுன் ஒருபொழுதும் கண்டிராத மக்களின் ஆக்கபூர்வ நடவடிக்கையையும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சமூக ஆற்றலின் எல்லையற்ற மூலாதாரங்களையும் விளைவித்தன. எவ்வளவுக்கெவ்வளவு சோஷலிசம் வலிமையுடையதாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சோஷலிச வாழ்க்கை வழியின் ஈர்க்கும் சக்தியும் வலிமையுடையதாகிறது.

இறுதியாக, புதிய மனிதனை ஆர்வமிக்க தேசபக்தனுக, உறுதியான சர்வதேசவாதியாக ஆக்கும் பயிற்சி சோஷலிச வளர்ச்சியின் மிக மதிப்புள்ள மூன்ருவது விளைவாகும்.

பல்வகைப் போக்குகளையுடைய பூர்ஷ்வா தத்துவவாதிகள் மனிதனின் ''மாருத தன் முனைப்பான தன்மையைப்'' பற்றிய ஆய்வைப் பாதுகாப்பதில் ஏகமனதான தன்மையை அபூர்வமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். தனிநபர் வாதம், கொள்ளையிடும் தன்மை, பிற மக்களை அடிமைப் படுத்தி நசுக்கும் பேரவா ஆகியவற்றின் வடிவமாக மனிதன் தலைவிதியால் ஆரம்பத்திலிருந்தே நிர்ணயிக்கப்பட்டிருக்கிருன் என்று அவர்கள் கூறுகிருர்கள். மனிதனுடைய ''தான்'' என்ற முனைப்பு ''கம்யூனிசப் பரிசோதனைகளுக்கு'', முன்னே பின்னே எப்பொழுதாவது ஒரு முடிவை ஏற்படுத்தும் சக்தியாக உள்ளது என்று அவர்கள் கூறுகிருர்கள்.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதையும் கம்யூனிசம் நிச்சயமான வர்க்க மூலத்தை உடையது என்றும் மார்க்சிய-லெனினியம் காட்டியிருக்கிறது. தான் என்ற முனைப்பையும் பேராசையையும் ''இயல்பானதாகவும்'' ''அழிவற்றதாகவும்'' பூர்ஷ்வா மனப்பாங்கு கருதுவது அதிசயமில்லை: இந்தப் பண்புகள்தான் பூர்ஷ்வா ஒழுக்கங்களின் சாரத்தை உருவாக்குகின்றன, முதலாளித்துவமானது, அதன் ஆதரவாளர்களுக்கு அது ''இயல்பான'' மற்றும் ''அழிவற்ற'' காரியங்களின் ஒழுங்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தோன்றுகிறது.

எனினும் எதார்த்தத்தில், சமூக நலன்களை விட தன் முனைப்பு நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் தனிநபர் வாதம் எந்த வழியிலும் மனித இயல்பிற்குரிய ''அழியாத''

குணமல்ல. அது தனியார் சொத்துடனும் சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிரிவினை செய்தலுடனும் தோன்றிய ஒரு வரலாற்று வகையினமாகும். புராதன சமுதாயங்களில் மக்களுக்குத் தனிநபர்வாதம், கொள்ளையிடுதல் போன்ற எண்ணம் கிடையாது, ஏனெனில் தனியார் சொத்து என்பது அங்கே தெரியாத ஒன்று. வர்க்க சமுதாயம் தோன்றியதுடன் அதைத் தொடர்ந்து அடுத்து ஒவ்வொரு உருவமைப்பும் மனிதனிடமுள்ள இந்த எதிர்மறைப் பண்புகளை வலிமையடையச் செய்தது, முதலாளித்துவம் அவற்றைத் தீவிரப் படுத்தியது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சேர்ந்துள்ள ஒரு எச்சத்தை உடனே ஒதுக்கித் தள்ள முடியாது என்பது தெளிவு. ஏனெனில் நவீன நாகரிகம் உருவெடுத்து வளர்ச்சியடைந்த பொழுது இந்த நீண்டகால இடைவெளி மனித குலத்தின் உணர்வு பூர்வமான வரலாறு முழுவதையும் உள்ளடக்கிவிட்டது.

எனினும் வர்க்க சமுதாயம் நிலவியிருக்கிற பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் என்பது உண்மையில் ஒரு குறுகிய வரலாற்றுக் கட்டம்தான் என்பதும் தெளிவு. மேலே குறிப்பிடப்பட்ட எதிர்மறையான மனிதப் பண்புகள் அவற்றைத் தோற்றுவித்த சூழ்நிலைகளைப் பின்பற்றி படிப்படியாக மறையும். கம்யூனிசத்தின் உச்ச கட்டத்தில், உற்பத்திச் சாதனங்கள் அனைத்து மக்களின் உடைமை, அபரிமிதமான பொருளாயத மற்றும் ஆன்மீக செல்வம், குடிமக்கள் எல்லோரின் தேவைக்கேற்ப அதனுடைய வினியோகம் என்ற அடிப்படைகளைக் கொண்ட கட்டத்தில் இது தவிர்க்க முடியாமல் நடைபெறும்.

தத்துவார்த்த கருத்துக்கள் எவ்வளவு ஏற்றுக் கொள்ளக் கூடிய நிறைவுடையதாக இருந்தபோதிலும் அவற்றின் உண்மையின் மறுக்க முடியாத நிரூபணத்தை நடைமுறை மட்டுமே அளிக்க முடியும். இந்த விஷயத்திலும்கூட வெற்றிகரமான சோஷலிசம் மார்க்சிய முடிவுகளின் சரியான தன்மையை நிரூபித்தது.

சோஷலிசத்தைக் கட்டுவது சிரமமான சூழ்நிலைமைகளில் நடைபெற்றது, ஏனென்றால் சோவியத் நாட்டின் பொருளாதாரத்திலும் கலாச்சாரத்திலும் பழைமையின் சுமை மிகவும் அதிகமாக இருந்தது. எனவே இத்தகைய குறுகிய வரலாற்றுக் காலகட்டத்திற்குள் ஏற்கெனவே அடையப் பெற்ற பலன்கள் அதிகமான அளவுக்குத் திகைப்பைத்

தருகின்றன. சோஷலிசமானது ஏற்கெனவே ஒன்றுக்கு மேற்பட்ட தலைமுறைகளை உருவாக்கியிருக்கிறது. அம் மக்களின் செயல்கள், சித்தாந்த உறுதிப்பாடு, ஆக்கபூர்வ மான ஆர்வம் ஆகியவை உலகத்தை வியப்பிலாழ்த்து கின்றன.

பூர்ஷ்வா பத்திரிகைகளும் அதிகாரபூர்வ விஞ்ஞானமும் கம்யூனிஸ்டுகள் மனிதனின் ''அழிவற்ற'' இயல்பை மாற் றும் வல்லமை படைத்தவர்களல்ல என்று அறிவிக்கும் போது அவை தம்மையே முரண்படுத்திக் கொள்கின்றன என்பதை உணர்வதில்லை. உண்மையில் முதலாளித்துவ நாடுகளில் வெளியாகியிருக்கிற பல புத்தகங்களின் ஆசிரி யர்கள் சோவியத் மனிதனுடைய ''ஆன்மாவைப் பற்றிய புதிரை'' அறிய தங்களுடைய மூளையைக் குடைந்து கொண்டார்கள். அவர்களுடைய நூல்களில், சோவியத் மக் கள் (அல்லது சில நேரங்களில் அவர்கள் அழைப்பதைப் போல் ''சோவியத் நிகழ்வு'') அவர்கள் நன்கு அறிந்த ''மேற்கத்திய மனிதனைப்'' போல் ஏன் இல்லை என்பதை விளக்கும் கவனத்திற்குரிய பல முயற்சிகளைக் காண முடி யும்.

சோஷலிச வாழ்க்கையின் முழுப்போக்கும் ஒரு புது வகையான ஆளுமையை வளர்க்கிறது என்ற உண்மைதான் சோவியத் மக்கள் முதலாளித்துவ சமுதாய மக்களிலிருந்து ஏன் வேறுபடுகிறார்கள் என்பதன் பிரதான காரணமாக இருக் கிறது. வேறு எந்தக் காரணத்தையும் நாம் கூற வேண்டிய அவசியமில்லை. சோஷலிசத்தின் கீழ், சமுதாயத்தில் மக்களுடைய நிலை அவர்களுடைய வேலையினாலும் தனித் திறமைகளினாலும் சமுதாயத்துக்காகப் புரிந்துள்ள சேவை களினாலும் முழுக்க நிர்ணயிக்கப்படுகிறதேயன்றி செல்வத் தால் அல்ல. இந்த அடிப்படையில்தான் சோஷலிசமானது குறுகிய காலகட்டத்திற்குள் மக்களுக்கு அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்தவும் இதுவரை இல்லாத வாய்ப்புகளை வழங்க முடிந்துள்ளது.

தோழமை சோஷலிச நாடுகள் அனைத்திலும் புதிய தனி மனிதனை வார்ப்பதில் சோஷலிசத்தின் பாத்திரம் அளப்பரிய சக்தியுடன் வெளிப்படுத்தப்படுகிறது. அந்நாடுகளில் புது குடிமகனின் பயிற்சி சோஷலிச உறவுகள் பக்குவமடையும் அதே நேரத்தில் நடைபெறுகிறது. முதலாளித்துவத்தின் சமூக உறுதியற்ற தன்மை, ஒழுக்கக் கேடு ஆகியவற்றிற்கு

மாருக சோஷலிசமானது மக்களுக்குத் தெளிவான சித்தாந்தக் கருத்துக்களையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் வளர்ச்சிக்கான அதிகமான சிறந்த வாய்ப்புகளையும் எங்கும் அளிக்கிறது; தனிநபர்வாதத்தையும் மனிதனின் அந்நியமாதலையும் நீக்கி ஆரோக்கியமான ஒழுக்கத்தை அளிக்கிறது. மனிதகுலத்தின் மிகச் சிறந்த குறிக்கோள்களுக்கு விசுவாசமான புதிய ஆளுமையை வளர்ப்பது சோஷலிச வளர்ச்சியின் ஒரு விதியாகும்; இது வரலாற்ருல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சோஷலிசத்தின் சித்தாந்த வலிமையில் அது மாபெரும் காரணியாகும்.

இன்று, மார்க்சிய-லெனினியம் சோஷலிச நாடுகளின் உள்வளர்ச்சிக்கான ஒரு போதனையாக மட்டுமல்லாமல் சர்வதேச உறவுகளின் ஒரு புதிய வகையைப் பற்றிய போதனையாகவும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. உறுப்பு நாடுகள் எல்லாவற்றினிடையேயும் முழு சமத்துவத்தையும் எல்லாத் துறைகளிலும் அவற்றின் பரஸ்பர ஆதரவையும் கொண்ட தேசங்களின் ஒரு புதிய கூட்டமைப்பு தோன்றியிருக்கிறது. அது எதார்த்தத்தில், மனிதகுலத்தின் மிகச்சிறந்த பிரதிநிதிகளின் நீண்ட நாளைய புழைய கனவான இலட்சியத்தை, அவர்கள் போராடி தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்து அடைந்த லட்சியத்தை உட்கொண்டிருக்கிறது. சோஷலிச அரசுகளிடையேயுள்ள உறவுகளின் பரந்த அனுபவம் மனிதகுலத்துக்குக் கிடைத்திருக்கிறது. இந்த அனுபவம் மார்க்சிய-லெனினிய தத்துவத்தால் இடையருது பொதுமைப்படுத்தப்பட்டு வருகிறது.

நாடுகளிடையேயுள்ள உறவுகளில் நூற்றுண்டுகளாக நிலவியிருக்கும் தேசிய வேறுபாட்டையும் அவநம்பிக்கையையும் சோஷலிசம் மட்டுமே வெற்றிகொள்ள வல்லது என்பதையும் நாடுகள் பெரியவையோ சிறியவையோ என்பதைப் பொருட்படுத்தாமல் அவற்றினிடையே உண்மையான நட்பு, தோழமை, பரஸ்பர ஆதரவு, சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் இந்த உறவுகளை அது கட்ட முடியும் என்பதையும் சோஷலிசம் நடைமுறையில் விளக்குகிறது.

''க்யூபா மக்களுக்கு தீர்மானமான உதவியை அளித்த பிறகு சோவியத் யூனியன் ஒருபொழுதும் எந்தக் கோரிக்கைகளையும் வைத்ததில்லை, எந்த நிபந்தனைகளையும் போட

வில்லை, க்யூபா மக்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் கூறவில்லை'' என்று க்யூபாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியின் முதல் செயலாளர் ஃபிடல் காஸ்ட்ரோ கூறினர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தன்னகங்காரத்தாலும் வலிமையாலும் வழிநடத்தப்பட்ட சர்வதேச உறவுகளின் வரலாறு முழுமையிலும் ஒரு வல்லரசு நாட்டிற்கும் ஒரு சிறிய தேசத்திற்கும் இடையில் இத்தகைய தோழமை உறவுகளை ஒருபோதும் கண்டிருக்க முடியாது என்பதையும் சோஷலிசம் மட்டுமே இத்தகைய உறவுகளை சாத்தியமாக்கும் என்பதையும் ஃபிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

ஒரு புதியவகை சர்வதேச உழைப்புப் பிரிவினையைச் சோஷலிசம் உருவாக்கியிருக்கிறது. சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகளில் பொருளாதார ரீதியாக மிகவும் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்கு நெருக்கமாக பிற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலையைக் கொணர்வதன் மூலம் அவற்றைச் சமப்படுத்துவதை சோஷலிச கூட்டுறவு குறிப்பிடுகிறது. தோழமையுள்ள சோஷலிச தேசங்களிலிருந்து பெறும் கூட்டு உதவியைக் கொண்டு பொருளாதார வளர்ச்சி மட்டங்களிலுள்ள இடைவெளியை மிக விரைவாக வெற்றிகொள்வதைச் சாத்தியமாக்குகிற ஒரு பொருளாதாரக் கொள்கையை உணர்வு பூர்வமாகவும் திட்டமிட்ட வழியிலும் அமுலாக்குவதன் மூலம் இது பெறப்படுகிறது. இது போன்ற எதையும் முதலாளித்துவ வரலாற்றில் பார்க்க முடியாது.

பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலின் (CMEA) உறுப்பு நாடுகள் 1950 முதல் 1975 வரையிலான 25 ஆண்டுகளில் அவற்றின் தொழில்துறை உற்பத்தியை 11 மடங்கு அதிகரித்தன. அப்படியிருக்க வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் 3.1 மடங்கு மட்டுமே அதிகரித்தன. அதன் விளைவாக 1975ல், சி.எம்.இ.ஏ. நாடுகளின் உற்பத்தி வளர்ச்சியுற்ற எல்லா முதலாளித்துவ நாடுகளினதும் மொத்தத் தொழில்துறை உற்பத்தியில் கிட்டத்தட்ட 66 சதவீதத்திற்குச் சமமாக இருந்தது. 1956ல் இது 25 சதவீதத்திற்கு மட்டுமே சமமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளின் மொத்த மக்கள் தொகை சி.எம்.இ.ஏ. உறுப்பு நாடுகளின் மக்கள் தொகையை விடக் கணிசமான அளவு அதிகம் என்பது கணக்கில்

எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ''பொது மார்க்கெட்'' நாடுகளைப் பொறுத்தமட்டில் 1975ல் அவற்றின் மொத்த தொழில்துறை உற்பத்தி சி.எம்.இ.ஏ. உறுப்பு நாடுகளின் உற்பத்தியில் பாதிக்கும் குறைவாக இருந்தது. அடுத்த ஆண்டுகளிலே சி.எம்.இ.ஏ. உறுப்பு நாடுகள் உலகில் அதிக தீவிரமாக வளர்ந்து இருக்கிற நாடுகளின் கூட்டமைப்பாகத் தொடர்ந்து இருக்கின்றன.

விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியில் சிறிய நாடுகளை ஈடுபடுத்துகின்ற மிகப் பயனுள்ள வழியைச் சோஷலிசம் காட்டியிருக்கிறது. மின்நுட்பவியல் அணுசக்தி தொழில் துறை, ஆகாய விமான மற்றும் விண்வெளிப் பொறியியல் போன்ற நவீன தொழில்துறைகளில் சுயேச்சையாக சிறிய நாடுகள் உலக மட்டத்திற்கு ஏற்ப வளர்ச்சியடைய முடியாது. ஒருங்கிணைப்பின் மூலம் மட்டுமே அவை இதை அடைய முடியும். ஏகாதிபத்தியப் பேரரசுகள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் போன்ற வலிமைமிக்க கொள்ளைக்காரர்களால் ஏற்படும் ஏற்றத்தாழ்வு, கொள்ளையிலிருந்து சிறிய நாடுகளைச் சோஷலிச ஒருங்கிணைப்பு மட்டுமே காப்பாற்றுகிறது.

சி.எம்.இ.ஏ. உறுப்பு அரசுகளின் சோஷலிச ஒருங்கிணைப்பானது 1971ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீண்டகால பரிபூரண வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த வேலைத்திட்டத்தின் வழியில் சோஷலிச நாடுகள் இயற்கை மூலாதாரங்களை வளர்ச்சியடையச் செய்துகொண்டிருக்கின்றன, பங்கு பெறும் எல்லா நாடுகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தொழில்துறை தொகுப்புகளைக் கூட்டாகக் கட்டிக் கொண்டிருக்கின்றன, தொழில் நிலையங்கள் மற்றும் அந்தந்த நாடுகளின் பொருளாதாரங்களின் தனித் தனியான துறைகள் ஆகியவற்றினிடையேயும் நீண்டகால ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டிருக்கின்றன. மின்சார சக்தி, எரிபொருள், அடிப்படைக் கச்சாப் பொருள்கள், உணவுப் பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் ஆகியவற்றில் சி. எம். இ. ஏ. உறுப்பு நாடுகளின் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இயந்திரப் பொறியியலின் தரத்தை உயர்த்தவும் போக்குவரத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் விசேஷமான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

சோஷலிசமானது சர்வதேச ரீதியாக ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் புறநிலைப் பாதுகாப்பையும் விரைவான உள்

நாட்டு வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலைமைகளையும் உத்தர வாதமளிக்கும் ஒரு சக்திமிக்க நிலையான அரசுகளின் கூட்டமைப்பாகியிருக்கிறது. அரசுகளுக்கிடையே அரசியல், பொருளாதார, சித்தாந்த ஒத்துழைப்பை அதிகரிப்பதாலும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளிலும் சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்கான போராட்டத்திலும் முக்கிய அம்சங்களை ஒன்றிணைக்கக் கூடியதும் செய்தி மற்றும் அனுபவ பரிமாற்றத்தைத் தீவிரப்படுத்தக் கூடியதுமான, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஓர் உறுதியான கூட்டணியாலும் இவையெல்லாம் அமுலாக்கப்படுகின்றன. அதன் விளைவாக சோஷலிச அரசுகள் ஒன்றுடன் ஒன்று படிப்படியாக நெருக்க மாக நெருங்கி வரும்படி ஈர்க்கும் நிகழ்ச்சிப் போக்கு சீராக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது இன்று முற்றிலும் தெளிவான ஒரு விதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கின் பல்வகை அம்சங்கள், கட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் போக்குகள் ஆகியவை மார்க்சிய-லெனி னியத் தத்துவவாதிகளால் ஆராயப்படுகின்றன. கம்யூ னிஸ்டுக் கட்சிகள் அந்த ஆராய்ச்சியின் முடிவுகளை, நெருக்க மான பரஸ்பர உறவுகளை நிறுவும் நிகழ்ச்சிப் போக்கைத் தொடர்ந்து ஆழப்படுத்தும் அவர்களுடைய கொள்கையின் ஓர் அடிப்படையாகப் பயன்படுத்துகின்றன.

ஒரு சோஷலிச சமுதாயத்தில் மார்க்சியக் கட்சியின் தலைமைப் பங்கு மிகவும் முக்கியமானது. மார்க்சிய-லெனி னிய போதனைக்கும் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் அத னுடைய உணர்ச்சிக்கும் விசுவாசமாக இருப்பது கம்யூனிஸ்டு களின் கொள்கையின் பயனுள்ள தன்மைக்கும் அவர் களுடைய அரசியல் நெறியின் சரியான தன்மைக்கும் உத்தர வாதமளிக்கிறது. மார்க்சிய-லெனினியத்தால் வழிநடத்தப் படும் சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் அந் நாடுகளின் மக்களினங்களும் கண்ணியமாக எல்லாச் சோதனை களையும் எதிர்த்து நிற்கின்றனர். எனினும் லெனினியத் திலிருந்து விலகும் பொழுதும் அதைத் திருத்த முயற்சிகள் செய்யும் பொழுதும் சோஷலிச ஆதாயங்கள் அச்சுறுத்தப் படுகின்றன. உழைக்கும் மக்களின் சில பிரிவினர்கள், முக்கிய மாக அறிவுஜீவிகளும் இளைஞர்களும் பகை சித்தாந்தங்களின் செல்வாக்கின் கீழ் வந்தபொழுது எடுத்துக்காட்டாக, ஹங் கேரியில் (1956ல்) எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியின் போதும்

செக்கோஸ்லோவாக்கியாவில் (1968 — 1969ல்) நிகழ்ச்சிகளின் நெருக்கடியான போக்கின் போதும் இது நடைபெற்றது. எண்பதுக்களின் தொடக்கத்தில் போலந்தில் நடைபெற்றிருந்த நிகழ்ச்சிகள் கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் சில முக்கியமான படிப்பினைகளைக் கொடுத்திருக்கின்றன. கம்யூனிஸ்டுக் கட்சி பெருந்திரளான மக்களின் குரலைக் கவனத்தோடு கேட்க வேண்டும், அதிகாரவர்க்க மனோபாவம், தன் விருப்பப் போக்கு ஆகியவை தோன்றும் பொழுது அவற்றை எதிர்த்துத் தீர்மானமாகப் போராட வேண்டும், சோஷலிஸ்டு ஜனநாயகத்தைச் சுறுசுறுப்பான முறையில் வளர்க்க வேண்டும், அந்நிய நாடுகளோடு பொருளாதார உறவுகளில் நன்கு சீர்தூக்கப்பட்ட, யதார்த்தமான கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பவை அந்தப் படிப்பினைகளாகும்.

சோஷலிசம் இதுவரை கண்டிராத பிரச்சினை ஒன்றை, அதாவது சமூக வளர்ச்சியின் விஞ்ஞான தத்துவத்தை ஒவ்வொரு குடிமகனின் பொதுச்சொத்தாக உருவாக்கும் பிரச்சினையை நடைமுறையில் தீர்க்கத் தொடங்க வல்லதாக இருந்தது. இந்தப் பாதையில் சோஷலிசத்தின் முன்னேற்றம் உண்மையில் குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினை சுரண்டல் மற்றும் நசுக்குதலின் எல்லா வடிவங்களிலிருந்தும் தனி நபரை விடுவிப்பதின் மூலம் இன்றைய மனிதனின், நவீன விஞ்ஞானம் கலாச்சாரம் ஆகியவற்றின் தேவைகளை முழுமையாகச் சந்திக்கின்ற மனிதனின் சர்வாம்ச, ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குரிய ஒரே உறுதியான அஸ்திவாரத்தை சோஷலிசம் அமைக்கிறது என்பதால் மட்டும் தீர்க்கப்படவில்லை. சோஷலிசத்தின் வளர்ச்சிக்கே குடிமக்களின் உயர்மட்ட சமூக உணர்வு தவிர்க்க முடியாத அவசியம் என்ற காரணத்தினாலும் இப்பிரச்சினை உண்மையில் தீர்க்கப்படுகிறது. தன்னியல்பான பொருளாதார வளர்ச்சியின் இடம் உற்பத்தி, மொத்த சமூக வாழ்வின் உணர்வு பூர்வ ஸ்தாபனத்தாலும் அது கைக் கொள்ளப்பட்ட காலத்திலிருந்து தத்துவஞான, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் கண்ணோட்டங்களின் ஒரு விஞ்ஞான அமைப்பை எல்லா குடிமக்களின் உணர்வில் பதியவைப்பது தலையாய முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது.

சோஷலிச வாழ்க்கையின் மொத்தத் தன்மையாலும் இந்த நிகழ்ச்சிப் போக்கு ஊக்குவிக்கப்படுகிறது. சோஷ

லிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவதற்கான பொது விருப்பமானது இன்னமும் விஞ்ஞான அடிப்படையில் குறை பாடுள்ள உலகக் கண்ணேட்டத்தையுடைய மக்களுக்கு அறிவு புகட்டவும் கூட சாதகமான சூழ்நிலைமைகளை உருவாக்கு கிறது. கூட்டுவாழ்வின் பணியிலும் வாழ்க்கையிலும் மக்கள் தப்பெண்ணங்களிலிருந்தும் மிச்சசொச்சங்களிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ளும் ஒரு நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது. அரசியல் மற்றும் எல்லா சமூக நடவடிக் கைகளிலும் மக்கள் திரளினர் பங்கு பெறுவது விஞ்ஞான உணர்வை உருவாக்குவதற்கான ஒரு மகத்தான பள்ளிக் கூடமாகும். ''மக்கள் திரளினரின் உண்மையான கல்வியை அவர்களுடைய சுயேச்சையான அரசியல் போராட்டம் மற்றும் முக்கியமாக புரட்சிகரமான போராட்டத்திலிருந்து ஒருபொழுதும் பிரிக்க முடியாது''* என்று லெனின் கூறினர்.

இருப்பினும் ஒரு நாட்டிற்குள் வர்க்க சண்டைகள் முடி வடைந்து மாற்ற முடியாதவாறு சோஷலிசம் நிறுவப்பட்ட பிறகும் கூட சோஷலிசப் புரட்சியின் சக்தி பலவீனமடைவ தில்லை, ஆனல் சோஷலிசத்தின் பலத்துடன் ஒன்ருகச் சேர்ந்து வளர்கிறது. இன்று வர்க்கமற்ற ஒரு சமுதாயத்தைக் கட்டு வதில் மக்களின் செயலூக்கமான பங்கு சிறப்பானஇடத்தைப் பெறுகிறது. கம்யூனிச கருத்து உறுதிப்பாடுகள், ஒழுக்கங் கள் ஆகியவற்றின் உருவாக்கத்தை அது மேம்படுத்துகிறது. அவை சமூக நடைமுறையிலுள்ள எதிர்மறையான அம்சங் களுக்கு, உதாரணமாக சிவப்பு நாடா, சடங்கு முறை, ஒழுக்கக் குறைபாடு, சோஷலிசச் சட்டத்தையும் சமூக ஒழுங் கையும் மீறுதல் இதரவை ஆகியவற்றிற்கெதிரான போராட் டத்தில் இன்னும் அதிக வலிமையுடையதாகின்றன.

கம்யூனிச எதிர்ப்பு, ஏகாதிபத்தியம் புதுப்பிக்கவும் வெளி நாட்டிலிருந்து திணிக்கவும் முயற்சிக்கிற பூர்ஷ்வா சித்தாந் தம் ஆகியவற்றிற்கு எதிரான கூர்மையான வர்க்கப் போராட் டத்தில் கம்யூனிச உணர்வு உருவாக்கப்படுகிறது; மக்களின் உணர்வில் விடாப்பிடியாக நீடித்திருக்கிற முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவத்திற்கு முந்திய கடந்தகாலத் திலிருந்து பெற்ற மிச்சசொச்சங்கள், தப்பெண்ணங்கள் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் அது வார்க்கப் படுகிறது; நுகர்வுரீதியான, அற்பவாத, இன்னும் பிற அடிப்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p. 241.

படையிலேயே குட்டி முதலாளித்துவக் கருத்துக்கள், பழக்க வழக்கங்கள் (அவை சில நேரங்களில் சோஷலிச சமுதாயத்தில் நிதர்சனமாக இருக்கும் முரண்பாடுகள், சிரமங்களின் பின்னணியில் தோன்றுகின்றன) ஆகியவற்றிற்கும் எதிரான போராட்டத்தில் அது வளர்ச்சியடைகிறது.

சோஷலிசத்தின் கீழ் மார்க்சிய-லெனினியம் பிரதான சித்தாந்தமாகும்; அதே சமயத்தில் ஒரு சோஷலிச சமுதாயத்தில் பகைமையான சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அதைத் தவிர யாராவது ஒருவரின் உணர்வில் எதார்த்தத்திற்கான சோஷலிச அணுகுமுறை பூர்த்தியடையாததாக, உறுதியற்றதாக இருக்கலாம், பகைமையான சித்தாந்தம், ஒழுக்கங்கள், அற்பவாதப் பழக்கங்கள் இதரவைகளுடன் நன்கு இணையலாம்.

பக்குவமடையாத சோஷலிச சமூக உறவுகள், அதிகரிக்கப்பட்ட உள் சிரமங்கள் மற்றும் முரண்பாடுகள், அவற்றிற்கெதிரான மந்தமான உறுதியற்ற நடவடிக்கைகள், பல்வகை தனியார் மற்றும் பொது நலன்களுக்கு இடையே ஒத்திசைவு இல்லாமை ஆகியவை சோஷலிச உணர்வின் வளர்ச்சியைத் தாமதமாக்கலாம், குட்டி முதலாளித்துவ மற்றும் திருத்தல் வாதக் கண்ணோட்டங்களைப் புதுப்பிக்கலாம்.

ஒரு சோஷலிச சமுதாயத்தின் வளர்ச்சியுடனும் புதிய தலைமுறைகளை இந்த நிகழ்ச்சிப் போக்கில் ஈடுபாடு கொள்ளச் செய்தலுடனும் சித்தாந்த வேலையின் நிலைமைகளில் மாற்றங்கள் நடைபெறுகின்றன. அதனுடைய பணிகள் அதிகப் பூர்ணத்துவமுடையதாகவும் அடிப்படையானதாகவும் ஆகிக் கொண்டேயிருக்கின்றன. இன்று, எல்லாக் குடிமக்களுக்கும் அவர்களுடைய உணர்வுகளிலிருந்து முதலாளித்துவ மிச்ச சொச்சங்களை முழுமையாக நீக்குவதற்காக கம்யூனிச உணர்வு புகட்டப்பட வேண்டும். உழைக்கும் மக்கள் தங்களுடைய அரசியல் அனுபவத்தை அதிகரிப்பதாலும் கலாச்சார மட்டத்தை உயர்த்துவதாலும் சித்தாந்த வேலைக்கான தேவைகள் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன, சமூக நடைமுறையின் தத்துவார்த்த அறிமுறையும் தத்துவார்த்த அரசியல் கல்வியின் பல்வகை வடிவங்களின் பங்கும் எப்பொழுதையும் விட முக்கியத்துவமுடையதாகின்றன.

சோஷலிசச் சமுதாயத்தில் செகண்டரி மற்றும் உயர் நிலைக் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் எல்லாத் துறைகளிலும் அரசியல் கல்வி ஏற்பாடுகளாலும் பொதுஜன

செய்தித் தொடர்புகள், இலக்கியம், கலைகள் மூலமாகவும் ஒரு விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் திட்டவட்டமாகவும் முறையாகவும் மனதில்பதியும்படி செய்யப்படுகிறது. சோவியத் யூனியனில் மார்க்சிய-லெனினியக் கல்வியானது அரசு மற்றும் தேசம் தழுவிய அக்கறையைக் கொண்டிருக்கிறது.

கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவதற்கு மார்க்சிய-லெனினியம் உயர்நாடியாகும். கம்யூனிச நிர்மாணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் மார்க்சிய விஞ்ஞானம் விளக்கிச் சரிபார்க்கிறது.

எதார்த்தமான சோஷலிசம் அதன் பங்கிற்கு அதனுடைய நடைமுறை செயல்கள் மூலம் மார்க்சிய சிந்தனையின் மதிப்பை வலுவடையச் செய்கிறது, அதனுடைய உள்ளடக்கத்தை அலசி ஆராயவும் செழுமைப்படுத்தவும் ஆழப்படுத்தவும் புதிய எல்லைகளைத் திறக்கிறது. சோஷலிசத்தைப் பற்றிய உண்மை பரவுவதானது சோஷலிச உலகத்திற்கு வெளியேயுள்ள கோடிக்கணக்கான மக்களின் உணர்வில் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தைப் பதியவைப்பதற்கான பாதையை வகுக்கிறது.

### மார்க்சிய-லெனினியமும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளும்

அரசியல் அரங்கில் முதலாளி வர்க்கம் தோன்றியது முதலாக அதனால் பேணி வளர்க்கப்பட்ட பிரதான கருத்தை, அதனுடைய அமைப்பு ''இயல்பான'', ''அழிவற்ற'' சமூக முறையாகும் என்ற கருத்தை, ருஷ்யாவில் தோன்றிய ஒரு சோஷலிச சமுதாயம் அழித்தது; முதலாளித்துவத்தின் ''சர்வவல்லமையைப்'' பற்றிய புராணம் அழிக்கப்பட்டது.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு வெகு காலத்திற்கு முன்பாகவே மார்க்சிய-லெனினியத்தால் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியின் இறுதியான, கடைசிக் கட்டமான பொது நெருக்கடி காலகட்டம் ஒன்றில் முதலாளித்துவம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகள் இந்த முன்னறிவிப்பின் சரியான தன்மையை நிரூபிக்க புதிய சாட்சிகளை அளித்தன.

முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதையும் அழிவின் எல்லைக்கே கொண்டுவந்த 1929—1933 ஆண்டுகளில் ஏற்பட்ட, அது வரை நிகழாத அளவிலான நெருக்கடி; புரட்சிகரமான எழுச்சியைத் தடுப்பதற்காக முதலாளி வர்க்கத்

தால் ஒரு வெறிகொண்ட முயற்சியாக சில நாடுகளில் பாசிச சர்வாதிகாரம் ஆட்சியதிகாரத்திற்கு வருதல்; இறுதியாக, சோஷலிசத்தைச் சமாளிப்பதற்கு ஒரு முடிவான வழியாக எல்லா நாடுகளிலும் உள்ள பிற்போக்குச் சக்திகளால் தயாரிக்கப்பட்டுத் திட்டமிடப்பட்ட ஆனல் நிதர்சனமாக அதைத் தூண்டி விட்டவர்களுக்கு உண்மையான அழிவாக மாறிய இரண்டாவது உலகப் போர் ஆகிய இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் முதலாளித்துவ அமைப்பானது நாகரீக வளர்ச்சியின் அவசரத் தேவைகளையோ மனிதகுலத்தின் மிகப் பெரும்பாலானவர்களின் நலன்களையோ சந்திக்க முடியவில்லை என்பதை அதிகமான வன்மையோடு எடுத்துக் காட்டின.

சில நாடுகளில் சோஷலிசம் உறுதியானதாக இருப்பது, முன்னைய காலனிகள் மற்றும் அரைக்காலனிகளின் இடத்தில் கிட்டத்தட்ட 100 சுதந்திரமான அரசுகள் தோன்றியிருப்பது ஆகிய இந்த இரு நிகழ்ச்சிப் போக்குகளும் ஏகாதிபத்தியத்தின் சாத்தியப்பாடுகளைத் தீவிரமாகத் தடுத்தன. இன்று ஏகாதிபத்தியம் உலகத்தின் எதேச்சாதிகார எஜமானராக இல்லை.

ஏகபோக மூலதனம் வலிமையான நிலைகளை இன்னமும் தக்க வைத்திருக்கிற போதிலும் மாபெரும் தொழில்துறை, நிதி மற்றும் இராணுவ வலிமையைப் பெற்றிருக்கிற போதிலும் அதனுடைய அரசியல், பொருளாதார உறுதியற்ற தன்மை வளர்ந்து கொண்டேயிருக்கிறது, சூழ்ச்சித் திட்ட முறைகளைக் கையாள முன்பு அதற்கிருந்த சந்தர்ப்பங்கள் இனிமேல் கிடையாது. இது புறவயமானதும் தவிர்க்க முடியாததுமான நிகழ்ச்சிப் போக்காகும்.

முதலாளித்துவத்தின் எல்லா துரதிர்ஷ்டங்களுக்கும் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்ட ''மாஸ்கோ சூழ்ச்சிகள்'', ''கம்யூனிஸ்டு சதி'' ஆகியவற்றைப் பற்றிய பூர்ஷ்வா பிரச்சாரத்தின் கட்டுக்கதைகள் முதலாளித்துவத்திற்கு எதிர்கால வரலாறு இல்லை என்ற உண்மையை மறைப்பதற்காக எல்லா இடங்களிலும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனல் முதலாளித்துவ நாடுகளின் மக்களினங்களுக்கு இத்தகைய துணிபுரைகளின் உண்மையான அர்த்தம் என்ன என்பதைப் பற்றிய உணர்வு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

அயல் நாட்டு சாகசச் செயல்களின் மூலமும் பிற தேசங்

களை நசுக்குதல் மற்றும் கொள்ளையிடுதல் மூலமும் தன்னுடைய உள்பகைமைகளை வெற்றி கொள்ள ஏகாதிபத்தியம் செய்யும் முயற்சிகளுக்குச் சோஷலிசம் ஒரு முக்கிய தடையாக இருக்கிறது என்பதும் உண்மைதான். உலகப் பிற்போக்கின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்குச் சோஷலிசத்தின் வலிமையானது மிகப்பெரிய தடையாக உள்ளது. வரலாற்று ரீதியாக சுமார் நாற்பது ஆண்டுகளாக மனிதகுலம் ஒரு புதிய உலகப் போரின் பயங்கரத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறது என்ற ஒரே உண்மை கூட சோஷலிசத்தின் வரலாற்றுப் பெருமையைக் காட்டுவதேயாகும்.

ருஷ்யாவில் நடைபெற்ற 1917ம் ஆண்டின் புரட்சியின் ஆரம்ப நாட்களிலிருந்தே ஏகாதிபத்தியப் பிரச்சாரமானது இடைவிடாது சோஷலிசத்தை அவதூறு செய்து கொண்டும் இருட்டடிப்புச் செய்து கொண்டும் திரித்துக்கூறிக் கொண்டுமிருக்கிறது; இது முதலாளித்துவ நாடுகளில் இருக்கும் மக்களின் மனதில் கணிசமான குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது. எனினும் மிகத் திறமையான பிரச்சாரத்தின் சக்திக்கும் ஒரு எல்லை உண்டு.

பின்தங்கிய நிலையிலிருந்த ஜாரிச ருஷ்யா சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ஒரே ஒரு தலைமுறைக்குள்ளாக முழுமையாக வளர்ச்சியுற்ற பொருளாதாரத்தையும் உயர்மட்ட கலாச்சாரத்தையும் முதல் தரமான பாதுகாப்பு வல்லமையையும் கொண்ட உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாகியது என்ற தெளிவான உண்மையை மறுக்க முடியாது. 20வது நூற்றாண்டில் வேறு எந்த நாடும் சோவியத் யூனியனைப் போல் இத்தகையதொரு மகத்தான முன்னேக்கிய பாய்ச்சலை நிறைவேற்றவில்லை. ''சோவியத் நிகழ்வை'' முதலாளித்துவ வழியில் விளக்குவதற்குச் செய்யப்படும் முயற்சிகளைப் பற்றி கவலையில்லை. ஏனெனில் முதலாளித்துவ அரசுகளில் உள்ள கோடிக்கணக்கான சாதாரண மக்கள் லெனினது, தொழிலாளி வர்க்க கட்சியினது தலைமையின் கீழ் வெற்றிகொண்ட புரட்சியே இந்தச் சக்திமிக்க எழுச்சிக்கு மூலாதாரமாக இருந்தது என்பதைக் காண்கின்றனர், புரிந்து கொள்கின்றனர். தனியார் சொத்துடைமையை ஒழித்தல், அதன் உடைமையாளர்களான முதலாளிகள், நிலப்பிரபுக்களை ஆட்சியதிகாரத்திலிருந்து நீக்குதல் ஆகியவற்றின் விளைவால் நாடு முழுவதும் அதன் மக்கள் அனைவரும் அதற்குமுன் கண்டி

ராத சக்திமிக்க விசையைப் பெற்றனர்—உலகம் முழுவதிலு முள்ள கோடிக்கணக்கான மக்கள் ருஷ்ய நிகழ்ச்சிகளிலிருந்து கற்றுக் கொண்ட பிரதான பாடம் இதுதான்.

வரலாற்றின் நெருக்கடியான காலகட்டங்களில் சோவியத் நாட்டின் எதிர்காலம் இடருக்குட்பட்ட போதெல்லாம் சோவியத் யூனியனுக்காக உலக மக்கள் காட்டிய பரிவும் இந்தப் பரிவின் செயலூக்கத் தன்மை உலக அரசியலில் ஒரு காரணியாகியதும் அதிகமாகத் தெளிவாகிக் கொண்டிருந்தன. ருஷ்யாவில் உள்நாட்டுப் போர் நடந்தபோதும் இப்படித்தான். அப்பொழுது சர்வதேச தொழிலாளி வர்க்கம், எல்லா முற்போக்குச் சக்திகளின் ஒற்றுமையானது ஏகாதிபத்திய குறுக்கீட்டைத் தோற்கடிப்பதில் அளப்பரிய பங்காற்றியது. சோவியத் யூனியனை ஹிட்லர் ஜெர்மனி தாக்கியபிறகும் இப்படித்தான். அப்பொழுது ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியைச் சேர்ந்த மக்களினங்கள் சோவியத் யூனியனுடன் சேர்ந்து போராடும் தங்களுடைய கூட்டணியை ஆர்வத்துடன் வரவேற்றுப் பொது விரோதியை எதிர்த்துச் செயலூக்கத்துடன் போரிட்டனர். உலக மக்களின் அன்பான ஆதரவு, பதற்றத் தணிவை அடைவதற்கான சோஷலிச நாடுகளினுடைய முயற்சிகளின் வெற்றியை நிர்ணயிக்கிற ஒரு பெரும் காரணியாகியிருக்கும் இன்றைய நிலையும் இதுவே.

இரண்டாவது உலகப் போரைப் பின்தொடர்ந்த காலகட்டத்தின் வரலாறு முதலாளித்துவ நாடுகளின் மக்களினங்களுக்குச் சோஷலிச அமைப்பின் வலிமையையும் உயிரோட்டத் தன்மையையும் மதிப்பீடு செய்வதற்கான ஏராளமான விஷயங்களை வழங்கியது. சோஷலிசப் புரட்சிகளின் வெற்றிக்கு முன்பு மிகவும் வெவ்வேறான வளர்ச்சிக் கட்டங்களிலிருந்த பல புதிய அரசுகளின் அனுபவம் ருஷ்யாவின் சோஷலிசப் புரட்சி எதைக் கட்டியிருக்கிறது என்பதைச் சரியாக உறுதி செய்தது.

மக்கள் ஜனநாயக நாடுகள் எல்லாம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் விரைவான வளர்ச்சியை அடைந்தன, மிகவும் சிரமமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தங்களுடைய ஆற்றலைக் காட்டின; அதன் விளைவாக சோஷலிசம் மேலும் அதிகமான சர்வதேச கௌரவத்தைப் பெற்றது. ''கெடுபிடிப் போர்'' இந்த நிகழ்ச்சிப் போக்கை நிறுத்த

வில்லை. அந்த நாட்களில் மூர்க்கமான சோவியத் எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது... எனினும் ஐம் பதுக்களின் இறுதியில் சோவியத் யூனியன் உலகத்தின் முதல் துணைக்கோளை விண்வெளியில் வெற்றிகரமாகச் செலுத்திய பொழுது அது நின்றது. விண்வெளியில் சென்ற முதல் மனி தன் ஒரு சோஷலிச நாட்டிலிருந்து வந்தவன் என்ற உண்மை முதலாளித்துவ ஒழுக்கம், அரசியல் மற்றும் போர்த் தந்திரம் ஆகியவற்றின் தோல்வியைக் குறிப்பிட்டது.

விண்வெளி ஆராய்ச்சியில் சோவியத் சாதனைகளால் பூர்ஷ்வா வட்டாரங்களில் ஏற்பட்ட அதிர்ச்சியானது சோஷ லிச நாடுகளைப் பொறுத்த வரை இது முதலாளித்துவ அர சாங்கங்களின் கொள்கை மற்றும் பிரச்சாரம் ஆகியவற் றைப் பற்றிய சில அம்சங்களை மறுமதிப்பீடு செய்ய ஆரம் பிக்கும்படி கட்டாயப்படுத்தியது. குறிப்பாக, சோஷலிச உலகத்தைச் சுற்றி அவர்கள் போட்டிருந்த தவறான செய்தி என்ற திரையை அகற்றும்படி நிர்ப்பந்தித்தது. அதிலிருந்து, சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிச நாடுகளைக் ''கண்டு பிடித்தல்'' உலகப் பிற்போக்கால் பல தடைகள் இடப்பட்ட போதிலும் தொடர்கிறது.

வாழ்வின் எல்லாத் துறைகளையும் சார்ந்த முதலாளித் துவப் பிரமுகர்கள் அக்காலத்தில் கல்வி, பொதுசுகாதாரம், நகர நிர்மாணம், பொது போக்குவரத்து, புறச்சூழல் பாது காப்பு, பிற பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்கும் முறைகளைப் பற்றிய நேரடியான செய்தியைப் பெறுவதற்காக சோஷலிச நாடுகளின் தலைநகரங்களுக்குப் பயணம் செய்து கொண் டிருந்தனர். இனிமேல் மேற்கு நாடுகள் சில விஞ்ஞான, தொழில்நுணுக்கத் துறைகளிலும் பல சமூகப் பிரச்சினை களைத் தீர்ப்பதிலும் சோஷலிச அரசுகளை எட்டிப் பிடிக்க முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும் என்பதை இராஜதந் திரிகள், விஞ்ஞானிகள், தொழில்நுணுக்கவாதிகள், பத்திரி கையாளர்கள் ஆகியோர் மேலும் மேலும் அடிக்கடி ஒப்புக் கொள்ள ஆரம்பித்தனர்.

சோஷலிச எதார்த்தத்தின் பல துறைகளிடையே மிகச் சமீபத்திலே, பொருளாதாரத் திட்டமிடுதல்தான் பூர்ஷ்வா பத்திரிகைகளில் குறிப்பாக தீவிர குற்றச்சாட்டுகளுக்கான ஓர் இலக்காயிருந்தது என்ற போதிலும் சோஷலிசப் பொரு ளாதார திட்டமிடுதலின் முறைகள் விசேஷ கவனத்தைப்

பெற ஆரம்பித்தன. பொருளாதாரத் திட்டமிடுதல் என்பது ''தனிநபர் சுதந்திரத்தினைத் தடுத்தல்'', ''சர்வாதிபத்தியத்தின்'' ஓர் அறிகுறியாகும் என்றும் பிந்தியது சோஷலிச அமைப்பின் அடிப்படையாகும் என்றும் அதனால் தான் சோஷலிசமானது, மேற்கத்திய நாடுகள் முழுக்க ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்றும் தொடர்ந்து விளக்கிக் கூறப்பட்டது.

எனினும் மேற்கத்திய அரசு-ஏகபோக அமைப்பிற்கு திட்டமிடுதலைத் தகவமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன; அம்முயற்சிகள் ஏன் எடுக்கப்பட்டதெனில் திட்டமிட்ட பொருளாதாரத்தின் கீழ் உள்ள வளர்ச்சி வீதங்கள் முதலாளித்துவத்தால் அடைய முடியாதவையாகும், மேலும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இந்த முயற்சிகளுக்கு நீண்ட வரலாறு உண்டு. முப்பதுக்களின் ஆரம்பத்தில் ஜான் மேய்னார்டு கெயின்ஸ் என்பவர், 1929—1933ம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான நெருக்கடிக்கு எதிரான பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் எதிர் நடவடிக்கையாக பொருளாதார நிர்வாகத்தைப் பற்றிய தன் தத்துவத்தை உருவாக்கிய பொழுது அந்தக் காலத்தில் ஆரம்பக் கட்டத்திலிருந்த திட்டமிடுதலைப் பற்றிய சோவியத் விஞ்ஞானத்தின் அனுபவத்தை மிகக் கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்.

ஐம்பதுக்களின் முடிவில், சோவியத் அனுபவத்தை ஆராய வேண்டிய அவசியத்திற்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குப் பயன்படக்கூடிய ''அம்சங்களை'' அதனிடமிருந்து கடன் வாங்க வேண்டிய அவசியத்திற்கும் சாதகமாக வெளிப்படையாகவே குரல்கள் எழுப்பப்பட்டன. தங்களுடைய பொருளாதாரத்தின் எதிர்காலத்தை அவசரமாக முன்னறிவிக்கவும் திட்டமிடவும் எதார்த்த நிலைமையால் முதலாளித்துவ அரசாங்கங்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போதும் மூன்றாண்டு, நான்காண்டு, ஐந்தாண்டு ''திட்டங்கள்'' தோன்ற ஆரம்பித்த போதும் இந்த விவாதங்கள் நடைபெற்றன, ஆனால் இந்தத் திட்டங்களை அமுலாக்குவது ஒவ்வொரு முறையும் தோல்வியடைந்தது. ஏனெனில் நாட்டில் திட்டமிட்ட பொருளாதார நிர்வாகம் என்பது உற்பத்திச் சாதனங்களைச் சமூக சொத்தாகக் கொண்ட அடிப்படையில் மட்

டுமே சாத்தியமாகும். மிகவும் அதிகமான இலாபங்களை அடைவதை ஒரே நோக்கமாகக் கொண்ட தனியார் சொத்துரிமையின் சுதந்திரமான மார்கெட்டுடனும் போட்டியுடனும் அது முரண்படுகிறது.

எனினும் பத்திரிகைகளிலும் இராஜதந்திரிகளின் சொற்பொழிவுகளிலும் பெரும் வணிகர்களிடையேயும் நடைபெற்ற மேலே கூறிய விவாதங்களின் உளவியல் மற்றும் சித்தாந்த செல்வாக்கும் மேலும் அரசு கொள்கையிலும் பெரும் ஏகபோகங்களின் செயல்களிலும் அவற்றின் நேரடியான பிரதிபலிப்பும் குறைந்த முக்கியத்துவமுடையதாக இருந்ததில்லை. ஏனெனில் அது பூர்ஷ்வா உணர்வின் நிலையான அடிப்படைகள் என்று கூறப்படுவதினுடைய நெருக்கடியின் அறிகுறியாக இருந்தது. தனியார் சொத்திற்கு நிபந்தனையற்ற முழு முன்னுரிமை அளித்தல் என்ற கோட்பாடுகளின் மீதும் அதைத் தொடர்ந்த தனியார் தொழில் முயற்சிக்கு எல்லையற்ற சுதந்திரம் என்ற கோட்பாட்டின் மீதும் உருவாக்கப்பட்ட முதலாளித்துவக் கண்ணோட்டமானது அதனுடைய எதிர்முனையான சோஷலிசத்தின் கோட்பாடுகளையும் முறைகளையும் கடன்வாங்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டது. இது முதலாளித்துவ அமைப்பை மிக ஆர்வத்துடன் புகழ்கின்றவர்களைக் கூட சிந்திக்க வைத்தது.

அதே நேரத்தில், இரு சமூக அமைப்புகளையும் சார்ந்த அரசுகளிடையே பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றில் இரு பக்க மற்றும் பல பக்க ஒத்துழைப்பு உயர்ந்து கொண்டே இருந்தது, கலாச்சாரப் பிணைப்புகளும் சுற்றுலாவும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன. பெருவீதப் பொருளாதாரக் கூட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. பதற்றத் தணிவின் இந்த ஸ்தூலமான வெளிப்பாடுகள்,விளைவுகள் எல்லாம் தேசங்களிடையே பரஸ்பரம் புரிந்து கொள்ளுதலைக் கணிசமான அளவு மேம்படுத்தின. மேற்கத்திய நாடுகளிலுள்ள பொது மக்கள் மென்மேலும் சோவியத் ''கண்டுபிடிப்புகளைப்'' பற்றி, அதாவது இலக்கியம், கலை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் சோவியத் நாட்டின் சாதனைகளைப் பற்றியும் சோவியத் சமுதாயத்தின் உயர்ந்த ஒழுக்கத்தரங்களைப் பற்றியும் பல ஆண்டுகளாக பூர்ஷ்வா பிரச்சாரம் அவதூறுக் குவியல்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த சோஷலிச வாழ்க்கை

வழியைப் பற்றிய மென்மேலும் புதிய அம்சங்களைப் பற்றியும் அறிந்து கொண்டிருந்தனர்.

மேற்கத்திய நாடுகளில் சமூக மெய்யறிவைப் பரப்புவது, மதிப்புகளை அடிப்படையாக மறுமதிப்பீடு செய்வது எனும் ஆழமான நிகழ்ச்சிப் போக்குகள் வளர்ந்துள்ளன. இந்த நிகழ்ச்சிப் போக்குகள் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் அறுபதுக்களிலும் எழுபதுக்களிலும் அரசியல் சக்திகளின் இணைப்பில் மாற்றங்களை நிர்ணயித்த காரணிகளில் ஒன்றாகும். அவை இந்த மாற்றங்களில் மிக முக்கியமானதை உண்டாக்கின, அதாவது மக்கள் திரளினரின் இடதுசாரித் திருப்பத்தை அதிகரிக்கச் செய்தன.

முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களின் காரணத்தால் இந்த நிகழ்ச்சிப் போக்குகள் ஆழமானதாகவும் மிக விரிவானதாகவுமாயின. விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் போக்கில் தொழில்துறை அடைந்த வளர்ச்சியின் காரணத்தால் ஏற்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் விரைவான அதிகரிப்பு இவற்றில் முதலாவதானதாகும். சோவியத் யூனியனின் விஞ்ஞானப் பேரவையைச் சார்ந்த சர்வதேச தொழிலாளர் இயக்க நிறுவனத்தின் கணக்கின்படி, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் 1950ல் ஆண்டில் 13.2 கோடியாக இருந்த மொத்த பாட்டாளிகளின் எண்ணிக்கை 1975ல் 20.9 கோடியாக உயர்ந்தது, அதாவது வேலை செய்யக் கூடியவர்களில் அதன் பங்கு 56.9 சதவீதத்திலிருந்து 69 சதவீதமாக உயர்ந்தது. இவ்வாறாக, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் 1950க்களில் மக்கள் தொகையில் சாதாரண பெரும்பான்மையாக இருந்த தொழிலாளி வர்க்கம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் மிகப் பெரிய பெரும்பான்மையாகியது.

எனினும் இது வெறும் எண்ணிக்கை உயர்வை மட்டும் பொறுத்த விஷயமல்ல; இந்தப் போக்கின் தரத்தைப் பற்றிய அம்சம் குறைந்த முக்கியத்துவமுடையதல்ல. உற்பத்தியில் விரிந்த அளவில் விஞ்ஞானத்தைப் புகுத்துவதற்கு, முன்பைவிட தொழில் மற்றும் பொது கலாச்சாரத்தில் மிக உயர்ந்த தகுதிகளைக் கொண்ட தொழிலாளர்கள் நிறைய தேவைப்பட்டனர்; உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்ய அதிகச் செலவும் ஆகிறது.

ஆனல் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் ஒரு கணிசமான பகுதியினரின் கலாச்சார மற்றும் தொழில் மட்டங்களில் ஏற்பட்ட உயர்வு அவ்வர்க்கத்தின் நிலையை, அதாவது சுரண்டப்படும் வர்க்கம் என்ற நிலையை மாற்றவில்லை, தொழிலாளர்கள் வாழுகின்ற சமூக அமைப்பின் அடிப்படையிலிருந்து அவர்கள் விலகிவிடு தலையும் அது குறைக்கவில்லை. எழுபதுக்களில் முதலாளித் துவ உலகத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட திருப்பமானது ஒப்பீட்டடிப்படையிலான உயர்ந்த வியா பார நடவடிக்கையின் காலகட்டத்திற்கு ஒரு முடிவு கட்டி யது; அதன் விளைவாக, ஒரு புறம் சமுதாயத்தில் முக்கிய மான உற்பத்திச் சக்தியாகவும் நவீன நாகரிகத்தின் தலைவிதி தீர்மானமான அளவிற்குச் சார்ந்திருக்கக் கூடிய வர்க்கமாக வும் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் பங்கிற்கும் மறு புறம் முதலாளித்துவ சமுதாய அமைப்பில் அதனுடைய அமுக்கப் பட்ட ஒடுக்கப்பட்ட நிலைக்கும் இடையில் முரண்பாடு அதிகத் தெளிவாகியது.

வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் 1970 முதல் 1980 வரையுள்ள பத்து வருடங்களில் வேலையில்லாதவர் களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகியது. அவர் களின் மொத்த எண்ணிக்கை 19 மில்லியனுக (1982ல்—25 மில்லியனுக) இருந்தது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் விஞ்ஞான தொழில்நுணுக்க முன்னேற்றம் உழைக்கும் மக் களுக்கு எதிராகத் திரும்பி பல லட்சக்கணக்கான மக்களின் வேலைகளுக்கு வேட்டு வைத்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு முதல் தடவையாக எழுபதுக்களில் அநேக மாக தலைமையாக உள்ள எல்லா முதலாளித்துவ நாடு களிலுமே உண்மையான கூலிகள் ஒரே சமயத்தில் வீழ்ச்சி யடைந்தன. எல்லா நாடுகளிலும் சமூக வசதி வீடுவசதி, போக்குவரத்து, கல்வி, பொதுசுகாதாரம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் வெட்டப்பட்டன.

பணவீக்கம் முன் எப்போதும் ஏற்பட்டிராத வேகத் தோடு அதிகரித்தது. 1970 முதல் வளர்ச்சியுற்ற முதலாளித் துவ நாடுகளில் விலைகள் சராசரி 2.3 மடங்கு அதிகரித்திருக் கின்றன. ரீகன் ஜனதிபதியாகப் பதவியேற்றபொழுது ''பண வீக்கம் லட்சக்கணக்கான அமெரிக்கர்களின் வாழ்க்கையின் அடிப்படைகளை ஆட்டிக்கொண்டிருப்பதை'' ஒத்துக் கொண்

டார். முதலாளித்துவ அரசாங்கங்கள் பணவீக்கத்துக்கு எதிராகச் செய்யும் நடவடிக்கைகள் உற்பத்தித் தேக்கத்தை ஏற்படுத்துகின்றன, அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. அதே சமயம் உற்பத்தித் தேக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பணவீக்கத்தை அதிகப்படுத்துகின்றன. அரசு-ஏகபோக ஒழுங்குபடுத்துதல் முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதில் மென்மேலும் திறமையில்லாதிருக்கிறது.

வர்க்கப் போராட்டத்தின் புதிய அகநிலை மற்றும் புறநிலை நிலைமைகள் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ அமைப்போடு ''ஒருங்கிணைக்கப்படும்'' யுகம் தொடங்கிவிட்டது என்று கூறிக் கொண்டிருந்த சீர்திருத்தவாதிகளின் பிரமைகளை அகற்றின. 1970—1980ல் வேலைநிறுத்தங்களில் பங்கெடுத்தவர்களின் எண்ணிக்கை முன்பு பங்கெடுத்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமாகி 25 கோடி பேர்களைத் தழுவியது என்று அரசாங்கப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒரு பெரும் அரசியல் சக்தியாகின. மேற்கு ஐரோப்பாவில் மட்டுமே 1970—1980 வரையிலான ஆண்டுகளில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 8,00,000 ஆக வளர்ந்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பெரும்பான்மையில் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகள் உள்ளனர், ஸ்தல அரசாங்கத்தில், தொழிற்சங்கங்களில், பிற வெகுஜன ஸ்தாபனங்களில் முக்கியமான நிர்வாகப் பதவிகளை அவர்கள் வகிக்கின்றனர். இத்தாலி நாட்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது மூன்றில் ஒரு பங்கினர் கம்யூனிஸ்டிற்கு வாக்களித்தார்கள்.

பிரான்ஸ், இத்தாலி, பின்லாந்து, கிரீஸ், ஐஸ்லாந்து மற்றும் பிற நாடுகள் சிலவற்றில் உள்ள கம்யூனிஸ்டுகள், பிற இடதுசாரி சக்திகள் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைகள் முக்கியமான சமூக மற்றும் அரசியல் ஆதாயங்களுக்கும் தொழில்துறையில் உழைக்கும் மக்களின் உரிமைகள், பிற ஜனநாயக உரிமைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் இட்டுச் சென்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்களுடைய சொந்த அச்சகங்களை, பதிப்பகங்களை, கட்சிப் பள்ளிகளைப் பெற்றிருக்கின்றன.

அவை பலவகையான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன. அவற்றில் சில மார்க்சிய-லெனினிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி ஆராய்ச்சிகளை நடத்தும் ஆய்வு மையங்களை அமைத்து தத்துவாசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றன.

பத்தாண்டுகளாக, முதலாளி வர்க்கமும் அதனுடைய பிரச்சாரகர்களும் விஞ்ஞான ஆதரவாளர்களும் மேற்கு நாடுகள் ''மார்க்சிய சோஷலிசத்திலிருந்து'' விலக்கப் பெற்றுள்ளன என்றும் முதலாளித்துவ மையத்திலிருந்து வெகு தொலைவிலிருக்கிற இடங்களிலும் அதனுடைய பிற்பட்ட பகுதிகளிலும் மட்டுமே மார்க்சிய சோஷலிசத்திற்கு வாய்ப்புகள் இருக்கலாம் என்றும் தொழில்துறை வளர்ச்சியுற்ற நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிர்காலம் இல்லை என்றும் இன்ன பிறவற்றையும் பல்வகைக் குரல்களில் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இன்று, இத்தகைய நம்பிக்கைகள் எல்லாம் வீண் என்பது தெளிவு.

முதலாளித்துவ ஆட்சியதிகாரத்தின் பொறியமையின் உறுதி குலைவது அதிகமாகிக் கொண்டே இருக்கும் நிலைமைகளில் சோஷலிசத்தின் செல்வாக்கு அதிக பலத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. 1917ம் ஆண்டு ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு முதல் பத்தாண்டுகளில் பல மேற்கு நாடுகளில் உள்ள முதலாளி வர்க்கம், பழமைவாத மற்றும் மிதவாத கட்சிகளுக்கிடையிலான போட்டி மூலம் அரசியல் மற்றும் சித்தாந்த மேலாதிக்கத்தைப் பெறக் கூடிய போதுமான சக்தியைப் பெற்றிருந்தது. கூட்டணி அரசாங்கங்களில் சில நேரங்களில் பங்கு அளிக்கப்பட்ட சமூக-ஜனநாயக சீர்திருத்த வாதக் கட்சிகள் மிதவாதிகளுடன் சேர்ந்திருந்தன.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு முதலாளித்துவ முகாமிற்குள் உள்ள அரசியல் சக்திகளின்அணிச்சேர்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. புரட்சிகர எழுச்சியும் ஐரோப்பாவில் முதலாளித்துவ நிலைகள் பலவீனமடைந்ததும் சக்திகளை மீண்டும் ஒரு கோஷ்டியாக அமைக்க வேண்டியது அவசியம் என்ற முடிவிற்கு சில நாடுகளில் உள்ள பெரிய முதலாளித்துவ வர்க்கத்தினரை இட்டுச் சென்றன.

அரசு-ஏகபோகப் போக்குகளின் வளர்ச்சி பூர்ஷ்வா மிதவாதத்தின் நிலையைக் கூர்மையாகப் பலவீனப்படுத்தியது. கிட்டத்தட்ட எங்கும் வெகுஜன மிதவாதக் கட்சிகள், மார்க்

சியத்தைக் கைவிட்டு குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாத ''மூன்ருவது வழிநிலையை'' ஏற்றுக் கொண்ட சமூக-ஜனநாயக வாதிகளால் மாற்றீடு செய்யப்படுவதற்காக அரங்கிலிருந்து வெளியேறின.

அதே நேரத்தில், சமூக-ஜனநாயக செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே போவது மக்கள் திரளினரின் இடதுசாரித் திசைவழியின் பல்வகையான மற்றும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கின் வெளிப்பாடுகளில் ஒன்ருகும் என்பதைப் பார்க்காமலிருக்க முடியாது. பாசிசத்தைத் தோற்றுவித்ததும் உலகப் போரின் படுநாசத்திற்கு உலகத்தை இட்டுச் சென்றதுமான முதலாளித்துவத்தின் மீது கொண்ட ஏமாற்றம் மேற்கு நாடுகளில் உள்ள விரிந்த தொழிலாளி மக்கள் திரளினர், குட்டி முதலாளித்துவ வாக்காளர்கள் ஆகியோரின் உணர்வுகளில் வேர்விட்டு ஒரு சோஷலிச மாற்றத்திற்குச் சாதகமான மனப்பாங்குகளை வலுவடையச் செய்தது.

எனினும், அவர்கள் விஞ்ஞான சோஷலிச நிலைகளைத் தேர்ந்தெடுக்க இன்னமும் தயாராக இருக்கவில்லை; அவர்கள் இன்னமும் பூர்ஷ்வா உலகக் கண்ணேட்டம், தப்பெண்ணங்கள், மாயைகள் ஆகியவற்றின் அதிகமான தாக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். பழைய அமைப்பை இறுதியாக நொறுக்கித் தள்ளுவதற்கான அவசியத்தை மறுத்த சமூக-ஜனநாயக சித்தாந்தம் மக்கள் தொகையில் மிக விரிந்த பகுதியினரிடையே இருந்த அரசியல் மன உணர்வின் நிலைக்கு ஏற்ப செயல்பட்டது. சமூக-ஜனநாயகக் கட்சிகள் மக்கள் திரளினரின் அதிருப்தியைப் பாதுகாப்பான வழிக்குத் திருப்பும் உள்நோக்கத்துடன் ஒரு புதிய அதிகாரபூர்வ எதிர்க்கட்சியின் பங்கை ஆற்றத் தொடங்கின. அதே நேரத்தில் வெளிப்படையான பெரிய பூர்ஷ்வா கட்சிகள் அரசாங்கத்தில் பிரதான பங்கைத் தொடர்ந்து ஆற்றின.

ஐம்பதுக்களிலும் அறுபதுக்களிலும் இந்த அமைப்பு கிட்டத்தட்ட பயனுள்ளதாக இருந்தது, ஆனல் பின்னர் அது மிக மோசமாகச் செயல்பட ஆரம்பித்தது. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நேரடியாக பெரும் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எல்லா விதமான தந்திரங்களையும் செய்த போதிலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து அரசாங்கத்தில் தங்களுடைய தலைமை நிலைகளை சமூக-ஜனநாயகவாதிகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

சமூக-ஜனநாயகத் தலைவர்களுக்கு இயல்பாகவே முதலாளித்துவத்தின் அடிப்படைகளை மீறும் உள் நோக்கம் இல்லாத போதும் எழுபதுக்களில் மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரியா, பிற நாடுகள் சிலவற்றிலுள்ள பெரிய முதலாளித்துவக் கட்சிகள் எதிர்தரப்பில் இருந்தன என்ற உண்மை ஏகபோகங்களின் அரசியல் நிலைகள் பலவீனமடைந்துவிட்டதைக் காட்டின. இயல்பாகவே ஏகபோகங்கள் தங்களுடைய சொந்த நேரடியான கையாட்கள் ஆட்சிப் பிடியில் இருப்பதைப் பார்க்க விரும்பியிருக்கலாம். வலதுசாரி சோஷலிஸ்டுகள் முக்கிய பதவிகளை வகிக்கும் அரசாங்கங்களை அமைக்க பெரும் முதலாளி வர்க்கம் ஒப்புக் கொண்டது. ஏனெனில் வர்க்க முரண்பாடுகளைத் தளர்த்துவதற்கு இதை விட சிறந்த வழியை அது காணவில்லை. இன்று பெரும் மூலதனத்தின் கௌரவம் எவ்வளவு ஆழமாக அரித்தழிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த உண்மை காட்டுகிறது. இந்தக் கௌரவத்தை அரித்தழிக்கும் சூழ்நிலைகள் தற்செயலானவை அல்ல, நீண்டகாலமாக உள்ளவை, நவீன முதலாளித்துவ வளர்ச்சியின் தாக்கத்திலிருந்து தொடர்கின்றன என்ற காரணத்தால் ஏகபோகங்களின் அரசியல் நிலைகள் தொடர்ந்து பலவீனமடையும் என்பது தெளிவு. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கும் அவர்களுடைய சித்தாந்த செல்வாக்கும் வளர்ந்து கொண்டே இருப்பதிலும் சமூக-ஜனநாயகக் கட்சிகளில் அரசியல் மற்றும் சித்தாந்த பாகுபாட்டிலும் இக்கட்சிகளில் இடதுசாரி உணர்வுப் பாங்குகள் அதிகரிப்பதிலும் இந்தப் போக்கின் அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான், பிற வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் ஆகியவற்றிலுள்ள முக்கியமான பூர்ஷ்வா கட்சிகளில் உள்ள உள் முரண்பாடுகள் அதிகரிப்பதில் அவை தெளிவாகின்றன.

பெரும் மூலதனம் அதன் பங்கிற்கு அதனுடைய சொந்த பூர்ஷ்வா சட்டங்கள், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கோட்பாடுகள், விதிகள் ஆகியவற்றைக் கீழ்த்தரமாகத் தடை செய்கிறது. இது முற்போக்குச் சக்திகள், அரசியல் எதிரிகள் ஆகியோருக்கு எதிராக நேரடியான பலாத்காரத்தையும் சதிகளையும் பரந்த அளவில் பயன்படுத்துவதன் மூலமும் கருத்து வேறுபாடானவர்களை ஒழித்துக் கட்டுதல், வேவுபார்த்தல், எதிர் வேவுபார்த்தல் ஆகியவற்றின் மூலமும் சாதிக்கப்படு

கிறது. இவையெல்லாம் பூர்ஷ்வா சட்டங்களுக்குக் கூட மிகவும் அப்பட்டமான முரண்பாடாகும். இராஜதந்திரி களுக்கு மட்டுமல்லாது அரசியல் கட்சிகள் முழுமைக்கும் லஞ்சம் கொடுக்கப்படுகிறது. பன்னாட்டு ஏகபோகத் தொழில் நிறுவனங்களின் வருகையால் லஞ்சம் சர்வதேச மயமாகி யிருக்கிறது. உதாரணமாக, முப்பது நாடுகளின் உயர் இராஜதந்திரிகளும் பூர்ஷ்வா கட்சிகளும் ''லாக்ஹீடு'' என்னும் அமெரிக்க விமான கம்பெனி சம்பந்தப்பட்ட ஊழலில் ஈடுபட்டு பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்ற குற்ற வாளிகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் ஏக போகங்களின் குற்றச்செயல்கள் அரசாங்க ஸ்தாபனங்களால் செயலூக்கமுடன் ஆதரிக்கப்படுகின்றன. பூர்ஷ்வா சட்ட ஒழுங்கின் அடிப்படைகளில் ஒரு நெருக்கடி, எல்லா மட்டங் களிலும் முதலாளித்துவ அரசு நிறுவனங்களில் ஒரு நெருக் கடியை மிகத் தெளிவாகக் காண முடிகிறது.

பொருளாதார அதிர்ச்சிகள், சர்வதேசக் கொள்கையின் தோல்விகள் ஆகியவற்றின் இணைப்புடன் முதலாளித்துவ அரசியல் அமைப்பின் நெருக்கடியானது முதலாளித்துவத் திலும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் முதலாளித்துவ சமு தாயத்தை எதிர்நோக்கும் சிரமங்களை எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய அதன் தன்மையிலும் மக்களுக்கு இருந்த நம்பிக் கையில் ஓர் ஆழமான வீழ்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. ''நம்பிக்கைக்குரிய நெருக்கடி'' கூட முதலாளித்துவ மேல் மட்டத்தினரையும் ஆழமாக ஊடுருவிச் சென்றிருக்கிறது. அதன் விளைவால் நம்பிக்கை இன்மை, மதிப்புகளை வேதனை யுடன் மறுமதிப்பீடுகள் செய்தல், இருள் சூழ்ந்த தீர்க்க தரிசனங்கள், முன்னறிவிப்புகள் ஆகியவை நிறைந்த பல வெளியீடுகள் தோன்றின. மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த வலதுசாரி மனப் பாங்குடைய *Die Welt* என்னும் பத்திரிகை நேட்டோ நாடுகளில் உள்ள நிலைமையைப் பற்றி பின்வரும் மதிப்பீட்டை அளித்தது:

''நோயின் அறிகுறிகள் பல ஆண்டுகளாகவே கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில், இங்கும் அங்கும் நாடாளுமன்றப் பெரும்பான்மை என்பது பிரதான விஷய மல்ல. மிகவும் மோசமான விஷயம் என்னவெனில் இப் பொழுது இருக்கும் பெரும்பான்மை கூட ஆளும் கட்சிகளால் வெற்றி கொள்ளப்பட்டதல்ல; பெரும்பாலும் அது மோசடி

யால் பெறப்பட்டது என்பதும் சரியாகச் சொன்னல் இந்தப் பெரும்பான்மையால் கணிசமான எதையும் சாதிக்க முடியாது என்பதும் ஆகும்... மேற்கத்திய உலகம் இன்று ஆளப்படக் கூடியதாக இருக்கிறதா? என்று கேட்காமல் இருக்க முடியாது. ஆளப்படக் கூடியதாக இருக்கிறது என்ருல் அதன் பொருள் ஆளும் தலைமையால் ஒரு ஒழுங்கான நிதிக் கொள்கை, நியாயமான சீர்திருத்தங்கள், உறுதியான தன்மை ஆகியவற்றிற்கு வாக்குறுதியளிக்கும் ஓர் உள்நாட்டுக் கொள்கை, புத்திக்கூர்மையுள்ள பொருளாதார மற்றும் அயல்நாட்டு கொள்கை, போதுமான அளவு பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்படி இருக்கிறதா என்ற கேள்விக்குப் பதில் ஆம் என்பதற்குப் பதிலாக இல்லை என்றுதான் அநேகமாகக் கிடைக்கும்.''*

அதே பிரச்சினைகளைப் பகுத்தாய்வு செய்ததில் *Time* சஞ்சிகை, மேற்கு ஐரோப்பாவின் தொந்தரவிற்கு அடிப்படைக் காரணம் வலதுசாரி மற்றும் சமூக-ஜனநாயகத் திசைவழியைக் கொண்ட அரசாங்கங்கள் மீது மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் தான் என்று குறிப்பிட்டது. அந்த சஞ்சிகை சொன்ன படி இந்த அரசாங்கங்கள் நெருக்கடியைச் சமாளிக்க இயலாதவை மட்டுமன்றி அதன் மூலத்தைக் கூட விளக்க முடியாதவையாக இருக்கின்றன.**

முதலாளித்துவத்திலும் முதலாளித்துவ சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து மீட்டு இட்டுச் செல்லுவதற்கான மேற்கு நாடுகளின் ஆளும் வட்டாரங்களின் ஆற்றலிலும் ஏற்பட்ட நம்பிக்கை வீழ்ச்சியானது வலிமையான சித்தாந்த அதிருப்திப் போக்குகளையும் ஆன்மீக மற்றும் தார்மீக நெருக்கடியையும் தோற்றுவித்திருக்கிறது.

அதே நேரத்தில் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்கள், முன்பு பூர்ஷ்வா சித்தாந்தத்தின் கைதிகளான அறிவுஜீவிகள், மாணவர்கள், குட்டி முதலாளித்துவ நபர்கள் ஆகியோர் உள்ளிட்ட பொதுமக்களின் பகுதியினரின் மன உணர்

---

* *Die Welt*, $^{9}/_{10}$. März 1974, S. 4.

** *Time*, March 1974 பார்க்க.

வில் வலிமையான பிடிப்பை அதிகமாக உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

நெருக்கடியைத் தவிர்க்கும் உண்மையான வழியையும் வெகு ஜனங்களின் நலன்களுக்கு ஏற்ற, சமுதாயத்தின் சோஷலிச உருமாற்றத்திற்கான வழியையும் கம்யூனிஸ்டுகள் தெளிவாகக் காண்கிருர்கள். எல்லா உழைக்கும் மக்களுக்கும் பொதுவான அக்கறைகள் உண்டு, அவர்களுடைய கூட்டு நடவடிக்கைகள் சமூக முன்னேற்றப் பாதையில் செல்வதில் தீர்மானமான பங்காற்றுகின்றன என்பதை மார்க்சிய-லெனினியவாதிகள் அடிப்படையாகக் கொள்கிருர்கள்.

எனவே கம்யூனிஸ்டுகள் தான் தொழிலாளி வர்க்கம், அதனுடைய கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகிய எல்லாவற்றின் ஐக்கியத்திற்கும் மிக உறுதியான ஆதரவாளர்களாக இருக்கிருர்கள். விவசாயிகள், நகர்ப்புற மத்தியதர கோஷ்டிகள், அறிவுஜீவிகள் ஆகியோருடனை கூட்டணியை உறுதி செய்ய அவர்கள் விடாப்பிடியாக முயலுகின்றனர்; இளைஞர்கள் மற்றும் மாதர்கள் இயக்கங்களில் செயலூக்கமான பங்கேற்கின்றனர்; மதத்தை நம்புகின்ற மக்கள் திரளினரிடம் கருத்துப் பரிமாற்றத்துக்குச் சாதகமாக முன்வருகின்றனர்.

ஏகபோக எதிர்ப்பு முனையில் தொழிலாளி வர்க்கம் தான் முன்னணி சக்தியாக இருந்தது, இப்பொழுதும் இருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டணியால் மட்டுமே ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை உத்தரவாதம் செய்ய முடியும். சந்தர்ப்பவாதத்திற்கான எல்லாச் சலுகைகளையும் சாராம்சத்தில் முதலாளித்துவ அமைப்பிற்குத் தொழிலாளி வர்க்கத்தைக் கீழ்ப்படியச் செய்வதற்கான நிலையைக் கொண்ட எல்லா கொள்கைகளையும் உலகக் கண்ணோட்டங்களையும் மறுத்த ஒரு விஞ்ஞான புரட்சிகர தத்துவம் மூலம் மட்டுமே எல்லா புரட்சிகர சக்திகளின் ஐக்கியத்தை அடைய முடியும் என்பதனுல், கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதற்காகவும் ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்காகவும் ஆன போராட்டத்தில் எல்லா இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளின் ஐக்கிய முன்னணியை ஒழுங்குபடுத்துவதில் தலைமையான பங்காற்றுகின்றன. ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு

மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 1976ம் ஆண்டு பெர்லின் மாநாட்டில் இது மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

ஏகாதிபத்தியப் பிற்போக்கின் கருவியான கம்யூனிச எதிர்ப்பு என்பது உறுதியாக எதிர்க்கப்பட வேண்டும் என்று ஜனநாயகத்திற்கான போராட்டம் கோருகிறது. முற்போக்குச் சக்திகளுக்கு எதிராக ஏகாதிபத்தியப் பிற்போக்காளர்கள் நடத்துகின்ற இயக்கங்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஐக்கியத்தைத் தடுப்பதையும் எல்லா ஜனநாயக சக்திகளின் கூட்டணியைத் தடுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டவை. கம்யூனிச எதிர்ப்பைத் தனிமைப் படுத்துதல், ஒளிமயமான எதிர்காலத்திற்கான போராட்டத்தில் உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட செயல்களின் வெற்றி ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து பிரிக்க முடியாத நிகழ்ச்சிப் போக்குகளாகும்.

## மார்க்சிய-லெனினியமும் தேசிய விடுதலை இயக்கமும்

சுதந்திரமடைந்திருக்கும் அரசுகளில் மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் வேகமாகப் பரவுவதானது நவீன வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். சோஷலிசம் எல்லா நாடுகளின் நிகழ்ச்சி நிரலிலும் இருக்கிறது.

ருஷ்யாவில் ஏற்பட்ட வெற்றிகரமான சோஷலிசப் புரட்சியானது மார்க்சிய-லெனினியத்தைத் தேசிய விடுதலை இயக்கத்துடன் இணைக்கும் நிகழ்ச்சிப் போக்கைத் தொடங்கியது. ருஷ்யாவில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் வெற்றியானது பல காலனி மற்றும் சார்பு நாடுகளுக்கு விஞ்ஞான கம்யூனிசத்தைப் பற்றிய கருத்துக்களில், லெனினின் கருத்துக்களில், பொதுவாக போல்ஷிவிக் கட்சியில் அளப்பரிய ஆர்வத்தைத் தோற்றுவித்தது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள் ஆசியா, லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள நாடுகளில் மொழிபெயர்க்கப்பட ஆரம்பித்தன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிட்ட நிலைமைகளுக்கு மார்க்சிய-லெனினிய தத்துவக்கூறுகளைப் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்ட முதல்

வெளியீடுகள் வெளிவந்தன. பல நாடுகளில் மார்க்சிஸ்டு குழுக்கள், கோஷ்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாகின. இருபதுக்கள், முப்பதுக் களிலேயே சீனு, இந்தோசீனு, இந்தோனேசியா, மற்றும் பிற நாடுகள் சிலவற்றில் அவை பெரும் அரசியல் சக்தியாக வளர்ந்தன.

தொழிலாளி வர்க்க மற்றும் தேசிய விடுதலை இயக்கங் களின் குறிக்கோள்களில் அநேகம் பொதுவாக இருக்கும். இந்தக் காரணி ஆசிய, லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாடு களில் மார்க்சிய-லெனினியம் வேகமாகப் பரவுவதன் அடிப் படையாக இருந்தது. இரு இயக்கங்களும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் திரளினரின் ஒரு பொது எதிரியான ஏகாதி பத்தியத்திற்கு எதிரான இயக்கங்களாகும். எனவே தேசிய விடுதலை இயக்கம் ஒரு சமூக விடுதலைப் போராட்டமாக, முத லாளித்துவ உறவுகளின் முழு அமைப்பிற்கு எதிரான ஒரு போராட்டமாக வளர்ச்சியுறுவது இயற்கையானது, தவிர்க்க முடியாதது. அடுத்து இரு இயக்கங்களும் சோஷலிசத்தை நோக்கிய ஒரே நீரோடையில் இணைவது தவிர்க்க முடியா தது. ''உலகப் புரட்சியின் வருங்கால தீர்மானமான போராட் டங்களில் ஆரம்பத்தில் தேசிய விடுதலையை நோக்கிய உலகத்தின் பெரும்பான்மையான மக்கள் தொகையின் இயக் கமானது முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகத் திரும்பும், ஒரு வேளை நாம் எதிர்பார்ப் பதைவிட அதிக புரட்சிகரமான பங்காற்றும்''* என்று லெனின் கூறினுர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தேசிய விடு தலை இயக்கத்தின் அளப்பரிய பங்கை லெனின் முன்னுேக்கிப் பார்த்ததோடு மட்டுமல்லாது முதன் முறையாக அவர் இந்தப் போராட்டத்தின் விஞ்ஞான போர்த்தந்திரத்தை யும் கூட உருவரை செய்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் சகாப்தத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலைப் புரட்சிகளின் பாதையைத் தேர்ந் தெடுத்திருக்கும் மக்களினங்கள் சோஷலிச நாடுகள், சர்வ தேசத் தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றின் உதவியுடன் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைக் கடக்காமல் நேரடி

* V. I. Lenin, *Collected Works*, Vol. 32, p. 482.

யாக சோஷலிசத்திற்குப் போக முடியும்* என்ற அவருடைய முடிவு அடிப்படையான முக்கியத்துவமுடையதாக இருக்கிறது.

விடுதலை பெற்ற நாடுகளின் பொதுமக்களில் பெரும் பகுதியினர் தங்களுடைய ஜீவாதார பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியைச் சோஷலிசம் மட்டுமே காட்டுகிறது என்பதை அதிகமாக உணர ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலனி ஒடுக்குதலின் நீண்ட காலகட்டத்தின் போது முதலாளித்துவம் இந்த நாடுகளின் பொதுமக்களின் கண்களில் மிகக் கொடூரமான பலாத்காரம், கொள்ளை, வெளிப்படையான சமூக ஏற்றத்தாழ்வு, தார்மிகச் சீர்குலைவு ஆகியவற்றின் உருவமாக தன்னைத்தானே அவமதித்துக் கொண்டது என்ற உண்மை மட்டுமே இதற்குக் காரணமல்ல. இந்த நாடுகளில் சோஷலிச மாற்று வழி என்பது பொருளாதார மற்றும் சர்வாம்ச சமூக வளர்ச்சியின் மறுக்க முடியாத கோரிக்கைகளின் முக்கியமான ஒரு எதிர்ச்செயலாகும்.

வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளுக்குள் முதலாளித்துவம் ''அதிகம் கனிந்துவிட்டது'' என்பதாலும் இந்த நாடுகளில் மிக வளர்ச்சியுற்ற உற்பத்தி அமைப்பானது உற்பத்தி உறவுகளின் காலாவதியான தனியார் சொத்து அமைப்புடன் தீர்க்க முடியாத முரண்பாடுடையதாக உள்ளது என்பதாலும் சோஷலிசம் தவிர்க்க முடியாததாகி விட்டது, ஏனெனில், வளர்முக நாடுகள் பொருளாதார பிற்பட்ட தன்மையிலிருந்து உடைத்துக்கொண்டு வருவதற்கான ஒரே நம்பிக்கையான வழி சோஷலிசம் தான்.

வளர்முக நாடுகள் ''மரபு வழி'' முதலாளித்துவப் பாதையைத் தேர்ந்தெடுத்தால் தொழில்துறையில் முன்னேறியிருக்கும் நாடுகளின் இன்றைய மட்டத்தை அடைவதற்கு அந்நாடுகளுக்குப் பல ஆண்டுகள் ஏன் நூற்றாண்டுகள் கூட தேவையாக இருக்கும் என்பதை மேற்கத்திய மற்றும் வளர்முக நாடுகள் இரண்டிலும் எடுத்த பல கணக்கீடுகள் காட்டுகின்றன. எனவே, இந்த இரு அரசுக் கோஷ்டிகளின் இடையேயுள்ள மிகப்பெரிய பொருளாதார இடைவெளி அப்படியே தொடர்ந்து இருந்து கொண்டிராது, இன்னும்

---

* வி. இ. லெனின், **நூல் திரட்டு**, நான்கு பாகங்களில், நான்காம் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கங்கள் 204-205 பார்க்க.

மிக விரிவாகிக் கொண்டே இருக்கும். இன்று கூட, தொழில் துறையில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் சராசரி ஆண்டு தலா வருமானம் வளர்முக நாடுகளின் ஆண்டு தலா வருமானத்தைப் போல் முப்பது மடங்கு உயர்ந்திருக்கிறது.

வளர்முக நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியும் நவீன காலனி ஆதிக்கமும் பிரிக்க முடியாதபடி ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. நவீன சூழ்நிலைமைகளில் பிந்தியது இல்லாமல் முந்தியது இருக்க முடியாது. செயலளவில் விடுதலை பெற்ற நாடுகளில் முதலாளித்துவம் என்றால் அந்நிய ஏக போகங்களுக்கு அவைகளுடைய பொருளாதாரத்தை அடிமைப்படுத்துதல் என்று பொருள். அந்நிய ஏகபோகங்கள் ஸ்தல முதலாளி வர்க்கத்தை ஆதரிக்கும் அதே நேரத்தில் வளரும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் தீர்மானமான நிலைகளைக் கைப்பற்றிக் கொள்ளுகின்றன.

வளர்முக நாடுகளுடனான உறவில் ஏகாதிபத்திய ஏக போகங்களின் போர்த்தந்திரமானது அவற்றை உலக முதலாளித்துவ அமைப்புடன் பொருளாதார ரீதியில் உறுதியாக இணைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் நுகர்பொருள் தொழிலில் முதலீடு செய்தல், நாளடைவில் கனரகத் தொழிலில் கூட முதலீடு செய்ய குறிப்பிட்ட நடவடிக்கை எடுத்தல் என்பதன் மூலமாக முதலீடுகளை வேகமாக அதிகரிப்பது அந்த வழிகளில் ஒன்று. கலப்புக் கம்பெனிகளின் ஸ்தாபனத்தால் அல்லது உண்மையில் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் கிளைகளாக இருக்கும் தேசிய கம்பெனிகள் என அழைக்கப்படும் நிறுவனங்களால் தேசிய முதலாளி வர்க்கம் அந்நிய ஏகபோகங்களுடன் பிணைக்கப் படும்.

முதலாளித்துவ வளர்ச்சியானது அந்நிய நாட்டிற்கு அடிமைப்படுதலின் ஒரு புதிய வடிவத்தைக் குறிப்பிடுகிறது, தேசிய விடுதலை புரட்சியின் அடிப்படைச் சாதனையான அரசியல் சுதந்திரத்தை அச்சுறுத்துகிறது.

தேசிய செல்வம் எல்லாவற்றையும் மக்களின் கரங்களில் கொடுக்கிற சோஷலிசம் மட்டுமே, அதை மையப்படுத்தப் பட்ட திட்டமிட்ட அமைப்பில் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தி இந்த அடிப்படையில் மக்கள் திரளினரின் வற்றாத ஆற்றலையும் ஆக்கபூர்வமான ஆர்வத்தையும் தூண்டி

சோஷலிச நாடுகளிலிருந்து பெறும் தோழமை உதவியுடன் வறுமை, பசி, பிணி, கலாச்சாரப் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை அகற்றல் போன்ற பெரும் பிரச்சினைகளைத் தீர்க்க வல்லதாக இருக்கிறது. மிகக் குறுகிய சாத்தியமான வரலாற்றுக் காலகட்டத்தில் குறைவான வளர்ச்சியுடைய நாடுகளைத் தொழில்துறையில் வளர்ச்சியுற்ற முன்னணி தேசங்களின் மட்டத்திற்கு உயர்த்த முடியும். சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகள், கஸாக்ஸ்தான், ஜார்ஜியா, அர்மீனியா, அஸர்பெஜான் ஆகியவற்றின் அனுபவத்தினுலும் சில சோஷலிச நாடுகளின் உதாரணத்தினுலும் இது முழுமையாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

பொருளாதார, சமூக, அரசியல் அவசியமானது சோஷலிசத்தை நோக்கிய இளம் அரசுகளின் இயக்கத்தை நிர்ணயிக்கிற முக்கியமான காரணியாகும். விடுதலை பெற்ற நாடுகளில் வெவ்வேறு அரசியல் மற்றும் சித்தாந்தப் போக்குகளைச் சேர்ந்த பல பிரமுகர்களால் இந்த உண்மை அங்கீகரிக்கப்படுகிறது.

சோஷலிசத்திற்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான கூட்டணியானது பொதுவான அடிப்படை நலன்களை ஆதாரமாகக் கொண்ட புரட்சிகர சக்திகளின் இயல்பான மற்றும் சகஜமான அரசியல் கூட்டணியாகும். இந்தக் கூட்டணி உண்மையில் ருஷ்யாவில் அக்டோபர் புரட்சிக் காலத்தின் (1917) போதே ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து இந்த இரு புரட்சிகர சக்திகள், குறிப்பாக, முதன்முதலில் எதார்த்தமான சோஷலிசத்தில் முக்கியமாக உருக்கொண்டிருக்கும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கம் வலுப்படுத்தப்படுதலுடன் அது வலிமையுடையதாகியது.

இன்று, இந்தக் கூட்டணி சர்வதேச அரசியல், பொருளாதார, கலாச்சார மற்றும் இராணுவத் துறைகளில் சர்வாம்ச வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறது.

விடுதலை பெற்ற நாடுகளுக்கு சோஷலிச நாடுகளுடன் சர்வாம்சமான நெருக்கமான உறவுகள், முக்கியமாக பொருளாதாரத்தில் ஜீவாதாரமானவையாகும். நவீன காலனி ஆதிக்கம், அந்நிய ஏகபோகங்களின் ஆதிக்கம் ஆகியவற்றிற்கு எதிரான இந்தியா, எகிப்து, ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக், அல்ஜீரியா மற்றும் பிற அரசுகள் பலவற்றின் போராட்டத்தில் அந்நாடுகளின் தொழில்துறையை வளர்ச்சி

யடையச் செய்வதில் சோவியத் யூனியனின் உதவி மகத்தான பங்காற்றியிருக்கிறது.

வளர்முக நாடுகளுக்கு சோஷலிச அரசுகள் அளித்த மொத்தக் கடன்தொகை 1962-82க்களில் 10 மடங்கு அதிகரித்தது. 92 ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடனை பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பில் (1970இல் 62 நாடுகளுடன் ஒத்துழைப்பு நிலவியது) 5000க்கும் அதிகமான தொழிற்துறை அமைப்புகள் கட்டப்பட்டு வருகின்றன, இவற்றில் சுமாராக 3500 ஏற்கெனவே இயங்குகின்றன. சி.எம்.இ.ஏ. நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர பண்ட பரிவர்த்தனை 1981இல் 30.3 பில்லியன் ரூபிள்களாக இருந்தது. இது 1970இல் இருந்ததை விட 6 மடங்கிற்கும் கூடுதலாகும்.

மேலே கூறியவை வளர்முக நாடுகளுக்கு சோஷலிச நாடுகள் அளித்த உதவிக்குச் சில உதாரணங்களே.

இந்தியாவுடன் ஒத்துழைப்பு விடுதலையுற்ற நாடுகளோடு சோவியத் யூனியன் கொண்டிருக்கும் உறவுகளில் முக்கியமான இடத்தைப் பெற்றது. ''சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் பாத்திரம் அதிகரிப்பதை நாம் வரவேற்கிறோம்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசுக்கான மத்திய கமிட்டியின் அறிக்கை வலியுறுத்தியது. ''இந்தியாவுடன் நம் உறவுகள் தொடர்ந்து வலுப்பெற்றுவருகின்றன. சோவியத்-இந்திய உறவுகள் இரண்டு நாடுகளிலுமே பொது மக்களிடம் ஆழமாக வேரூன்றிவிட்டன...

சமாதானத்தை நேசிக்கும் சுதந்திர இந்தியாவுடன் இணைந்து செயலாற்றுவது எதிர்காலத்தில் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியமான திசை வழிகளில் ஒன்றாக இருக்கும்.''

சோஷலிசம், தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் கூட்டணி இரண்டிற்கும் அனுகூலமாக இருக்கிறது. தேசிய விடுதலை இயக்கம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு செயலூக்கமான போராட்டத்தைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது, உலகச் சக்திகளின் இணைப்பின் மாற்றங்களின் மீது அதனுடைய செல்வாக்கு அதிகமாக வலிமையடைந்து

கொண்டிருக்கிறது. தேசிய விடுதலை இயக்கத்தின் தாக்குதல் களினால் வளர்முக நாடுகளில் ஏகாதிபத்தியம் அளப்பரிய மனித சக்தியையும் பொருளாயத மூலாதாரங்களையும் இழந்திருக்கிறது. இவ்வாறாக, தேசிய விடுதலை இயக்கம் சமூக முன்னேற்றத்தின் ஒரு சக்திமிக்க காரணியாகியிருக்கிறது.

தேசிய விடுதலை இயக்கத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான கூட்டணி வலுவடைவதுடன் விடுதலை பெற்ற நாடுகளில் மார்க்சிய-லெனினியத்தின் கௌரவம் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கானது சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஸ்தல முதலாளி வர்க்கத்தினருக்கும் நிலப்பிரபுத்துவ சித்தாந்தத்திற்கும் வலதுசாரி சீர்திருத்தவாத மற்றும் இடதுசாரி குறுங்குழுவாத போக்குகளுக்கும் எதிராக நடைபெறுகிற ஒரு சிக்கலான போராட்டத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. பெரும்பாலான வளர்முக நாடுகளில் விஞ்ஞான புரட்சிகரச் சித்தாந்தம் பரவுவதானது, குறை வளர்ச்சியுள்ள சமூக உறவுகள், சிறியதும் அரசியல் ரீதியாக அனுபவமற்றதுமான தொழிலாளி வர்க்கம் மற்றும் மக்கள் தொகையினரின் பெரும்பகுதியானோரின் எழுத்தறிவின்மை போன்றவற்றால் கணிசமாக எதிர்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் காலம் லெனினியத்திற்குச் சாதகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்தைத் தூக்கி எறிந்து சுதந்திரமான, சுயேச்சையான வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கும் நாடுகள் பலவற்றில் சோஷலிசம் ஏற்கெனவே வேரூன்றிவிட்டது என்று ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 1976ம் ஆண்டு பெர்லின் மாநாடு குறிப்பிட்டது.

சமீப ஆண்டுகளில் பல விடுதலை பெற்ற நாடுகளில் கடுமையான உள் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழில்துறையில் அரசுத்துறை வலுவடைந்து கொண்டிருக்கிறது, அது பொருளாதார வளர்ச்சியில் தலைமையான சக்தியாக மாறிக் கொண்டேயிருக்கிறது. நிலப்பிரபுத்துவ நிலவுடைமையை ஒழித்தல், அந்நிய ஏகபோகங்களின் சொத்தைத் தேசியமயமாக்கல், இளம் அரசுகள் தங்களுடைய இயற்கை வளங்கள் மீது தங்களுடைய பயனுள்ள அரசுரிமையை நிறுவுதல், பல்வகையான தொழில்களில் தேசிய நிபுணர்களுக்குப் பயிற்சி கொடுத்தல் ஆகிய மாற்றங்

கள் மிக முக்கியமானவை. சில வளர்முக நாடுகளில் முற் போக்கான சமூக சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன, தொழிற்சங்கங்களின் உரிமைகளும் ஜனநாயக பொது ஸ்தாபனங்களின் உரிமைகளும் விரிவாக்கப்பட்டுள்ளன. எல்லா வளர்முக நாடுகளும் வர்க்கச் சக்திகளைப் பாகுபடுத்தும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்குகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. வர்க்கப் போராட்டம் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி மேலும் வளர்ச்சியடையும் பொழுது சோஷலிசம், தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் கூட்டணி புதிய பண்புக் கூறுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் பொதுவான நோக்கமானது, வெற்றிகரமான சோஷலிசம், தலைமையான தேசிய விடுதலை சக்திகள் ஆகியவற்றின் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் பொதுவான வர்க்க நலன்களால் முழுமையாக்கப்பட்டுத் தீவிரமடைகின்றன. சுயேச்சையான வளர்ச்சியின் அனுபவத்தைப் பெறுவதில் சோஷலிசம் ஒன்று தான் ஏற்றுக் கொள்ளத் தக்க ஒரே வழி என்பதை அவை அதிகமாக உணர்ந்து கொண்டிருக்கின்றன.

உலகத்தின் பல பகுதிகளில் உள்ள பல நாடுகள் சோஷலிச வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளன. சோஷலிசத் திசையைப் பின்பற்றுகின்ற அரசுகளின் வளர்ச்சி ஒரே மாதிரியாக நடைபெறுவதில்லை. அவை மிகச் சிக்கலான நிலைமைகளில் தோன்றியிருக்கின்றன. ஆனால் எல்லா இடங்களிலும் அவற்றின் பிரதான திசை வழிகள் ஒரே மாதிரியானவையே. ''ஏகாதிபத்திய ஏகபோகங்கள், ஸ்தல பெரும் முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் நிலைகளைப் படிப்படியாக ஒழித்தல், அந்நிய மூலதனத்தின் பாத்திரத்தைக் கட்டுப்படுத்துதல், பொருளாதாரத்தின் தலைமைக் கேந்திரங்களை அரசுத் துறையில் வைத்தல், திட்டமிட்ட முறையில் உற்பத்திச் சக்திகளை வளர்த்தல், கிராமங்களில் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவித்தல், பொது வாழ்க்கையில் பெருந்திரளான உழைக்கும் மக்களின் பாத்திரத்தை அதிகப்படுத்துதல், மக்களிடம் விசுவாசமுள்ள தேசிய ஊழியர்களைக் கொண்டு அரசு நிர்வாக இயந்திரத்தைப் படிப்படியாக பலப்படுத்துதல்—இவையே பிரதான திசை வழிகள். இந்த நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் ஏகாதி

பத்திய எதிர்ப்புத்தன்மையும் இவைகளில் ஒன்ருகும். அவற்றில் பெருந்திரளான மக்களின் நலன்களை எடுத்துக் கூறுகின்ற புரட்சிகரமான கட்சிகள் வலுவடைகின்றன'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் எடுத்துக் கூறியது.

அதே சமயம், முதலாளித்துவப் பாதை வழியே வளர்ந்து கொண்டிருக்கும் இளம் நாடுகளில் முதலாளித்துவ ''சோஷலிச'' தத்துவத்தைப் பற்றிய எல்லா விதமான கூற்றுகளும் அதாவது முதலாளித்துவ உறவுகளை ஊக்கப்படுத்துவதையும், முதலாளித்துவ அரசியல் போக்கை மறைப்பதையும் உள்நோக்கமாகக் கொண்ட கருத்தோட்டங்களும் விரிந்த அளவில் பரப்பப்படுகின்றன. இத்தகைய வேலைத்திட்டங்கள் உண்மையான சோஷலிசத்திலிருந்து வெகு தொலைவிலுள்ளன. ஏனெனில் அவை பல அரைகுறை நடவடிக்கைகள், உறுதியற்ற தன்மை, குட்டி முதலாளித்துவ மாயைகள், அடிக்கடி பொய்யான கூற்றுகளைக் கூட உள்ளடக்கியுள்ளன.

இருப்பினும் இத்தகைய வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன என்ற உண்மை இளம் அரசுகளின் வளர்ச்சியின் அடிப்படை வழியைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

முதலாளித்துவ ''சோஷலிசக்'' கருத்தோட்டங்கள் ஒருபுறம் காலனி அரசுகளின் வெளிப்படையான பூர்ஷ்வா சித்தாந்தத்திற்கும் மறுபுறம் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான சோஷலிச சித்தாந்தத்திற்கும் எதிரான சித்தாந்த அடிப்படையை அமைத்தன. இந்தக் கருத்தோட்டங்கள் பலவகையான வடிவங்களில் வெளிவருகின்றன: சில நாடுகளில் அவை ''ஆசிய'' சோஷலிசம் அல்லது ''ஆப்பிரிக்க'' சோஷலிசம் என்ற கோஷத்தின் கீழ் தோன்றுகின்றன, மற்ற நாடுகளில் ''அரேபிய'' சோஷலிசம், ''நீக்ரோ இன'' சோஷலிசம் இதரவைகளின் இனவெறி வேஷத்தில் தோன்றுகின்றன. இன்னும் பிறவற்றில் மதச் சார்புடைய சோஷலிசமாக, உதாரணமாக ''இஸ்லாமிய'' சோஷலிசமாகத் தோன்றுகின்றன. ஆனுல் இவையெல்லாவற்றிலும் தேசியவாதம் தான் முதலாளித்துவ ''சோஷலிச'' விதைகள் வளருவதற்கான மண்ணுகும்.

இந்தத் தத்துவங்கள் எல்லாம் ஏதாவது ஒரு வழியில், ''நீதி'', ''தோழமை'', ''ஒற்றுமை'', மக்களிடையே ''சமத்துவம்'' கூட திட்டமிட்ட எதிர்கால சமுதாயத்தில் இருக்

கும் என்ற கருத்துக்களைப் பரப்புகின்றன. ஆனால் ஆட்சியதிகாரம் மற்றும் செல்வம் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் சொத்துடைய வர்க்கங்கள் ''தானாகவே சுய தடையை'' விதித்துக் கொள்ளுதலேயோ அல்லது தனியார் சொத்தின் அடிப்படைகளை ஆக்கிரமிக்காமல் ஒரு சிலர் கரங்களில் செல்வம்''அதிகமாகச் சேர்வதை''அரசாங்கம் கட்டுப்படுத்துவதையோ அவை ஊகம் செய்கின்றன. செயலளவில் வர்க்கப் போராட்டம் புறக்கணிக்கப்படுகிறது. ஒழுக்கக் காரணிகள், முக்கியமாக ''அழியாத'' மரபு வழியிலான சமூக நிறுவனங்களின் கட்டுக்கோப்பிற்குள்ளும் எல்லாவற்றிற்கும் மேலாக விவசாய சமுதாயத்திற்குள்ளும் வளர்ச்சியுறுகிற சில நிலையான மற்றும் அழியாத தேசிய மரபுகளுக்குப் புத்துயிர் கொடுத்தல் சமூக வளர்ச்சியின் அடிப்படையான இயக்கும் சக்திகளாக முன்வைக்கப்படுகின்றன. மார்க்சிய-லெனினியமானது மேற்கத்திய நாடுகளின் சரக்கு என்றும் அந்த அந்நியப் பொருளைக் கிழக்கத்திய நாடுகள் ஏற்றுக் கொள்ள மாட்டா என்றும் அறிவிக்கப்படுகிறது.

அடிக்கடி, குட்டி முதலாளித்துவ ''சோஷலிசம்'' விஞ்ஞான, தொழில்நுணுக்க முன்னேற்றத்துடன் சோஷலிசத்தைச் சமப்படுத்துகிறது அல்லது அரசு ஆட்சியதிகாரத்தின் வர்க்கக் குணும்சத்தைப் பற்றி கவலை கொள்ளாது, பொருளாதாரத்தில் அரசுத்துறையை விரிவுபடுத்தும் பிரச்சினையே சோஷலிசமாகும் என்ற அளவிற்கு அதைக் குறைக்கிறது.

செயலளவில் இந்த வகை ''சோஷலிசமானது'', ''சோஷலிச'' கோஷங்களாலும் முதலாளித்துவத்தையும் கம்யூனிசத்தையும் எதிர்க்க கீழ்த்திசை மக்களினங்களுக்காக முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படும் ''மூன்றுவது வழியைப்'' பற்றிய வாதங்களாலும் மறைக்கப்பட்ட முதலாளித்துவ சீர்திருத்தவாதத்தின் ஒரு வகையாகும். மக்கள் திரளினரின் அரசியல் பக்குவமற்ற தன்மையை அது சார்ந்திருக்கிறது, அந்நிய முதலாளி வர்க்கம் இல்லாமல் தேசிய முதலாளி வர்க்கத்தால் அடையக் கூடிய முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் அவர்களை வைத்திருக்க அது உபயோகப்படுகிறது.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் அரசியல் போராட்டம் பரவும் பொழுது, அவை சர்வதேச விவகாரங்களில் அதிகமாகப் பங்கெடுக்கும் பொழுது, அதாவது வர்க்கப்

போராட்டத்தின் நிகழ்ச்சிப் போக்கில் அவை மிக ஆழமாக ஈடுபடும் பொழுது முதலாளித்துவ ''சோஷலிசம்'' கூட ஒரு பரிணாமத்தை அடைகிறது. சில நிலைமைகளில் அது மிகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாகிறது, உலகத்தில் ஏற்படும் சமூக மாற்றங்களுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள முயலுகிறது, ஏகபோக முதலாளித்துவ சித்தாந்தத்துடனான தன்னுடைய இணைப்பை உண்மையில் மூடி மறைப்பதற்குப் பணி புரிகின்ற தன்னுடைய போலியான சோஷலிச ''ஜனநாயகம்'' என்ற பிரச்சாரத்தை முடுக்கிவிடுகிறது. அதற்கு மாறாக, பிற நிலைமைகளில் ஆழமான சமூக சீர்திருத்தங்களை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டதும் அவற்றின் கண்ணோட்டத்தைப் பொறுத்தளவில் புரட்சிகர-ஜனநாயகவாதிகளுடன் நெருக்கமானதாகவும் உள்ள அரசியல் மற்றும் சித்தாந்தப் போக்குகள் தோன்றுகின்றன.

முதலாளித்துவ ''சோஷலிசத்தின்'' விஞ்ஞான பூர்வமான ஆதாரமற்ற தன்மையையும் அரசியல் பழமைவாதத்தையும் வெளிப்படுத்துவதில் கம்யூனிஸ்டுகள் அதனுடைய வெவ்வேறான வடிவங்களின் ஸ்தூலமான பிரிவுகளையும் பரிணாமத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுகின்றனர், முதலாவதாக அதனுடைய அம்சங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்புத் திசையமைவுடையவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுகின்றனர். ஏனெனில், தேசிய விடுதலை இயக்கம் பலவகையான தன்மையுடையதாக இருப்பினும் பொருளாதாரத்தில் பிற்பட்ட தன்மையை வெற்றி கொள்ளுதல், அரசியல் சுதந்திரத்தையும் சர்வதேச விவகாரங்களில் சமத்துவத்தையும் வலுவாக்குதல் ஆகிய அதனுடைய பொது ஜனநாயகக் குறிக்கோள்கள் இன்றுவரை இன்னமும் முக்கியத்துவமுடையதாக உள்ளன, அந்த இயக்கமே தன்னுடைய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயல்பை இன்னும் தக்க வைத்திருக்கிறது.

லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றின் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் செயலூக்கமுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் பொது மக்களின் உணர்வில் விஞ்ஞான, மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைப் புகட்டும் மிக உறுதியான முற்போக்கு அரசியல் சக்தியாகும்.

வளர்முக நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சிரமமான சூழ்நிலைமைகளில் பணி புரிய வேண்டியுள்ளது, அங்கே பாதிக்கும்

மேற்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள் தலைமறைவாக உள்ளன. சிலி நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சி பிற்போக்குவாதிகளின் கடுமையான தாக்குதல்களால் துன்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்தோனேசியா, ஸால்வடோர், பராகுவே, உருகுவே, தென் ஆப்பிரிக்கா மற்றும் பிற நாடுகளின் கம்யூனிஸ்டுகள் கொடூரமான நசுக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். எவ்வாருயினும் உழைக்கும் விவசாயிகளுடனுன தன்னுடைய கூட்டணியைச் சார்ந்திருக்கிற தொழிலாளி வர்க்கம் தன்னுடைய முன்னணிப் பங்கை நிறைவேற்றும் இயக்கங்கள் கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்பட்டு தேசிய அரசுரிமைக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் போராடுவதில் ஓர் உறுதியான, புரட்சிகர சக்தியாகவுள்ளன என்பதை தேசிய விடுதலை இயக்கத்தின் அனுபவம், குறிப்பாக வியட்நாம் புரட்சியின் அனுபவம் காட்டுகிறது.

விடுதலை பெற்ற நாடுகளிலுள்ள வெகுஜனங்களின் உணர்வில் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களைப் புகட்டுவதில் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் செயலூக்கமான பங்கை ஆற்றுகின்றன. பல நாடுகளில் அவை ஆட்சியதிகாரத்திற்கு வந்துள்ளன, தற்பொழுது தங்களுடைய மக்களினங்களைச் சோஷலிச திசைவழியில் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றன.

ஆழமான சமூக சீர்திருத்தங்களுக்காக, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் புரட்சிகர ஜனநாயகவாதிகள் கம்யூனிஸ்டுகளின் நேச சக்திகளாக உள்ளனர். சிரியாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் நான்காவது காங்கிரசில் (1974) உரையாற்றுகையில் அதனுடைய பொதுச் செயலாளரான காலிட் பக்தாஷ் பின்வருமாறு வலியுறுத்தினுர்: கட்சியானது புரட்சிகர ஜனநாயகவாதிகளுடனுன தன்னுடைய கூட்டணியை ஒரு நீண்ட காலக் கூட்டணியாகக் கருதுகிறது, ஏனெனில் புரட்சிகர ஜனநாயகவாதத்தைச் சேர்ந்த பரந்த மக்கள் திரளினரை விஞ்ஞான சோஷலிச நிலைகளுக்கு இட்டுச் செல்வதற்கும் முதலாளித்துவமல்லாத வளர்ச்சிக் கட்டத்திலிருந்து சோஷலிசத்தைக் கட்டும் கட்டத்திற்குப் படிப்படியாக மாற்றுவதற்கும் சாத்தியப்பாடு இருக்கிறது என்பதில் அது திடநம்பிக்கை வைத்திருக்கிறது.

செயலூக்கமான அரசியல் போராட்டத்தில் சேர்ந்துள்ள விவசாய மக்கள் திரளினரின் நலன்களையும் நகர்ப்புற அரைப்

பாட்டாளிகள் மற்றும் குட்டி முதலாளித்துவப் பிரிவினர், முற்போக்கு அறிவுஜீவிகள், மாணவர்கள், இராணுவத்தில் பணிபுரிவோர் ஆகியோர்களின் நலன்களையும் புரட்சிகர ஜன நாயகவாதிகள் வெளிப்படுத்துகின்றனர். சில புரட்சிகர ஜன நாயகக் கட்சிகளின் உறுப்பினர்களாக தேசிய முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளும் உள்ளனர். புரட்சிகர ஜனநாயகத் தின் மிகவும் முன்னேறிய சக்திகள் இளம் தொழிலாளி வர்க் கத்திடமிருந்து நெருக்கமான ஆதரவைப் பெற முயற்சிக் கின்றன.

புரட்சிகர ஜனநாயகத்தின் பல்திறமுடைய சமூகக் கட்ட மைப்பு அதனுடைய ஆதரவாளர்களின் கொள்கையிலும் சித்தாந்தப் பார்வைகளிலுமுள்ள கணிசமான வேறுபாடு களுக்குக் காரணமாகும்.

புரட்சிகர ஜனநாயகவாதிகள் அடிக்கடி ஊசலாட்ட முடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் கம்யூனிஸ்டு களைத் தவருகப் புரிந்து கொள்ளுகிருர்கள், கம்யூனிஸ்டுகளின் மீது அவநம்பிக்கையும் கொள்ளுகின்றனர். சில வேளைகளில் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி அமைக்க அவர்கள் அஞ்சுகின் றனர். ஏனெனில் புரட்சிகர ஜனநாயகத்தின் அடிப்படையை அமைக்கின்ற குட்டி முதலாளித்துவ சக்திகளுடனை தங்களுடைய தொடர்புகளை இழக்கப் பயப்படுகின்றனர். சில புரட்சிகர ஜனநாயகவாதிகள் புரட்சிகர சக்திகளைப் பிளப்பதை நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்தியவாதிகளின் சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் வளைந்து கொடுக்கின்றனர்.

சில சமயங்களில் மக்கள் திரளினரைப் பற்றியும் மக்கள் திரளினர் அரசியலிலும் பொது விவகாரங்கள், உற்பத்தி ஆகியவற்றை நிர்வகிப்பதிலும் செயலூக்கமாக ஈடுபடு வதைப் பற்றியும் கொண்ட புரட்சிகர ஜனநாயக ஆட்சிகளின் குட்டி முதலாளித்துவ பயமானது அவ்வாட்சிகளின் நிலையான பலவீனமாக இருக்கிறது. வெகுஜனங்களைச் சார்ந்திருப்ப தற்குப் பதிலாக வெகுஜனங்களுடன் தொடர்பில்லாத குறுகிய அதிகாரவர்க்க வட்டாரத்திலிருந்து ஆதரவைப் பெற அவை முயலுகின்றன.

இந்தக் காரணிகள் எல்லாம் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளுக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் எல்லை வரையறை மற்றும் வர்க்கங்கள் எதிரெதிர் தன்மை யுடையதாதல் ஆகியவற்றைப் பற்றிய நடப்பு நிகழ்ச்சிப்

போக்கை விளக்குகின்றன. கணிசமான அளவு உறுப்பினர்கள் ஜனநாயக மற்றும் சோஷலிச சீர்திருத்தப் பாதை வழியே மென்மேலும் அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள், சர்வதேச அரசியலைப் பற்றிய சில பிரச்சினைகளையும் ஏகாதிபத்தியம், நவீன காலனி ஆதிக்கம், பிற்போக்கு ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தையும் பொறுத்த அளவில் சோஷலிச நாடுகளுடனும் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்துடனும் நெருக்கமான பல்வடிவ ஒற்றுமையுடன் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. அவை கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் செயலூக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன, குறிப்பாக சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளைப் பற்றி ஓர் உயர்ந்த மதிப்பீட்டை அளிக்கின்றன.

சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிச நாடுகளுடனும் ஆன கூட்டணியைத் தங்களுடைய அரசியல் போர்த்தந்திரத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகவும் தங்களுடைய நாடுகளின் சோஷலிசத் திசையமைவைப் பலப்படுத்துவதில் முக்கியமான ஒரு புறநிலைக் காரணியாகவும் அவை கருதுகின்றன. உண்மையில் உலக சக்திகளின் புதிய இணைப்பின் காரணத்தாலும் சோஷலிச அரசுகள் இருப்பதாலும் புரட்சிகர ஜனநாயகவாதிகள் ஆட்சியதிகாரத்திற்கு வருவது சாத்தியமாயிற்று. சோஷலிச அரசுகள் இல்லையெனில் சிறிய நாடுகளின் மக்களினங்களின் புரட்சிகரமான விருப்பார்வங்களை ஏகாதிபத்தியம் நசுக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சோஷலிசத்தைக் கட்டுவதைப் பற்றிய லெனினிய தத்துவமும் சோஷலிச அரசுகளின் நடைமுறை அனுபவமும் புரட்சிகர ஜனநாயகவாதிகளால் குறிப்பாக விரிந்த பகுத்தாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. தொழில்மயமாக்கல், விவசாயத்தில் கூட்டுறவு, கலாச்சாரத்தில் புரட்சி ஆகியவற்றைப் பற்றிய தத்துவம் மற்றும் நடைமுறை, அரசு நிர்மாணம், நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றைப் போன்ற பிரச்சினைகள் எல்லாம் கவனமாக ஆராயப்பட்டு இளம் அரசுகளின் விசேஷ பண்புக் கூறுகளுக்கு ஏற்ப அமுலாக்கப்படுகின்றன. தேசிய விடுதலை சக்திகளின் ஒரு கணிசமான பகுதி விஞ்ஞான சோஷலிசத்தை, மிகப் பயனுள்ள வகையில் தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் சித்தாந்தமாக நியாய

மாகக் கருதுகிறது. தேசிய ஐக்கியமானது, தேசங்கள் உரு வாவது இன்னமும் பூர்த்தியடைவதற்கு வெகு தொலை விலுள்ள நாடுகள் பலவற்றிற்கு ஒரு தலையாய முக்கியத்து வமுடைய காரணியாகும்.

சோஷலிச திசைவழிப் பாதையில் முன்னேற்றம் தொடர் வதால் புரட்சிகர ஜனநாயகவாதிகளுக்கு ஓர் ஐக்கிய புரட்சி கரக் கட்சியை உருவாக்கும் பிரச்சினை தலையாய முக்கியத்து வமுடையதாகிறது. இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி களின் அனுபவம், முக்கியமாக சோவியத் யூனியனின் கம் யூனிஸ்டுக் கட்சியின் அனுபவம் ஒரு முன்மாதிரியாகவும் மூலாதாரமாகவும் உள்ளது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் பிற கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனும் புரட்சி கர ஜனநாயகக் கட்சிகள் செயலூக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. பல புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் பிரதிநிதிகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசில் கலந்து கொண்டனர். உள்நாட்டுக் கொள்கையில் சிக்கலான பணிகளை நிறைவேற்றுவதற்கும் சர்வதேச அரங்கில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தடிப்பதற் கும் வெகுஜனங்களை அணிதிரட்டுவதில் கம்யூனிஸ்டுக் கட்சி யின் அனுபவத்தை அவர்கள் ஆராய்கின்றனர்.

புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் ஏற்றுக் கொண்ட சோஷ லிச சீர்திருத்தங்களின் கொள்கையானது அக்கட்சிகளைப் புதிய பிரச்சினைகளை எதிர்நோக்கச் செய்கிறது, அவற்றின் ஸ்தாபன மற்றும் சமூக கட்டமைப்புகளைப் பற்றிய புதுக் கோரிக்கைகளை உண்டாக்குகிறது. சமூக மாற்றங்களும் வர்க்கப் பாகுபாடும் கணிசமான அளவு முன்னேறியிருக்கும் நாடுகளில் சோஷலிச உருமாற்றங்களின் பாதை வழியிலான மக்களின் முன்னேற்றத்தில் தலைமையான சக்தியாக இருக்கும் புரட்சிகர முன்னணிப் படையான ஒரு கட்சியை நிறுவுவதற் கான காலம் கனிந்திருக்கிறது.

அங்கோல மக்கள் குடியரசின் தலைமை சரியாக இதைத் தான் செய்தது. அங்கோலாவின் வெகுஜன விடுதலை இயக் கத்தை உழைக்கும் மக்கள் திரளினருக்குத் தலைமை தாங்கும் புது வகையான கட்சியாக உருமாற்றுவது புரட்சியை மேற் கொண்டு வளர்ப்பதற்காக மிக முக்கியமான ஒரு முதற் கோளாகும் என்ற கண்ணோட்டத்தை அது அடிப்படையாகக் கொள்கிறது. அங்கோலாவின் வெகுஜன விடுதலை இயக்கத்

தின் (எம். பி. எல். எ.) முதல் காங்கிரஸ் எம். பி. எல். எ. —உழைப்புக் கட்சியை, மார்க்சிய-லெனினியத்தால் வழி நடத்தப்படும் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியை நிறுவு வதை 1977ல் அறிவித்தது.

விஞ்ஞான சோஷலிசத்துடன் புரட்சிகர ஜனநாயகவாதி கள் நெருங்குகிறார்கள் என்ற நிகழ்ச்சிப் போக்கானது நம் காலத்தின் தேவையாகவும் புறநிலை அவசியமாகவும் இருக் கிறது. ஆனால் இந்த நிகழ்ச்சிப் போக்கு கூர்மையான வர்க்கப் போராட்டம் நடைபெறும் நிலைமைகளில் வளர்ந்து கொண் டிருக்கிறது. புரட்சிகர ஜனநாயகத்தின் பொருளாதார அடித் தளம் இன்னமும் பலவீனமாகவும் சமூகக் கட்டமைப்பு பிற் பட்டதாகவும் இருப்பதால், உள்நாட்டுப் பிற்போக்கு மூர்க் கத்தனமான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் பொழுதும் சர்வதேச மூலதனம் தொடர்ந்து நிர்ப்பந்தம் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுதும் சோஷலிச திசை வழிப் போக்கு மாற்ற முடியாத ஒன்றாக இல்லை. புரட்சிகர உருமாற்றங்களின் நிகழ்ச்சிப் போக்கு நடைபெற்றுக் கொண் டிருக்கும் நாடுகளில் கூட பொருளாதாரத்திலும் அரசியலி லும் குறிப்பாக சித்தாந்தத்திலும் பழைய சக்திகள் தொடர்ந்து பலமான நிலைகளைத் தக்கவைத்துள்ளன என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அரேபிய உலகத்தில் உள்ள சில நாடுகளில் புரட்சிகர ஜனநாயக ஆட்சிகளின் செயல்களைப் பகுத்தாய்ந்து அரேபிய கம்யூனிஸ்டுக் கட்சிகளின் 1975ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திய மாநாடு பின்வருமாறு குறிப்பிட்டது: ''பொருளாதார மற் றும் சமூக அரங்கங்களில் சாதனைகள் இருப்பினும் உற் பத்தி அரங்கத்தில் முதலாளித்துவ உறவுகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன''.* இக்காரணத்தால் சில இளம் புரட்சிகர ஜனநாயக ஆட்சிகளில் அரசியல் உறுதியற்ற தன்மை ஏற்படுகிறது, சில நேரங்களில் பிற்போக்கு சக்தி கள் எதிர்ப்புரட்சியை நடத்தி பலாத்காரமாக ஆட்சி மாற் றத்தைக் கொண்டுவருவதன் மூலம் அல்லது ஆளும் புரட்சி கர ஜனநாயகக் கட்சிக்குள் ஒழுக்கக் கேட்டை உண்டாக்கு வதன் மூலம் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கைத் திருப்பியடிக்க ஒப்பளவில் எளிதாகும்.

---

* *World Marxist Review*, No. 11, 1975, p. 13.

அரேபிய கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மாநாட்டு அறிக்கை எகிப்து நிலைமையைப் பின்வருமாறு குணும்சப்படுத்துகிறது: ''நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் சில பகுதியினர் முதலாளித்துவ நிலைகளுக்குச் செல்லுவதன் விளைவாலும் பழமைவாதப் போக்குகளையும் சில வேளைகளில் பிற்போக்கான போக்குகளையும் அவர்கள் ஏற்பதன் விளைவாலும் எகிப்தில் வர்க்கப் போராட்டம் விசேஷமான சக்தியைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் சமூக நிகழ்ச்சிப் போக்கின் முன்னேற்றத்தைத் தடுக்க முயலுகின்றனர், முதலாளித்துவ தனியார் துறையை வளர்க்க முயலுகின்றனர், சமுதாயத்தை முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்குத் தள்ளவும் அரசுத் துறையைப் பலவீனப்படுத்தி அந்தப் போக்கின் நலன்களுக்கு அதைப் பயன்படுத்தவும் பிற்போக்குச் சக்திகள் மற்றும் பிரிவினரின் நிலைகளை வலுவாக்கவும் பொருளாதார மற்றும் சமூக உருமாற்றங்களின் விளைவாகத் தாங்கள் இழந்ததை மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ மறுபடியும் பெறவும் அந்நிய மூலதனத்திற்கு ஊக்கமளிக்கவும் முற்போக்கு ஆதாயங்களைத் தகர்க்கவும் முயலுகின்றனர்.''*

எனினும் புரட்சிகர ஜனநாயக சித்தாந்தம் சுதந்திரமடைந்த பல நாடுகள் சோஷலிசத் திசைவழிப் பாதையைத் தேர்ந்தெடுத்திருப்பதை உறுதி செய்ய முடிந்தது. இந்த நாடுகளில் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளை மேலும் வலுப்படுத்துதல், சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் மற்றும் சோஷலிச நாடுகளுடனான அவற்றின் தொடர்புகளை வலுப்படுத்துதல், தொழிலாளி வர்க்கத்துடனும் மார்க்சிய-லெனினியத்துடனும் மேலும் நெருக்கமான அரசியல் மற்றும் சித்தாந்த தொடர்புகள், மக்கள் திரளினருடனான பிணைப்புகளை உறுதிப்படுத்துதல் ஆகியவை புரட்சிகர ஜனநாயகம் தான் தேர்ந்தெடுத்திருக்கும் சமூக முன்னேற்றப் பாதை வழியே வெற்றிகரமாக முன்னேறுவதற்குரிய உறுதியாக இருக்கும்.

*அத்தியாயம் மூன்று*

# நவீன கம்யூனிச எதிர்ப்பின் உருமாற்றங்கள்

## மார்க்சியத்திற்கு எதிரான ''மார்க்சியவியல்''

1917ம் ஆண்டில் ருஷ்யாவில் ஏற்பட்ட மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியின் விளைவாக உலக சித்தாந்த வாழ்வில் மார்க்சிய-லெனினியத்தின் முன்னணி நிலை நிலைநாட்டப்பட்ட பிறகு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் கருத்துக்களை மறுப்பதானது ''மார்க்சியவியல்'' என்ற சொற்றொடரால் அடிக்கடி குறிப்பிடப்பட்டதும் அதனுடைய எண்ணற்ற ''ஆராய்ச்சிகளால்'' சிறப்பித்துக் காட்டப்பட்டதுமான தாராளமாக ஊக்கமூட்டும் பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் ஒரு விசேஷப் பிரிவினுடைய அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

''மார்க்சியவியலாளர்கள்'' மீண்டும் மீண்டும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர்களின் நூல்களைப் படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பழைமை மோஸ்தர்களை யுடைய முந்தியவர்களுடன் தங்களை ஒற்றுமைப்படுத்திக் கொள்ள இயல்பாகவே விரும்புவதில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் லெனின் எழுதியது போல், அவர்கள் மார்க்சியத்தைப் பற்றிக் கேட்க கூட விரும்பவில்லை,* அதைப் பழித்துரைத்தனர், அதற்கு எதிராக ஒரு ''புனிதப் போர்'' தொடங்க அழைப்பு விட்டார்கள்.

மார்க்சியத்திற்கும் அதனை நிறுவியவர்களின் பெருந்தன்மைக்கும் நவீன ''மார்க்சிய இயலாளர்கள்'' தங்களுடைய மரியாதையைத் தயக்கமின்றி தெரிவிக்கின்றனர். மார்க்சியத்தின்பால் ''காய்தல் உவத்தல் இல்லாத'' தங்களுடைய அணுகு

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 111 பார்க்க.

முறையைப் பற்றி இடைவிடாமல் திரும்பத் திரும்பக் கூறுவதில் ஒருவருடன் ஒருவர் போட்டியிடுகின்றனர்.

எனினும் அவர்களுடைய பேரளவுடைய நூல்களை நீங்கள் ஒரு முறை திறந்தால், மார்க்சியமானது முதலாளித்துவத்தைப் புரட்சிகரமாக அழிப்பதைப் பற்றிய, சோஷலிசத்தின் தவிர்க்க முடியாத வெற்றியைப் பற்றிய ஒரு விஞ்ஞானம் என்பதைக் குழிதோண்டிப் புதைப்பதும் நவீன நிலைமைகளில் அதனுடைய கோட்பாடுகளும் முடிவுகளும் தவறானவை அல்லது குறைந்த பட்சம் இக்காலத்திற்கு ஏற்றதல்ல என்று நிரூபிப்பதும் அவர்களுடைய உள் நோக்கம் என்பது தெளிவாகும்.

அரை நூற்றாண்டிற்கு முன்பாகவே லெனின் பின்வருமாறு எழுதினர்: ''மார்க்சியத்தின் தத்துவார்த்த வெற்றியால் கட்டாயப் படுத்தப்பட்ட அதன் பகைவர்கள் மார்க்சியவாதிகளாய் மாறுவேடமிட்டுக் கொண்டனர்—வரலாற்றின் இயக்கவியல் போக்கு அத்தகையதாய் இருந்தது. உள்ளுக்குள் உளுத்துப் போய்விட்ட மிதவாதமானது சோஷலிஸ்டுச் சந்தர்ப்பவாதத்தின் வடிவத்தில் தனக்குப் புத்துயிர் அளித்துக் கொள்ள முயன்றது.''*

அதிலிருந்து கடந்த பத்தாண்டுகளில் வரலாற்று இயக்கவியல் பின்வருமாறு காட்டுகிறது: ஒட்டு மொத்தமாக மார்க்சிய-லெனினியத்தின் போதனைக்கு எதிராக வெளிவருவதற்காக இன்று மார்க்சிய-லெனினியத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ கடன் வாங்கவும் அதிலிருந்து ''சிறு துண்டுகளைப்'' பிரித்தெடுக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் மிதவாதிகளுக்கு மட்டுமல்லாது ஏகபோக மூலதனத்தை ஆதரிப்போர்களுக்கும் கூட சகஜமான நடைமுறையாகியிருக்கின்றன. காங்கிரஸ்களிலும் பிற கூட்டங்களிலும் நவீன மெய்மை மறுப்பு சூனியவாதிகள், நேர்க்காட்சிவாதிகள் பூர்ஷ்வா மற்றும் குட்டி முதலாளித்துவப் போக்குகளின் பிரதிநிதிகள் ஆகியோர் தங்களுடைய உரைகளில் பல்வேறு மார்க்சிய-லெனினிய தத்துவக் கூறுகளுடன் ஒத்துப் போவதாக அடிக்கடி கூறுகின்றனர்.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்கு பாகங்களில், முதற் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 23.

நவீன ஏகாதிபத்தியம் வெளிப்படையான போரில் உலக சோஷலிசத்தை அழிப்பதைப் பற்றி எண்ண முடியாது, சோஷலிச சக்திகளுக்குள்ளே ஒரு பிரிவுக்கு எதிராக மற்ருெரு பிரிவை அமைப்பதன் மூலம் சோஷலிசத்தை அழிக்க எண்ணுகிறது. நம் காலத்தில் கம்யூனிச எதிர்ப்பு இந்தச் செயல் தந்திரங்களையும் கூட கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. கம்யூனிச எதிர்ப்பு கோட்பாட்டளவில் மார்க்சிய-லெனினியத்தை ஒதுக்கி அழிக்கும் உள்நோக்கத்துடன் நேரடியான தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக அதை மொத்தமாகத் ''தீங்கற்றதாக்கவும்'' பகுதி பகுதியாகப் பிளந்து அதனுடைய பகுதிகள் சிலவற்றை ஒன்றையொன்று எதிர்க்கும்படி செய்யும் முயற்சியை அடிக்கடி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இப்படி ஒட்டு மொத்தமாக இப்போதனையை அவமதிக்கவும் முதலாளி வர்க்கத்திற்குத் தீங்கில்லாமல் அதை வழங்கவும் மீண்டும் முயற்சிசெய்யப்படுகிறது.

இங்கே பயன்படுத்தப்படும் அடிப்படை முறை மார்க்சை லெனின் எதிர்க்கிருர் என்பதாகும். அதன் மூலம் மார்க்சியத்திற்கும் லெனினியத்திற்கும் இடையில் தாண்ட முடியாத எல்லையை வகுக்க முயற்சிக்கப்படுகிறது. கம்யூனிச எதிர்ப்பில் ஊறிய ஜோசப் போகென்ஸ்கி போன்றவர்கள் மற்றும் ''புறநிலைத்தன்மை'' என்ற முகமூடியில் செயல் புரியும் ஐரிங் ஃபெட்சர் போன்ற ''மார்க்சியவியலாளர்கள்'' ஆகியோர்களாலும் ரோஜே கரொடி, எர்னஸ்டு ஃபிஷர் மற்றும் **1968—1969**ம் ஆண்டு செக்கோஸ்லொவாக்கியா எதிர்ப்புரட்சியாளர்களான ஒட்டா ஷிக் போன்றவர்களின் நிலைகளால் வெளிப்படுத்தப்பட்ட ஒட்டு மொத்த வலதுசாரி திருத்தல்வாதத்தாலும் இது நடைபெறுகிறது.

''உண்மையான'' மார்க்சியத்தை, லெனினியத்திலிருந்து ''தூய்மைப்படுத்தப்பட்ட'' மார்க்சியத்தைப் புதுப்பிப்பதற்குத் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பங்களிக்க பல்வகை பூர்ஷ்வா போக்குகளின் பிரதிநிதிகள் விரைகின்றனர். அவர்கள் எல்லோரும் மார்க்சியத்திற்கு ''ஆதரவானவர்கள்'' அல்லது குறைந்த பட்சம் அதற்கு ''எதிரானவர்களல்ல''. அவர்கள் செய்ய விரும்பும் ''ஒரே'' காரியம் மார்க்சியத்திலிருந்து லெனினியத்தை பிரிப்ப

தாகும், அதாவது புரட்சிகர இயக்கத்திலிருந்து அதனுடைய மிகப் பயனுள்ள ஆயுதத்தை அகற்றுவதாகும்.

இரண்டாந்தரமான பிரச்சினைகளைப் பற்றி அடிக்கடி சச்சரவிடுபவர்கள் முக்கியமான திசைவழியில் இவ்வளவு ஏக மனதாக இருப்பதைப் புரிந்து கொள்வது சிரமமல்ல. லெனினியத்தை விமரிசிப்பதன் மூலம் மார்க்சினுடைய போதனையின் தற்கால ஒரே விஞ்ஞான பூர்வமான, ஒரே உண்மையான புரட்சிகரத் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் அவர்கள் தாக்குகின்றனர்.

இன்று, லெனினியத்திற்கு எதிரான தாக்குதலானது மார்க்சியத்திற்கு எதிரான தாக்குதலாகும்.

''மார்க்சியவியலாளர்கள்'' லெனினுக்கும் லெனினியத்திற்கும் எதிராகப் போராட தங்களுடைய பிரதான முயற்சிகளைத் திருப்புகின்றனர். ஏனெனில் வேறு யாரையும் விட லெனின் தான் மார்க்சியத்தின் வெளிப்படையான விரோதிகளுக்கும் அதனை மிக நுட்பமாகக் கூர்த்த மதியுடன் மோசடி செய்வோர்களுக்கும் எதிராகவும் எல்லா வித சாயல்களையுடைய சந்தர்ப்பவாதிகளுக்கும் கட்சி துரோகிகளுக்கும் எதிராகவும் மிகவும் தீர்மானமாகவும் உறுதியாகவும் போரிட்டார்.

''மார்க்சியவியலாளர்கள்'' லெனினியத்தின் எல்லா முக்கிய தத்துவக் கூறுகளையும் தாக்குகின்றனர். ஆனால் அவர்களுடைய தாக்குதல்கள், ஏகாதிபத்திய சகாப்தத்திற்குப் பயன்படுத்துவதில் லெனினால் செழுமைப்படுத்தப்பட்ட புரட்சியைப் பற்றிய மார்க்சிய போதனை மீது மாறாமல் மையப்படுத்தப்பட்டன. சோஷலிசப் புரட்சியானது இயல்பான விளைவல்ல, வளர்ச்சியின் தவிர்க்க முடியாத கட்டமல்ல, ஆனால் தற்செயலாக நடந்த நிகழ்ச்சி, ஒரு வரலாற்று முறையற்ற தன்மை என்று''மார்க்சியவியலாளர்கள்''வாதிடுகின்றனர்.

குறிப்பாக, புரட்சியைப் பற்றிய பூர்ஷ்வா ''தத்துவங்கள்''சமீப ஆண்டுகளில் எண்ணற்றவையாகியுள்ளன. புரட்சியின் எதிரிகள் அதனுடைய உணர்ச்சியூட்டும் கருத்தையும் புரட்சி என்ற மாபெரும் சொல்லையும் மக்களை ஏமாற்றுவதற்காக ஓர் அரசியல் முகமூடியாகப் பயன்படுத்துகின்றனர். மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் தங்களுடைய நூல்களில் வாசகர்களுக்கு உலகத்தைப் ''புரட்சிகரமாக'' உருமாற்று

வதற்கான எல்லா வகைத் திட்டங்களையும் அளிக்கின்றனர். அவைகளில் ஓர் ''ஆன்மீகப் புரட்சியைப்'' பற்றிய ஆலோசனைகளும் ''வருமானங்களில் ஒரு புரட்சி'' மற்றும்''நிர்வாகிகளின் புரட்சியின்'' எல்லா வகைகளும் உள்ளன. வேறு எதைப் பற்றித் தான் இல்லை!

ஆனால் தீவிரமான சொல்லியலானது தன்னுடைய நன்கு பரிச்சயமான கட்சியை, தனியார் தொழிலூக்கத்தின் பழைய பாணியிலான ''மேம்பாடடைந்த'' சமுதாயத்தைக் காட்டுவதன் மூலம் முன்னளிக்கிறது. தற்பொழுது நடப்பில் உள்ள திட்டங்களிடையே உள்ள தனிப்பட்ட வேறுபாடுகள் தங்களுடைய பொதுவான மற்றும் முக்கியமான பண்புக் கூறுகளை மறைக்க முடியாது. அவையெல்லாம் முதலாளித்துவம் ஏற்றுக் கொள்ளத்தக்கவை, ஏனெனில் அவை முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படைகளை பாதிப்பதில்லை. அவையெல்லாம் ஏதாவது ஒரு வடிவத்தில் முதலாளித்துவ சொத்துமுறை, சமூக ஏற்றத்தாழ்வு, பெரும்பாலான உழைக்கும் மக்களுக்குப் பாதகமான முறையில் பணம் திரட்டுகின்ற வாய்ப்புகள் ஆகியவை நீடிப்பதை ஆதரிக்கின்றன.

நம் காலத்து ''உண்மையான'' புரட்சி என்று ''இயந்திரத் தொழில் புரட்சியின்'' கர்த்தாக்கள் அதைப் பரிந்துரைத்தபோதிலும் அறுபதுக்களில் மிகவும் கவர்ச்சிகரமாக வெளிப்பட்ட அப்புரட்சியின் வெவ்வேறு கூற்றுகளும் முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படைகளின் எல்லையை மீறவில்லை.

இந்தக் கூற்றுகளெல்லாம், தற்போதைய விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியானது எல்லா நாடுகளையும் ஒரு ''தொழில்துறை முன்னேறிய'' சமுதாயத்திற்கும் அதைத் தொடர்ந்து ''தொழில்துறை முன்னேறியதற்குப் பின்னை'' சமுதாயத்திற்கும் இட்டுச் செல்லும் என்றும் இப்பொழுது இருக்கும் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தை இந்தப் ''புரட்சியின்'' ஒரு தொடர்ச்சியாகவன்றி வேறு எதுவாகவும் கருதக் கூடாது என்றும் அதை வெறும் தொடர்புகளில் ஒன்றாகக் கருதாமல் பிற தேசங்கள் எல்லாம் இன்னமும் அடைய வேண்டிய ''தொழில்துறை முன்னேறியதற்குப் பின்னை புரட்சிக்'' கட்டமாகக் கருத வேண்டும் என்றும் உணர்த்துகின்றன.

‘‘தொழில்துறைவாதம்’’ மற்றும் ‘‘பின்னுன தொழில் துறைவாதம்’’ ஆகியவற்றைப் பற்றிய கருத்தோட்டங்கள் முதலாளித்துவத்துக்குச் சாதகமான வர்க்க நிலையை நோக்க மாகக் கொண்டிருக்கின்றன என்பது தெளிவு. முக்கியமான விஷயம் என்னவெனில் சமூக முன்னேற்றத்திற்கு ஒரு வழி காட்டியாகத் தொழில்நுணுக்கம் முன்னேறுவதைக் கொள்ள வேண்டுமென்று இந்தக் கருத்தோட்டங்கள் வலியுறுத்து கின்றன. உண்மையில் மார்க்சும் எங்கெல்சும் தான் முதன் முதலாக, மனித வரலாற்றின் இயக்கும் சக்தியாக இருக்கும் உற்பத்திச் சக்திகளின் பங்கை வெளிப்படுத்தினர். இன்று பூர்ஷ்வா தத்துவவாதிகள் சோஷலிசப் புரட்சி ‘‘தருக்க முரணுனது’’, ‘‘தேவையற்றது’’ என்பதை நிரூபிப்பதற்கான தங்களுடைய சொந்த நோக்கங்களுக்காக வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் இந்தத் தத்துவக் கூற்றை ஏற்றுக் கொள்ள விரும்பலாம்.

ஆனுல், மார்க்சின் போதனையை மாற்றுவதற்கான இந்த முயற்சியும் வெற்றியடையவில்லை. முதலாவதாக, மார்க்சும் எங்கெல்சும் உற்பத்தி மட்டத்தை ஒரு வரலாற்று சகாப்தத் தினை குணும்சப்படுத்தும் ஒரே தீர்வாக ஒருபொழுதும் கருதியதில்லை. ஒரு சகாப்தம் மற்ருெரு சகாப்தத்திலிருந்து வெறுமனே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டங்களில் வேறுபடவில்லை, ஆனுல் உற்பத்தி முறையில் வேறுபடுகிறது அதாவது உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகிய வற்றின் ஒற்றுமையைக் கவனத்தில் கொண்டு அவை இரண் டிலும் வேறுபடுகிறது என்பது மார்க்சியத் தத்துவத்தின் அடிப்படைக் கூறுகும். ஒவ்வொரு குறிப்பிட்ட சகாப்தத் திலும் பொருளாதார விதிகளேயும் சமுதாயத்தின் அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும் உற்பத்திச் சக்திகள் நேரடியாக நிர்ணயிப்பதில்லை, ஆனுல் உற்பத்தி உறவுகளின் தன்மை, அதாவது முக்கியமாக சொத்து உறவுகளின் தன்மை நிர்ணயிக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இது முன்னேற்றத்தை நோக்கிய மிகப் பெரும் நடவடிக்கை, முதலாளித்துவ சமுதாயத்தில் தனி யார் சொத்தின் ஆதிக்கத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு பண்புத் தாவலாகும். இருப்பினும் மார்க்சியத்தை விமரிசிப்

பவர்களால் பிரச்சினையின் இந்தத் தீர்மானிக்கும் அம்சமே புறக்கணிக்கப்படுகிறது, ஏனெனில் அது அவர்களுடைய வர்க்க நிலையுடன் முழுமையாக முரண்படுகிறது.

உற்பத்திச் சக்திகளின் பங்கைப் பொறுத்த மட்டில் வெவ்வேறு சமூக அமைப்புகள் அதே தொழில்நுணுக்கத்தை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் போது பயன்படுத்தலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலுமே பயன்படுத்தலாம். உற்பத்திச் சக்திகள் அடைந்த தரம் சமூக உறவுகளிலும் சமுதாயத்தின் சமூகக் கட்டமைப்பிலும் தவிர்க்க முடியாத ஒரு புரட்சியை வழங்கும் நிலையை அடையும் காலம் வரும். இந்தப் புரட்சி எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில் நிகழ்வதில்லை.

சில நாடுகளில் அது முன்னதாக நடைபெறுகிறது. மற்ற நாடுகளில் பின்னர் நடைபெறுகிறது. குறிப்பிட்ட பொருளாதார, அரசியல், வரலாற்று மற்றும் பிற சூழ்நிலைகள் ஆகியவற்றின் முழுத் தொகுப்பால் அது நிர்ணயிக்கப்படுகிறது. இருந்த போதிலும் அதனுடைய காலம் தவிர்க்க முடியாமல் வருகிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் முழு அமைப்பின் சர்வாம்ச நெருக்கடியின் ஓர் உள்ளடக்கப் பகுதியான பொருளாதார நெருக்கடி ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுக்களில் முதலாளித்துவக் கட்டமைப்பு எப்படி நவீன உற்பத்தியைத் தடை செய்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டியது. முதலாளித்துவ சாராம்சத்தால் ஏற்பட்ட மிகவும் அச்சுறுத்தும் பிரச்சினைகளான பொருளாதார, ஆற்றல், கச்சாப் பொருள் மற்றும் உணவுப் பிரச்சினைகள் விரைவான விஞ்ஞான தொழில்நுணுக்க முன்னேற்ற நிலைமைகளில் காலத்திற்கு ஒவ்வாத தனியார் சொத்தின் அமைப்பையும் அதனுடைய பிற்போக்கு அழிவுத் தன்மையையும் விளக்குகின்றன.

இந்த முன்னேற்றமானது முதலாளித்துவத்துடன் அதிக ஆழமான, தீர்வு காண முடியாத மோதலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. நவீன உற்பத்தியின் உலகளாவிய குணும்சமானது தனியார் சொத்தின் குறுகிய மற்றும் தன்முனைப்பான கட்டமைப்பிற்கு முரண்பட்டதாக இருக்கிறது, மிகப் பெரிய தொழில் நிறுவனங்களின் கரங்களில் இந்தச் சொத்து

ஒருமுனைப்படுத்தப்பட்டிருந்தாலும் அது முரண்பட்டதாக இருக்கிறது.

விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியானது மனிதகுலம் சோஷலிசத்திற்கு மாறுவதற்கான பொருளாயத முதற்கோள்களைத் தவிர்க்க முடியாமல் உருவாக்குகிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது சமுதாயத்தின் நலன்களுக்குத் தங்களைப் பயன்படுத்தும்படி கட்டளையிடுகிறது. அதாவது தன்னுடைய சொந்த வளமையை மட்டுமே ஊக்கக் குறிக்கோளாகக் கொண்ட தொழில்துறை மற்றும் நிதி ஆதிக்கக் குழுவிலிருந்து அவற்றைப் பறிமுதல் செய்யக் கட்டளையிடுகிறது.

''தொழில்துறை முன்னேறியதற்குப் பின்னுன'' தத்துவங்களை மெய்ப்பிப்பதற்காக மார்க்சிய தத்துவக் கூறுகளைக் கடன் வாங்கும் முயற்சிகள் இரண்டாவது உலகப் போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளில் பரவலான, ''மார்க்சியனிசம்'' அல்லது ''மார்க்சியப்படுத்துதல்'' என்று பூர்ஷ்வா விஞ்ஞானம் அழைக்கும் ஒரு போக்கின் வெளிப்பாடுகளில் ஒன்றுகவுள்ளன.

பொருளாதாரவாதிகள், சமூக இயலாளர்கள், அரசியல் விஞ்ஞானிகள், இறை இயலாளர்கள் கூட, மேலும் எல்லா முக்கிய தத்துவஞான போக்குகளின் பிரதிநிதிகளான நேர்க்காட்சிவாதிகள், மெய்மை மறுப்பு சூனியவாதிகள், கட்டமைப்புவாதிகள், நவீன ஃபிராயிடுவாதிகள் இதரர்கள் தாங்கள் உருவாக்கியவற்றை மிகவும் நம்பத்தக்கதாக தொனிக்கும்படி செய்வதற்காக வெளிப்படையாகவோ அல்லது மறைவாகவோ விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்திலிருந்து பல்வகையான தத்துவக் கூறுகளைத் தனதாக்கவும் போலியாகப் புனைந்து உருவாக்கவும் முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஜி.-பி. சார்ட்ர் என்பவர் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தன்னுடைய கருத்துக்கள் ''மார்க்சியமயமானதைப்'' பற்றிப் பேசிக் கொண்டும் மார்க்சியம் ''நம் காலத்து தத்துவஞானம்'' என்று அழைத்துக் கொண்டும் பின்வருமாறு எழுதினுர்: ''நம் கருத்துக்கள் இந்த செழுமையான நிலத்தில் மட்டுமே உருவாக முடியும்; அவைகளுக்கு வழங்குகிற கட்டுக்கோப்பிற்குள் அவை பொருந்த வேண்டும்

அல்லது சூனியத்திலோ பின்னடைதலிலோ அழிய வேண்டும்.''*

ஆனால் மார்க்சியத்தின் இயக்கவியல் பொருள்முதல் வாதத் தன்மையின் காரணத்தால் அதை அச்சுறுத்துவதாகக் கூறப்படும் ''இரத்த சோகை'' மற்றும் ''ஸிலெரோசிஸ்'' வியாதிகளின் அபாயத்தைப் பற்றி சார்ட்ர் அவ்வப்போது அறிவிக்கிறார். இயக்கவியல் பொருள்முதல்வாதத்திலிருந்தும் வரலாற்று நிர்ணயத்தன்மையிலிருந்தும் மார்க்சியத்தை ''விடுவிக்கவும்'' அதனை மெய்மை மறுப்பு சூனியவாதத்தால் ''இட்டு நிரப்பவும்'' ஆலோசனை கூறுகிறார். அதன் பிறகு மெய்மை மறுப்பு சூனியவாதம் ''தன்னைத் தானே கலைத்துக் கொள்வதையும்'' கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்.

''...மார்க்சிய ஆராய்ச்சி மனித உருவளவை... அதன் மானிடவியல் விஞ்ஞானத்தின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளும் நாளிலிருந்து மெய்மை மறுப்பு சூனியவாதம் இருப்பதற்குக் காரணம் ஏதுமில்லை: தத்துவஞானத்தின் கூட்டு இயக்கத்தினால் அது கிரஹிக்கப்படும்....''**

ஆனால் இத்தகையதொரு ''தத்துவஞானத்தின் கூட்டு இயக்கத்திற்குப்'' பிறகு மார்க்சியத்தில் தங்கியிருப்பது என்ன? எந்த விதத்தில் இத்தகைய மார்க்சியம் மெய்மை மறுப்பு சூனியவாதத்திலிருந்து வேறுபடும்?

''மார்க்சியனிசம்'' என்பது மார்க்சிய அம்சங்களைக் கடன் வாங்கி அவற்றை முதலாளி வர்க்கத்தின் தேவைகளுக்குத் தகவமைக்கும் முதலாளித்துவ (அடிக்கடி குட்டி முதலாளித்துவ) முயற்சிகளின் ஒரு கருத்துருவமாகும். அது மார்க்சியத்தை எதிர்த்துப் போராடும் ஒரு நுட்பமான வழியாகும். பூர்ஷ்வா சிந்தனை பலவீனப்பட்டுக் கொண்டிருப்பதற்கும் மார்க்சியத்தின் வெல்ல முடியாத பலத்திற்கும், பூர்ஷ்வா தத்துவம் மார்க்சியத்தைச் ''சார்ந்திருக்க'' விரும்பும் விருப்பங்களைவிட வேறு எந்தத் தெளிவான சாட்சியும் இருக்க முடியுமா?

நவீன ''மார்க்சியவியலானது'' விஞ்ஞான சோஷலிசத்தைப் பொய்யாக்குவதில் பெரும் அனுபவத்தைத் திரட்டியிருக்கிறது. ஆனால் அதனுடைய புறத்தோற்றமான பல்

---

* J.-P. Sartre, *Questions de methode*, Paris, 1960, p. 44.

** *Ibid.*, pp. 250-251.

வடிவத்தன்மையில் ஒருதரமான ஆய்வுமுறை மாதிரியை வேறுபடுத்த அதிக முயற்சி தேவையில்லை.

முதலாவதாக, சூக்குமமான மனிதாபிமானத்தைப் பிரித்துச் சாறு எடுக்கும் தத்துவஞானத்தைக் கொண்ட ஒரு குட்டி முதலாளித்துவ தீவிரவாதியாகவோ அல்லது ஒரு மிதவாதியாகவோ மார்க்சைக் காட்டுவதற்கான முயற்சிகள் மூலம் வழக்கமாக மார்க்ஸ் தவறு செய்தவராக்கப் படுகிறார். அதன் பிறகு தவருக்கப்பட்ட மார்க்சை லெனினுக்கு எதிராக நிறுத்துவதில் எந்தவிதச் சிரமமும் இருக்காது.

ஆனல் இவ்வாருக ஒரு முறை ஓர் ஆரம்பம் ஏற்பட்டால், மார்க்சிலிருந்து லெனினை மட்டுமல்ல எங்கெல்சைக் கூடப் பிரிக்கவும், உதாரணமாக லெனின் சார்ந்திருக்கும் எங்கெல்சின் இயக்கவியலுக்கும் மார்க்சின் இயக்கவியலுக்கும் பொதுவான அம்சம் ஒன்றுமில்லை என்று நிரூபிக்கவும் வேண்டியிருக்கும். இருப்பினும் அதன் பிறகு ஒட்டு மொத்தமாக மார்க்ஸ் அவருடைய விமரிசகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவராக இருக்கிறார் என்றும் ‘‘இளம்’’ மார்க்ஸ் தான், அதாவது பூர்ஷ்வா தத்துவஞானத்திலிருந்து, முக்கியமாக நவீன ஹெகல்வாதத்திலிருந்து மார்க்ஸ் வெளிவந்த காலமான 1844ல் எழுதப்பட்ட பொருளாதார மற்றும் தத்துவஞான கையெழுத்துப் பிரதிகள் என்பனவற்றின் ஆசிரியர் தான் உண்மையான மார்க்ஸ் என்றும் தோன்றுகிறது. விஞ்ஞான கம்யூனிசத்தின் ஸ்தாபகராகவும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, மூலதனம் ஆகியவற்றின் ஆசிரியராகவும் உலகம் முழுவதும் அறிந்தவரும் அவர்களால் ‘‘மிகச் சமீபத்திய’’ மார்க்ஸ் என்று அழைக்கப்படுகிறவருமான மார்க்ஸ் ‘‘உண்மையான மார்க்ஸ் இல்லை’’ என்று முடிவு செய்கின்றனர்.

‘‘மிக சமீபத்திய’’ மார்க்சுக்கு ‘‘இளம்’’ மார்க்சை எதிர்ப்பதற்கான முயற்சிகளில் புதுமை ஒன்றுமில்லை என்பதை நினைவு கூர்வது பொருத்தமற்றதாக இராது. அக்டோபர் புரட்சியைப் பின்தொடர்ந்த ஆண்டுகளில் இரண்டாவது அகிலத்தில் சந்தர்ப்பவாதிகளால், முதலாவதாக கார்ல் காவுத்ஸ்கியால் இத்தகைய முயற்சிகள் செய்யப்பட்டன. அவர்கள் கண்டுபிடித்த கூற்று பூர்ஷ்வா அறிவாளிகளாலும் பத்திரிகைகளாலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

அந்த நேரத்தில் லெனினுக்கும் லெனினியவாதிகளுக்

கும் எதிராக, அவர்களுடைய புரட்சிகர வேலைத்திட்டம் உண்மையான ''பக்குவமடைந்த'' மார்க்சியத்திற்கு முரண் பட்டதாக இருந்தது என்று குற்றஞ்சாட்டவும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் தான் மார்க்சின் உண்மையான வாரிசுகள், அவர்கள் மட்டுமே மார்க்சை உண்மையாக விளக்கு கிறவர்கள் என்று நிரூபிக்கவும் பாட்டாளி வர்க்கப் புரட்சி யின் விரோதிகள் மார்க்சியத்தை ''ஆரம்பகால'' (புரட்சி கர) மார்க்சியம் என்றும் ''பிற்கால'' (''பக்குவமடைந்த'', ''மிதமான'') மார்க்சியம் என்றும் பிரிக்க வேண்டியது அவ சியம் எனக் கண்டனர்.

இன்று அதே அரசியல் சக்திகள், ஒரு புறம் மார்க்சியத் திற்கும் தற்காலத்திய பூர்ஷ்வா மற்றும் சீர்திருத்த போதனை களுக்கும் இடையில் ஆழமான முரண்பாடுகள் இல்லை என்று நிரூபிக்கவும் மறு புறம் வெற்றிகர சோஷலிசத்தையும் கம்யூ னிஸ்டுக் கட்சிகளின் லெனினியக் கொள்கையையும் எதிர்க்க மார்க்சியத்தை எதிர்ப்பதற்காகவும் முயற்சி செய்ய மார்க் சியத்தை ''ஆரம்பகால'' (''உண்மையான'', ''மனிதாபி மான'') மற்றும் ''பிற்கால'' (''வறட்டுச் சூத்திரவாத'', ''பழைமைவாத'') மார்க்சியம் என்று பிரிக்க வேண்டியது அவசியம் எனக் காண்கின்றன.

முதல் பார்வையில் அந்த முறைகள் வேறுபட்டவையாகத் தோன்றுகின்றன. ஆனால் அவை இரண்டும் மார்க்சியம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கம் ஆகியவற்றின் ஐக்கியத்தை அழிக்கும் ஒரே குறிக்கோளைப் பின்தொடர் கின்றன.

மேற்கு நாடுகளில் ''நவீன மார்க்சியம்'' என்று ஆரவார மாகப் பெயர் சூட்டப்பட்ட போலி மார்க்சியத்தின் குட்டி முதலாளித்துவ மற்றும் திருத்தல்வாத பொய் போதனைகள் அதே நோக்கங்களுக்காகப் பணிபுரிகின்றன. ''நவீன மார்க் சியவாதிகள்'' என்பவர்களில் ''பிராங்க்பர்ட் சிந்தனை'', ''நடைமுறை தத்துவஞானம்'' ஆகியவற்றைப் பின்பற்று வோர்கள், வலதுசாரி திருத்தல்வாதிகள், ''புதிய இடது சாரிகள்'', நவீன திரோத்ஸ்கியவாதிகள், ''பிற்கால ஆஸ்ட்ரோ மார்க்சியவாதிகள்'' போன்றவர்கள் அடங்கு வார்கள். அவர்கள் எல்லோரும் மார்க்சைப் பற்றிய தங் களுடைய சொந்த விளக்கங்களை ''உண்மையான'' மார்க் சியமாக அளிக்க முயலுகின்றனர்.

சொல்லப் போனால், வெளியிலிருந்து, அதாவது வெளிப் படையாக மார்க்சியத்திற்கு பகைமையான நிலைகளிலிருந்து மார்க்சிய-லெனினியத்தை வழக்கமாக விமரிசிக்கும் ''மார்க் சியவியலாளர்களைப்'' போலல்லாது ''நவீன மார்க்சியவாதி கள்'' ''உள்ளார்ந்த'' விமரிசகர்களாக வெளிவருகின்றனர். மார்க்சின் ''வாரிசுகள்'', ''தொடர்ச்சியாளர்கள்'' என்ற அவர்கள் உடைகளை அணிந்து கொண்டு விஞ்ஞான சோஷ லிசத்தை உள்ளிருந்தே சீர்குலைக்க முயலுகின்றனர்.

யூகோஸ்லாவியப் பேராசிரியர் ஜி. பெட்ரோவிச் அல்லது அறுபதுக்களில் செக்கோஸ்லோவாக்கியாவின் வலதுசாரி களின் தத்துவவாதியான கே. கோசிக் போன்றவர்களில் சிலர் பிற்கால ஹெகல்வாதம், புலப்பாட்டியல் மற்றும் மெய்மை மறுப்பு சூனியவாதம் ஆகியவற்றுடன் ''ஐக்கியப் படுத்துவதன்'' மூலம் மார்க்சியத்தைக் ''காப்பாற்ற'' விரும் பலாம்.*

திரோத்ஸ்கியத் தத்துவங்களை ஆதரிக்கும் ''புதிய இடது சாரி'' பிரதிநிதிகள் மார்க்சியத்தில் நேரடியான மற்றும் உடனடியான செயலின் தத்துவத்தை மட்டும் பார்க்கும் போது, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கக் கூட்டணிகளின் கொள்கையைப் புறக்கணிக்கும் பொழுது, ரோஜேர் கரொடி போன்ற பிற ''நவீன மார்க்சியவாதிகள்'', முதலாளித்துவ சமுதாயத்தின் மத்தியதர வகுப்பினர் முக்கிய பங்கு எடுக் கும் புதிய வரலாற்றுக் கூட்டமைப்பு என்றழைக்கப்படு வதில் தொழிலாளர் வர்க்கத்தை ஒன்ருகக் கலந்துவிட ஆலோசனை கூறுகின்றனர்.

''நவீன மார்க்சியவாதிகளில்'' மார்க்சியத்தைக் கைவிட்ட வர்களும் ஓடுகாலிகளும் புரட்சிகர போராட்டத்தைக் கைவிட்டவர்களும் அடங்குவார்கள். அவர்களுக்கு, ''நவீன மார்க்சிய'' திருத்தல்வாதம் என்பது மார்க்சினுடைய மாபெரும் போதனைக்கு அவர்கள் செய்யும் துரோகத்தை மறைக்க ஒரு மாறுவேடமாக, மார்க்சியத்தின் வெளிப்படை யான எதிரிகளுடன் சேர்வதற்கான வழியில் அரசியல் மற்றும் ஆன்மீக இழிவின் ஓர் இடைநிலைக் கட்டமாக இருக்கிறதே யன்றி வேறொன்றுமல்ல.

---

* G. Petrovic, "Dialectical Materialism and the Philosophy of Karl Marx", *Praxis*, 3e trimestre, 1966, pp. 325-337; K. Kosik, *Die Dialektic des Konkreten*, Frankfurt am Main, 1967 பார்க்க.

ஆனல் இந்தப் போக்கு, இடதுசாரித் திசையில் போய்க் கொண்டிருக்கும் மக்களையும் குட்டி முதலாளித்துவ முறையில் மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளுதலைப் புரட்சிகர தொழிலாளி வர்க்கத்துடன் நெருக்கமாவதை நோக்கிய தங்களுடைய சித்தாந்த பரிணமத்தின் ஒரு படியாகக் கொள்ளுகிற மக்களையும் கூட உள்ளடக்குகிறது. குட்டி முதலாளித்துவ சித்தாந்தப் போக்குகளின் முரண்பாடான தன்மையைச் சரியாகப் புரிந்து கொள்வதும் போலி மார்க்சிய கோஷத்தின் கீழ் வெளிவந்து முதலாளித்துவத்தைச் சூக்குமமாகப் பாதுகாப்போரை சோஷலிசத்திற்கான புரட்சிகரப் போராட்டத்தில் தங்களுடைய இடத்தைக் காண உறுதியற்ற முறையிலும் தவறுகளுடனும் முயன்ற போதிலும் உண்மையாக முயலுகின்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட வல்லவராக இருப்பதும் மார்க்சிய-லெனினியவாதிகளுக்கு ஓர் அவசரமான பணியாக இருக்கிறது.

குறிப்பாக, இத்தகைய அணுகுமுறை தீவிர இடதுசாரிப் போக்குகளைப் பகுத்தாய்வதற்கு இன்றியமையாததாகும். அவற்றின் செயல்பாடு அறுபதுக்களின் பிற்பகுதியிலும் எழுபதுக்களின் ஆரம்பத்திலும் அதிகரித்தது. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்த்த சில இளம் அறிவுஜீவிகள், மாணவர்கள், குட்டி முதலாளித்துவ மூலத்தையுடைய மக்கள் ஆகியோர் மார்க்சியத்திற்கு மாறினர். ஆனல் அவர்கள் அதை பூர்ஷ்வா விளக்கங்களில் மட்டுமே புரிந்து கொள்ள வல்லவர்களாக இருந்தனர். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் அதிகரிப்பாலும் குறிப்பாக, அறிவுஜீவிகளின் சமூக அந்தஸ்தில் ஏற்படுகிற ஆழமான மாற்றங்களாலும் அவர்கள் பாட்டாளிமயமாவது அதிகரித்துக் கொண்டே இருப்பதாலும் முதலாளித்துவ சமுதாயத்தில் தான் இருப்பது பயனற்றது என்று உணர்ந்தாலும் புரட்சிகர தொழிலாளி வர்க்க நிலைகளுக்குச் சென்று உண்மையான விஞ்ஞான உலகக் கண்ணேட்டத்தை ஏற்கத் தயாராக இல்லாத கூலி உழைப்புப் படையின் ஒரு மூலப்பகுதியாக அவர்களில் பெரும் பகுதி மாறுவதாலும் அவர்களுடைய உணர்வுப்பாங்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

தீவிர இடதுசாரிகளுக்கு தீவிர சீர்திருத்தங்களை நோக்கிய விருப்பம் ஆழமான சமூக அவநம்பிக்கை மனப்பான்மையிலிருந்து வேறுபட்டதல்ல. தீவிர இடதுசாரி வேலைத்

திட்டமே மிகவும் குழப்பமானதாகவும் முரண்பட்டதாக வும் தோன்றுவதால் புரட்சிகர பொறுமையின்மையும் வளர்ச்சியின் கடக்கப்படாத கட்டங்களைத் ''தாவிச்'' செல் லும் அவாவும் மிக வலிமையாக வெளிப்படுகின்றன. தீவிர இடதுசாரியினர் பாட்டாளியல்லாத பிரிவினரின் சாத்தியப் பாடுகளை மிகைப்படுத்துகின்றனர், தொழிலாளி வர்க்கத் தின் பங்கைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்; மேலும் அவர் கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை பரிபூரணமானதாகக் கருதுகின்றனர், மக்கள் திரளினர் மேம்பாடுடைய வாழ்க்கை நிலைமைகளுக்காகப் போராடுவதை எள்ளி நகையாடு கின்றனர், ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்கும் சோஷலிசத்திற்கான போராட்டத்திற்கும் இடையிலுள்ள தொடர்பை மறுக்கின்றனர், புரட்சிகரக் கட்சியின் தலை மையை நிராகரித்துப் புரட்சிகர ''முன்னணிப் படையின ரின்'' சிறு கோஷ்டிகள் மீது நம்பிக்கை வைக்கின்றனர்.

''பொதுவாக முதலாளித்துவமும், குறிப்பாக ஏகாதிபத் தியமும் ஜனநாயகத்தை ஒரு வெறும் பிரமையாக மாற்று கின்றன—ஆனால் அதே சமயத்தில் முதலாளித்துவம் பெருந் திரளான மக்களிடையே ஜனநாயக விருப்பங்களைப் பிறப்பிக் கிறது, ஜனநாயக நிறுவனங்களை அது படைக்கிறது, ஜன நாயகத்தை மறுதலிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ஜனநாய கத்தில் நாட்டம் கொண்டுள்ள பெருந்திரளான மக்களுக் கும் இடைப்பட்ட விரோதத்தை உக்கிரமடையச் செய் கிறது''* என்ற உண்மையை இடதுசாரிகள் புறக்கணிக் கின்றனர். ''முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் பொருளா தாரப் புரட்சி ஒன்றினால் மட்டுமே வீழ்த்தப்பட முடியும்'' என்பதை லெனின் நினைவுபடுத்தினார். ''ஆக ''இலட்சியம்'' எனப்படும் ஜனநாயக சீர்திருத்தங்களினால் கூட அவற்றை வீழ்த்திட முடியாது. ஆனால் ஜனநாயகத்திற்கான போராட் டம் எனும் பள்ளியில் பயிற்சி பெறாத பாட்டாளி வர்க்கம் பொருளாதாரப் புரட்சியை நிறைவேற்ற இயலாது''** என்று அவர் கூறினார்.

உறுதியற்ற குட்டி முதலாளித்துவப் புரட்சிகரத் தன்

* வி. இ. லெனின், **தொழிலாளர் கண்காணிப்பும் தொழிற் துறையின் தேசவுடைமையாக்கமும்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 28.

** அதே இடம்.

மையின் ஆதரவாளர்கள், பூர்ஷ்வா தத்துவவாதிகளின் நூல்களிலிருந்து திரோத்ஸ்கியவாதிகளின் நூல்கள் வரை சாத்தியமான எல்லா ஆதாரங்களிலிருந்தும் ''விவாதங்களை'' ஈர்த்து சோஷலிச நாடுகளுக்கு எதிரான அவதூறில் ஈடுபடவும் கம்யூனிச எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பெறவும் ஆரம்பிக்கும் பொழுது அது நேரடியான பிற்போக்குத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக மாறுகிறது.

''தீவிர இடதுசாரி'' மாயைகளின் வீழ்ச்சி எழுபதுக்களின் ஆரம்பத்தில் தீவிர இடதுசாரிகளின் செயலில் சரிவையும் அவர்களுடைய அணிகளில் அதிகமான ஒழுங்கீனத்தையும் உண்டாக்கிற்று. அவர்களில் சிலர் வெளிப்படையான பூர்ஷ்வா கோஷ்டிகளுக்கும் தீவிர வலதுசாரி கோஷ்டிகளுக்கும் கூட மிக நெருக்கமாக வந்தார்கள். அதே நேரத்தில் பிறர் ''அதிகாரத் தன்மைக்கு எதிரான சோஷலிசத்தைப்'' பற்றிய அராஜகவாத மற்றும் அராஜக-சிண்டிக்கல் கருத்தோட்டங்களின் புதிய கூற்றுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுகின்றனர். இருப்பினும் ''புதிய இடதுசாரியினர்களில்'' முந்திய போர்த்தந்திர மற்றும் செயல்தந்திர தோல்விகள், தவறுகள் ஆகியவற்றிலிருந்து ஓர் அரசியல் பாடத்தைக் கற்றுக் கொள்ள வல்லவர்கள் பலர் உள்ளனர். சோஷலிசத்திற்கான போராட்டத்தைக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து தொடர்வதற்காக இந்த மக்கள் அவர்களுடன் சேர்ந்தார்கள் அல்லது சேர இருக்கின்றனர். எனவே தான் பல்வகை தீவிர இடதுசாரிப் போக்குகள் அவற்றின் பிரதிநிதிகளிடம் ஒரு பாகுபாடான அணுகுமுறையைப் பின்பற்றுவது அவசியமாகிறது.

''நவீன மார்க்சியவாதிகள்'' பல ''சோஷலிச முன்மாதிரிகளை'' முன்னிலைப்படுத்துகின்றனர், அவற்றை மார்க்சியத்தின் மிகவும் நவீன சாதனைகள் என்று கூறுகின்றனர். இந்த முன்மாதிரிகள் மட்டுமே சில நாடுகளின் விசேஷ பண்புக் கூறுகளுக்கு ஏற்றவை என அவர்கள் பரிந்துரைக்கின்றனர். அந்தந்த வகைகளின் பல்வகைத் தன்மை வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த போதிலும் ''ஜனநாயக சோஷலிசம்'', ''இரக்கமுள்ள சோஷலிசம்'', ''மனிதத் தன்மையோடு கூடிய சோஷலிசம்'' இதரவைகளின் முன்மாதிரிகள் எல்லாம் அரசியல் ரீதியாக ஒன்று மற்றதைப் போன்றதே என்று நிரூபிப்பதை உணர்வதற்கு மேலெழுந்தவாரியான

பார்வையே போதுமானதாகும். உண்மையில் விஞ்ஞான பூர்வமானதும் தற்பொழுது உண்மையாகவே இருப்பது மான சோஷலிசத்தை எதிர்ப்பதற்குப் புதிய மார்க்சிய வாதிகள் காட்டும் ஒரே ஒரு முன்மாதிரி ''தேசிய சோஷலிச மாகும்''. ''தேசிய சோஷலிசத்தின்'' வகைகள் எல்லாம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கட்டத் திலும் சோஷலிச சமுதாயத்திலும் தொழிலாளி வர்க்கத் தின் முன்னணிப் பங்கை உண்மையில் நிராகரிக்கின்றன.

இந்த வகை ''சோஷலிசம்'' செயலளவில் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அர்த்தத்தைக் கொண்டது தான். அது முதலாளித்துவ அமைப்பை நிலையானதாக்கு வதை மறைப்பதற்கான பங்கை எப்பொழுதும் மாருமல் ஆற்றியிருக்கிறது. சோஷலிசத்தின் ''தேசிய முன்மாதிரிகள்'' எதிர்காலத்தில் ஏதாவது ஒரு வகை கலப்புச் சமுதாயத்தில் முதலாளித்துவமும் சோஷலிசமும் ஒன்றிணைவதை உணர்த் தும் கருத்தோட்டங்களுடன் தக்கவாறு உடன்படுகின்றன. இந்தக் கருத்தோட்டங்கள் கடந்த இருபது ஆண்டுகளில் மேற்கத்திய நாடுகளில் பரவலாகியிருக்கின்றன.

இத்தகைய ''நவீன மார்க்சிய'' வேலைத்திட்டங்களை அமுலாக்குவது என்பது சோஷலிச சமுதாயத்தின் கதவுகளைப் பகை வர்க்க சக்திகளுக்குத் திறந்து விடுதல் என்று அர்த்த மாகும்.

''நவீன மார்க்சிய'' நூல்களில் தொழிலாளி வர்க் கத்தைப் புகழ்ந்துரைப்பதற்கும் அதனுடைய வரலாற்றுச் சிறப்புகளை விரித்துரைப்பதற்கும் இதரவைகளுக்கும் குறைவே இல்லை. ஆனல் பொதுவாக, இந்தப் புகழுரைகள் ஏதாவது ஒரு வழியில் மத்தியதர வகுப்பினர், அறிவுஜீவிகள் ஆகியோரின் விசேஷப் பங்கை, அதாவது தங்களுடைய அந்தஸ்தாலும் மனநிலையாலும் இடைநிலையான குட்டி முத லாளித்துவ சமூகக் கோஷ்டிகளின் பங்கை வலியுறுத்து கின்றன. தீவிர இடதுசாரி அராஜக மற்றும் திரோத்ஸ்கிய கோஷ்டிகள் புரட்சியின் சக்திமிக்க வலிமையான பங்கை, வர்க்கச் சார்பு இழந்த பகுதியினருக்கும் லும்பன் பாட்டாளி களுக்கும் கூட வழங்கத் தயாராகவுள்ளன.

இந்த வகுப்பினர் எல்லோரும் தொழிலாளி வர்க்கத்தைப் போல் வர்க்க உணர்வும் சோஷலிச மனமும் உடையவர் களாக இருக்கின்றனர் என்றும் அதன் விளைவால் பாட்டாளி

வர்க்க சர்வாதிகாரம் அவசியம் இல்லை என்றும் ''நவீன மார்க்சியவாதிகள்'' வாதிடுகின்றனர். இருப்பினும் லெனின் எழுதியது போல், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியை நிறை வேற்றுவதில் பாட்டாளி வர்க்கத்திற்கு குட்டி முதலா ளித்துவ வர்க்கம் ஆதரவளிக்கும் என்பது நிச்சயமாகத் தெரிந் திருந்தால் ஒரு 'சர்வாதிகாரத்தைப்' பற்றிப் பேசுவது அர்த்தமில்லாததாகும். ஏனெனில் அவ்வாறு இருப்பின் ஒரு சர்வாதிகாரம் இல்லாமல் ('விமரிசகர்கள்' நம்மை நம்பும் படி செய்வது போல்) நம்மால் எடுத்த காரியத்தை மிக நன்முக நிறைவேற்ற முடியும் என்ற அளவிற்கு நமக்கு மிகப் பெரும்பான்மையினரின் ஆதரவு உத்திரவாதமளிக்கப் படும்''.*

முதலாளித்துவ சமுதாயத்தில் மத்தியதர வகுப்பினரின் புறநிலை அந்தஸ்து அவர்களைத் தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு, அரசியல் உறுதித் தன்மை ஆகியவற்றின் மட்டத் திற்கு உயருவதற்கு அனுமதிப்பதில்லை என்ற உண்மையை அதனுடைய எல்லா அம்சங்களிலும் லெனின் வலியுறுத்தி வெளியிட்டார். முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க் கத்திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் இந்த வகுப்பினர் புரட்சிகரப் போராட்டத்தின் போக்கில், முக்கிய மாக அதனுடைய நெருக்கடியான காலகட்டங்களில் நம்ப முடியாத தன்மையையும் சில வேளைகளில் புரட்சியின் விரோதிகள் பக்கம் போவதன் மூலம் நிச்சயமான பிற் போக்குக் குணும்சத்தையும் வெளிப்படுத்துகின்றனர். முதலா ளித்துவ சமுதாயத்தில் இந்தச் சமூக கோஷ்டிகளின் இடைப் பட்ட மற்றும் ஸ்திரமற்ற நிலையால் விசேஷமாக விளக்கப் பட முடிகிற பல தகுந்த எடுத்துக்காட்டுகளைச் சமீப கால வர லாறு வழங்குகிறது. ''சிறு உற்பத்தியாளர்களின் அதிருப்தி தாங்கள் சிறு உடைமையாளர்களாக இருப்பதைப் பாதுகாக்க, அதாவது இன்றைய முறையின் அடிப்படைகளைப் பாதுகாக்க, அதைப் பின்பக்கம் கூடத் திருப்பக் கூடிய ஒரு தூண்டுதலை (அவர்களிடம் அல்லது அவர்களில் கணிசமான பகுதியின ரிடம் தவிர்க்க முடியாமல் ஏற்படுத்த வேண்டும்) அடிக்கடி உண்டாக்குகிறது''** என்ற லெனினின் முடிவை எதார்த்தம் இன்று கூட முழுமையாக உறுதிப்படுத்துகிறது.

* V. I. Lenin, *Collected Works*, Vol. 6, p. 51.

** *Ibid.*, p. 49.

விவசாயிகள், நகர்ப்புற மத்தியதரப் பிரிவினர், அறிவு ஜீவிகள் ஆகியோர் புரட்சிகரப் போராட்டத்தில் சேர்தலானது நம்பிக்கைக்குரிய பாட்டாளி வர்க்க தலைமையை இரண்டு மடங்கு அவசியமாக்குகிறது. ஏனெனில் குட்டி முதலாளித்துவப் பகுதியினர்களும் அவர்களுக்கு நெருக்கமான சக்திகளும் புரட்சிகர இயக்கத்திற்கு பெரும் கூடுதலான பலத்தை மட்டுமல்லாது, ஒரு புதிய வீச்சையும் அதே நேரத்தில் பலத்த இழப்புகளுக்கு ஒரு முறைக்கு மேலாக இட்டுச் சென்ற அவர்களுடைய தப்பெண்ணங்களையும் மாயைகளையும் தவறுகளையும் வழங்குகின்றனர்.

தற்கால நிலைமைகளில் எல்லாப் புரட்சிகர சக்திகளும் தொழிலாளி வர்க்கத்தினாலும் அவனுடைய கம்யூனிஸ்டு முன்னணிப் படையினாலும் தலைமை தாங்கப்பட வேண்டியது அவசியமானதோடு மட்டுமல்லாது மிக அவசரமானதாகவுமாகியிருக்கிறது. ஏனெனில் தெளிவாக, இதுவரை கண்டிராத அளவு விரிந்த வெகுஜனத் திரளினர் இயக்கத்தில் சேர்ந்திருக்கின்றனர்; அவர்கள் செயலூக்கமான அரசியல் ஈடுபாட்டிற்குத் தூண்டப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு தெளிவான நோக்கத்தை அளிக்க, போராட்டத்தின் சிக்கலான நிலைமைகளில் அவர்களுடைய உறுதியை ஊக்குவிக்க, பலப்படுத்த ஒரு தலைவர் தேவை. அத்தகைய தலைமையை ஒரே ஒரு சக்தி மட்டுமே, அதாவது தொழிலாளி வர்க்கம் மட்டுமே அளிக்க முடியும்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான அவசியத்தை அங்கீகரிப்பது என்பது பாட்டாளி வர்க்கம் மட்டுமே ஓர் உண்மையான புரட்சிகர வர்க்கம் என்ற கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் ஆய்வுரையுடன் மிக நெருக்கமாகவும் பிரிக்க முடியாமலும் பிணைக்கப்பட்டுள்ளது''* என்று லெனின் வலியுறுத்தினார். ருஷ்யாவின் புரட்சிகர சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சி தான் தன்னுடைய வேலைத்திட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றிய ஆய்வுரையை உருவாக்கிய முதல் கட்சியாக இருந்தது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியதானது சோஷலிசப் புரட்சி வெற்றியடைவதற்கு அவசியமான நிபந்தனையாகும், இயல்பான விளைவாகும், அதனுடைய ஆதாயங்களை வலுப்படுத்துவதற்கும் அதைத் தொடர்ந்து புதிய சமுதாயத்தைக் கட்டு

* *Ibid., p. 51.*

வதற்கும் இன்றியமையாத நிபந்தனையாகும் என்று காட்டு வதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனையை வளர்த்திருப்பது உலகப் புரட்சிகர இயக்கத் திற்கு லெனினும் அவரைப் பின்பற்றியவர்களும் செய்த மாபெரும் சேவையாகும்.

''வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் திற்குக் கண்டிப்பாக இட்டுச் செல்லுகிறது'' என்றும் ''இந்தச் சர்வாதிகாரமே வர்க்கங்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்கும் வர்க்கமற்ற சமுதாயத்திற்கும் மாறும் கட்ட மாகும்''* என்றும் கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டார். இரண் டாவது அகிலத்தின் தலைவர்களால் மறைக்கப்பட்ட, திரித்துக் கூறப்பட்ட மார்க்சின் அடிப்படைத் தத்துவக் கூறுகளை லெனின் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப புதுப்பித்து வளர்த் தார்.

இன்று, மார்க்சியத்தின் பூர்ஷ்வா விமரிசகர்கள் சாத்திய மான எல்லா வழிகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதி காரத்தைப் பற்றிய மார்க்சிய தத்துவக் கூறுகளின் முக்கியத்து வத்தை இருட்டடிப்புச் செய்யவும் குறைத்து மதிப்பிட வும் அத்தத்துவக் கூறுகள் யாருக்காவது பொருத்தமாக இருக்குமேயானல் அவை ருஷ்யாவின் ''அபூர்வமான'' நிலைமை களுக்கு மட்டுமே அல்லது சிறப்பாகச் சொன்னல் பொரு ளாதார ரீதியாகப் பிற்பட்ட தேசங்களுக்கு மட்டுமே பொருத்தமானதாக இருக்கும் என்று அறிவிக்கவும் முயலு கின்றனர்.

எதார்த்தத்தில், வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகளின் விதிகளை மிக வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலே மிகக் கவனமாக ஆராய்ந்ததன் விளைவாகத் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய தத்துவக் கூறுகள் மார்க் சால் முன்வைக்கப்பட்டன. சந்தர்ப்பவாதிகள்—பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளைப் பற்றிக் கூறவே வேண்டாம்—அவர்கள் இந்த முடிவை மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் வாழ்நாளி லேயே மூர்க்கமாக நிராகரித்தனர். இன்றும் அவர்கள் அப் படியே செய்து கொண்டிருக்கின்றனர். தற்காலத்தைப் போலவே அக்காலத்திலும் முதலாளி வர்க்கம், உழைக்கும்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன் னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, முன்னேற்றப் பதிப் பகம், மாஸ்கோ பார்க்க.

மக்கள் திரளின் மத்தியில் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய மாபெரும் கருத்தை இழிவுபடுத்த, ''மிக மோசமான மக்களின் இரத்தச் சர்வாதிகாரத்தைப்'' பற்றிய நம்பத்தகாத குப்பை கூளங்களைக் கொண்டு அற்பவாதிகளை அச்சுறுத்த, அதே நேரத்தில் முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை இலட்சிய ஜனநாயகமாக முன்வைக்க எந்த வழிகளை உபயோகிக்கிறோம் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய விமரிசகர்களுக்குப் பதிலளிக்கையில் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''சமீபகாலமாக, சமூக-ஜனநாயக அற்பவாதி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொற்களால் ஒட்டுமொத்தமாக பயத்தால் முழுமையாகப் பீடிக்கப்பட்டிருக்கிறார். நல்லது, கனவான்களே, இந்தச் சர்வாதிகாரம் எதைப் போல் தோன்றுகிறது என்று அறிய நீங்கள் விரும்புகிறீர்களா? பாரிஸ் கம்யூனைப் பாருங்கள். அது தான் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்.''*

தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பது சிறுபான்மையோரின் சர்வாதிகாரம், தான்தோன்றித்தனமான ஆட்சி, சட்டம் ஒழுங்கற்றது, கலப்பற்ற பலாத்காரம் என்று கூறப்படும் நம்பத்தகாத கருத்திற்கும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை. முதலாளி வர்க்கத்தின் பிரச்சார இயந்திரமும் சர்வதேச சந்தர்ப்பவாதமும் பல ஆண்டுகளாக கோடிக் கணக்கான மக்களின் தலைக்குள் இந்த வர்ணனையைப் புகுத்திக் கொண்டிருக்கின்றன.

இயல்பாகவே, மிகப் பெரும்பான்மையான மக்கள் மீது சிறுபான்மையோரின் சர்வாதிகாரத்தை மறுபடியும் ஏற்படுத்துவதற்காக விடாப்பிடியாக முயற்சிகளைச் செய்யும் தூக்கியெறியப்பட்ட சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நசுக்கவும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இந்த அம்சமானது, தங்களுடைய ஆட்சியைப் புதுப்பிக்கவும் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கித் திருப்பவும் எதிர்ப்புரட்சிகர முதலாளி வர்க்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒரு பதில் தான்.

* Karl Marx and Frederick Engels, *Selected Works* in three volumes, Vol. 2, Moscow, 1976, p. 189.

ஆனால் இந்த விஷயத்தில் கூட தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் பழிவாங்கும் மனோபாவத்தையோ அல்லது தான்தோன்றித்தனமான ஆட்சி மற்றும் சட்டம் ஒழுங்கற்றத் தன்மையையோ அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆட்சியதிகாரத்திற்கு வந்ததும் தொழிலாளி வர்க்கம் உறுதியான புரட்சிகரமான சட்ட ஒழுங்குமுறையை நிறுவுகிறது; குடிமக்கள், எல்லா நிர்வாக அமைப்புகள் ஆகிய இரண்டும் அதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கக் கோருகிறது. புரட்சிகர பலாத்காரமானது, சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதிகள் எந்த அளவிற்கு புதிய ஆட்சியதிகாரத்தின் வெற்றிக்குக் கீழ்ப்பணியத் தயாராக உள்ளனர் என்பதை முழுக்கப் பொறுத்துள்ளது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கிய செயலானது விவசாயிகள், உழைக்கும் அறிவுஜீவிகள் ஆகியோருடனான கூட்டணியில் தொழிலாளி வர்க்கம் சமுதாயத்தின் அரசுத் தலைமையைச் செயலிலும் வெகுஜன சக்திகள் எல்லாவற்றையும் அணிதிரட்டி அவற்றை சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதை நோக்கித் திசை திருப்புவதிலும் அடங்கியுள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஒரு புதுவகையான ஜனநாயகம், மக்களின் உண்மையான அரசுரிமை, உழைக்கும் மக்கள் திரளினருக்கான மிக முழுமையான ஜனநாயகமாகும். ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரம் பலப்பிரயோகத்தில் மட்டுமோ அல்லது பிரதானமாயும் பலப்பிரயோகத்திலோ இல்லை. அதன் முக்கிய அம்சம் உழைக்கும் மக்களின் முன்னேறிய படைப்பிரிவின், அவர்களது முன்னணிப் படையின், அவர்களது ஏகத் தலைவனான பாட்டாளி வர்க்கத்தின் நிறுவன ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள் சோஷலிசத்தைக் கட்டுவது, சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருப்பதை ஒழிப்பது, சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் உழைக்கும் மக்களாக்குவது, மனிதனை மனிதன் எவ்விதத்திலும் சுரண்டுவதற்கான அடிப்படையை அகற்றுவது என்பதாகும்''* என்று லெனின் எழுதினர்.

தொழிலாளி வர்க்க ஆட்சியதிகாரமானது, பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மிக மேலானதாக

*வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 288.

இருந்த முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிசப் புரட்சி உறுதியாக நீடித்திருப்பதைச் சாத்தியமாக்கியது, சோவியத் யூனியனின் மக்களினங்களுக்கு எல்லா சிரமங்களையும் வெற்றி கொள்ளவும் விஞ்ஞான தொழில்நுணுக்க மற்றும் கலாச்சார முன்னேற்றத்தின் உச்சியை அடையவுமான சாத்தியப்பாட்டை வழங்கியது.

தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஒரு வரலாற்று வகையினமாகும். வளர்ச்சியுற்ற சோஷலிசம் கட்டப்பட்ட பிறகு, மக்கள் தொகையில் எல்லாப் பிரிவினர்களும் தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் நிலைகளை ஏற்றுக் கொண்ட பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகத் தோன்றியிருக்கும் சோவியத் அரசு பொது மக்கள் அரசாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்த நிலைமைகளிலும் கம்யூனிசத்தைக் கட்டுவதில் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய முன்னணிப் பங்கைத் தக்க வைத்துள்ளது.

சோஷலிச சமுதாயத்தில் தலைமை தாங்கி வழிநடத்தி அணிதிரட்டும் சக்தியாக மார்க்சிய-லெனினிய கம்யூனிஸ்டுக் கட்சி இருக்கிறது. சோவியத் யூனியனில் உள்ள வளர்ச்சியுற்ற சோஷலிசத்தின் நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சி அனைத்து மக்களுடைய கட்சியாகிவிட்ட பொழுது, அது தன்னுடைய வர்க்கத் தன்மையை ஒரு போதும் இழப்பதில்லை. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தன்மை தொழிலாளி வர்க்கக் கட்சியாகவே தொடர்ந்து இருக்கிறது. 1976—1980ம் வருடங்களின் போது ஒன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள். இந்த வருடங்களின் போது கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இது 59 சதவிகிதம் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசில் சுட்டிக் காட்டப்பட்டது. இது சரியானதே. சோவியத் சமூக வாழ்க்கையில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையான பாத்திரத்தின் பிரதிபலிப்பு இது.

மார்க்சிய-லெனினிய கட்சியின் தலைமை இல்லாது சோஷலிசத்தைக் கட்டுவது சாத்தியமில்லை. உண்மையில் ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி அதாவது கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமே, பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒட்டு மொத்தமாக உழைக்கும் மக்கள் திரளினரின் ஒரு முன்னணிப்

படையை ஐக்கியப்படுத்தி பயிற்றுவித்து ஒழுங்கமைக்க வல்ல தாக இருக்கிறது. இந்த முன்னணிப் படை மட்டுமே மக்கள் திரளினரின் தவிர்க்க முடியாத குட்டி முதலாளித்துவ ஊச லாட்டங்களையும் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் குறுகிய தொழில்வாதம் அல்லது தொழில் தப்பெண்ணங்களின் தவிர்க்க முடியாத மரபுகளையும் திரும்புதல்களையும் எதிர்த்து நிற்க வல்லதாக இருக்கும். அது மட்டுமே ஒட்டு மொத்த மாக பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட எல்லா நடவடிக் கைகளையும், வழிநடத்திச் சென்று அதாவது அரசியல் ரீதியாக அதை இட்டுச் சென்று அதன் மூலம் ஒட்டு மொத்த மாக உழைக்கும் மக்கள் திரளினர் எல்லோரையும் வழி நடத்த வல்லதாக இருக்கும்.''*

சோஷலிச சமுதாயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்களை ''நவீன மார்க்சியவாதிகள்'' இரு வழிகளில் தாக்குகின்றனர். முதலில் உள்ளுக்குள்ளேயே தொழிலாளி வர்க்கக் கட்சியைப் பலவீனப்படுத்த, உள்கட்சி ஐக்கியத்தை அழிக்க, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டைக் கைவிடும்படி கட்சி உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்த முயற்சி கள் செய்யப்படுகின்றன. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு கட்சிக்குள் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமைக்கான கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால்,குட்டி முதலாளித்துவ உட்குழுக்களையும் கோஷ்டி களையும் அவற்றின் சொந்த சித்தாந்த மற்றும் அரசியல் அரங்குகளுடன் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சிக்குள் சுதந் திரமாக இருக்க அனுமதிக்கும் உள்கட்சிப் பன்மைவாதத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமைக்காகக் கோரிக்கை கள் வைக்கப்படுகின்றன. இந்தக் கோரிக்கைகளை ஏற்ப தானது கட்சியை உட்குழுக்களாகப் பிரிப்பதற்கு இட்டுச் செல்லும், பாட்டாளி வர்க்க உணர்விற்கு ஏற்ப சமுதாயத் துக்குத் தலைமை தாங்க இயலாததாக்கும்.

ஜனநாயக மத்தியத்துவம் ஒவ்வொரு கட்சி உறுப்பின ரின், ஒவ்வொரு கட்சி ஸ்தாபனத்தின் அதிகமான செயல் மற்றும் முன்முயற்சிக்கான தேவையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் ஜனநாயகத் தன்மை மத்தியத்து வத்துடன் இணைக்கப்பட வேண்டும், முன்முயற்சி ஒழுங்குடன்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 32, p. 246.

இணைக்கப்பட வேண்டும், கட்சிக் கொள்கையின் எல்லாப் பிரச்சினைகளையும் விவாதித்து முடிவெடுக்கும் மறுக்க முடியாத உரிமை ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகளை அமுலாக்கும் கடமையுடன் இணைக்கப்பட வேண்டும். விரிவான உள்கட்சி ஜனநாயகம், கட்சி வாழ்க்கையின் எந்தப் பிரச்சினையையும் விவாதிப்பதில் கருத்துச் சுதந்திரம், பெரும்பான்மையோரின் விருப்பத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா முடிவுகளையும் நிறைவேற்ற வேண்டிய கண்டிப்பான கடமை, உட்குழுவாதத்தையும் உறவுவாதத்தையும் அனுமதிக்க முடியாத தன்மை—இவைதான் மார்க்சிய-லெனினியக் கட்சியின் விதியாகும். ''போராட்டம் இல்லாமல் பெரும்பான்மையோரின் சித்தத்தை நிறைவேற்ற முடியாது, பெரும்பான்மையோரின் சித்தத்தை நிறைவேற்றாமல் கட்சி உணர்வைப் பற்றி அல்லது பொதுவாக ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் நடவடிக்கையைப் பற்றிப் பேசுவது கூடப் பயனற்றது''* என்று லெனின் எழுதினார்.

மார்க்சியத்தின் விமரிசகர்களின் கருத்துப்படி, கட்சிக்குள் இருந்து கொண்டே கட்சியைப் பலவீனப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு போக்கானது கட்சியின் முன்னணிப் பங்கிற்கு எதிரான நடவடிக்கைகளின் மற்றொரு வடிவத்திற்கான அடித்தளத்தைத் தயாரிக்க வேண்டும். கட்சியில் மக்களுக்கிருக்கும் நம்பிக்கையை அரித்தழிப்பதும் மக்கள் ஆட்சியதிகாரத்தின் எதிரிகள் ஒரு ''சட்டரீதியான'' அடிப்படையில் ஐக்கியப்படக் கூடிய எதிர்க்கட்சிகளையும் பிற அரசியல் ஸ்தாபனங்களையும் கட்சியுடனேயே அமைப்பதன் மூலம் அதன் முன்னணிப் பங்கைப் பறிப்பதும் அந்த நடவடிக்கைகளின் குறிக்கோளாக இருக்கும்.

சோஷலிசத்தின் கீழ் எதிர்தரப்புச் சக்திகள் இருக்க வேண்டுவதன் அவசியத்தை நியாயப்படுத்துவதற்காக சிலர் லெனினைக் கூடச் சுட்டிக் காட்ட முயலுகின்றனர். ஆனால் ஒரே ஒரு கட்சி இருப்பதால் மட்டுமே சோஷலிசத்தைக் கட்டுவது சாத்தியம் என்று ஒருபோதும் லெனின் கூறவில்லை. உண்மையில் இந்தப் பிரச்சினையில் அவருடைய அணுகுமுறையானது எதார்த்தத்தின் எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்ட ஸ்தூலமான வரலாற்றுப் பூர்வமானதாக இருந்தது. ஒரு சமூக அமைப்பின் ஜனநாயகத் தன்மை

* V. I. Lenin, *Collected Works*, Vol. 20, p. 539.

அந்தச் சமுதாயத்திலிருக்கும் கட்சிகளின் எண்ணிக்கையால் நிர்ணயிக்கப்பட வேண்டுவது அவசியமில்லை. சில கட்சிகள் இருக்கும் பல நாடுகளை நாம் அறிவோம். அங்கே அப்படி சில கட்சிகள் இருப்பதானது எந்த விதத்திலும் மிக மோசமான பிற்போக்கின் ஆதிக்கத்தைத் தடுப்பதில்லை. இந்த விஷயம் இந்தக் கட்சிகளின் சமூகத் தன்மையையும் செயல் திட்டத்தையும் அவை செயல்பட்டுக் கொண்டிருக்கும் சமூக அமைப்பையும் பொறுத்திருக்கிறது.

சோஷலிசத்தைக் கட்டுவதில் மார்க்சியக் கட்சியின் முன்னணிப் பங்கை லெனின் எப்பொழுதும் வலியுறுத்தினார். உழைக்கும் மக்களின் முதல் அரசில் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னணிப் பங்கைக் குறைத்து மதிப்பிடவும் அரித்தழிக்கவும் செய்யும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்து அவர் உறுதியாகப் போராடினார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் காலகட்டத்தின் போது சில கட்சிகள் வெற்றிகரமாக ஒத்துழைப்பது சாத்தியம் என்பதை சில சோஷலிச நாடுகளின் அடுத்து வந்த வரலாற்று நடைமுறை காட்டியது. ஆனால் இந்த விஷயத்தில் கூட கம்யூனிஸ்டுக் கட்சி தன்னுடைய முன்னணிப் பங்கைத் தக்க வைத்துக் கொள்ளுகிறது, கம்யூனிஸ்டு அல்லாத கட்சிகள் அதை ஆதரித்து ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் ஒத்துழைக்கின்றன.

எதிர்தரப்புக்கட்சிகளை அங்கீகரிக்க வேண்டும் என்று திருத்தல்வாதிகள் வலியுறுத்துவதைத் தவிர கம்யூனிஸ்டுக் கட்சியும் பிற வெகுஜன ஸ்தாபனங்களும் ''சம பங்காளியாக'' இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர், அல்லது அவை ''சுயேச்சையாக'' இருப்பதை, அதாவது கட்சியின் கண்காணிப்பிலிருந்து விலகிக் கொள்ளுவதை வலியுறுத்துகின்றனர். இந்த ஸ்தாபனங்களின் ''பங்கை உயர்த்துதல்'', ''மக்கள் திரளினரின் செயலை ஊக்குவித்தல்'' என்ற வாய்வீச்சு கோஷத்தின் மூலம் இவையெல்லாம் முன்வைக்கப்படுகின்றன.

கட்சியின் தலைமையானது, தொழிற்சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள், பிற வெகுஜன ஸ்தாபனங்களின் பங்கைக் குறைப்பதில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இந்த ஸ்தாபனங்கள் சோஷலிச நாடுகளில் தங்களுடைய செயல்

களை வளர்ப்பதற்காக அளப்பரிய உரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் அனுபவிக்கின்றன. எந்த முதலாளித்துவ நாட்டிலும் இவற்றைக் கற்பனை செய்யக் கூட முடியாது.

சாரத்திலும் நோக்கத்திலும் தொழிலாளி வர்க்கம், எல்லா உழைக்கும் மக்கள் ஆகியோரின் மிக உன்னதமான அரசியல் ஸ்தாபனமாக இருப்பதால் கம்யூனிஸ்டுக் கட்சி உழைக்கும் மக்கள் வெகுஜன ஸ்தாபனங்களின் அமைப்பிற்குள் ஒரு சிறப்பான பங்காற்றுகிறது. பிற ஸ்தாபனங்களின் இடத்தைக் கைப்பற்ருமல் அவற்றை இயக்குவது கட்சியின் பணியாகும். விஞ்ஞான ரீதியாக அடிப்படையிடப்பட்ட தன்னுடைய கொள்கையால் கட்சியானது அவைகளுக்குச் சரியான திசைவழியைக் காட்டி பொதுக் குறிக்கோளை அடைவதற்கு அவற்றின் முயற்சிகளை ஐக்கியப்படுத்துகிறது.

1968ல் செக்கோஸ்லொவாக்கியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வெகுஜன ஸ்தாபனங்களுக்குக் கட்சியிலிருந்து ''சுதந்திரம்'' வழங்கப்பட வேண்டும் என்ற திருத்தல்வாதக் கோரிக்கையின் அர்த்தத்தை நடைமுறையில் காட்டின. ''புதிய தொழிற்சங்கக் கொள்கை'' என்ற கோஷத்தின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பங்கை நீக்குவதையும் தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்தை அரித்தழிப்பதையும் குறிக்கோளாகக் கொண்ட ஒரு கொள்கை தொடரப்பட்டது; சோஷலிசத்தின் கீழ் தொழிற்சங்கங்களின் ஸ்தாபன மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான லெனினியக் கோட்பாடுகள் மறுக்கப்பட்டன, அதைப் போலவே சோஷலிசப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான அவற்றின் பொறுப்பும் மறுக்கப்பட்டது. வலதுசாரி சந்தர்ப்பவாத சக்திகள் தேசிய முன்னணியை செக்கோஸ்லொவாக்கியாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை அங்கீகரிக்காத ஒரு அரசியல் கூட்டாக மாற்ற முயற்சித்தன. அதே நேரத்தில் செக்கோஸ்லொவாக்கியாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிலிருந்த வலதுசாரி சக்திகள், ஏகாதிபத்திய கேந்திரங்களுடன் இணைக்கப்பட்ட, கம்யூனிஸ்டுகளை ஒதுக்குவதைக் குறிக்கோளாகப் பகிரங்கமாக அறிவித்த வெளிப்படையான சோஷலிச எதிர்ப்பு ஸ்தாபனங்கள் செயல்படுவதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்கின.

இவ்வாருக, முக்கியமாக கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எதிராகக் குறிவைக்கப்பட்ட வலதுசாரி திருத்தல்வாதிகளின் தாக்கு

தல்கள் செயலளவில் ஒட்டு மொத்தமாக சோஷலிச அரசிற்கு எதிராக ஏவப்படுகின்றன. நடைமுறையில் அவர்களுடைய செயல்கள் சோஷலிச ஆட்சியதிகாரத்தின் முழு அமைப்பையும் கவிழ்ப்பதற்குத் திட்டமிடப்பட்டவையாகும்.

பொருளாதாரத் துறையில் ''நவீன மார்க்சியம்'', சோஷலிசப் பொருளாதாரத்தைப் பரவலாக்கி அதை ''மார்க்கெட் சோஷலிசத்தை'' நோக்கித் திருப்புதல் என்ற கோஷத்தின் கீழ் வெளிவருகிறது. ஓ.ஷிக் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட ''செக்கோஸ்லொவாக்கிய சோஷலிசத்தின்'' முன்மாதிரி இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அரசு சொத்தான உற்பத்திச் சாதனங்களைக் கலைத்து அவற்றை உற்பத்தி நிறுவனங்களுக்கு மாற்ற இந்த முன்மாதிரி முன்னூகித்தது. பொருளாதாரத்தில் அரசின் தலைமையானது ''நேரடி உற்பத்தியாளர்களின் நேரடி உற்பத்தி ஜனநாயகத்தால்'' மாற்றீடு செய்யப்பட வேண்டியிருந்தது. தேசிய பொருளாதாரத்தில் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்தைக் கைவிடுவதையும் பொருளாதார வளர்ச்சியின் தலைமையிலிருந்து கட்சியை நீக்குவதையும் இது உணர்த்தியது.

உற்பத்தி நிறுவனங்களை உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களாக மாற்றுவது என்பது மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்ட முறையைக் கலைத்துவிட்டு, தன்னியல்பான மார்க்கெட் செயலை அதனுடைய எல்லா எதிர்மறை விளைவுகளுடன் வளர்ப்பது என்று அர்த்தம். தொழில் நிலையங்களுக்கு இடையே போட்டியை அது உண்டாக்கியிருக்கலாம். இந்தப் போட்டி வளர்கையில் தொழில் நிலையங்களில் பலவற்றின் செயல்படுவதும் இருப்பதும் கூட அச்சுறுத்தப்பட்டிருக்கலாம். மேலும் பொருளாதாரக் கொந்தளிப்புகளுக்கு உதாரணமாக, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் ஏற்றம், வர்த்தகச் சூதாட்டம் இதரவைகளுக்கு அது இட்டுச் செல்லலாம்.

மொத்தத்தில், ஷிக்கினுடைய முன்மாதிரியானது தொழிலாளர்களின் ஐக்கியத்தைக் குலைப்பது, உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினரின் நிலையை மோசமாக்குதல், சோஷலிசத்தைக் கட்டுவதில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தல், நாட்டிற்குள் சமூக முரணியல்புகளை அதிகமாக்கல் என்பதாகும்.

உற்பத்தித் துறையில் உறவுகளை ஜனநாயகப்படுத்தாமல்

சோஷலிசம் என்பது சாத்தியமில்லை. சோஷலிச நாடுகள் மத்தியப்படுத்தப்பட்ட அரசுத் தலைமையை உற்பத்தி நிறுவனங்களில் உழைக்கும் மக்களின் முன்முயற்சி, படைக்கும் செயலூக்கம் ஆகியவற்றின் மிக அதிகமான வளர்ச்சியுடன் இணைக்கும் கோட்பாட்டை நடைமுறையில் அமுலாக்குகின்றன. சோஷலிச அரசுகளில் தொழில் நிலையங்கள் உற்பத்திச் செயல், உழைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிக்கும் பரந்த உரிமைகளை அனுபவிக்கின்றன. அரசு கொள்கை, மொத்தமான சமுதாயத்தின் நலன்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப கட்சி, தொழிற் சங்கம், இளம் கம்யூனிஸ்டுகளின் சங்கம், உற்பத்தி மாநாடுகள், பொதுத் தொழிலாளர்களின் மாநாடுகள் இதரவை மூலம் தொழில் நிலையங்கள் எல்லா நடப்பு செயலை ஒழுங்கு படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் பங்கெடுக்கின்றன.

சோஷலிச உற்பத்தி முறை மேலும் முதிர்ச்சி அடைகின்ற பொழுது உற்பத்திச் சக்திகள் மேலும் வளரும் பொழுது விஞ்ஞான தொழில்நுணுக்க புரட்சி வளர்ச்சியடையும் பொழுது சோஷலிசப் பொருளாதார நிர்வாக அமைப்பு மேம்பாடடைகிறது. சோஷலிச நாடுகளில் சமீப ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இந்தப் பணி நிறைவேற்றப்படுகிறது. ஆனால் இந்த நடவடிக்கைகள் மத்தியப்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் நிர்வாகக் கோட்பாடுகளைப் பலவீனப்படுத்தும் எதையும் குறிப்பிடவில்லை, அவற்றிலிருந்து சிறிதளவு விலகிச் செல்வதையும் குறிப்பிடவில்லை. அதற்கு மாருக அவற்றை வலுப்படுத்தவும் இப்பொழுது இருக்கும் உற்பத்தி வளர்ச்சி மட்டங்களுக்கு இணங்க உசிதமான மத்தியப்படுத்தப்பட்ட திட்டங்கள், தொழில் நிலையங்களின் பொருளாதார முன் முயற்சிகள் ஆகியவற்றிற்கு நெகிழ்ச்சியான இணைதலை ஏற்படுத்தவும் அவை உள்ளன. இதெல்லாம் இன்றைய பொருளாதாரத்தில் ஜனநாயக மத்தியத்துவத்தைப் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை நடைமுறையில் அமுலாக்குவதாகும்.

''மார்க்கெட் சோஷலிசத்தைப்'' பற்றிய கருத்தோட்டங்களைப் பொறுத்த வரையில் அவை சோஷலிச உற்பத்தி முறையின் தன்மையுடன் சமரசப்படுத்த முடியாத முரண்பாடுடையவையாக உள்ளன. அவை மொத்த மக்கள்திரளின் சொத்தைக் கலைப்பதற்கு இட்டுச் செல்லும். அதன் விளை

வாக சோஷலிச அமைப்பின் அடிப்படைகளையே கவிழ்ப்பதற்கும் இட்டுச் செல்லும்.

''தேசிய வகை சோஷலிசத்தின்'' முன்மாதிரிகளின் ஒரு குணாம்சம் இயக்கத்தின் பொது நலன்களுக்கு, கம்யூனிஸ்டுகளின் சர்வதேச கடமைக்கு எதிராக தேசியச் சிறப்பியல்புகளை முன்னிறுத்துவதாகும்.

இன்று திருத்தல்வாதிகள் புரட்சிகர இயக்கங்களில் உள்ள தேசியப் பண்புக் கூறுகளைக் குறைத்து மதிப்பிடுவதற்காக லெனினையும் லெனினியவாதிகளையும் கண்டிக்கின்றனர். அதே நேரத்தில், தேசியக் காரணியின் பங்கை இறுதிவரையிலும் புரிந்து கொண்டு மார்க்சை ஆக்கபூர்வமாகத் தொடர்பவர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்ளுகிறார்கள்.

இதெல்லாம் புதிய பேச்சல்ல. ஏற்கெனவே கம்யூனிஸ்டுகள் ஐம்பது—அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக, இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளிடமிருந்தும் தங்களுடைய சொந்த அணிகளில் இருந்த வலதுசாரித் திரிபுவாதிகளிடமிருந்தும் கேட்டவையே.

எதார்த்தத்தில், மார்க்சியத்தில் தேசியப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை லெனின் வெளிப்படுத்தியது போல் அல்லது அவ்வளவு உயர்த்தியது போல் யாரும் எக்காலத்திலும் செய்யவில்லை.

அப்படியிருக்க, நவீன சந்தர்ப்பவாதிகளின் ஆன்மீக மூதாதையர்களான இரண்டாவது அகிலத்தின் சமூக-ஜனநாயகத் தலைவர்கள், ஒடுக்கப்பட்ட தேசங்களின் கலாச்சார சுயாட்சி உரிமையை அங்கீகரிப்பதற்கு அப்பால் செல்லவில்லை. அதே சமயம் பிரிந்து சென்று தங்களுடைய சொந்த அரசுகளை அமைப்பதற்கான உரிமை உள்ளிட்ட தேசங்களின் சுய-நிர்ணய உரிமையைப் பற்றிய மிக முக்கியமான தத்துவக் கூறை லெனின் முன்வைத்தார். மார்க்சிய-லெனினியவாதிகள், சோஷலிச அரசுகள், தேசிய விடுதலை சக்திகள் ஆகியோர்களின் வளைந்து கொடுக்காத முயற்சிகளின் காரணத்தால் இந்தத் தத்துவக் கூறு இன்று சர்வதேசச் சட்டத்தின் ஒரு பிரதான கோட்பாடாகியிருக்கிறது.

காலனி ஆதிக்க நுகத்தடியிலிருந்து மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்தின் போர்த்தந்திரத்தை உருவாக்கி அமுலாக்கிய வரலாற்றுப் பெருமை லெனினையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் சாரும்.

மூலதனத்தின் நுகத்தடியிலிருந்து உழைக்கும் மக்களை விடுவிக்கப் போராடும் பொழுது அந்தந்த தேசியச் சிறப்பியல்புகளை மிகத் துல்லியமாக மதிப்பிடவும் சோஷலிசத்தின் வெற்றியைக் கொணர்வதற்காக இந்தச் சிறப்பியல்புகளை மிக அதிக அளவு பயன்படுத்தவும் கற்றுத் தந்தவர் லெனின் தான்.

தேசியப் பிரச்சினையானது, இயக்கத்தின் பிரதான நோக்கத்தின் கோணத்திலிருந்து, அதாவது சோஷலிசத்திற்கான போராட்டத்தின் கோணத்திலிருந்து கருதப்பட வேண்டும் என்று மார்க்சிய-லெனினியம் இடையறாது வலியுறுத்தியிருக்கிறது. சோஷலிசம் மட்டுமே எல்லா தேசிய சமத்துவமின்மையையும் முழுமையாகவும் இறுதியாகவும் நீக்கும். அதைப் போல மக்களின் தேசிய விடுதலையும் எந்த நாட்டிலும் சோஷலிசத்தைக் கட்டுவதற்கு முழுக்க இன்றியமையாததாக இருக்கிறது.

லெனினோ, லெனினிய கம்யூனிஸ்டுகளோ தேசியப் பிரச்சினையை ஒருபொழுதும் ஒரு குறிப்பிட்ட மக்களினத்தின் விஷயமாக மட்டுமே கருதியதில்லை. அது எல்லா மக்களினங்களையும் பொறுத்த விஷயம், முக்கியமாக, அதனுடைய அரசியல் முன்னணிப் படையின் கீழ் செயல்படுகிற உலகத் தொழிலாளர்களின் சகோதரத்துவத்தைப் பொறுத்த விஷயம். இது புரிந்து கொள்ளப்படவில்லையெனில் தேசியப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு இருக்க முடியாது.

அர்ஜென்டீனுவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூத்த தலைவரான ரொடால்ஃபோ கியோல்டி பின்வருமாறு கூறினுர்: ‘‘புரட்சி மற்றும் சோஷலிசத்தின் பொது விதிகள் ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தூலமான தேசிய நிகழ்வுகளின் மூலம் செயல்படுகின்றன. ஆனுல் சில சூழ்நிலைமைகளில் அவை பயன்படக் கூடியவை அல்ல என்று கூறுவது தவறு. கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை தேசிய தனிச்சிறப்பியல்புகளைப் புறக்கணிக்கவில்லை; ஆனுல் அது ஒரு நாட்டிற்குப் பொருத்தமாக இருக்கும் மற்றொரு நாட்டிற்குப் பொருத்தமாக இருக்காது என்று அதனுடைய ஆசிரியர்கள் ஒருபொழுதும் கருதியதில்லை.’’*

---

* *International Meeting of Communist and Workers' Parties, Moscow, 1969*, Prague, 1969, p. 339.

பொது விதிகள் தேசிய வளர்ச்சியில் மிக முக்கியமான, தீர்மானகரமான காரணியை உருவாக்குகின்றன. குறிப்பிட்ட ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஸ்தூலமான நிலைமையைப் பகுத்தாய்வதில் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் அவற்றை முதலில் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன. இந்த அணுகு முறை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வலிமையையும் மேலான தன்மையையும் தெளிவாக நிறுவுகிறது. பொது விதிகளைப் புறக்கணித்தலானது அரசியல் தொலை நோக்கைக் கைவிடுவதற்கும் பெரும் தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் இட்டுச் செல்லுகிறது.

இறுதியில், வெளிப்படையான சோஷலிச விரோதிகளுடன் திருத்தல்வாதிகள் கூட்டுச் சேர்வதற்கான அடித்தளத்தைத் தேசியவாதம் தான் அடிக்கடி அமைக்கிறது. வறட்டுச் சூத்திரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற வேடத்தில் ''தேசிய கம்யூனிசத்தை'' ஆதரிப்பவர்கள் செயலளவில் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஐக்கியம், விஞ்ஞான சோஷலிசத் தத்துவம் ஆகியவற்றை எதிர்க்கின்றனர். வெளிப்படையான பிற்போக்கானது, திருத்தல்வாதிகளின் கோஷத்தினுடைய அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு தயக்கமின்றி அதை ஏற்றுக் கொள்ளுகிறது, பிற சோஷலிச நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட ''தேசிய சோஷலிசத்தின்'' அனுகூலங்களைப் புகழ்கிறது.

இருப்பினும், ஒரு ''தேசிய'' மார்க்சியமோ அல்லது ஒரு ''தேசிய'' சோஷலிசமோ ஒருபொழுதும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. அதே போல அடிப்படையில் பிறவற்றிலிருந்து வேறுபடும் ''ஐரோப்பிய'', ''ஆசிய'' மற்றும் ''லத்தீன் அமெரிக்க'' கம்யூனிசம் இருக்க முடியாது. மார்க்சிய-லெனினியத்தின் பொதுக் கோட்பாடுகளை ஒரு குறிப்பிட்ட நாட்டின் விசேஷ நிலைமைகளுக்கிணங்க எப்படிப் பயன்படுத்துவது என்பது இன்றைய உண்மையான பிரச்சினையாகும்.

சோஷலிசமானது எல்லா நாடுகளிலும் பின்வரும் அடிப்படையான பொதுவான கூறுகளைப் பெற்றிருக்கிறது: தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பங்குடன் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம், சமூக வளர்ச்சியில் மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமை; உற்பத்திச் சாதனங்களின் சமூகவுடைமை, அதன் அடிப்படையில் ஒட்டு மொத்தமாக மக்

களின் சேம நலத்தின் அக்கறையில் திட்டமிட்ட தேசியப் பொருளாதார வளர்ச்சி; ''திறமைக்கு ஏற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்!'' என்ற கோட்பாட்டை அமு லாக்குதல்; விஞ்ஞான கம்யூனிச சித்தாந்தத்தின் உணர்வில், உலகம் முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களுடன் தோழமை உணர்வில் மக்களுக்குக் கல்வி அளித்தல்; பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் ஓர் அயல்நாட்டுக் கொள்கை ஆகியவை.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர்களால் கண்டு பிடிக்கப்பட்டு உறுதியாக நிலைநாட்டப்பட்ட இந்தக் கோட் பாடுகள் இல்லாமல் எந்த நாட்டிலும் சோஷலிசத்தைக் கட்ட முடியாது. ஆனால் புதிய சமுதாயத்தைக் கட்டும் முறைகளும் வடிவங்களும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. அரசு அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் ஒரு கட்சி பங்கேற்கிறதா அல்லது சில கட்சிகள் பங்கேற்கின்றனவா என்பதோ, உற்பத்திச் சாதனங்களைச் சமூகமயமாக்குதல் என் பது அவற்றைப் பறிமுதல் செய்வதன் மூலமாக நிறை வேற்றப்படுகிறதா அல்லது அவற்றின் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படுவதன் மூலம் நிறைவேற்றப்படுகிறதா என்பதோ, விவசாயம் ஏதாவது ஒரு கூட்டுறவு வடிவத்தில் மறு ஒழுங்கமைக்கப்படுகிறதா இதரவைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் விசேஷ வர்க்க, தேசிய மற்றும் அரசுப் பண்புக் கூறுகளைப் பொறுத்துள்ளன. ஆனால் இவையெல் லாம் எல்லா நாடுகளிலும் ஒரே விதிகளுக்கு ஏற்ப வளர்ச்சி யடைந்து கொண்டிருக்கும் ஒரே ஒரு கட்டுக்கோப்பிற்குள் ளான பொது நிகழ்ச்சிப்போக்கின் தனிச்சிறப்பியல்புகளா கும்.

''எல்லா நாடுகளும் சோஷலிசத்துக்கு வந்து சேரும், அது தவிர்க்க முடியாதது. ஆனால் அவை அனைத்தும் ஒரே மாதிரியான வழியில் வந்து சேரப் போவதில்லை. அவை ஜன நாயகத்தின் ஏதாவதொரு வடிவத்துக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஏதாவதொரு ரகத்துக்கு, சமூக வாழ்க் கையின் வெவ்வேறு அம்சங்களில் சோஷலிச மாற்றங்களின் வேக அளவுக்கு தமக்குச் சொந்தமான ஏதாவதொரு பங் கைக் கொடுக்கும்''* என்று வி.இ. லெனின் எழுதினர்.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 23, pp. 69-70.

முதலாளி வர்க்கத்திற்குள்ள முரண்பாடுகளின் கூர்மை அதைத் துண்டுதுண்டாக்கியபோதிலும், எங்கெல்லாம் புரட்சிகரமான செயல்களை நசுக்குதல் அல்லது சோஷலிசத்திற்கு எதிராகப் போராடுதல் என்ற பிரச்சினை தோன்றுகிறதோ அங்கெல்லாம் அது ஐக்கியமாகச் செயல்படுகிறது என்பதைக் கம்யூனிஸ்டுகள் மறக்க மாட்டார்கள். தங்களுடைய பொது ஏகாதிபத்திய நோக்கங்களை அடைவதற்கான ஏகபோகவாதிகளின் ஒருமைப்பாட்டை, சோஷலிசத்தைப் பின்பற்றுகிறவர்கள் உழைக்கும் மக்களின் சர்வதேச ஒருமைப்பாட்டுடனும் தங்களுடைய அணிகளின் ஐக்கியத்துடனும் எதிர்க்கின்றனர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் தோன்றிய புதிய வரலாற்று நிலைமைகள், எல்லாவற்றிற்கும் மேலாக உலக சோஷலிச அமைப்பு உருவானது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தின் உள்ளடக்கத்தை ஆழப்படுத்தியுள்ளன. இன்று, பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் என்றால்:

—சோஷலிசக் கூட்டமைப்பின் பலத்தை, செல்வாக்கை, ஐக்கியத்தை வலுவாக்குவதிலும் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டுவதற்கான சாதகமான நிலைமைகளை அளிப்பதிலும் சர்வாம்ச உதவி என்றும்;

—மார்க்சிய-லெனினிய அடிப்படையில் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஐக்கியத்தை வலுவாக்கல், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் முழுவதிலும் அதன் பங்கை மேலும் உயர்த்துதல் என்றும்;

—தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு, தேசிய விடுதலை பெற்ற நாடுகளுடன் சர்வாம்ச ஒத்துழைப்பு, எல்லா கண்டங்களிலுமுள்ள மக்களினங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியைப் பலப்படுத்துவதில் சர்வாம்ச உதவி என்றும்;

—முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் திரளினர் ஆகியோர் வர்க்க ஒடுக்குதல் எந்த வடிவத்திலிருப்பினும் அதற்கு எதிராகச் சுதந்திரத்திற்காகவும் சோஷலிசத்திற்காகவும் தொடுக்கும் போராட்டத்தில் அவர்களுடன் சோஷலிச அரசுகளின் மக்களினங்களின் புரட்சிகர ஒருமைப்பாடு, சர்வதேசியவாத ஐக்கியம் ஆகியவற்றை வலுவாக்கல் மற்றும் விரிவாக்கல் என்றும் அர்த்தம்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் என்பது இன்று வரை சோவியத் யூனியன், இதர சோஷலிச நாடுகளின் நலன்களை மட்டுமே கணக்கில் எடுத்திருக்கிறது, இப்பொழுது சோஷலிசத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் புதிய சக்திகள் சோஷலிசக் கூட்டமைப்பிற்கு வெளியே வளர்ந்திருக்கின்றன, ஆகவே அவற்றின் நலன்களும் மொத்தப் போராட்டத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திற்கு ''விரிவான'' விளக்கம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறவர்களின் கருத்துக்கள் முற்றிலும் தவறானவையாகும்.

ஆனால் புரட்சிகர இயக்கத்தின் ஏதாவது ஒரு பகுதியை ஆதரிப்பதாக சர்வதேசியவாதத்தைக் குறைத்தது யார்? எப்பொழுது குறைத்தார்கள்? எல்லா நாடுகளிலுமுள்ள புரட்சிக்காரர்கள், கம்யூனிஸ்டுகளின் ஐக்கிய நடவடிக்கைகள் இயக்கம் முழுவதற்கும் சேவை செய்கின்றனவே தவிர அதனுடைய பகுதிகளில் ஏதாவது ஒன்றிற்கு மட்டும் சேவை செய்யவில்லை என்ற உண்மையில் சர்வதேசியவாதத்தின் வலிமை அடங்கியிருக்கிறது.

சோஷலிசத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் எல்லா சக்திகளும் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன, ஒரு படையின் வெற்றி அல்லது தோல்வி போராட்ட முன்னணியின் முழு நிலைமையையும் பாதிக்கிறது.

சோஷலிச நாடுகளின் மக்களினங்கள் முதலாளித்துவ நாடுகளில் உள்ள புரட்சிகர இயக்கத்தின் வெற்றியில் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். சிரமமான நிலைமைகளில் செயல்பட்டுக் கொண்டு அந்த இயக்கமானது சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவற்றிற்காகச் செயலூக்கமான நடவடிக்கைகளுக்கு எல்லா உழைக்கும் மக்களையும் எழச் செய்கிறது.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் வெற்றிகள் சோஷலிச அரசுகளின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையிலுள்ள சாதனைகளுடன் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே ஒரு சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றியிருக்கும் சில நாடுகள் இன்று உலகப் புரட்சிகர இயக்கம் முழுவதின் காப்பரணாக, முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தின்

பிரதான சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கும் காப்பரணுக விளங்குகின்றன என்ற வகையில் உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கு வளர்ந்திருக்கிறது. சோஷலிச நாடுகளில் எவ்வள வுக்கெவ்வளவு நிலைமைகள் நன்ருக இருக்கின்றனவோ அவ் வளவுக்கவ்வளவு புரட்சிகரப் போராட்ட வீரர்களின், உலக படையின் பிற பிரிவுகள் எல்லாவற்றின் வெற்றிகள் அதிக மாக இருக்கும்.

சோஷலிசத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் சக்தி கள் மிகப் பெருமளவில் ஒவ்வொரு இடத்திலும் வளர்ந்துள் ளன என்பதில் ஐயமில்லை. பூர்ஷ்வா அமைப்பு நிலவுகின்ற பல நாடுகளில் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பொது வாழ்வில் வலிமையான சக்தியாக உள்ளன. எனவே, தங் களுடைய அரசியல் போக்கை உருவாக்குதல், அமுல்படுத்து தல் மற்றும் தங்களுடைய சொந்த நாடுகளில் உள்ள நிலை மையையும் பிற அரசியல் சக்திகளுடனுன தங்களுடைய உறவு களையும் மிகக் கவனமாகக் கணக்கெடுத்தல் முதலிய பெரும் பொறுப்பு அக்கட்சிகளுக்கு உள்ளது. வேறு வார்த் தைகளில் சொன்னுல், சோஷலிசத்திற்கான போராட்டத் தின் பொது நலன்களுடன் தோழமைக் கட்சிகளின் தேசியப் பணிகளின் மிகவும் கவனமான ஒத்திசைவு இன்றுள்ள நிலை மைகளில் எப்பொழுதையும் விட அவசியமாக இருக்கிறது.

இடதுசாரி சக்திகளின் சாத்தியப்பாடுகள் மிக அதிகமாகி யிருப்பதால் இயக்கத்தின் பொதுப் பணிகளுக்கு, புரட்சிகர முன்னணியின் தீர்மானமான பகுதிகளைப் பற்றிய போராட் டத்திற்குக் கவனத்தைக் குறைக்காமல் இருப்பது மிகவும் முக்கியமானது, ஏனெனில் முழு இயக்கத்தின் எதிர்காலம் அந்தப் போராட்டத்தின் விளைவைச் சார்ந்திருக்கிறது.

தோழமைக் கட்சிகள் ஒரு பெரும் தேசிய சக்தியாகி யிருப்பதால் அவற்றின் சர்வதேச ஒருமைப்பாட்டை, பொது நோக்கங்களுக்கான போராட்டத்திலும் பொது விரோதி யான ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலும் அவற்றின் ஐக்கியத்தை வலுவாக்குவது குறிப்பாக முக்கி யத்துவமுடையதாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் மார்க்சிய-லெனி னியக் கோட்பாடுகளில் மிக முக்கியமான ஒன்ருகும். ''துர திர்ஷ்டவசமாக, செயலளவில் சர்வதேசியவாதம் என்பதில் ஒன்றுமில்லை என்ற விதத்தில் அதைப் பற்றி விளக்கம் கூற

சிலர் ஆரம்பித்திருக்கின்றனர். சர்வதேசியவாதத்தைக் கைவிட வேண்டும் என்று வெளிப்படையாக ஆலோசனை கூறுகிற மக்களும் கூட இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தில், மார்க்சாலும் லெனினாலும் மெய்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட சர்வதேசியவாதம் காலத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தைக் கைவிடுதல் என்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் பொதுவாக தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் வலிமையான, சோதிக்கப்பட்ட ஆயுதம் இல்லாமலாக்குவதாகும் என்று நாம் கருதுகிறோம்''* என்று தோழர் பிரேஷ்னெவ் கூறினார்.

திருத்தல்வாதம் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளைப் பிளக்கிறது. ''இடதுசாரி'', வலதுசாரி ஆகிய இரு திருத்தல்வாத செல்வாக்குகளும் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு அழிவை உண்டாக்குகின்றன. இரண்டும் தேசியவாதத்திற்கான சலுகைகளைக் குறிப்பிடுகின்றன, அதன் விளைவாக சோஷலிசத்தின் விரோதிகளின் நிலைகளுக்குப் பூர்ணமாக விட்டுக் கொடுத்து விடுவதற்கு இட்டுச் செல்லுகின்றன. அதனால் தான் திருத்தல்வாதத்திற்கு எதிரான போராட்டமானது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திற்கான போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது.

## பூர்ஷ்வா சித்தாந்த மற்றும் அரசியல் போக்குகளின் நெருக்கடி

எதார்த்தத்துக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுவதற்கான பூர்ஷ்வா சித்தாந்தத்தின் எந்தப் புதிய முயற்சிகளும், அவை எவ்வளவு மதிநுட்பமுடையதாக இருப்பினும், அதனுடைய பிரதான சாராம்சத்தை மாற்ற முடியாது: கம்யூனிச எதிர்ப்பு என்பது அதனுடைய மிக முக்கிய பகுதியாக, அதனுடைய போர்க்குணமிக்க கோட்பாடாகத் தொடர்ந்து இருக்கிறது. சோஷலிச அமைப்பிற்கு எதிரான அவதூறும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கை, நோக்கங்கள் ஆகியவற்றையும் மார்க்சிய-லெனினிய போதனையையும் பற்றித் திரித்துக் கூறுதலும் அதனுடைய உள்ளடக்கமாகும். அற்பவாதிகளை, மக்கள் தொகையில் அரசியல் ரீதி

* *Documents and Resolutions. XXVth Congress of the CPSU*, p. 37.

யாகவும் சித்தாந்த ரீதியாகவும் மிகவும் பிற்பட்ட பகுதியினர்களை உத்தேசித்துச் செய்யப்படுகின்ற தீவிரமான, வறட்டுத்தனமான கம்யூனிச எதிர்ப்பு இன்னும் நீடிக்கிறது. முதலாளித்துவ நாடுகளின் மஞ்சள் பத்திரிகைகள் சோஷலிசத்தைப் பற்றிய கற்பனைக் கதைகளை ஏராளமாக வெளியிடுகின்றன. பாசிசத்தைப் புகழ்ந்து சோஷலிச நாடுகளுக்கு எதிரான ''புனிதப் போருக்கும்'' அழைப்பு விடுகின்ற எல்லா விதமான ''நூல்களும்'' புத்தகக் கடை அலமாரிகளில் நிரம்பியிருக்கின்றன.

எனினும் கம்யூனிச எதிர்ப்பின் பிரதான சக்திகள் மார்க்சியத்திற்கும் சோஷலிசத்திற்கும் எதிரான புதிய நடைமுறைத் தந்திரங்களையும் மிக வளைந்து கொடுக்கும் முறைகளையும் மீண்டும் பிரித்தமைக்கும்படியும் தேடும்படியும் கட்டாயப்படுத்தப்படுகின்றன. நவீன கம்யூனிச எதிர்ப்பு மதிநுட்பமானது: ''ஜனநாயகச்'' சொல் நடையைப் பற்றி, ''பாரபட்சமற்ற'' செய்தி என்று சொல்லப்படுவதைப் பற்றி, முதலாளித்துவத்தை இன்னும் அழகாகக் காட்டுவதைப் பற்றி அது ஆராய்கிறது.

ஒன்றுக்கொன்று பொருந்தாத, முரண்பாடான கம்யூனிச எதிர்ப்புக் கூட்டிசையின் குரல்களுக்குப் பொதுவான அம்சம் ஒன்றுண்டு: பொதுவாக எல்லா கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்களும், சொத்தைப் பற்றிய பிரச்சினை, ஏதாவதொரு சமூக அமைப்பினுடைய வர்க்கத்தன்மை போன்ற இன்றைய பிரதானமான, தீர்மானமான பிரச்சினைகளை விவாதிப்பதைத் தவிர்த்து சமுதாயத்தில் அரசியல் மற்றும் சித்தாந்த மேல் கட்டுக்கோப்பினடியாகத் தோன்றிய பல்வகைக் காரணிகளைப் பற்றி விவாதிப்பதில் கவனத்தைக் குவிக்கின்றனர்.

இவையெல்லாம் உளவியல், தேசிய மற்றும் ஏனைய மனிதத் தனிச் சிறப்பியல்புகளைப் பற்றிய விஷயம், சமூக அமைப்பைப் பற்றியதல்ல என்று கூறுவதன் மூலம் அவர்களில் சிலர் அகவயப் பண்புக் கூறுகளை வற்புறுத்துகின்றனர். மற்றவர்கள் அது தொழில்நுணுக்க சாதனத்தைப் பற்றிய, மனிதன் மேல் அதனுடைய ஆதிக்கத்தைப் பற்றிய பிரச்சினை என்றும் அந்தச் சாதனம் சமூக உடைமையாக இருக்கிறதா அல்லது தனியார் உடைமையாக இருக்கிறதா என்பதைப் பற்றிய பிரச்சினையல்ல என்றும் நிரூபிக்க முயலுகின்றனர்.

இந்தக் கருத்து வேறுபாட்டை ஒழுக்கம் மற்றும் சட்ட வியல் துறைகளுக்குத் திருப்ப எடுக்கும் முயற்சிகளை மிகச் சமீப வருடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். இவ்வாறாக ''மனித உரிமைகளை'' காலில் போட்டு மிதிப்பதாகச் சொல்லப்படும் ''ஒழுக்கமில்லாத'' கம்யூனிசத்தைச் ''சட்டப் பூர்வத்தன்மை'' மற்றும் ''மனித சுதந்திரம்'' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக உரிமை கொண்டாடும் ''ஒழுக்கத்தை உடைய'' முதலாளித்துவம் எதிர்க்கிறது.

இந்தச் செயல் தந்திரங்களுக்குப் பின்னால் ஒரு காரணமிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் ''நுகர்வோர் சமுதாயத்தின்'' மனிதத் தன்மையற்ற இயல்பு மேலும் மேலும் தெளிவாகிக் கொண்டிருப்பதால், ஜனநாயக சுதந்திரங்கள், தனிநபர் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றிய பிரச்சினைகள் மிக அவசரமான இடத்தைப் பெறுகின்றன.

முதலாளித்துவம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ச்சியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு முதலாளித்துவ ஜனநாயகத்தின் பாசாங்குத் தன்மை தெளிவாகிறது. இது முதலாளித்துவ சமுதாயத்தில் மற்றொரு பிரிவினையாகும். இது தொழிலாளர்களை மட்டுமல்லாது பூர்ஷ்வா கட்சிகளுக்குப் பாரம்பரியமாகப் பெரும் ஆதரவை அளித்த அறிவுஜீவிகள், மாணவர்கள், மற்ற மத்தியதர வகுப்பினர் ஆகியோரையும் முன் எப்பொழுதையும் விட மிகவும் உணரத்தக்க விதத்தில் பாதிக்கும்.

இந்த வகுப்பினர் மத்தியிலும் சோஷலிசத்தின் கோட்பாடுகள் அதிகமான கௌரவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் நியாயமான தன்மையைப் பற்றி அபரிமிதமான சான்றுகளை வாழ்க்கை நிகழ்ச்சிகள் வழங்குகின்றன. எனவே, இன்றைய முதலாளித்துவத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் போர்த்தந்திரத்தின் ஒரு பெரும் நோக்கம் சோஷலிசத்தின் மனிதாபிமான சாரத்தைக் கறைப்படுத்துவதும் பூர்ஷ்வா ஜனநாயகத்தின் அழிந்துவரும் கௌரவத்தைப் புதுப்பிப்பதுமாகும்.

''உரிமைகள்'' மற்றும் ''சுதந்திரங்களைப்'' பற்றிய பிரச்சினைகளைச் சித்தாந்தப் போராட்டத்தின் முன்னணிக்குக் கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்கள் ஏன் கொண்டுவந்தார்கள் என்பதற்கு மற்றொரு காரணம் இருக்கிறது. கம்யூனிச எதிர்ப்

பின் வரலாருக இருக்கும் தோல்விகள் மற்றும் தவறுகளின் சங்கிலித் தொடரை நினைவு கூர்வதற்கு இது ஏற்ற இடமாகும்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபதுக்களில் முதலாளி வர்க்கம், ''போல்ஷிவிக் சோதனையானது'' அந்நிய குறுக்கீட்டின் விளைவாலோ அல்லது பொருளாதார அழிவு மற்றும் முற்றுகை ஆகியவற்றின் காரணத்தாலோ தவிர்க்க முடியாமலும் விரைவிலும் தோல்வியடையும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தது. முப்பதுக்களில் சோவியத் ஐந்தாண்டு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களும் தொழில்மயமாக்குதல், கூட்டுமயமாக்குதல் ஆகியவற்றைப் பற்றிய கொள்கையும் தோல்வியடையும் என்று நம்பியது. நாற்பதுக்களில் பாசிச ஜெர்மனிக்கு எதிரான போரில் சோவியத் யூனியன் தோற்கடிக்கப்படும் அல்லது போரின் விளைவால் நீண்ட காலத்திற்கு பல வீனப்படுத்தப்படும் என்று முதலாளி வர்க்கம் எண்ணியது. போருக்குப் பிந்திய காலகட்டத்தில் கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்கள் ''கெடுபிடிப் போரையும்'' அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார மற்றும் இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட ''சக்தி வாய்ந்த நிலையிலிருந்த கொள்கையையும்'' சார்ந்திருந்தனர். இந்த எல்லாக் காலகட்டங்களின் போதும், ஏகாதிபத்தியவாதிகள் மேலே கூறிய கணக்கீடுகளுக்கு ஏற்ப தங்களுடைய பிரச்சாரத்தைத் திட்டமிட்டனர்.

ஆனல் கடைசியில் சோவியத் யூனியன் ஓர் உலக வல்லரசாக தோன்றிவிட்டது. இன்று உலக அரசியலில் அது இல்லாமல் ஒரு முக்கியமான பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாது. அதே நேரத்தில் கம்யூனிஸ்டு எதிர்ப்புவாதிகளின் செயல்தந்திர கருத்தோட்டங்கள் ஒன்றன் பின் ஒன்ருக வீழ்ச்சியடைந்தன.

எல்லா அடிப்படைப் பிரச்சினைகளிலும் அவர்கள் தங்களுடைய நிலைகளை விட்டுக் கொடுத்து, ஏதாவது ஒரு வழியில் சோஷலிசத்தின் மாபெரும் ஜீவ சக்தியையும் பொருளாதார, கலாச்சார மற்றும் இராணுவத் துறைகளில் அதனுடைய சாதனைகளையும் அங்கீகரிக்க வேண்டியிருந்தது.

இன்று கூட கம்யூனிசத்தின் எதிரிகள், சோஷலிசத் தொழில்துறை, விவசாயம், நிர்மாணம், போக்குவரத்து, பிற பொருளாதாரத் துறைகளின் உண்மையான அல்லது

கற்பனையான பிரச்சினைகளைப் பற்றிப் பறைசாற்ற ஒரு சந்தர்ப்பத்தைக்கூடத் தவற விடுவதில்லை. ஆனால் இது மென் மேலும் சிரமமுடையதாகிக் கொண்டிருக்கிறது, குறிப்பாக முதலாளித்துவ உலகம் ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் தற்காலத்தில் மிகவும் சிரமமுடையதாக வுள்ளது.

எனவே, சோஷலிச வாழ்க்கை முறை மீதும் அதன் மூலம் மொத்தத்தில் சோஷலிச அமைப்பின் மீதும் அவதூறுகளை வீசும் நம்பிக்கையில் கம்யூனிச எதிர்ப்பாளர்கள் இந்த விவா தத்தை ஒழுக்க நெறிகள் மற்றும் சுதந்திரங்கள் ஆகிய தெளிவற்ற துறைகளின் பக்கம் திசை திருப்ப முயற்சிக் கின்றனர்.

எல்லா முறைகளும் ஒரே மாதிரியானவையே. அவை எல்லா வழிகளிலும் ஆட்சியதிகாரத்தின் தன்மையைப் பற்றிய அடிப்படைப் பிரச்சினையையும் சோஷலிச சமூகக் கட்டுக்கோப்பைப் பற்றிய பிரச்சினையையும் தவிர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டவை. ஏனெனில் இந்தக் காரணி களே சமூக உறவுகளின் ஒரு விசேஷ அடிப்படையை உரு வாக்குகின்றன. இது மட்டுமே தனிநபரின் உண்மையான சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் இட்டுச் செல்ல முடியும். சோஷலிசத்தின் கீழ் தனிநபரின் உண்மையான நிலையை மதிப்பிடக் கூடிய எவ்விதமான விவரங்களையும், அதாவது சமூக வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் உள்ள சமுதாயத் தின் எல்லா வகுப்பினருடைய தீவிர சமூக செயல்பாடு, கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம், பொது சுகாதாரம், சமூக சேம நலம் இதரவைகளில் பெரும் சாதனைகள் ஆகியவை சோஷ லிச சமுதாயத்தை மனிதகுலத்தின் முன்னணிப் படையாக மாற்றியிருக்கின்றன என்ற விவரங்களையும் மூடிமறைக்க சாத்தியமான ஒவ்வொன்றும் செய்யப்படுகிறது.

கம்யூனிச எதிர்ப்பாளர்கள் சோஷலிசத்தைக் குறை கூறு வதற்குத் தகுந்த விஷயம் கிடைக்காததால், தங்களுடைய சோஷலிஸ்ட் தாய் நாட்டிற்குத் துரோகமிழைத்த, ஒரு சில ஓடுகாலிகளின் போலித்தனமான அறிக்கைகளை ஆர்ப் பாட்டமாக ஆதரிக்க, சோவியத் யூனியனிலும் மற்ற சோஷ லிச நாடுகளிலும் மதத் துன்புறுத்தல் அல்லது தேசிய பார பட்சம் இருப்பதாகச் சொல்லப்படுகின்ற கட்டுக்கதைகளை மீண்டும் கூற, இன்னும் பிறவற்றில் நிர்ப்பந்திக்கப்படு கின்றனர்.

தவருகத் திரித்துக் கூறுவோர்கள் திறமையுடையவர் கள் என்பதையும் எல்லா வகையான குட்டிப் பிரச்சினைகள், சிறு குறைகள், சோஷலிச எதார்த்தத்தைப் பற்றிய இன்ன மும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஆகியவற்றைப் பற்றி நம்ப முடியாத கூச்சலைக் கிளப்புவதில் அவர்கள் நிபுணர்கள் என்பதையும் மறுக்க முடியாது.

ஆனல் அவர்கள் திணிக்க விரும்புகிற சமூகக் கண்ணேட்ட மானது உண்மையுடன் மிக மோசமாக முரண்படுகிற பொழுது எந்தத் தொழில் திறமையும் உதவ முடியாது. சமூக உடைமை மட்டுமே சமூக பாரபட்சத்தின் எல்லா வடிவங்களி லிருந்தும் மனிதகுலத்தை விடுவிக்க முடியும், சுதந்திரமான வளர்ச்சிக்கான எல்லையற்ற சந்தர்ப்பங்களை மனிதகுலத் திற்கு வழங்க முடியும், தனி உடைமையால் முடியாது என் பது உண்மையாகும். மனிதர்களின் சமூக விடுதலை மற்றும் சுதந்திரமான படைப்பாற்றல், செயல் ஆகியவற்றைப் பற்றிய பிரச்சினையைக் கம்யூனிசம் வெறும் சம்பிரதாய சட்ட ரீதியாக மட்டுமில்லாமல் சாராம்சத்திலும் எதிர்க்கிறது.

கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோஷலிச சமுதாயத் திலேயே தனிநபரை விடுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிலைமைகள், அதில் அடையப்பட்ட விளைவுகளை மிகவும் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகள் எதிலும் கனவு கூடக் காண முடியாது. சோஷலிச சமுதாயத்தில் தனிநபர் தன் னுடைய எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடையவராக இருக்கிருர். சோவியத் யூனியனின் அரசியல் அமைப்பு சட் டம், வாழ்க்கையின் ஆதாரங்களையே பாதிக்கும் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளின் ஒரு விரிந்த தொகுதியை வழங்கு கிறது; வேலை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, முதுமையில் பொருளாயதப் பாதுகாப்பு, குடியிருப்பு ஆகியவற்றிற்கான உரிமைகள் இவை. சோவியத் மக்கள் அரசியல் சட்டத்தால் உத்திரவாதமளிக்கப்பட்ட விரிவான அரசியல் மற்றும் சொந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கின் றனர். இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் சோஷலிச சமூக அமைப்பிற்கு எதிராகவும் மக்களுடைய நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கவும் பயன்படுத்தப்படக் கூடாது, பயன்படுத்தப் பட முடியாது. உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஏற்பவும் சோஷலிச அமைப்பை வலுவாக்குவதை நோக்கத்தில் கொண்டும் அரசியல் சுதந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

பிரஜாக் கடமைகளிலிருந்தும் தாய் நாட்டிற்குத் தகுதியான முறையில் சேவை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த கடமையிலிருந்தும் அவை பிரிக்க முடியாதவையாகவுள்ளன.

சோஷலிச நாடுகளின் மக்கள், மக்களின் அடிப்படை நலன்களுடனும் சோஷலிச சமுதாயத்தில் நிலவும் அரசியல், சித்தாந்த மற்றும் ஒழுக்க நிலைகளுடனும் முரண்படுகின்ற கருத்துக்களைச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கண்டிக்கின்றனர். ஆனால் சோஷலிச நாடுகளில் ''கருத்து வேறுபாடு'' காரணமாக ஒருவர் துன்புறுத்தப்படுகிறார் என்பதற்கே இடமில்லை.

சோஷலிச நாடுகளின் சட்டங்களின்படி குடிமக்களை அவர்களுடைய நம்பிக்கைகளுக்காக ஏதாவது கிரிமினல் அல்லது சிவில் சட்டத்தின்படி விசாரணை செய்ய முடியாது. ஒவ்வொரு சோஷலிச நாட்டுச் சட்டங்களிலும் பட்டியலிடப்பட்டுள்ள விசேஷ செயல்களை மட்டுமே சட்ட பூர்வமான படிவங்கள் குற்றமாக அங்கீகரிக்கின்றன, நம்பிக்கைகள் அல்லது ''கருத்து வேறுபாட்டைக்'' குற்றமாக அங்கீகரிக்கவில்லை. இவ்வாறாக, சோவியத் யூனியன் மற்றும் யூனியன் குடியரசுகளின் கிரிமினல் சட்டத் தொகுப்பின் அடிப்படைகள், சோவியத் சமூக மற்றும் அரசு முறை, சோஷலிச பொருளாதார அமைப்பு, சோஷலிசச் சொத்து, சொந்தக் காப்புரிமை அல்லது குடிமக்களின் அரசியல், உழைப்பு, சொத்து மற்றும் பிற சிவில் உரிமைகள் ஆகியவற்றிற்குள் எல்லை மீறி நுழையும் எந்த அபாயகரமான செயலையும் குற்றமாகக் கருதுகின்றன. சோவியத் கிரிமினல் சட்டத் தொகுப்பு குற்றம் மற்றும் தண்டனைக்குரியது எனக் கருதுகிற மிகத் தெளிவான குறிப்பிட்ட செயல்களின் விரிவான பட்டியலைக் கொண்டிருக்கிறது. கிரிமினல் சட்டத் தொகுப்பில் அடங்கியிருக்கும் பிரிவுகளுக்கு எந்த விரிவான விளக்கமும் கூற சோவியத் சட்டம் அனுமதிப்பதில்லை.

சோவியத் யூனியனில் வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் வெவ்வேறு சிவில் உரிமைகளைக் கொண்டிருக்க முடியாது. மத சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக மத ஸ்தாபனங்கள் அரசிலிருந்து பிரிக்கப்படுகின்றன. சோவியத் யூனியனின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி கடவுள் நம்பிக்கைச் சுதந்திரம், நாத்திகப் பிரச்சார சுதந்திரம் இரண்டும் குடிமக்கள் அனைவரின் உரிமைகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. மத நம்பிக்கைகளை உடையவர்கள்

என்பதால் அவர்கள் மீது விரோதமும் வெறுப்பும் கொள்ளும்படி தூண்டுவதைச் சோவியத் சட்டம் தடுக்கிறது.

பூர்ஷ்வா அரசு தன்னுடைய ''சுதந்திரங்களைப்'' பாதுகாக்கிறது. ஆனால் தனியார் சொத்துடைமைச் சுதந்திரம் அங்கே முக்கியமான சுதந்திரமாக, எப்பொழுதும் இருந்தது; இன்னும் இருக்கிறது. மற்ற எல்லா ''சுதந்திரங்களுக்கும்'' அது அடிப்படையாக இருக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் உடைமை இல்லாமல் எந்தச் சுதந்திரமும் இருக்க முடியாது என்பது பூர்ஷ்வா சட்ட மற்றும் சித்தாந்தக் கருத்து நிலையாகும். அதே நேரத்தில், தனிநபர் சுதந்திரமும் தனியார் சொத்தும் முரண்பாடானவை என்ற உண்மையை மறைப்பதற்குச் செய்ய வேண்டிய ஒவ்வொன்றும் செய்யப்படுகிறது. தனியார் சொத்தின் கீழ் சமத்துவம் இருக்க முடியாது, எனவே உண்மையான சுதந்திரம் என்பது இல்லை; தனியார் சொத்துடைமையின் கீழ் சமுதாயமானது சமரசம் செய்து கொள்ள முடியாத இரண்டு கோஷ்டிகளைக் கொண்டதாக இருக்கும்படி ஆக்கப்படுகிறது; ஒரு கோஷ்டி ஆதிக்கம் செலுத்தும் சிறுபான்மையினரான உடைமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மற்றொரு கோஷ்டி மிகப் பெரும்பான்மையாக இருக்கும் சொத்து சிறிதளவேனும் இல்லாதவர்களையோ அல்லது ஏழை மக்களையோ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இத்தகைய சமுதாயத்தின் உறுதியற்ற தன்மை, அதனுடைய தப்பிக்க முடியாத வீழ்ச்சி ஆகியவை அதனுடைய தனியார் சொத்துடைமை உறவுகள் என்ற அடிப்படையினால் முன்னதாகவே நிர்ணயிக்கப்படுகின்றன. அதனால்தான் பூர்ஷ்வா ஜனநாயகம் தொடர்ந்து வீழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கிறது.

மக்கள் தொகை மீதான மொத்தமான கண்காணிப்பு அமைப்பு, அரசியல் கொலைகள், முற்போக்கு நபர்களையும் ஜனநாயக ஸ்தாபனங்களையும் இடையறாது துன்புறுத்துதல், சட்டத்திற்குப் புறம்பாகக் கைது செய்தல், சோதனைகள் இடுதல், தொலைபேசியில் ஒட்டுக் கேட்பது, இரகசிய ஒலிப் பதிவு செய்தல் மற்றும் இன்னபிற ''ஜனநாயக'' அரசுகளின் அன்றாட வாழ்வின் உள்ளார்ந்த பண்புக் கூறுகளாகவும் பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்ட பண்புக் கூறுகளாகவும் ஆகியிருக்கின்றன. அமெரிக்க நிர்வாகத்தின் மேல்மட்ட வரிசைகளின் நாணயமற்ற தன்மை, இலஞ்சம், வேவு பார்த்தல்,

சட்டங்களை நேரடியாக மீறல் ஆகியவற்றை அம்பலப் படுத்திய வாட்டர்கேட் விவகாரம் எழுபதுக்களின் ஆரம்பத்தில் சி.ஐ.ஏ. மற்றும் எஃ.பி.ஐ., ''லாக்ஹீடு'' மற்றும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு முடிவில்லாத ஊழல்களின் வரிசையைத் திறந்தது; உண்மையில் அது முதலாளித்துவ உலகம் முழுவதையும் பாதித்தது. பூர்ஷ்வா தரங்களுக்கு ஒத்து வராத கருத்துக்களை அடக்குவது மேற்கு நாடுகளில் நிலையான அரசு நடைமுறையாக ஆக்கப்பட்டிருக்கிறது. சில முதலாளித்துவ அரசுகளில் தொழில்களை மேற்கொள்ளத் தடைகளிருப்பதையும் கம்யூனிஸ்டுகளுக்கும் பிற முற்போக்குவாதிகளுக்கும் அரசாங்க நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் இதரவைகளில் வேலை வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலைமையையும் நினைவுபடுத்திக் கொள்வது போதுமானது.

இவையெல்லாம் வெறும் அத்து மீறல்களோ அல்லது தற்செயலான நிகழ்ச்சிகளோ அல்ல. அவை ஒரு விரிந்த நிகழ்ச்சிப் போக்கின் அம்சங்கள், பூர்ஷ்வா வாழ்க்கை முறை, அதே சமயம் பூர்ஷ்வா சிந்தனை முறை ஆகியவற்றின் மொத்த வீழ்ச்சியின் அம்சங்கள் ஆகும்.

பூர்ஷ்வா வாழ்க்கை முறையைப் பொறுத்த அளவில் நம்பிக்கை இடைவெளி என்பது மேற்கத்திய பத்திரிகைகளின் நிலையான விவாதத் தலைப்பாக, சித்தாந்தவாதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கசப்பான பிரதிபலிப்புகளின் ஓர் ஆய்வுப் பொருளாக இருக்கிறது. பொருளாதாரத் தேக்கம், சமூக உறவுகளின் சிக்கல் இதரவை போன்ற இத்தகைய மெருகேறிய சொற்றொடர்கள் கைவிடப்பட்டுள்ளன. நெருக்கடி, வீழ்ச்சி, அழிவின் எல்லையில் இருப்பது இதரவைகளைப் பற்றி பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது.

ரிபப்ளிகன் கட்சியின் தலைவரும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான ரொனல்ட் ரீகன் 1981 பிப்ரவரியில் சிறிதும் திருப்தியளிக்காத முடிவுகளையே அறிவித்தார். முப்பதுக்களின் தொடக்கத்தில் ''மாபெரும் பொருளாதார மந்தம்'' ஏற்பட்ட காலத்திலிருந்தே அமெரிக்க ஐக்கிய அரசு மிகவும் மோசமான பொருளாதாரச் சீர்குலைவைச் சந்தித்தது. மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் பிரம்மாண்டமான அரசுக் கடன் மற்றும் பற்றாக்குறைகளின் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. முன்னெப்போதும் கண்டி

ராத அளவில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடிய அபாயம் அமெரிக்காவுக்கு முன்னுலிருக்கிறது, பழைய முறை களைக் கையாண்டு பொருளாதார நோயைக் குணப்படுத்த இனிமேல் முடியாது என்று ரீகன் எச்சரிக்கை செய்தார். அமெரிக்கப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் ''புதிய அணுகு முறையின்'' அவசியத்தைப் பற்றி அவர் பேசினுர். ஆனுல் நான்கு வருடங்களுக்கு முன்பும் ஜனுதிபதி கார்ட்டர் ''புதிய பாதையில்'' செல்வோம் என்று வாக்குறுதியளித்தார். ஆனுல் அவர் இன்று அரசியல் அரங்கத்தை விட்டே போய்விட்டார். அவருடைய வாக்குறுதிகளுக்கு ஏற்பட்ட கதி எல்லோருக்கும் நன்ருகத் தெரியும்.

இது போன்ற மதிப்பீடுகள் எல்லா மேற்கு நாடுகளிலுமே தனிமாதிரியாகும். எடுத்துக்காட்டாக, பொருளாதாரக் கொந்தளிப்புகளிலிருந்து பெரும்பாலான மற்ற மேற்கு நாடு களை விடக் குறைவான இழப்புகளுடன் இது வரை தங் களுடைய நாடு சமாளித்திருக்கிறது என்று மேற்கு ஜெர்மனி யில் ஆளும் வட்டாரங்கள் அழுத்திக் கூறுகின்றன. இருப் பினும் 1975ல் *Stern* சஞ்சிகை ''இனியும் முதலாளித்து வத்தைக் காப்பாற்ற முடியுமா?'' என்ற ஒரு கட்டுரையை வெளியிட்டது.

பெரும்பாலான மேற்கு ஜெர்மானியர்கள் முதலாளித் துவ அமைப்பிற்கு அதிக வாய்ப்புக்கள் இல்லை என்று எண் ணும் மனப்போக்குடையவர்களாக இருக்கின்றனர் என்று கட்டுரை ஆசிரியர் முடிக்கிருர். பொதுமக்கள் கருத்து வாக் கெடுப்பின்படி பதினெட்டு சதவீத மேற்கு ஜெர்மானியர்கள் மட்டுமே கிழக்கத்திய சோஷலிச நாடுகளை விட மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் ஐந்தாண்டு காலத்தில் வலிமை யுடையதாகும் என்று எண்ணுகின்றனர் என்றும் அதே நேரத் தில் நாற்பது சதவீதத்தினர், அதாவது அந்த எண்ணிக் கையை விட இரு மடங்கிற்கு மேலானவர்கள் எதிரான கருத் துடையவர்களாக இருக்கிருர்கள் என்றும் அவர் குறிப்பிடு கிருர்.

பிரான்சிலும் ''வளமான'' முதலாளித்துவம் என்ற கருத்தை அறுபதுக்களில் கொண்டிருந்த பிரபலமான சமூக இயலாளரான ழான் புராஸ்டியே என்பவர் 1976ல் சராசரி பிரெஞ்சு நாட்டவருக்கு ஓர் ஆழமான அதிருப்தி உணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டிய

தாயிற்று. உண்மையான முன்னேற்றம் இல்லை, மேம்பாடான வாழ்க்கைத் தரங்கள் ஏற்றத்தாழ்வை மட்டுமே வலியுறுத்து கின்றன என்ற காரணத்தால் இந்த ஆழமான அதிருப்தி ஏற்பட்டுள்ளது. மேற்கத்திய சமுதாயம் பல்வகை வளர்ச்சி கட்டங்களைக் கடந்து வரும் பொழுது மென்மேலும் நியாய மற்றதாகிக் கொண்டு வந்தது; அதனுடைய அடிப்படை களிலேயே அது குறையுள்ளதாக இருக்கிறது.

ஒரு புறம் பூர்ஷ்வா சமூக உறவுகளுக்கும் மறு புறம் சமூக வாழ்வின் முக்கிய போக்குகளுக்கும் இடையில் கூர்மை யாகிக் கொண்டேயிருக்கும் மோதலானது பூர்ஷ்வா அரசியல் சித்தாந்தத்தின் எல்லா முக்கியமான போக்குகளின் நெருக் கடியை, அதாவது தீவிர வலதுசாரி, பழமைவாதம், மித வாதம் ஆகியவற்றின் நெருக்கடியை ஆழப்படுத்தியிருக் கிறது.

முதலாவதாக, இது ''அச்சு'' நாடுகள் என்றழைக்கப் படுவதன் இராணுவ மற்றும் அரசியல் படுதோல்வியுடன் மீள முடியாத தோல்வியை அனுபவித்த பூர்ஷ்வா சித்தாந்தத்தின் படுபிற்போக்குப் பிரிவான பாசிசத்திற்குப் பொருந்துகிறது. ஒடுக்குதல் மற்றும் வன்முறையின் மிகவும் மனிதத் தன்மை யற்ற அமைப்பாகவும் உலக நாகரிகத்திற்கு ஓர் அபாயமாக வும் உலகம் முழுவதிலுமுள்ள எல்லா மக்களினங்களின் கண் களுக்கு முன்பாக பாசிசம் தோன்றியது. அதே நேரத்தில், இரண்டாவது உலகப் போரானது—அந்தப் போரின் போக் கில் சோவியத் மக்கள் பாசிசத்திற்கு எதிரான போராட்டத் தின் முழுச் சுமையையும் தாங்கினுர்கள்—சோஷலிச அமைப் பின் இதுவரை கண்டிராத வாழ்க்கைச் சக்தியையும் உண்மை யான மனிதாபிமானத்தையும் விளக்கிக் காட்டியது.

பாசிசத்தின் வீழ்ச்சி முதலாளித்துவ சமுதாயத்தின் ஆன்மீக நெருக்கடியைக் கூர்மையாக அதிகப்படுத்தியது. இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கத் தினர் மத்தியில் வளர்ந்து கொண்டிருந்த சமூகத் தோல்வி மனப்பான்மை, பகுத்தறிவு எதிர்ப்புவாதம் ஆகியவற்றிற் கான பல போக்குகளின் தோற்றங்களுக்கு பாசிசத்தின் நிர் மூலத்தின் விளைவால் உலக முதலாளித்துவ அமைப்புக்கு ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாகும். ஆனுல் பாசிசம் முதலாளித் துவத்தின் இயல்பிலேயே வேர் ஊன்றியிருக்கிறது, இரண்

டாவது உலகப் போருக்குப் பிறகு பாசிச சித்தாந்தம் புதிய வடிவங்களில் புத்துயிர் பெற ஆரம்பித்தது. நவீன பாசிச மானது, வெவ்வேறு நாடுகளில் செயலூக்கமாவதற்கும் ஒரு விரிந்த சமூக அடித்தளத்தை—முக்கியமாக, அழிவு, தீவிர மான போட்டி, பணவீக்கம், வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகியவற்றால் துன்பப்பட்ட குட்டி முதலாளித்துவ வகுப் பினரிடையேயும் வர்க்கத் தன்மையை இழந்த வகுப்பின ரிடையேயும் — மீண்டும் பெறவும் ஒரு தடவைக்கு மேல் முயற்சித்திருக்கிறது.

மூர்க்கத்தனமான கம்யூனிச எதிர்ப்பு என்பது நவீன பாசிசத்தின் குழப்பமானதும் மிக மோசமானதுமான எல்லா போதனைகளிலும் மாறாத அடிப்படையாகும். ''சிவப்பு ஏகாதி பத்தியத்தின் அபாயம்'', ''உலகக் கம்யூனிஸ்டு சதி'', ''மாஸ்கோவின் கரம்'' இதரவைகளைப் பற்றிய வெறிபிடித்த மந்திர உச்சாடனங்கள் நவீன பாசிச பிரசுரங்களின் முதல் பக்கங்களில் நிரந்தரமாகத் தோன்றுகின்றன.

அமெரிக்க ''அதி தீவிரவாதிகளின்'' சித்தாந்தத்தில் நிறவெறி, கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு ஆகியவை ஒன்றாக இணைந்திருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் டஜன் கணக்கான பாசிச ஸ்தாபனங்களும் கோஷ்டிகளும் நீக்ரோக்கள், புயெர்ட்டோரீகன்கள் ஆகியோருக்கு எதிராக நிறவெறி வெறுப்பு இயக்கங்களை ஆரம்பித்துக் கொண்டிருக் கின்ற அதே நேரத்தில் ''சிறுமனிதனின்'' உரிமைகளுக்கான போர்வீரர்களாகவும் தம்மைக் காட்டிக் கொள்ளுகின்றன. அமெரிக்க ''அதி தீவிரவாதிகள்'' சோர்வில்லாது மக் களுக்கு ''கம்யூனிச அபாயத்தைப்'' பற்றி நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றனர், சோவியத் எதிர்ப்பு நடவடிக்கை களில் அவர்கள் மென்மேலும் தீவிரமுடையவர்களாக இருக் கின்றனர்.

மேற்கு ஜெர்மனியில் தற்காலத்தில் உள்ள நாஜிஸத்தைப் பின்பற்றுவோர்கள் கடந்த போரின் இழப்பிற்குப் பழி வாங்கு வதைப் பற்றி இடைவிடாது பேசுகின்றனர். நாம் எண்பதுக் களில் வாழ்கிறோம், முப்பதுக்களில் அல்ல; அவர்கள் எச் சரிக்கையாக இருக்கும்படி நிலைமை கட்டாயப்படுத்துவது இயற்கையே. அவர்கள் தங்களுடைய நோக்கங்களை முழுக்க முழுக்க சமாதான வழிகளில் அடைவார்கள் என்று மக் களுக்கு உறுதியளிக்கின்றனர். ஆனால் போருக்குப் பிற்பட்ட

ஐரோப்பிய எல்லைகளை மீண்டும் திருத்தியமைப்பதற்கான முயற்சிக்குப் பொருள் என்ன, அது எங்கே இட்டுச் செல்ல முடியும் என்பது அறிவுள்ள எந்த மனிதனுக்கும் தெளிவாகப் புரியும்.

நவீன பாசிசத் தலைவர்கள் ஓர் ''உலக நெருக்கடி'', ஒரு பெரும் இராணுவ மோதல் வரும் என்ற நம்பிக்கையிலும் தங்களுக்கு ஒரு காலம் வரும் என்று எண்ணிக்கொண்டும் வாழ்கின்றனர். அதனால்தான் அவர்கள் பதற்றத் தணிவைப் பற்றியும் ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு பற்றிய ஹெல்சின்கி மாநாட்டு தீர்மானங்களைப் பற்றியும் மிக மூர்க்கத்தனமாகப் பழித்துக் கூறுகின்றனர், சோவியத் யூனியன் மற்றும் சகோதர சோஷலிச நாடுகளால் பின்பற்றப் படுகின்ற சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பற்றி ஒளிவு மறைவு இல்லாத வெறுப்புடன் பேசுகின்றனர்.

வன்முறை, சதிகள், இரத்தக்களரியான திடீர்ப்புரட்சி கள் ஆகியவற்றின் மூலம் ஆட்சியதிகாரத்திற்கு வர முடியு மென்று நவீன பாசிச கோஷ்டிகள் நம்புகின்றன. பெரும் மூலதனத்தையுடைய கோஷ்டிகளின் கருத்துக்களை அவர் கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அக்கோஷ்டிகளுக்குப் பூர்ஷ்வா நாடாளுமன்றவாதம் கூட ஓர் அபாயமாகவும் சோஷலிசத்திற்கு வழுக்கிச் செல்லக் கூடியதாகவும் தோன்று கிறது. இரத்த வெறி கொண்ட பயங்கர சர்வாதிகாரத்தை நிறுவுவதில் ஒரு விமோசனப் பாதையை அவர்கள் காணுகின் றனர். ஆனால் அவர்களுடைய காலம் இன்னும் வரவில்லை; எனவே அவர்கள் பயங்கர நடவடிக்கைகள் குண்டுகள், முற் போக்கு ஸ்தாபனங்களுக்கு எதிரான தாக்குதல்கள், மற்ற ஆத்திர மூட்டல்கள் ஆகிய வழிகளின் மூலம் அதை விரைவு படுத்த முயலுகின்றனர்.

இருபதுக்களிலும் முப்பதுக்களிலும் இருந்த பாசிசவாதி களைப் போல், இன்றைய நவீன பாசிசவாதிகள் முதலாளித்து வத்தை ''விமரிசிக்கத்'' தயங்குவதில்லை. அதிகமாக மையப் படுத்தப்பட்ட அதிகாரவர்க்க—அதனால் சுதந்திர முன்முயற் சிக்கான வாய்ப்பைச் சுருக்குவதை நோக்கமாகக் கொண்ட —அரசு முதலாளித்துவப் போக்குகளுக்காக இன்று அதைக் ''கண்டிக்கின்றனர்''. வளர்வீத வருமான வரி, பொருளா தாரத்தில் அரசுத்துறை விரிவடைதல், அரசு செலவினங் களின் வளர்ச்சி ஆகியவையெல்லாம் பொருளாதாரத்தின்

மீதான ''அத்துமீறல்களாகக்'' கருதப்படுகின்றன. அவை ''இயல்பான'' மார்க்கெட் நிகழ்ச்சிப் போக்கைப் பாதித்து தேசத்தை ''வலுவற்றதாக்குகின்றன''. முதலாளித்துவ அரசின் பங்கை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ''கூட்டு'' நடவடிக்கைகளாகவும் ''கம்யூனிச'' நடவடிக்கைகளாகவும் கூட அறிவிக்கப்படுகின்றன.

''செல்வ ஆட்சியாளர்களையும்'' ''அதிகாரவர்க்கத்தினரையும்'' அவர்கள் வாய்மொழியாகத் தாக்குவது எப்படியிருந்தாலும், நவீன நாஜிகள் செல்வாக்கு மிக்க ஏகபோக கோஷ்டிகளிடமிருந்து மிகக் கணிசமான நிதி மற்றும் அரசியல் ஆதரவைத் தொடர்ந்து பெறுகின்றனர். பின்னுல் கூறப்பட்டவர்களுக்கு இந்தத் தாக்குதல்களின் உண்மையான உள்கருத்து நன்கு தெரியும். மக்கள் திரளினர் மத்தியிலே நவீன பாசிச செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான வெறும் கட்டாயப்படுத்தப்பட்ட, ஆனுல் அவசியமான தந்திரமாக அவை அவற்றைக் கருதுகின்றன.

எப்படி இருந்த போதிலும் நவீன பாசிசத்தை முதல்தர அரசியல் சக்தியாக அமைப்பதற்கான எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றன.

எழுபதுக்களில் நவீன பாசிசத்தின் பிரதானப் படைகள் நிர்மூலமாகியதைக் கண்டோம். ஸாலஸாருக்குப் பின்னர் வந்த ஆட்சி போர்த்துகீசியாவில் வீழ்ச்சியடைந்தது, கிரீசில் ''கருப்பு தளபதிகளின்'' ஆட்சியும் வீழ்ந்தது. ஸ்பானிஷ் மக்களின் உறுதியான போராட்டத்தின் விளைவால் ஐரோப்பாவின் கடைசி பாசிச ஆட்சி முறை வீழ்ந்தது. மேற்கு ஜெர்மனியில் தேசிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற சபைத் தேர்தலில் தோற்றது. அதன் விளைவாகத் தன் எல்லா அதிகாரத்தையும் இழந்தது. இத்தாலியில் நடந்த தேர்தலில் நவீன பாசிசவாதிகள் தாங்கள் முன்பு வாங்கிய வாக்குகளில் மூன்றிலொரு பகுதியை இழந்திருக்கின்றனர். இருபதுக்களின் பிற்பகுதிகளிலும் முப்பதுக்களின் ஆரம்பத்திலும் நடந்தது போல் மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலட்சக்கணக்கான அதிருப்தியடைந்த மக்களைத் தங்களுடைய கொடிகளின் கீழ் அணிதிரட்டும் என்று அவர்களுடைய தலைவர்கள் எண்ணினுர்கள். ஆனுல் அவர்களுடைய முயற்சி எந்த இலாபங்களையும் ஈட்டித் தரவில்லை.

இருபதுக்களிலிருந்து நாற்பதுக்கள் வரையிலும் பாசிச

சர்வாதிகாரங்களின் கீழ் பெற்ற வாழ்க்கை அனுபவத்தையும் இரண்டாவது உலகப் போரின் துயர் மிக்க அனுபவத்தையும் மேற்கத்தியக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும் இளம் தலைமுறையினரும் மறக்கவில்லை. மற்ற உழைக்கும் மக்களைப் போல், இன்று அவர்கள் அநேகமாக இடது சாரித் திசையமைவு கொண்டவர்களாக இருக்கின்றனர், வலதுசாரிகளாக இல்லை. அதே நேரத்தில் பாசிச எதிர்ப்புச் சக்திகள் பாசிசத்தை எதிர்த்த தங்களுடைய போராட்டத்திலிருந்து பாடங்களைக் கற்றிருக்கின்றன, மக்கள் திரளினரின் ஆதரவைப் பெறவும் கற்றிருக்கின்றன.

இன்று, நவீன பாசிசம் அரசியலின் பின்கொல்லையில் இருக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் நிலைமை அதற்குச் சாதகமாக இல்லை. இன்று வளர்ச்சியுற்ற முதலாளித்துவ அரசுகளில் ஆளும் வட்டாரங்கள் ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வெளிப்படையான சர்வாதிகார வடிவங்களுக்குப் பதிலாக மிகவும் நெகிழ்ச்சியான முறைகளையே விரும்புகின்றன.

ஆயினும் பாசிசத்தின் அபாயம் இனிமேல் இல்லை என்று பாவிப்பது ஒரு பயங்கரமான மயக்கமாகும். முதலாளி வர்க்கமானது, தன்னுடைய ஆட்சியதிகாரத்தை பூர்ஷ்வா ஜனநாயகத் தரங்களால் மட்டுமே தக்கவைக்க முடியாது என்பதை உணரும் பொழுது, அவற்றைத் தூக்கியெறித்து விட்டு பாசிச சக்திகள் உள்ளிட்ட தீவிர வலதுசாரி சக்திகளை அதிர்ச்சிப் படைகளாகப் பயன்படுத்தி அடக்கியாளும் சர்வாதிகாரம் மற்றும் பகிரங்கமான வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுக்கிறது. இது வரலாற்றால் நம் காலத்தில் கூட பன்முறை உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சிலியில் இது நடந்தது. அங்கே பிற்போக்கு இராணுவவாதிகள் பாசிச சக்திகளுடன் இணைந்து சதி செய்து பூர்ஷ்வா ஜனநாயக விதிகளுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸால்வடோர் அலென்டேயின் வெகுஜன அரசாங்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டு எல்லா ஜனநாயகவாதிகளுக்கும் எதிரான பயங்கர இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். சிலியில் நடைபெற்ற திடீர்ப்புரட்சி பெரும் முதலாளி வர்க்கம், சர்வதேச மூலதனம் ஆகியவற்றின் நலன்களுக்காக நிறைவேற்றப்பட்டது என்பது வெளிப்படையான இரகசியம். அவை, ஏராள

மான கொலைகள், ஒடுக்குமுறைகள் ஆகிய வழிகள் மூலம் பரந்த செயல்விளைவுடைய சமூக சீர்திருத்தங்களின் பாதையைத் தேர்ந்தெடுத்த நாட்டில் தங்களுடைய ஆதிக்கத்தைத் தக்கவைப்பதற்காக முயல்கின்றன.

நவீன பாசிசமானது இன்று தனியே செயல்பட முடியாத அளவு பலவீனமாக இருக்கிறது. கடுமையான பிற்போக்கு சக்திகள் எல்லாவற்றுடனும் முதலாவதாக பிற்போக்கு இராணுவ அதிகாரிகளுடனும் பிரதான முதலாளித்துவ கட்சிகளின் தீவிர வலதுசாரி கோஷ்டிகளுடனும் ஆன ஒரு கூட்டணியை அது சார்ந்திருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் ஃபிரான்ஸ் ஜோசப் ஷ்டிராவுஸ் மற்றும் அவரை பின்பற்றுவோர்களுக்கும் நவீன நாஜிகளுக்கும் இடையிலான தொடர்புகளை எல்லோரும் அறிவார்கள். இத்தாலியில் தோல்வியடைந்த சதித்திட்டங்களின் தொடர் வரிசை உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள், தொழில் அதிபர்கள், உயர் இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் நவீன பாசிசவாதிகளுக்கு இருந்த தொடர்புகளின் பல்கிப்பரவியிருக்கும் ஒரு வலையமைவை வெளிப்படுத்தியது.

இடதுசாரி சக்திகள் எவ்வளவுக்கெவ்வளவு வலிமையுடையதாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஏகபோக மூலதனத்தின் ஒடுக்குமுறைகளை அமுலாக்கும், அதிகாரத்துவ ஆதிக்க முறைகளை செயல்படுத்தும் போக்கு வளர்ந்து கொண்டிருப்பது தெளிவாகும். நவீன பாசிசம் இந்தப் போக்கின் விளைவாகும். ஒரு நெருக்கடியான நேரத்தில் ''வலிமை மிக்க நபர் ஒருவரால்'' தலைமை தாங்கப்பட்ட பாசிசவகை ஆட்சி முறையானது புரட்சிகரமான புயலிலிருந்து தங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரே வழி என்ற கருத்தை செல்வாக்கு மிக்க ஆளும் வர்க்கக் கோஷ்டிகள் கைவிடவில்லை.

இன்று பாசிச அபாயத்திற்கு எதிரான போராட்டம் இன்னமும் ஒரு அவசரமான பணியாக உள்ளது. 1976ல் பெர்லினில் நடைபெற்ற ஐரோப்பாவின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் இது வலியுறுத்தப்பட்டது. ''பாசிசத்தை ஒழிக்கவும் வெளிப்படையான அல்லது மறைமுகமான வடிவங்களில் அது மீண்டும் பிறப்பெடுப்பதைத் தடுக்கவும், பாசிச மற்றும் நவீன பாசிச பயங்கர ஸ்தாபனங்கள், கோஷ்டிகள் உருவாதல், அவற்றின் செயல்களை எதிர்த்து இனவெறிப் பிரச்சாரம், தொழிலாளி வர்க்கத்

தையும் பிற முற்போக்கு சக்திகளையும் பிரிப்பதை நோக்க மாகக் கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடவும்'' எல்லா முற்போக்குச் சக்திகளுக்கும் மாநாடு அழைப்பு விடுத்தது.*

இந்தச் சக்திகள் ஐக்கியப்பட்டுவிட்டால் பாசிசத்தின் இன்றைய வாரிசுகள் மற்றும் எல்லாத் தீவிர பிற்போக்கு வாதச் சக்திகளின் பாதையில் கடக்க முடியாத தடையை ஏற்படுத்துவதற்குப் போதுமான வாய்ப்புக்களைப் பெற்று விடும்.

இன்று பிற்போக்குச் சக்திகள் தங்களுடைய ஆரவார மான செயல்களை நிலையாகச் செய்து கொண்டிருந்தாலும் முத லாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையின் சில பிரிவின ரிடம் அவர்களுடைய செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது, இருந்தாலும் உலக முற்போக்குச் சக்திகளுக்கு எதிரான ஏகாதிபத்திய போர்த்தந்திரத்தின் பெரும்பாலான போக்குகளை அவை நிர்ணயிக்கவில்லை.

பூர்ஷ்வா சித்தாந்த முன்னணியில் இதற்கு எதிரான மிதவாதப் பிரிவும் கடந்த சில பத்தாண்டுகளாக கணிச மான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா மிதவாதத்தின் வீழ்ச்சியானது இரு உலகப் போர் களுக்குமிடையில் ஏற்கெனவே தெளிவாகியது. இரண் டாவது உலகப் போருக்குப் பிற்பட்ட காலகட்டத்தில் இது விரைவாகத் தொடர்ந்து தெளிவாகியது. அரசு, ஏக போக முதலாளித்துவத்தின் வளர்ச்சி மிதவாதத்தின் அர சியல் ஆதரவை உருவாக்கிய மத்திய மற்றும் சிறு தொழி லதிபர்களின் சுயேச்சையான முக்கியத்துவத்திற்கு ஒரு முடிவு கட்டியது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சில நாடுகளில் இன்ன மும் ஆதிக்க நிலைகளிலிருந்த பூர்ஷ்வா மிதவாதக் கட்சிகள் அரங்கத்திலிருந்து மறைந்திருக்கின்றன அல்லது பெரும் மூல தனத்தையும் சமூக-ஜனநாயகவாதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளிடையே ஊசலாடும் இரண்டாம் நிலைச் சக்தியாகியிருக்கின்றன. இருபதுக்களில் டேவிட் லாயிட் ஜார்ஜ் போன்ற தலைசிறந்த தலைவர்களால் தலைமை தாங்கப் பட்ட, ஒரு காலத்தில் சக்திமிக்கவர்களாக இருந்த விக்கு

---

* *World Marxist Review*, No. 8, 1976, p. 6.

களின் வாரிசுகளான பிரிட்டிஷ் மிதவாதிகளுக்கு இது இன்று பொருந்தும்.

எனினும் மிதவாத சித்தாந்தப் பாரம்பரியத்தின் தலைவிதி இன்னமும் அதிக சிக்கலானதாக இருக்கிறது. ''சுதந்திரமான போட்டி'', ''சுதந்திரமான சிறு சொத்து'' ஆகியவற்றைப் பாதுகாப்பதைப் பற்றிய மிதவாத கோஷங்கள் குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாத கோஷ்டிகளாலும் எல்லாவற்றிற்கும் மேலாக சமூக-ஜனநாயகக் கட்சிகளாலும் எடுத்துக் கொள்ளப்பட்டன. சமூக-ஜனநாயகக் கட்சிகள் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னால்''நடு நிலையை விட இடதுசாரி நிலைகளுக்குத்'' தாங்கள் மாறிவிட்டதாக அறிவித்ததனால் பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் முன்னால் மிதவாதிகளால் கைப்பற்றப்பட்ட இடங்களைப் பெற்றன. ''முதலாளித்துவத்தை மேம்படுத்துவதற்காக'' மிதவாத கோஷங்களைப் பயன்படுத்தி வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் ஓரளவு விரிந்த குட்டி முதலாளித்துவ வகுப்பினரையும் அவர்களுடன் இணைந்துள்ள முதலாளித்துவ எதார்த்தத்தில் ஏமாற்ற மடைந்தவர்களும் வளர்ச்சியின் ''மூன்றாவது வழிக்கான'' சமூக-ஜனநாயக மாற்று வழிகளில் நம்பிக்கை கொண்டவர்களுமான மத்தியதர வர்க்க சக்திகளையும் தங்கள் பக்கம் ஈர்ப்பதில் வெற்றி பெற்றனர்.

மறு புறத்தில் (கீழே காட்டப்படப் போவது போல்) மிதவாத சித்தாந்தமானது ஏகபோக முதலாளித்துவ கோஷ்டிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தங்களுடைய சொந்தக் குறிக்கோள்களுக்குத் தகுந்தாற்போல் ''உருமாற்றிக் கொள்ளப்பட்டது''. ''அரசின் மேலாதிக்கத்தைப்'' பற்றிய தங்களுடைய வாய்வீச்சுடன் தீவிர வலதுசாரிப் போக்குகள் கூட தற்பொழுது குட்டி முதலாளித்துவ வகுப்பினரிடமிருந்து பெருத்த ஆதரவைப் பெறுவதற்காகத் தங்களுடைய சொந்த போதனைகளுக்கு மிதவாதக் கருத்துக்களைத் தகவமைத்துக் கொள்ள முயன்று கொண்டிருக்கின்றன என்று கூறுவது போதுமானது.

ஓர் உள்நெருக்கடி பெரும் மூலதனத்தின் பிரதான அரசியல் கட்சிகளையும் தாக்கியிருக்கிறது. அவை வரலாற்று ரீதியில் முதலாளித்துவப் பழமைவாதப் போக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள குடியரசுவாத மற்றும் ஜனநாயகக் கட்சியின

ரும் பிரிட்டனிலுள்ள பழமைவாதிகளும் மேற்கு ஜெர்மனியிலுள்ள கிறித்துவ-ஜனநாயக சங்கமும் கிறித்துவ-சமூக சங்கமும் பிரான்சிலுள்ள குடியரசு ஆதரவுச் சங்கமும் இத்தாலியிலுள்ள கிறித்துவ ஜனநாயகவாதிகளும் ஜப்பானிலுள்ள மிதவாத ஜனநாயகவாதிகளும் இதரவைகளும் உள்ளன.

சமீபத்தில் அரசியலில் தங்களுடைய பிரத்யட்சமான பார்வையைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்ட பழமைவாதிகள் இப்பொழுது தங்களுடைய கட்சியின் தத்துவ ஞானம், சித்தாந்த போதனைகள், செயலின் பொதுவான கோட்பாடுகள் ஆகியவற்றைத் தீவிரமாக வளர்க்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எனினும், இந்தச் செயல் வெற்றிகரமானது என்று கூற முடியாது: ஒரு புறம் பழமைவாதக் கட்சிகளின் கொள்கையை நிர்ணயிக்கின்றவர்களின் நலன்களுக்கும் மறு புறம் நம் காலத்திய புறவயத் தேவைகளுக்கும் இடையில் உள்ள இடைவெளி மிகப் பெரியதாகிவிட்டது.

இந்தப் பழமைவாதத் தேட்டங்கள் எல்லாவற்றின் உள்ளடக்கம் என்ன? அவை எதைநோக்கி ஏவப்படுகின்றன?

பழமைவாதிகள் தங்களுடைய கட்சிகளின் உண்மையான முகத்தை, பெரும் ஏகபோக மூலதனத்தின் நலன்களைப் பாதுகாப்பவர்களின் முகத்தை மறைக்க முன்பு இருந்ததை விட இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய ''இடைப்பட்ட வர்க்க'' மற்றும் ''வெகுஜன'' இயல்பு என்று கூறப்படுவதை இன்னும் அதிகமாக விளம்பரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்த அணுகுமுறை பழமைவாத வேலைத்திட்டங்கள் எந்தக் குறிப்பிட்ட அரசியல் ஷரத்துக்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்கிறது, ''தனி நபர் உரிமைகள்'', ''எல்லா குடிமக்களின் ஒருமைப்பாடு'', ''எல்லோருக்கும் சுதந்திரமும் நீதியும்'' முதலிய மிக உயர்ந்த அழிவற்ற கோட்பாடுகளைப் பற்றி விவாதிப்பதன் மூலம் கூர்மையான பிரச்சினைகளைத் தவிர்க்க சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

இருப்பினும், பழமைவாதிகள் இந்தச் சூட்சும சூத்திரங்களையெல்லாம் விரித்துரைக்க ஆரம்பித்தவுடனேயே சமூக ரீதியாக அவை எதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன என்பது உடனடியாகத் தெளிவாகிறது.

அடிப்படையான மனித மதிப்புகள் நிலையானவை, வரலாற்றின் செல்வாக்கிற்கு உட்படாதவை என்பது பழமைவாதத் தத்துவஞானத்தின் அடிப்படை ஆய்வுரையாகும். ஆஸ்திரிய மக்கள் கட்சியின் ஒரு முன்னணி நபரான ஆல்ஃரட் மலேடா என்பவர், பழமைவாதிகள் தங்களுடைய சித்தாந்தக் கருத்தோட்டங்களைத் திருத்தியமைக்கும் பொழுது அவர்கள் முன்பு போல், ''மனித இயல்பு'', அதனுடைய ''முன்னரே நிர்மாணிக்கப்பட்ட குணம்சம்'', ''அழிவற்ற நிலையான தன்மை'' ஆகியவற்றிலிருந்து தொடங்க வேண்டும் என்று உறுதியாக நம்புகின்றார்.

இந்த முதற்கோளிலிருந்து பின்வரும் முடிவு தெளிவு: எல்லாப் பிரச்சினைகளுக்கும் எல்லா இடையூறுகளுக்கும் மூலத்தைத் தனிமனிதனிடமும் அவனுடைய ''பாவம் நிறைந்த'' தன்மையிலும் தேட வேண்டுமே தவிர சமூக அமைப்பில் அல்ல; முக்கியப் பிரச்சினை சமுதாயத்தைப் புத்தாக்கம் செய்வதல்ல, ''மனிதனுக்காக'', ''அவனுடைய விமோசனத்திற்காக'' அக்கறை கொள்ளுதலே.

''தனியார் சுதந்திரம்'' என்பது ஒரு மாயச் சூத்திரம். அது ஒரு மந்திரம் போல் பெரும் மூலதனக் கட்சிகளினுடைய தலைவர்களின் எழுத்துக்களிலும் சொற்பொழிவுகளிலும் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது.

1976ல், இலையுதிர் கால நாடாளுமன்றத் தேர்தல் இயக்கத்தின் போது, மேற்கு ஜெர்மனியின் கிறித்துவ-ஜனநாயக மற்றும் கிறித்துவ-சமூக சங்கங்களின் கூட்டணியின் முக்கிய கோஷமான ''சுதந்திரமா அல்லது சோஷலிசமா'' என்ற சொற்களிலிருந்து இந்தச் சூத்திரத்தின் உண்மையான அர்த்தம் தெளிவாகிறது. ஏனெனில் சுதந்திரம் என்பது முதலாளித்துவம் புரிந்து கொள்ளும் விதத்தின்படி முதலாவதாக உடைமையைச் சொந்தமாக வைத்துக் கொள்ளும் சுதந்திரமாகும். ஒரு முதலாளியாக இருப்பதற்கு உரிமையான இந்தப் பிரதான உரிமையை அமுலாக்க அவை எந்த அளவிற்கு உதவுகின்றனவோ அந்த அளவிற்கு மட்டுமே மற்ற உரிமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆஸ்திரிய மக்கள் கட்சியின் தத்துவவாதியான கி. குன்சில் என்பவர் உடைமை தான் மனித சுதந்திரத்திற்கு உத்திரவாதமளிக்கிறது என்று கூறுகிறார். அதே நேரத்தில் ஸ்வீடன் நாட்டு மிதவாதக் கூட்டணிக் கட்சியைச் சார்ந்த ஜெ. ஹார்க்பி என்பவர் தனி

யார் சொத்துரிமையின் நிரந்தரமான இயல்பை நிரூபிக்க முயற்சிக்கையில் தனியார் சொத்தைப் பற்றிய கருத்தை விமரிசிப்பதானது மேற்கத்திய கலாச்சாரத்திற்குத்''துரோக மிழைப்பதாகும்'' என்ற முடிவிற்கு வருகிறார்.

அரசுப் பிரச்சினை உள்பட மற்ற எல்லா பிரச்சினைகளும் இந்தத் தீர்மானமான கண்ணோட்டத்திலிருந்து ஆராயப்படு கின்றன. இயல்பாகவே, பழமைவாத சித்தாந்தம் ''ஒழுங் கின் பாதுகாவலரான'' முதலாளித்துவ அரசிற்கு அதீத மரியாதை காட்டுகிறது. ''தலைமையான'' அரசு என்ற கருத் தானது பழமைவாத சித்தாந்தத்திற்கு அடித்தளத்தை உரு வாக்குகிறது. இன்று, சமூக வாழ்வில் அரசின் தலையீடு முத லாளித்துவ முறையின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகக் கருதப்படுகிறது. அரசு-ஏகபோக முதலாளித்துவத்துக்கு அரசியல் ஆதரவை உருவாக்கும் கட்சிகள் வேறு எந்த அணுகு முறையையும் பின்பற்ற முடியாது.

இருப்பினும், எந்த முக்கிய பூர்ஷ்வா கட்சிகளின் ஒரு செயல்திட்ட பத்திரமும் தேர்தலுக்கு முந்திய எந்த ஒரு அறிக்கையும் ''அதிகாரவர்க்க ஆதிக்கத்தின்'' அபாயத்தைப் பற்றியும் ''அதீத மையத்துவத்தைப்'' பற்றிய தீங்கைப் பற்றியும் ''எல்லாம் வல்ல அரசு'' என்பது அனுமதிக்க முடி யாததைப் பற்றியும் இதரவைகளைப் பற்றியும் விவாதிக் காமல் இருக்க முடியாது.

ஒரு புறம் இது மரபு வழி சமூக வாய்வீச்சாக இருக் கிறது. அதன் மூலம் பெரும் மூலதனம் தன்னுடைய வண்டி யில் குட்டி முதலாளித்துவ வகுப்பினரைப் பூட்ட முயலு கிறது. இன்றும் இந்தக் கருத்து பழமைவாதக் கொள்கையில் நேற்று வகித்த பங்கை விடக் குறைவான பங்கை வகிக்க வில்லை.

மறு புறம் ''அரசிற்கு எதிரான'' மனப்பாங்குகள் முத லாளி வர்க்கத்திற்குள்ளான ஒரு போராட்டத்துடனும் அரசு ஆட்சியதிகார இயந்திரத்தில் மிக அனுகூலமான பதவிகளை வகிப்பதில் மற்ற பூர்ஷ்வா கணங்களும் உட்குழுக்களும் வெற்றி பெற்றால் அவற்றுடனான போராட்டத்தில் தாங்கள் தோற்கடிக்கப்படலாம் என்று முதலாளி வர்க்கத்தின் சில பகுதிகளுக்கும் கோஷ்டிகளுக்கும் ஏற்படுகின்ற பயத்துட னும் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாகக் கூறுகையில் பெரும் மூலதனத்தின் மீதான

அரசுக் கட்டுப்பாட்டின் எந்த வடிவமும், முதலாளிகள் அதைத் தவிர்க்க முடியாத ஒன்ருகக் கருதி அதற்குப் பணிந்து போகத் தயாராக இருந்தாலும், அவர்களுடைய அனுதாபத்தைப் பெற முடியாது. வியாபாரம் எனில் வியாபாரம் தான். தொழிலதிபர்களும் வியாபாரிகளும் வெளியாரிடமிருந்து எப்பொழுதும் எதையாவது மறைக்க வேண்டியிருக்கிறது. சிறு தொழிலதிபர்களை விட ஏகபோக உயர் குழாமின் விஷயத்தில் இது மேலும் உண்மையாகவுள்ளது.

பொருளாதார நிகழ்ச்சிப் போக்கில் அரசு தலையீட்டுக்குப் பல ஆண்டுகளாக அனுபவப்பட்டிருக்கிற பல பெரும் தொழிலதிபர்கள் இத்தகைய கொள்கையின் ஆற்றலைப் பற்றியும் பொருளாதாரப் (தொடர்ச்சியாக அதிக இலாபங்களை உறுதிபடுத்தும்) பிரச்சினைகளையோ அல்லது அரசியல் (ஏகபோகங்களின் நலன்களுடன் ஒத்திசைந்த மூலதன—உழைப்பு உறவுகளின் கட்டுப்பாடு) பிரச்சினைகளையோ சமாளிக்கும் பூர்ஷ்வா அரசின் திறமையைப் பற்றியும் அவநம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றனர்.

சில பத்தாண்டுகளுக்கு முன்பாகவே, பொருளாதார விவகாரங்களில் ''அதீதமாக'' அரசு தலையிடுவதற்கு எதிரான மூலச்சிறப்புள்ள மிதவாத மறுப்புகள் பூர்ஷ்வா பொருளாதார விஞ்ஞானத்தில் நவீன மூலச்சிறப்புள்ள அல்லது நவீன மிதவாதமென்று அழைக்கப்பட்ட போக்காக மாற்றமடைந்தன என்பது தற்செயலானதல்ல. ஆனல் இன்று இப்போக்கு முக்கியமாக சில பெரும் மூலதன கோஷ்டிகளின் நலன்களை வெளிப்படுத்துகிறது. ''மார்க்கெட் பொருளாதாரத்தில்'' அரசு தலையீட்டை விமரிசிக்கும் பொழுது, இத்தகைய தலையீடு இல்லாமல், மிகவும் நிலையற்றதாக இருக்கும் மார்க்கெட் பொருளாதாரத்திற்கு அரசு ஆதரவு இல்லாமல் பொருளாதார ''வளமையைப்'' பற்றி நவீன மிதவாதிகள் கூட கற்பனை செய்ய முடியாது. நவீன மிதவாதிகள் ஒட்டுமொத்தமாக அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் நிலைகளைச் சார்ந்திருக்கின்றனர். பொருளாதாரத்தில் ''மிக அதிகமாகக் கழுத்தை நெறிப்பதாக'' அவர்கள் எதைக் கருதுகிருர்களோ அதை மட்டுமே மறுக்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட அம்சங்கள் பெரும் முதலாளிகளுக்கு மத்தியில் நெடுங்காலமாகவே ''அரசிற்கு எதிரான'' மனப்பாங்குகளை ஊட்டி வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆனல் தற்கால வளர்ச்சி அரசின் பாத்திரம் அதிகரித்து வருவதைப் பற்றி சில பெரும் முதலாளி வர்க்க கோஷ்டிகள் ''எச்சரிக்கையான'' மனப்போக்கைப் பின்பற்றும் புதிய போக்குகளையும் சூழ்நிலைகளையும் உண்டாக்குகிறது. இவை முதலாளித்துவத்தின் முழு அமைப்பின் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் நிலையற்ற தன்மை, உலக அளவிலும் தேசிய அளவிலும் பெரும் மூலதனத்தின் அரசியல் நிலைகள் இன்னமும் அதிகமாக பலவீனப்படுதல் ஆகியவற்றின் விளைவுகளாகும். பல முதலாளித்துவ நாடுகளில் மிக வலிமையான பூர்ஷ்வா கட்சிகள் சமூக-ஜனநாயகவாதிகளால் ஆட்சியதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கும் நிலைமையில், பிற நாடுகளில் கம்யூனிஸ்டுகள் அடங்கிய இடதுசாரி சக்திகளின் கூட்டணியால் அரசாங்கங்கள் அமைக்கப்படலாம் என்ற உண்மையான வாய்ப்பைக் கூட எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற நிலைமையில் செல்வாக்குள்ள ஏகபோக கோஷ்டிகள், தங்களுடைய நலன்களைப் பணிவோடு நிறைவேற்றுகின்ற ஒன்ருக இருக்கும் என்று அரசிடம் நம்பிக்கை கொள்ளவில்லை என்ற உண்மையை இந்தப் போக்குகளும் சூழ்நிலைகளும் பிரதிபலிக்கின்றன.

உண்மையில் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியே, ஆளும் வர்க்கத்தின் மிகவும் நெடிது நோக்கும் பார்வையுடைய பிரதிநிதிகளுக்கும் செல்வாக்கு மிக்க அரசியல் சக்திகளுக்கும் கவலை தரும் நிலைக்கு முதலாளித்துவ சமுதாயத்தை இட்டுச் செல்லுகிறது.

முதலாவதும் முன்னதுமாக இது சில தொழிற்சாலைகளையும் பொருளாதாரத்தின் மொத்த கிளைகளையும் தேசியமயமாக்கும் பிரச்சினைக்குப் பொருந்துகிறது. தேசியமயமாக்கல் என்பது அதிகரித்துக் கொண்டே இருக்கும் அவசரப் பிரச்சினையாகும், முதலாளி வர்க்கத்தின் தேவைகளால் அது அதிக அளவில் தூண்டப்படுகிறது.

ஏகபோகங்களின் நலன்களுக்கும் இலாபங்களுக்கும் உச்ச மதிப்புக் கொடுத்து அரசு-ஏகபோக வடிவத்தில் தேசியமயமாக்கல் நிறைவேற்றப்படுகின்ற போதும் கூட அது தனியார் தொழில் முன்முயற்சியின் கோட்பாட்டுக்கு இழுக்கு ஏற்படுத்துகிறது, தனியார் சொத்தின் ''தனிமுதலான மதிப்பு'', அதன் சிறப்பு ஆகியவற்றில் உள்ள நம்பிக்கையை அழிக்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ் அரசு சொத்தானது முதலாளித்துவ சொத்தின் ஒரு வடிவமாகத் தொடர்ந்து இருக்கிறது. ஆனால் புறவயமாக முதலாளி வர்க்கத்தின் ஆதிக்க நிலைகளை அது அரித்தழிக்கிறது. ஏனெனில் தொழில்துறையின் சில பிரிவுகளை அல்லது அவற்றின் உள்ளடங்கிய பகுதிகள் சிலவற்றைத் தேசியமயமாக்குவதானது நம்முடைய காலத்தில் தனியார் சொத்து என்று இருப்பது அவசியமற்றது, ஆதாரமற்றது, எனவே உற்பத்திச் சாதனங்களின் உடைமை வர்க்கம் என்று இருப்பதும் அதைப் போலவே அவசியமற்றது, ஆதாரமற்றது என்ற உண்மையை மேலும் தெளிவாக்குகிறது.

அதனால்தான் பழமைவாதக் கட்சிகளின் செயல்திட்ட அறிக்கைகள் சொத்தைத் தேசியமயமாக்குவது பற்றி மிக அமைதியான அல்லது வெளிப்படையாக சாதகமற்ற தத்துவக்கூறுகளைக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் தேசியமயமாக்குவதை நோக்கி முதலாளித்துவ அரசாங்கங்களால் எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு காலடியும்—மிகவும் பயந்து எடுத்து வைக்கப்படும் காலடியும் கூட—தொழிலதிபர்களின் கடுமையான எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது. '' 'அரசு என்பது' இரவில் காவல் காப்பது என்ற காலத்திற்கு வரலாற்றுச் சக்கரத்தைப் பின் நோக்கி நாம் திருப்பவும் முடியாது, திருப்பப் போவதும் இல்லை; ஆனால் சமுதாயமானது அரசுக் கட்டுப்பாட்டிற்குள் மேலும் மேலும் வந்து கொண்டிருக்கும் ஒரு சோஷலிச சமுதாயத்தை நோக்கிய திசை வழியில் நாம் செல்லவும் முடியாது, செல்லப் போவதும் இல்லை''* என்று ஆஸ்திரிய மக்கள் கட்சியின் தத்துவவாதியான கார்ல் பிஸா என்பவர் ஒப்புக் கொள்ளுகிறார்.

முரண்பாடான சமூக நலன்களைச் சரி ஈடு செய்ய அல்லது வேறு வார்த்தைகளில் கூறினால் முதலாளி வர்க்க ஆட்சியை உறுதிப்படுத்துகின்ற, இது காறும் இருக்கின்ற சமூக நிலையைப் பாதுகாக்கத் திட்டமிடப்பட்ட ஒரு ''சட்ட பூர்வ அரசை'' தங்களுடைய இலட்சியமாகப் பழமைவாதத் தத்துவவாதிகள் அறிவிக்கின்றனர். ஒரு நிலையான ''சமூக சமநிலை''

---

* *Österreichische Monatschefte*, Nr. $^{10}/_{11}$, Oktober/November 1972, S. 8.

என்பது முதலாளித்துவ சமுதாயம் அடைய முடியாத ஒரு கனவாகிக் கொண்டேயிருக்கிறது என்பதை விவரங்கள் ஒவ்வொரு திருப்பத்திலும் காட்டுகின்றன. தனியார் உடைமை உறவுகளின் அமைப்பில் பூர்ஷ்வா நாடாளுமன்றத்துவம் நம்பிக்கை குறைந்து கொண்டே வருகின்ற ஓர் இயந்திரமாகிறது. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் முக்கியமான பூர்ஷ்வா கட்சிகளின் செல்வாக்கு சரிந்து கொண்டே வருவது இதை மிகத் தெளிவாக நிரூபிக்கிறது.

பழமைவாதக் கட்சிகளுக்குள் பீதியும் சீர்குலேவும் விடாப்பிடியாக இருப்பதோடல்லாது புதுப்பிக்கப்பட்ட பலத்துடன் வளர்வது தொடர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில் ஒவ்வொரு பழமைவாதக் கட்சியிலும் பழமைவாதக் கொள்கைகளேக் காலத்தின் உணர்வுடன் ஒத்திருக்கச் செய்ய, இடது பக்கம் மாறுவதற்காக ''நடுநிலேக்கு அருகில்'' இருக்கும்படி அறைகூவும் தீவிரமான போக்குகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

சில முதலாளித்துவக் கட்சிகளின் கொள்கையை ''முதலாளித்துவ எதிர்ப்புக்'' கொண்டதாக முன்வைக்க முயற்சிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது இத்தாலியில் கிறித்துவ ஜனநாயகவாதிகளின் குணும்சமாக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஜெனரல் டெ கோல் காலத்திலிருந்து பிரான்சில் குடியரசு ஆதரவுச் சங்கம் முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையில் உள்ள வளர்ச்சியின் ''மூன்ருவது வழியை'' ஆதரித்துக் கொண்டிருக்கிறது. குடியரசு ஆதரவுச் சங்கத்தின் முக்கியஸ்தரான பி. மெஸ்மேர் தன்னுடைய பிரதம மந்திரிப் பதவிக் காலத்தின் போதே டெ கோலிசத்தின் சார்பாக, ''மூலச்சிறப்புள்ள முதலாளித்துவத்தை நாம் மறுக்கிருேம், மற்ருெரு வழியை, அதாவது 'மூன்ருவது வழியைத்' தேர்ந்தெடுப்பதும் புதிய வாழ்க்கை முறையை உருவாக்குவதும் சாத்தியம் என்று அறிவிக்கிருேம்''* என்று கூறிஞர்.

பழமைவாதப் பிற்போக்கின் நம்பத்தகுந்த காப்பரணை மேற்கு ஜெர்மனியின் கிறித்துவ-ஜனநாயக சங்கத்தின் உறுப்பினர்களுக்கு மத்தியில் கூட ''முதலாளித்துவ எதிர்ப்பு''

* *La Nation*, 11 avril 1973, p. 7.

கோஷங்கள் ஒலிக்கின்றன. இக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான என். பிலும் என்பவர், 1947ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல் கட்சி வேலைதிட்டம், ''ஜெர்மன் மக்களின் ஜீவாதாரமான அரசு மற்றும் சமூக நலன்களுக்கு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு பொருந்தவில்லை'' என்ற கருத்துரையைக் கொண்டிருந்தது என்று வலியுறுத்துகிறார்.* பெரும் கூட்டு கம்பெனிகள் கலைக்கப்படுவது, சில தொழில் துறைகளை (எடுத்துக்காட்டாக உருக்குத் தொழில்துறை) சமூக உடைமையாக்குவது, பாங்குகள் இயங்குவதின் மீது கண்காணிப்பை வலுவாக்குவது, தொழில் நிலையங்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குச் சில உரிமைகள் வழங்கப்படுவது, பிற ஆலோசனைகள் ஆகியவற்றை என். பிலும் தன்னுடைய நூலில் முன்வைக்கிறார்.

முதலாளித்துவ முகாமிற்குள் நடந்து கொண்டேயிருக்கும் அரசியல் போராட்டத்தை இத்தகைய போக்குகள் பிரதிபலிக்கின்றன. இந்த முகாம், இன்னமும் பூர்ஷ்வா கட்சிகளுக்கு வாக்களிக்கிற தொழிலாளர்கள், மத்தியதர வகுப்பினர் ஆகியோரின் பகுதிகளில் மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. கட்சித் தலைமையின் கொள்கையிலிருந்து அவர்களுடைய கருத்துக்கள் மாறுபடுகின்றன. கட்சித் தலைமையானது கட்சியின் ''கீழ்மட்டப் பிரிவினரின்'' கோரிக்கைகளை அடிக்கடி சூழ்ச்சித் திறமையுடன் சமாளிக்கவும் சமரசம் செய்யவும் மென்மேலும் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

சில பழமைவாதக் கட்சிகளில் இடதுசாரி என்று கூறப்படும் பிரிவின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அப்பிரிவின் முக்கியமான பகுதி வழக்கமாக பழமைவாதிகளின் கீழ் இருந்த தொழிற்சங்கவாதிகளையும் கொண்டிருக்கிறது. சில பழமைவாதக் கட்சிகளில், மரபுவழிப்பட்ட கம்யூனிஸ்டு எதிர்ப்பு நிலைகளைத் திருத்திக் கொள்ளவும் அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கேற்பதில் ''வளைந்து

---

* N. Blüm, *Reaktion oder Reform. Wohin geht die CDU?*, Hamburg, 1972, S. 107.

கொடுக்கும்'' அணுகுமுறைக்காகவும் அறைகூவல் விடுவதைக் கேட்கலாம்.

காலத்தின் உணர்வும் மார்க்சிய-லெனினியக் கருத்துக் களின் செல்வாக்கும் பூர்ஷ்வா உலகக் கண்ணோட்டத் தூண் களைத் தகர்த்து அழித்துக் கொண்டிருக்கின்றன. முதலாளித் துவப் பழமைவாதத்தின் தற்போதைய நெருக்கடியானது இந்த நிகழ்ச்சிப் போக்கின் மிகவும் கணிசமான வெளிப் பாடுகளில் ஒன்றாகும்.

## பூர்ஷ்வா சீர்திருத்தவாதம்—
## முதலாளித்துவத்தை ''மேம்படுத்துவதற்கான'' ஒரு வழி

தங்களுடைய கருத்துக்களைத் திருத்தியமைக்கும் கடுமையான போக்கில் பூர்ஷ்வா கோஷ்டிகளாலும் அவர்களுடைய தத்துவ வாதிகளாலும் ஆலோசனை கூறப்பட்ட அரசியல் தொலை நோக்குத் தான் என்ன? அவர்கள் தாங்கிப் பிடிக்கின்ற—அதைப் பாதுகாப்பது அதிக கஷ்டமாகிக் கொண்டிருக்கிறது—சமுதாயத்தின் எதிர் காலத்தை எப்படிப் பார்க்கிறார் கள்?

முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்களுக்குள் வெவ்வேறு போக்குகளுக்கு இடையே ஒரு போராட்டம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்துக்காக ஏங்கு கின்ற தீவிர வலதுசாரிகள், ''ஒழுங்கு'' மற்றும் முற் போக்குச் சக்திகளைத் ''தடுக்கும்'' தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர் என்பது மேலே குறிப்பிடப்பட்டது. சில நாடுகளில் அவர்கள் அதிக செய லூக்கமுடையவர்களாகிக் கொண்டுள்ளனர்.

ஆனால், உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகளின் போக்குத் தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதை அதிக எதார்த்த மான முறையில் உணர்ந்திருக்கும் ஏகபோக மூலதனத்தின் முக்கிய கோஷ்டிகள் தற்போதைய நிலைமையில் அரசியல் பரிணும வளர்ச்சிகளை விரும்புகின்றன. முதலாளித்துவத்தை ''மேம்படுத்துவதைக்'' குறிக்கோளாகக் கொண்ட ஒரு போக்கை அவை அறிவிக்கின்றன.

முன்பு நிதி மற்றும் தொழில்துறை மூலதனத்தின் மிக வலிமையான கோஷ்டிகளின் கருத்து நிலையை வெளிப்படுத்

திய பழமைவாதிகளிலிருந்து பூர்ஷ்வா மிதவாதிகளை வேறு படுத்திக் காட்டிய சீர்திருத்தவாத உணர்வு இன்று முக்கிய ஏகபோக கோஷ்டிகளின் சித்தாந்தத்திலும் அரசியல் போக்கிலும் அதிகமாக ஊடுருவிக் கொண்டிருக்கிறது. இரு சமூக அமைப்புகளின் சமாதான சகவாழ்வின் கீழ் சோஷலிசத்துடனை போட்டியில் சீர்திருத்தவாத வழிகள் மூலம் முதலாளித்துவத்தின் அடிப்படைகளை வலுப்படுத்தலாம் என்று ஏகாதிபத்திய வட்டாரங்கள் நம்புகின்றன. முதலாளித்துவத்தின் ''மரபு வழி மதிப்புகளை உருமாற்றம் செய்தல்'' என்ற கோஷத்தின் கீழ் பெரும் மூலதனத்தின் பிரதான கட்சிகள் ''தாங்களும்-சீர்திருத்தவாதிகள்'' ஆக வெளிவரும்படி இப்பொழுது கட்டாயப்படுத்தப்படுகின்றன.

இயல்பாகவே, முதலாளித்துவத்தின் அதிக உறுதியான ''முன்மாதிரி'' ஒன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு அப்பால் செல்லாத, செல்ல முடியாத பூர்ஷ்வா சீர்திருத்தவாதத்தின் ஆழத்தையும் அகலத்தையும் மிகைப்படுத்தி மதிப்பிடக் கூடாது. மிகவும் நுட்பமான சுரண்டல் முறைகள், உழைப்பைத் தீவிரப்படுத்துதல், வளர்முக நாடுகளை இன்னும் அதிகமாக நவீன காலனி ஆதிக்க வழியில் கொள்ளையிடுதல், பிற முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் முதலாளி வர்க்கம் சீர்திருத்தங்களின் போக்கில் தான் செய்த சலுகைகளுக்கு வட்டியுடன் ஈடுகட்ட முயலுகிறது. முதலாளி வர்க்கத்தின் கரங்களில் சீர்திருத்தவாதம் என்பது முதலாளித்துவத்தைப் பாதுகாக்கப் போராடும் ஒரு வழியாக, தொழிலாளி வர்க்கம், எல்லா உழைக்கும் மக்கள் ஆகியோரின் மீதான முதலாளித்துவ ஆதிக்கத்தின் ஒரு கருவியாக இருக்கிறது. சீர்திருத்தவாதம் என்பது பாட்டாளிகளின் வளர்ந்து வரும் வர்க்கப் போராட்டத்திற்கு முதலாளிகளின் எதிர்ச்செயலாகும். சீர்திருத்தவாதத்தின் உள்ளடக்கம், வீச்சு, அது இருப்பது கூட இந்தப் போராட்டத்தின் போக்கையும் விளைவையும் பொருத்திருக்கும்.

அதே நேரத்தில் சீர்திருத்தவாதம், முதலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பூர்வமான குறுகிய மனப்பாங்கையும் தத்துவார்த்த இயலாமையையும் பிரதிபலிக்கிறது. உண்மையில், சீர்திருத்தவாதத் தத்துவவாதிகள் முதலாளித்துவ சமுதாயத்தின் சில பகுதிகள் அல்லது தன்மைகளை மேம்படுத்துவதையும் முதலாளித்துவத்திற்குச் சில ''திருத்தங்களையும்''

மட்டும் ஆளும் வட்டாரங்களுக்கு வழங்க முடியும்.

இப்பொழுது மிகவும் பரவலாகியிருக்கும் பூர்ஷ்வா கருத்தோட்டங்களுக்கு சீர்திருத்தவாதமே அடிப்படையாகும். இந்தக் கருத்தோட்டங்களை இரு பிரிவுகளாக அதாவது ஒன்று சீர்திருத்தப்பட்ட முதலாளித்துவத்தைப் பற்றிய தத்துவங்களை உள்ளடக்கியதாகவும் மற்றது சோஷலிசத்துடன் முதலாளித்துவம் இணைகின்ற தத்துவங்களை உள்ளடக்கியதாகவும் பிரிக்க முடியும்.

சீர்திருத்தப்பட்ட முதலாளித்துவத்தைப் பற்றிய தத்துவங்கள் தங்களுடைய நம்பிக்கைகளை நிபந்தனையின்றி ''புனிதமான'' முதலாளித்துவ முறையின் மீது வைத்துள்ளன. அவை சோஷலிசத்திற்கு வெளிப்படையாகவே பகைமையாக இருக்கின்றன. அவற்றின் அடிப்படையான உள்ளடக்கம், முதலாளித்துவ அமைப்பு நீடித்து நிலைத்திருப்பதையும் அதற்குப் புத்துயிரூட்டுவதையும் உள்நோக்கமாகக் கொண்ட, ''மேலிருந்து'' வரும் சீர்திருத்தங்களுடன் மக்கள் திரளினர் மீதான சமூகக் கட்டுப்பாட்டினை நெகிழ்ச்சியோடு இணைப்பதாக இருக்கும்.

இந்தக் கருத்தோட்டங்களின் தொகுதியில் ''புதிய எல்லைகளைப்'' பற்றிய (அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்னுளைய ஜனுதிபதி பி. கென்னடி) மற்றும் ''மாபெரும் சமுதாயத்தினைப்'' பற்றிய (அமெரிக்காவின் முன்னுளைய ஜனுதிபதி லி. ஜான்ஸன்) போதனைகள், மேற்கு ஜெர்மனியில் ''உருவாக்கப்பட்ட சமுதாயத்தைப்'' பற்றிய போதனை அல்லது பிரான்சின் ஆளும் வட்டாரங்களால் ஆலோசனை கூறப்பட்ட ''மிதவாத சமுதாயத்தைப்'' பற்றிய போதனை போன்ற முக்கிய பூர்ஷ்வா அரசாங்கங்களின் அதிகாரபூர்வ போதனைகள் பிரபலமானவையாகும். ஆனால் வழக்கமாக இந்த போதனைகளெல்லாம் தங்களை உருவாக்கியவர்களுடன் சேர்ந்து அரசியல் அரங்கிலிருந்து விலகிவிட்டன; அவை வீரியம் இல்லாது இருக்கின்றன என்பதை இது வலியுறுத்தியது.

இதைப் போன்ற எல்லாப் போதனைகளும் முக்கியமாக முதலாளித்துவ சமுதாயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய சீர்திருத்தங்களின் பயன்பாட்டுவாதத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இந்தச் சீர்திருத்தங்களின்

திசையமைவும் வீச்சும் வெவ்வேறு நாடுகளுடைய சமூக மோதல்களின் கூர்மையாலும் அந்தந்த அரசுகளின் நிதிச் சாத்தியப்பாடுகளினுலும் நிர்ணயிக்கப்பட்டாலும் ஆட்சியதிகாரத்திலிருக்கும் ஆளும் வர்க்கத்தின் கோஷ்டிகள், உட்குழுக்களின் நலன்களால் முக்கியமாக நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தப் போதனைகள் சித்தாந்த ரீதியாக மிக உயர்ந்த சூட்சுமத் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. அவை மிக சூட்சுமமானவை என்ற காரணத்தினுலேயே பரவலாகப் பரவியிருக்கின்றதும் மிகவும் விளம்பரப்படுத்தப்பட்டதுமான ஒரு ''சேமநல சமுதாயம்'', ''நுகர்வோர் சமுதாயம்'',''சம வாய்ப்புக்களைத் தரும் சமுதாயம்'' மற்றும் இதர தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. மேலும் சில முதலாளித்துவப் பிரமுகர்களால் சீர்திருத்தப்பட்ட முதலாளித்துவத்தைப் பற்றிய அநேக கூற்றுகள் ஆலோசனைகளாகக் கூறப்பட்டுள்ளன.

''மூலச்சிறப்புள்ள'' முதலாளித்துவம் படிப்படியாக ''மனிதாபிமான'' முதலாளித்துவமாக வளர்ச்சியடைவதைப் பற்றி அமெரிக்க கோடீசுவரரான டி.ராக்பெல்லரின் தத்துவமானது இந்த எல்லாத் தத்துவங்களுக்கும் ஒரு நல்ல உதாரணமாகும். அமெரிக்க ஐக்கிய நாடு தற்போது ''மனிதாபிமானப் புரட்சியில்'' சென்று கொண்டிருக்கிறதென்று ராக்பெல்லர் கூறுகிருர். ஆனல் அது தனியார் தொழில் முன்முயற்சியின் அடிப்படைகளை எவ்விதத்திலும் மீருது. ராக்பெல்லரின் கருத்துப்படி இந்த ''மனிதாபிமானப் புரட்சி'' அமெரிக்க வரலாற்றில் இரு நூற்ருண்டுகளுக்கு மேலாக அடையப் பெருமல் இருந்து கொண்டிருக்கும் சுதந்திர அறிக்கையின் இலட்சியங்களை மெய்மையாக்குவதற்கு முடிவாக இட்டுச் செல்லும் என்பதாகும். ராக்பெல்லர் முதலாளித்துவத்திற்கு எதிரான விமர்சன ரீதியான கூற்றுக்களைக் கூட முன்வைக்கிருர். இவரது கூற்றுக்களுக்கும் அறுபதுக்களின் பிற்பகுதியைச் சார்ந்த ''புதிய இடதுசாரிகளின்'' வாதங்களுக்கும் கூட பொதுவான அம்சங்கள் சில இருக்கின்றன. ஆனல் அவரது ஒரே உள்நோக்கம் அத்தகைய விமர்சனத்தை அமைதியான மற்றும் பாதுகாப்பான வழியில் திருப்புவது என்பதாகும்.

அதைப் போன்ற கருத்துக்கள் பிரிட்டிஷ் கன்சர்வேடிவ்

அரசாங்கத்தின் முன்ளுளைய அமைச்சரான பீட்டர் வாக்கர் என்பவரால் 1973 அக்டோபரில் நடைபெற்ற பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் விரித்துரைக்கப்பட்டன. அவர் தனது உரையில் ''புதிய முதலாளித்துவம்'', ''நாகரிக மான சமுதாயம்'' ஆகியவற்றைப் பற்றி விளக்கமான சொற் சித்திரங்களைத் தீட்டினர்.

அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிற மேற்கத்திய நாடுகளின் உண்மையான நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க் கும் பொழுது இந்த வாதங்களெல்லாம் கடுமையான வஞ்சப் புகழ்ச்சியாக ஒலிக்கின்றன. ''மனிதாபிமானப் புரட்சி'' மிகவும் உச்ச எல்லையிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் இதுவரை கண்டிராத பணவீக்கம், வாழ்க்கைத் தரங்களின் பெரும் வீழ்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. ''நாகரிக மான சமுதாயம்'', ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகள் கூட அதை அடிக்கடி ஒரு ''நோயாளி சமுதாயம்'' என அழைக்க விரும்புகின்ற அளவிற்கு அதனுடைய லட்சக்கணக்கான குடி மக்களின் தலைவிதிகளை அவமதிப்பதை, ஆழமான ஒழுக்கச் சீரழிவை, குற்றம் மற்றும் போதைப் பொருள்களின் உப யோகம் ஆகியவற்றின் அதிகரிப்பை, உயர் அதிகாரிகளி டையே பதவி இழப்பை, லஞ்சத்தைக் காட்டியிருக்கிறது. உண்மையிலேயே, மேலே கூறியவை எல்லாம் குணமாக்க முடியாத வியாதியின், அமைப்பிலேயே உள்ள கொடிய சாராம்சத்தின் அடையாளங்களாகும்.

பூர்ஷ்வா சீர்திருத்தவாதத் திட்டங்கள் முதலாளித்து வத்தை எவ்வாறு காப்பாற்றுவது, அதே நேரத்தில் வர்க்கப் போராட்டத்தை எவ்வாறு அகற்றுவது அல்லது குறைந்த பட்சம் எவ்வாறு குறைப்பது என்ற ஒரே பிரச்சினையைத் தீர்க்கத் திட்டமிடப்படுகின்றன. இவ்வாறுக ஆஸ்திரிய மக்கள் கட்சி, வெவ்வேறு வர்க்கங்கள் மற்றும் சமூகக் கோஷ்டிகளின் முரண்பட்ட நலன்களைச் சமரசப்படுத்தும் ''சமூக ஒருங்கிணைப்பின்'' கருத்தோட்டத்தை ஆலோசனை யாகக் கூறியிருக்கிறது. ''சமநிலையானவர்களின் சமுதாயத் தினைப்'' பற்றிய தத்துவத்தின் நூலாசிரியர்களைப் போலல் லாது, ஆஸ்திரிய மக்கள் கட்சியின் சித்தாந்தவாதிகள் ''பங் காளிகளின் சமுதாயம்'' என்ற ஒன்றைப் பற்றி பேசுகிருர் கள். அந்தச் சமுதாயத்தில் முதலாளியும் தொழிலாளியும்

ஒருவருக்கொருவர் ''பரஸ்பரம் குறையை இட்டு நிரப்பிக்'' கொள்ள வேண்டும். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான மோதல்கள் ''சமூக ஒற்றுமையின்'' அடிப்படைகளை மீறுத வெறும் ''விவரங்களாகவே'' இருக்கும்.

ஆஸ்திரியக் கருதுகோள் உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான உறவுகளில் ''சமூகக் கட்டுப்பாடு'' பற்றிய ஒரு லட்சியத் திட்டத்தை, வர்க்க மோதல்களை முதலாளி வர்க்கத்திற்கு அபாயமில்லாதவையாகச் செய்யும் ஒரு திட்டத்தைத் தேடுகிறது. இதில் புதியது ஒன்றுமில்லை. கடந்த நூற்ருண்டில் பூர்ஷ்வா அரசியல்வாதிகளும் தத்துவவாதிகளும் இதையே செய்ய முயன்றனர்.

மேற்கட்டுக்கோப்பை மட்டுமல்லாது அடித்தளத்தையும் சீர்திருத்தவும் அதாவது முதலாளி வர்க்கத்தின் மேலுள்ள அக்கறையில் முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே சமூக உறவுகளின் தன்மையை ''மேம்படுத்தவும்'' ஆலோசனைகள் கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆலோசனைகள் ஐம்பதுக்களில் ''மக்கள் முதலாளித்துவம்'' என்றழைக்கப்பட்ட கருத்தைக் குறிக்கின்றன. இப்பொழுது அதனுடைய ஆதரவாளர்கள் அதற்கு ''உடைமையாளர் ஜனநாயகம்'', ''மூலதனத்தை ஜனநாயகப்படுத்துதல்'' இதரவை, போன்ற மிகக் கவர்ச்சிகரமான மற்ற பெயர்களைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். பங்குகளில் சிலவற்றைக் கூலித்தொழிலாளர்களுக்கு விற்பதன் மூலமாகவோ அல்லது வேறுவழிகளிலோ அவர்களை இலாபத்தின் ''கூட்டுச் சொந்தக்காரர்களாக'' அறிவிப்பதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தி முறையின் செயலூக்கமான ஆதரவாளர்களாகச் செய்வது இந்தக் கருத்தின் சாராம்சமாகும். இவ்வாறுக, பிரான்சில் குடியரசு ஆதரவுச் சங்கத்தால் ஆதரிக்கப்பட்ட ''பங்கேற்கும் தத்துவத்தின் '' படி, இலாபங்கள் எல்லாம் முதலாளிகள், நிர்வாகிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு மத்தியில் பிரிக்கப்பட வேண்டும். இதைப் போன்ற தத்துவங்களை அமுலாக்க அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்கு ஜெர்மனி மற்றும் இதர நாடுகளில் பல முயற்சிகள் செய்யப்படுகின்றன.

விஷயங்களின் ஆதாரத்தைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதற்காக இத்திட்டங்களின் கர்த்தாக்களுக்குப் பாராட்டுத்

தெரிவிக்க வேண்டும். செல்வாக்குள்ள தொழிலதிபர்களும் அவர்களுடைய அரசியல் வக்கீல்களும் அவர்கள் தலைமை வகிக்கும் சமூக அமைப்பின் தலைவிதியானது தங்களுடைய சொந்தத் தலைவிதியைப் போலவே தனியார் சொத்து தொடர்ந்திருப்பதை முற்ற முழுக்கச் சார்ந்திருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

இந்த உணர்வு, இது வரை சுரண்டலின் குறிக்கோளாக இருந்துவந்திருக்கின்ற வர்க்கங்களுக்குச் சாதகமாக சொந்தக்காரர்களின் படையை மிகுதியாக்கும் திட்டங்களுக்குக் காரணமாக இருக்கிறது. இத்தகைய திட்டங்களை உருவாக்கியவர்கள் பாட்டாளிகளை முதலாளித்துவ இலாபங்களில் ஒரு பங்கைப் பெறும் ''சிறு முதலாளிகளாக'' மாற்றுவதன் மூலம் மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டினைச் சமாளிக்க முயற்சிக்கிறார்கள்.

இந்தத் திட்டங்கள் துணிகரமானவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அவற்றில் உள்ள குறைபாடு அவற்றில் எதார்த்தம் இல்லை என்பதே.

''உடைமையாளர் ஜனநாயகத்தைப்'' பற்றிய தத்துவவாதிகளின் கனவு முதலாளித்துவ சமுதாயம் சொத்துடைமையாளர்களை மட்டுமே கொண்டிருக்கிறது என்றிருந்த போதிலும் அது அப்படி இருக்க முடியாது. முதலாளித்துவ சமுதாயமானது, ஒரு சிறுபான்மையான மூலதனச் சொந்தக்காரர்கள் எனவும் தங்களுடைய உழைப்பின் மூலம் உபரி மதிப்பை உருவாக்கி அந்த மூலதனத்தைப் பெருக்கிடும் பெரும்பான்மையானவர்கள் எனவும் பிரிக்கப்பட வேண்டும். இது தான் முதலாளித்துவ சமுதாயம் நிலவுவதற்கு ஓர் அடிப்படையான நிபந்தனையாகும். மூலதனத்தின் ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அதை வலுவாக்குவதற்காகவும் கூலி உழைப்பைச் சுரண்டுதல் தீர்மானகரமான நிபந்தனையாகும். மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கின்ற சுரண்டப்படும் கூலி உழைப்பாளர் படையில்லாது முதலாளித்துவம் நிலைத்திருக்க முடியாது.

இயல்பாகவே, பல்வேறு சூழ்நிலைகள், முக்கியமாக அதிகரித்துக் கொண்டேயிருக்கும் வர்க்கப் போராட்டம் தங்களுடைய இலாபங்களில் ஒரு சிறு பங்கைக் கூலித் தொழிலா

ளர்களுக்கு அளிக்க முதலாளிகளை நிர்ப்பந்திக்கலாம். ஆனால் இது வர்க்கங்களுக்கு இடையிலான, மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான அடிப்படை உறவுகளை மாற்றாது. ஒரு அல்லது சில பங்குகளை வாங்குவதன் மூலம் தொழிலாளி அல்லது அலுவலக ஊழியர் ஒரு தொழில் நிறுவனத்தின் கூட்டுச்சொந்தக்காரராக முடியாது. இத்தகைய ஒரு நடவடிக்கை அவருடைய சமூக அந்தஸ்தையும் மாற்றாது. ஏனெனில் அவரும் அவருடைய குடும்பமும் நிலைத்திருக்க மூலாதாரமாக இருப்பது பெரும் மூலதனத்திற்கு சொந்தமாக இருக்கும் நிறுவனத்தில் தொடர்ந்து அவர் வேலை செய்வதாகும். மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான பகைமை பகுதியளவில் மட்டுமே சிறிது காலத்துக்குத் தளர்த்தப்பட முடியும், ஆனால் ஒருபொழுதும் அகற்றப்பட முடியாது. முதலாளித்துவப் புனருற்பத்தியின் அடிப்படைக் காரணிகளின் விளைவால் மீண்டும் அதிகரிப்பதற்காகவே அது காத்திருக்கும்.

''உடைமையாளர்களுடைய ஜனநாயகத்தின்'' தத்துவவாதிகளே தங்களுடைய கருத்துக்களைச் சமூக நடைமுறையில் மெய்மையாக்குவதிலிருந்து பெறப்பட்ட விளைவுகள் மிகக் குறைவாகவுள்ளன என்ற தங்களுடைய ஏமாற்றத்தை மறைப்பதில்லை. முதன்முதலாக ஐம்பதுக்களின் ஆரம்பத்திலேயே பிரிட்டனில் ஆலோசனை கூறப்பட்ட ''உடைமையாளர் ஜனநாயகத்தின்'' அடிப்படைக் கருத்துக்கள் ஏன் ஒருபொழுதும் ஸ்தூலமான வடிவத்தை எடுக்கவில்லை என்பதை விளக்க முயன்ற ஸ்வீடன் நாட்டுப் பழமைவாதியான எரிக் அன்னர்ஸ் என்பவர் இந்தத் தத்துவக் கூறுகளை மெய்மையாக்குவது முக்கியமாக ஒரு பிரச்சினை என்றும் அதனுடைய பிரதான அம்சத்தில், அதாவது சமுதாயத்தில் தனிநபர் சொத்தின் உச்சநிலை பரவுதலைப் பொறுத்த அம்சத்தில் அது தீர்க்கப்பட முடியாதது என்றும் முடிவுக்கு வந்தார். பல வழக்கறிஞர்கள், சமூக இயலாளர்கள், பிற நிபுணர்களின் நீடித்த ஒத்துழைப்பும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பற்றிய நடைமுறை நிபுணர்களின் அடுத்துவரும் மதிப்பீடும் ஒரு வேளை தொலைவான எதிர்காலத்தில் ''உடைமையாளர் ஜனநாயகத்தைப்'' புகுத்துவதற்கான ஸ்தூலமான நடவடிக்கைகளை நிறைவேற்ற அனுமதிக்கும் என்று இன்னமும் அன்னர்ஸ் நம்புகிறார். தன்னுடைய நம்பிக்கை

யைச் சாத்தியமான அளவு பேணிவளர்க்கக் கூடிய, நடைமுறைப்படுத்தத் தக்க காரணிகள் எதையும் அன்னர்ஸ் குறிப்பிடவில்லே. உண்மையில் ''மக்கள் முதலாளித்துவத்தைப்'' பற்றிய தத்துவம் முதலில் தோன்றியதிலிருந்து கடந்து போன இருபது ஆண்டுகளுக்கு மேலாக இத்தகைய காரணிகள் எதுவும் வெளிவரவில்லே. எதிர்காலத்திலாவது இத்தகைய காரணிகள் தோன்றும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அப்படிச் செய்வதிலிருந்து முதலாளித்துவத்தின் தன்மையே அவற்றைத் தடுக்கும்.

சீர்திருத்தப்பட்ட முதலாளித்துவத்தின் எந்தப் போக்குகளும்—''சமூகக் கட்டுப்பாட்டின்'' பரம்பரைப் போக்கோ அல்லது பின்னுல் தோன்றிய ''மூலதனத்தை ஜனநாயகப் படுத்துதலேப்'' பற்றிய போக்கோ—முதலாளித்துவத்திற்கு ''ஆரோக்கியமான'' சூழ்நிலேயை உருவாக்குவதற்கான திருப்திகரமான ஒரு மாற்று வழியை வழங்க வல்லதல்ல என்பதை நிரூபித்துவிட்டன. அவற்றின் ஆற்றலற்ற தன்மை, அறுபதுக்களில் சீர்திருத்தவாதத் தத்துவங்களின் இன்னுமொரு வகையான, ஒன்றிணேயும் மாதிரியைப் பற்றிய கருதுகோள்கள் பரவுவதற்கான காரணிகளில் ஒன்ருக இருந்தது. சொல்லப் போனுல் அவற்றை உருவாக்கியவர்கள் முதலாளித்துவத்தின் சுத்தமான வடிவத்தில் அதனுடைய உறுதியான தன்மையைச் சார்ந்திருப்பதில்லே. ஒரு கலப்பின இணேப்புச் சமுதாயத்தில் முதலாளித்துவமும் சோஷலிசத்தின் சில அம்சங்களும் இணேவதை நோக்கிய மேலும் ஒரு முன்னேற்றத்தை அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல பூர்ஷ்வா தத்துவஞானிகள், பொருளியலாளர்கள், வழக்கறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்கள் ஆகியோரும் இயற்கை மற்றும் தொழில்நுணுக்க விஞ்ஞானங்களின் பிரதிநிதிகள் பலரும் கூட ஒன்றிணேயும் கோட்பாடுகளேப் பற்றி ஏதாவது ஒரு அளவில் ஒப்புக் கொள்ளுகின்றனர். சமூக விஞ்ஞானத்தின் ஒரே துறையிலுள்ள பலவகை சிந்தனே முறைகள் மற்றும் போக்குகளேச் சார்ந்த பூர்ஷ்வா அறிஞர்களால் இந்தக் கோட்பாடுகள் அடிக்கடி ஒப்புக் கொள்ளப் படுகின்றன.

ஒன்றிணேவதை ஆதரிப்பவர்கள், முதலாளித்துவ நாடுகளும் சோஷலிச நாடுகளும் இப்பொழுது தொழில்துறையின் ஒரே பிரிவுகளில் துரிதமான வளர்ச்சி வீதங்களேயும்

நகரமயமாக்கலில் முன்னேற்றத்தையும் மக்கள் தொகையில் அறிவுஜீவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதையும் காட்டு கின்றன என்று வாதிடுகின்றனர். ஒவ்வொரு அமைப்பிலும் உள்ள ஆக்கபூர்வ அம்சங்களைப் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளு தல், எதிர்மறையான புலப்பாட்டை பரஸ்பரம் ஒதுக்குதல் என்ற அடிப்படையில் சோஷலிச சமுதாயமோ அல்லது முதலாளித்துவ சமுதாயமோ இல்லாத ஒரு புதிய சமு தாயம் தோன்றிக் கொண்டிருக்கிறது என்ற அவர்கள் கூறு கின்றனர். இந்த சமுதாயமானது ஒரு வகை ''வளர்ச்சி யுற்ற தொழில்துறை சமுதாயமாகவோ'' அல்லது ''தொழில் துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய சமுதாயமாகவோ'' இருக்கும். இத்தகைய சமுதாயத்தின் முன்மாதிரிகள் பல மேற்கு நாடுகளில் முதலாளித்துவ சித்தாந்தவாதிகளால் முன்வைக்கப்படுகின்றன. ஏதாவது ஒருவகை தேசிய திட் டத்தின் கட்டுக்கோப்பிற்குள் ஒரு வகையில் செயல் புரியும் தனியார் தொழிலூக்கம் வளம் பெறுவதே இந்த முன் மாதிரிகள் எல்லாவற்றின் சாராம்சமாகும்.

சோஷலிசத்தையும் முதலாளித்துவத்தையும் ''ஒன்றிணைக் கும்'' தத்துவங்கள் எல்லாவற்றிலும் உள்ள மிக மோசமான குறைபாடு என்னவெனில் இரு முரண்பட்ட கோட்பாடுகளை இணைக்க, அதாவது உற்பத்திச் சாதனங்களைத் தனியார் சொத்தாகக் கொள்ளும் முதலாளித்துவ அடிப்படைக் கோட் பாட்டையும் ஒரு தேசிய பொருளாதாரத் திட்டத்தை அடிப் படையாகக் கொண்ட உற்பத்தி நிர்வாகத்தின் சோஷலிசக் கோட்பாட்டையும் இணைக்க அவைகள் செய்யும் முயற்சி யாகும். ஒன்றிணையும் தத்துவத்தினுடைய மற்ற கூறுகள் விமரிசனத்திற்கு உட்படத்தக்கவை என்றாலும் எல்லாவற் றிற்கும் மேலாக அதனுடைய விஞ்ஞான அடிப்படையற்ற தன்மையும் கற்பனுவாதமும் இங்கே அம்பலமாகிவிடுகிறது.

இயல்பாகவே, நம்முடைய காலமானது உலக அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளால் வேறுபடுத்திக் காட்டப்படு கிறது. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் இருபதாவது நூற்றாண் டின் இரண்டாவது பாதியில் உலக நாகரிகம் பெற்ற வளர்ச்சி யின் மட்டத்தின் காரணத்தால், குறிப்பாக எலெக்ட்ரா னிக்ஸ், விண்வெளி ஆராய்ச்சி, அணு ஆற்றல் இதரவை களின் யுகத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிடுகின்ற விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் காரணத்தால் நிகழ்கின்றன.

இருப்பினும், மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகள் முதலாளித்துவ மற்றும் சோஷலிச சமுதாயங்களின் சமூகக் கட்டுக்கோப்புகளுக்கு இடையிலான அடிப்படை வேறுபாட்டை அகற்றுவதில்லை, அகற்ற முடியாது. இரு அமைப்புகளுக்கும் இடையிலான அடிப்படை வர்க்க வேற்றுமையை அவை ஒழிப்பதில்லை. இதுவே அவை இணைவதன் சாத்தியப்பாட்டை நீக்குகிறது.

சோஷலிசம், முதலாளித்துவம் இரண்டுமே தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால் சோஷலிசமானது, சோஷலிச சொத்தைச் சர்வாம்சமாக வலுவாக்குதல், சோஷலிச ஜனநாயகத்தின் மிகையான வளர்ச்சியைப் பற்றிய அதனுடைய அடிப்படைக் கோட்பாடுகளின் செயலுக்குரிய வீச்சு மேலும் வளர்ந்து விரிந்திருப்பதன் அடிப்படையில் வளர்கிறது. அப்படியிருக்க, முதலாளித்துவம் அதனுடைய பரிணாமத்தின் போக்கில் உற்பத்திச் சாதனங்கள் தனியார் சொத்து என்று அதனுடைய அடிப்படைக் கோட்பாட்டின் செயலை ஏதாவது ஒரு வழியில் தடுக்க திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை எப்பொழுதையும் விட அதிக அளவில் அடிக்கடி கையாளும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தியைச் சமுதாயமயமாக்கும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கானது ஓர் உயர்ந்த மட்டத்தை அடைகிறது, முதலாளித்துவ உலகத்தை ''ஒரு வகைப் புதிய சமுதாய முறையினுள், முற்றிலும் தடையில்லாப் போட்டியிலிருந்து முற்றும் சமூகமயமாக்கப்படுதலுக்கு மாறிச்செல்வதற்கான இடைநிலைக் கட்டம் ஒன்றினுள் இழுத்துச் செல்கிறது.''*

உற்பத்தியை ஏகபோகமயமாக்குவதும், அரசுமயமாக்குவதும் அதிகரித்துக் கொண்டேபோவதுடன் உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவது அதிகரித்துக் கொண்டேயிருப்பதும் மேலும் எஞ்சியுள்ள மக்கள் தொகைக்குப் பாதகமாக முதலாளித்துவ இலாபங்கள் வளர்வதும் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து சிக்கலாகிக் கொண்டேயிருப்பதும் இணைகின்றன. உற்பத்திச் சாதனங்களில் தனியார் சொத்தை ஒழித்து

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 67.

தொழிலாளி வர்க்கத்தின் கரங்களில் அரசு ஆட்சியதிகாரத்தை மாற்றும் போது அதே நிலைமைகள் சோஷலிச அடிப்படையின் மீது சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கு மொத்த மக்களின் சேம நலத்தை உறுதி செய்ய ஒரு வாக்குறுதியாகும்.

இதன் தொடர்பில் ''இந்த நவீன முதலாளித்துவத்தின் அடிப்படையில் ஒரு முன்னேற்றப் படியாக அமையும் எல்லா முக்கியமான நடவடிக்கையிலும் சோஷலிசம் நேரடியாகச் செயலில் உருவரை செய்யப்பட்டுள்ளது''* என்று லெனின் எழுதினார்.

உலகம் உண்மையில் ஒரு ஐக்கிய சமுதாயமாக மாறும். எனினும் அது ''ஒன்றிணைந்த'' சமுதாயமாக இருக்காது, ஆனால் மனிதகுலம் தன்னுடைய முற்போக்கு வளர்ச்சியில் அடைந்த எல்லாச் சிறந்த பண்புக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு கம்யூனிச சமுதாயமாக இருக்கும்.

எனினும், ஒன்றிணையும் தத்துவங்கள் சில முக்கியமான புதிய அம்சங்களை பூர்ஷ்வா சித்தாந்தத்திற்குள் புகுத்தின என்பதைக் கவனிக்க வேண்டும். முதலாளி வர்க்கத்தினர் சோஷலிசத்தைப் பற்றிக் கேள்விப்படுவதற்குக் கூட விருப்பமின்றி அது பூர்ஷ்வா ''சுதந்திர உலகத்தின் ஜனநாயகத்துடன்'' அடிப்படையிலேயே முரண்பாடானது, ''கொடுங்கோன்மையானது'', ''சர்வாதிகாரமானது'' என்று சமீபத்தில் தான் வர்ணித்தனர். இன்று அவர்கள் சோஷலிசத்தைப் ''பூண்டோடு ஒழிப்பதைப்'' பற்றிப் பேசாமல் சோஷலிசத்திடமிருந்து சில ''பகுதிகளைக்'' கடன் வாங்கி சோஷலிசத்தை முதலாளித்துவத்துடன் ''இணைப்பதைப்'' பற்றி ஏற்கெனவே பேச ஆரம்பித்துவிட்டனர்.

இவ்வாறாக, ஒன்றிணையும் தத்துவம் பூர்ஷ்வா சித்தாந்தத்தின் ஒரு பின்வாங்கலை, வரலாற்று வளர்ச்சியினால் கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு பின்வாங்கலைக் குறிப்பிடுகிறது.

ஒன்றிணையும் தத்துவங்களின் ஸ்தூலமான வடிவங்களைப் பற்றிப் பேசும் பொழுது, அறுபதுக்களில், மேற்கு நாடுகளில் ஒப்பீட்டடிப்படையில் உயர்ந்த பொருளாதார நடவடிக்கையின் காலகட்டத்தின் போது அவை ''எதிர்காலத்தில்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 378.

நம்பிக்கையுள்ள முதலாளித்துவத்தினைப்'' பற்றிய பல கூற்றுகளாகப் பரவலாகப் பரவின என்பதைக் கூறித்தானாக வேண்டும். சோவியத் ஆய்வாளர்களின் சில நூல்களில் இந்தத் தத்துவங்களைப் பற்றிய ஒரு விரிவான, விமரிசனச் சார்பான பகுத்தாய்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ''தொழில்துறை சமுதாயத்தைப்'' பற்றிய (ஜி. கால்பிரெய்த், வி.ரோஸ்டோவ், ஆர். அரோன்) தத்துவங்கள் ''தொழில்துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய சமுதாயத்தின்'' பல கருதுகோள்களின் தொடர்வரிசையால் பின் தொடரப்பட்டன என்பதை மட்டும் நாம் இங்கே குறிப்பிடுவோம்.

டி. பெல் என்பவரால் முன்மொழியப்பட்ட ''தொழில்துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய சமுதாயத்தைப்'' பற்றிய தத்துவத்தைத் தவிர ஆர். டாரன்டோர்ஃப் என்பவரால் முன்மொழியப்பட்ட ''முதலாளித்துவத்திற்குப் பிந்திய சமுதாயம்'',கே. லிஹ்த்கேம்மின் ''பூர்ஷ்வா அமைப்புக்குப் பிந்திய சமுதாயம்'', கே. போல்டிங்கின் ''நாகரிகத்துக்குப் பிந்திய சமுதாயம்'', எஸ். பிஷெஸின்ஸ்கியின் ''தொழில்நுணுக்கச் சமுதாயம்'', இன்னும் பல அவற்றில் அடங்கும். பூர்ஷ்வா தத்துவவாதிகளுடன் ஜி. மர்குஸே, ஏ. டுரேன் போன்ற ''புதிய இடதுசாரி'' சித்தாந்தவாதிகளும் அவர்களைத் தொடர்ந்து ரோ. கரொடி, ஒ. ஷிக் போன்ற வலதுசாரி திருத்தல்வாதிகளும் ''ஐக்கிய தொழில்துறை சமுதாயத்தைப்'' பற்றியும் ''தொழில்துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய சமுதாயத்தைப்'' பற்றியும் பேசினார்கள்.

இந்தத் தத்துவங்கள் எல்லாம் விவரங்களில் வேறுபட்டாலும் ''தொழில்துறை சமுதாயமானது'' ''தொழில்துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய சமுதாயத்திற்கு'' வழி விட வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டன. அந்தச் சமுதாயத்தில் ஆட்சியதிகாரம் தொழில்நுணுக்க வல்லுநர்களின் வகுப்பைச் சார்ந்ததாக இருக்கும். அதே நேரத்தில் தொழிலாளர்களின் பிரதான குழுவானது, முக்கியமாக உற்பத்தியில் ஈடுபடாமல் ஆனால் சேவையில் ஈடுபட்டு வளம் பெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாவது வகுப்பினரின் பகுதியாகும்.

விஞ்ஞான தொழில்நுணுக்க முன்னேற்றம் முதலாளித்துவத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் என்ற நம்பிக்கைகள் உண்மையாகவில்லை. எழுபதுக்களில் ஏற்பட்ட பொருளாதார அதிர்ச்சிகள் ''தொழில்துறைக்குப் பிந்திய முன்மாதிரிகளின்''

தாக்கத்தை மிக அதிகமாக அரித்தழித்திருக்கின்றன. ''நுகர்வோர் சமுதாயம்'' என்ற இலட்சியத்தின்ஆதார மற்ற தன்மையைப் பற்றியும் மேற்கில் பரவியிருந்த''மதிப்பு களின் நெருக்கடியைப்'' பற்றிய தங்களுடைய குறை மதிப் பீட்டைப் பற்றியும் டி. பெல், ஆர். அரோன் ஆகியோர் அறிக்கைகள் வெளியிட்டனர்.

தொழில்நுணுக்க நிபுணர்களின் ஆட்சியைப் பற்றிய கற் பனுவாதங்கள் வீழ்ச்சியுற்றபோது, எழுபதுக்களின் ஆரம் பத்தில் ''தொழில்நுணுக்கத் தோல்வி மனப்பான்மையை'' உள்ளடக்கிய கருத்தோட்டங்களின் ஒரு புதிய அலை தோன்றி யது. அறுபதுக்களில் எதிர்காலத்தைப் பற்றி ஏற்பட்ட நம்பிக்கைகளுக்கு மாருக, அவற்றில் விஞ்ஞான தொழில் நுணுக்க முன்னேற்றத்தைப் பற்றிய அவநம்பிக்கையும் அதை நோக்கிய முழு நிறைவான பகைமையும் ஊடுருவின, ''தொழில்துறை முன்னேற்றத்துக்குப் பிந்திய'' சமுதாயத் தில் மனிதன் உயிருடன் இருக்கும் சாத்தியப்பாட்டிலேயே அவை நம்பிக்கை இழந்ததைக் காட்டின.

அந்த வேளையில், ரோம் கழகம் என்ற அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்களின் ஒரு கோஷ்டியால் எழுதப்பட்ட **வளர்ச்சிக்கு எல்லைகள்** என்ற நூல் மிகவும் பிரபலமாகியிருந் தது. தற்காலத்திய பொருளாதார வளர்ச்சி வீதங்கள் தொடர்ந்தால், இருபத்து ஒன்ருவது நூற்ருண்டின் மத்தியில் கச்சாப் பொருள்கள், உணவுப் பொருள்கள் மற்றும் சக்தி ஆகியவற்றின் தட்டுப்பாடுகளின் விளைவாலும் பிரதிகூலமான சுற்றுச் சூழல் மற்றும் பிறப்பு இறப்பு சூழ்நிலைகளாலும் நாக ரிகம் முழுமையாக அழியும் என்று அந்த நூல் முன்னறி வித்தது.

அதே பொருளைப் பற்றி இன்னும் பல நூல்கள் பிரசுரிக் கப்பட்டுள்ளன. அவை விவாதிக்கின்ற பிரச்சினைகளில் பல இந்நாளின் உண்மையான பிரச்சினைகளாகும். உலக அள வில் கச்சாப் பொருள்கள், சக்தி, உயிரின மூலாதாரங்கள் ஆகியவற்றைப் பகுத்தறிவுடன் பயன்படுத்துவது உலக வளர்ச்சியின் முக்கியப் பிரச்சினையாகியிருக்கிற ஒரு நிலையை நாகரிகம் தன்னுடைய முற்போக்கு வளர்ச்சியில் அடைந் துள்ளது. இவ்வாருக சுற்றுப்புறத் தூய்மைக்கேடானது பல தேசங்கள் உயிரோடிருப்பதையே ஏற்கெனவே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது, மனிதகுலம் முழுவதின் எதிர்

காலத்தை நேரடியாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், மேலே கூறப்பட்ட கருத்தோட்டங்களின் ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்க்கும் மிக விசேஷமான வழிகளைக் கூறுகின்றனர். விஞ்ஞானம், தொழில்நுணுக்கத்தின் மிக வேகமான வளர்ச்சி என்று கூறப்படுவதிலுள்ள சிரமங்கள் எல்லாவற்றின் மூலாதாரத்தைப் பார்க்கையில் அதனுடைய வேகத்தைக் குறைக்கவோ அல்லது மொத்தமாக நிறுத்தவோ அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர். விஞ்ஞான தொழில்நுணுக்க முன்னேற்றத்தின் பொதுவான தேக்கத்தைக் குறிக்கிற ''பூஜ்ய வளர்ச்சி'' என்ற புதிய சொல் கூட உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்தோட்டங்கள் இரு சமூக அமைப்புகளுக்கிடையிலான வேறுபாடுகளையும் விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் போக்கில் தோன்றுகின்ற பிரச்சினைகளையும் வாழ்க்கை நிலைமைகளை எதிர்மறையாகப் பாதிக்கின்றவை உள்ளிட்ட பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு சோஷலிசம் மற்றும் முதலாளித்துவத்தின் வெவ்வேறு பண்பளவிலான ஆற்றல்களைப் புறக்கணிக்கின்றன என்பது அவற்றின் அடிப்படைத் தவறாகும்.

இந்த நிகழ்ச்சிப் போக்குகள் விஞ்ஞான ரீதியாகவும் தொழில்நுணுக்க ரீதியாகவும் உலகம் முழுவதும் மிகவும் ஒன்று போல் உள்ளன. ஆனால் அவற்றின் சமூகத் தன்மையும் சமூக விளைவுகளும் முதலாளித்துவ நாடுகளிலும் சோஷலிச நாடுகளிலும் அடிப்படையாக வேறுபடுகின்றன. ''தொழில்நுணுக்க அவநம்பிக்கையை'' ஆதரிக்கும் கருத்தோட்டங்கள், நவீன மனிதனுக்குத் தகுதியான வாழ்க்கைத் தரத்தை முதலாளித்துவத்தினால் உலகில் வாழும் மக்களுக்கு வழங்க முடியவில்லை என்பதை வரலாற்று வளர்ச்சியின் சர்வ வியாபகமான, தனிமுதல் விதியாகப் பேசுகின்றன.

இந்தத் தத்துவங்கள் ''தொழில்துறைவாதத்திற்குப் பிந்திய'' தத்துவங்களுக்கு நேர் எதிரிடையானதாகத் தோன்றினாலும், பொதுவாக இவையெல்லாம் ஒன்றிணையும் மாதிரியைச் சார்ந்தவையாகும் இரு தத்துவங்களின் ஆசிரியர்களும் தங்களுடைய கருத்தோட்டங்களுக்குச் சர்வவியாபக முக்கியத்துவம் உள்ளது என்று உரிமை கொண்டாடுகிறார்கள். ஏனெனில் அவை முதலாளித்துவம், சோஷலிசம் இரண்டிற்குமான ஒரு தவிர்க்க முடியாத தொலை நோக்கை முன்ன

தாக நிர்ணயிக்கின்றன என்று அவர்கள் கருதுகிருர்கள். மேலும் நிலைமையைச் சமாளிக்க ஒரு வழியாகப் பரிந்துரைக்கப்பட்ட உபாயங்கள், சமூக மற்றும் இயற்கை மூலவளங்களின் மீதான மையப்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட கட்டுப்பாடு போன்ற சோஷலிச அம்சங்களை உற்பத்திச் சாதனங்களில் தனியார் சொத்துடைமை (மேலே குறிப்பிட்ட முன்மாதிரிகள் எதுவும் இதை ஒழிப்பதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்காத ஒன்று) நீடிக்கின்ற முதலாளித்துவ அம்சங்களுடன் ''இணைக்க'' எடுக்கும் அதே முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன.

சில சமயங்களில் இப்படிப்பட்ட சில தத்துவங்களின் ஆசிரியர்கள் ஒன்றிணையும் கருத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள விரும்பினுலும் சாராம்சத்தில் அவர்களுடைய கருத்துக்கள் ஒன்றிணையும் கட்டுக்கோப்புக்கு அப்பால் செல்வதில்லை.

இந்த ஒன்றிணையும் கருத்தோட்டமானது எந்த பூர்ஷ்வா கோஷ்டிகள், வகுப்பினரின் நலன்களுக்காகச் சேவை செய்கின்றது? இந்தப் பிரச்சினையின் வரலாற்றைப் பின்னேக்கிப் பார்ப்போமேயானுல் ஒன்றிணையும் தத்துவமானது, குட்டி முதலாளித்துவ சமூக-சீர்திருத்தவாதிகள், வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் ஆகியோரால் ஒரு ''மூன்ருவது வழியைப்'' பற்றிய அவர்களுடைய தத்துவங்களோடு அறிமுகம் செய்யப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ''மூன்ருவது வழியைப்'' பற்றிய கருத்துக்கள் இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் நடப்பில் பரவலாயிருந்த ''ஜனநாயக சோஷலிசக்'' கோட்பாட்டில் வெளிப்படலாயின.

இன்று, ஒன்றிணையும் தத்துவம் மிக அதிகமான சக்திமிக்க ஆதரவாளர்களைப் பெற்றுள்ளது. சில பிரதான முதலாளித்துவ நாடுகளில் வலிமையான நிலைகளைக் கைப்பற்றியிருக்கும் பெரும் மூலதனத்தின் செல்வாக்கான கோஷ்டிகளின் பிரதிநிதிகளால் இது விரிவாக விவாதிக்கப்படுகிறது. இயல்பாகவே, கம்யூனிசத்தின் மீது எந்த விதமான அனுதாபமும் இல்லாத, ஆனுல் தீவிரவாதிகளை விட உண்மையான சக்திகளில் இணைப்பைப் பற்றித் தெளிவாகப் புரிந்துள்ள, உலகப் போர் அபாயத்தை விரும்பாத ஏகபோக முதலாளி வர்க்கத்தின் மிதவாதப் பிரிவினரை இவர்கள்

சார்ந்தவர்கள். அமைதியான பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்தப் போராட்டத்தை விரும்புகின்ற இந்த வட்டாரங்கள் தங்களுடைய திட்டங்களை அடைவதற்குத் தங்களை மிகவும் அபாயகரமான வழியில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் வேறு வழியில்லை என்பதைக் காணுகின்றனர். எனவே, இத்தகைய அபாயமான வழியை விரும்பாமலும் இதை விடச் சிறந்த வழி இல்லாததாலும் அவர்கள் சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையில் தவிர்க்க முடியாத சமரசத்தைப் பற்றிக் கூறப்படுபவைகளைத் தங்களுடைய இலாபத்திற்குத் திருப்ப முயற்சிக்கின்றனர்.

நவீன நிலைமைகளில் ஒன்றிணையும் தத்துவமானது, ஏக போக முதலாளி வர்க்கத்திற்குச் சோஷலிசத்தை எதிர்த்துப் போராடும் ஒரு வழியாக இருக்கிறது. அது சித்தாந்த மோசடியின் ஒரு வழியாக, முதலாளித்துவம் சரியான திசையில் போய்க் கொண்டிருக்கிறது என்றும் அது சோஷலிசத்துடன் உணர்வுபூர்வமாக ஒத்திருக்கிறது என்றும் முதலாளித்துவ உலக மக்களை நம்பவைக்கும் ஒரு முயற்சியாக இருக்கிறது. எனவே ஒன்று சேர்ந்து சோஷலிசத்தை நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கி அதனிடமிருந்து பரஸ்பர சலுகைகளை, அதாவது எதார்த்தத்தில் சோஷலிசக் கோட்பாடுகளை மறுப்பதற்கு இட்டுச் செல்லும் சலுகைகளைப் பெறுவதற்கான போலி விஞ்ஞான அடித்தளத்தின் மீது முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்க, முதலாளித்துவ சமுதாயத்தை வலுவடையச் செய்ய எடுக்கும் ஒரு முயற்சி இது. இறுதியாக, சோஷலிச நாடுகளின் மக்களினங்களைச் சித்தாந்த ரீதியாக நிராயுதபாணியாக்கி சோஷலிசக் குறிக்கோள்களில் அவர்களுடைய நம்பிக்கையைக் குலைத்து சோஷலிசக் கோட்பாடுகள் சிலவற்றை மறுதலித்து அதன் விளைவாக எல்லா சோஷலிசக் கோட்பாடுகளையும் மறுதலித்து முதலாளித்துவத்துடன் ''சமரசங்களைத்'' தேட அவர்களை விருப்பங் கொள்ளச் செய்யும் ஒரு வழியாக ஒன்றிணையும் தத்துவம் இருக்கிறது. இது சோஷலிச நாடுகளுக்கு எதிரான சித்தாந்த அழிவு வேலைக்கான தத்துவார்த்த அடித்தளமாக இருக்கிறது.

இது தத்துவத்தைப் பற்றிய, சித்தாந்தத்தைப் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல. ஒன்றிணையும் வகையிலான கருத்தோட்டங்கள் முதலாளித்துவ நாடுகளின் கொள்கையில் கூடப் பிரதிபலிக்கப்படுகின்றன. எனவே அவை குறிப்பிட்ட முக்

கியத்துவத்தைப் பெறுகின்றன. அறுபதுக்களின் மத்தியில் அமெரிக்காவின் முன்னுளைய ஜனுதிபதியான லி. ஜான்ஸனுல் முன்வைக்கப்பட்ட, சோஷலிச நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையில் ''பாலங்கள் அமைத்தல்'' என்ற கொள்கை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

வெவ்வேறு சமூக அமைப்புகளுடைய அரசுகளுக்கிடையே பரஸ்பரம் அனுகூலமான உறவுகளை மேம்படுத்தும் ஒரு விஷயமாக மட்டுமே அது இருந்திருக்குமேயானுல் இத்தகைய கருத்தோட்டங்கள் வரவேற்கப்பட முடியும். சோஷலிச நாடுகள் சர்வதேச ஒத்துழைப்பைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு போக்கை உறுதியாகத் தொடர்ந்து பின்பற்றுகின்றன. ஏனெனில் வெவ்வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கிடையே சமாதான சகவாழ்வை மேம்படுத்தும் அந்நாடுகளுடைய பாரம்பரியமான கொள்கைக்கு அது ஒத்திருக்கிறது.

ஆனுல், ''பாலங்கள் அமைத்தல்'' என்ற தத்துவத்தைப் பரப்பியவர்கள் பூர்ஷ்வா கருத்துக்கள், கலாச்சாரம், அரசியல் செல்வாக்கு, பொருளாதார உறவுகள் ஆகியவை சோஷலிச நாடுகளைச் சீர்குலைக்கும் நோக்கங்களுடன் அந்த நாடுகளுக்குள் ஊடுருவும் என்ற உண்மையை இரகசியமாக வைத்துக் கொள்ளவில்லை. சோவியத் யூனியனுடனுன ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் நட்பை அரித்தழிக்கும் முக்கிய நோக்கத்திற்காக மேற்கு நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய சக்திகள் அந்நாடுகளிடையே ஒரு பிளவை உண்டாக்க ஐரோப்பிய சோஷலிச நாடுகளுடனுன தொடர்புகளைப் பயன்படுத்த விரும்பலாம். 1968ல் செக்கோஸ்லொவாக்கியாவின் நிகழ்ச்சிகள் இந்த செயல்தந்திரங்களை நடைமுறையில் நன்கு விளக்கின.

ஐரோப்பாவின் சோஷலிசப் பகுதியையும் முதலாளித்துவப் பகுதியையும் ஒரே ஒரு ''உயர்மட்ட அரசாக'' ஐக்கியப்படுத்தும் ''அட்லாண்டிக் முதல் யூரல் வரையிலான ஓர் ஐக்கிய ஐரோப்பாவைப்'' பற்றிய கருத்து முதல் ''ஐரோப்பியவாதத்தைப்'' பற்றிய மிக சமீபத்திய கூற்றுகள் வரையிலான ''ஐக்கிய ஐரோப்பாவைப்'' பற்றிய வெவ்வேறு கூற்றுகளைப் பொறுத்த வரை ஐரோப்பிய முதலாளி வர்க்கக் கருத்தோட்டங்கள் இதே உணர்வைக் கொண்டிருக்கின்றன. பதட்டத் தணிவு, பாதுகாப்பு, தேசங்களிடையே

ஒத்துழைப்பு ஆகியவற்றுக்காகப் பாடுபடும் சோஷலிச நாடுகளின் கொள்கைக்கு இந்தக் கருத்தோட்டங்கள் விரோதமானவையாகும். மேற்கு நாடுகளில் சில வட்டாரங்களால் பேணி வளர்க்கப்படுகிற ''ஐரோப்பியவாதத்'' திட்டங்கள், சோஷலிச நாடுகளில் சோஷலிசத்தின் சாதனைகளை அழிப்பதையும் ''மேற்கத்திய இலட்சியங்கள்'', ''மேற்கத்திய வாழ்க்கை முறை'' (பூர்ஷ்வா வாழ்க்கை முறை என்று அர்த்தம்) என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ''ஓர் ஐக்கிய ஐரோப்பாவை'' நோக்கி முன்னேறுவது என்ற கோஷத்தின் கீழ் படிப்படியாக அந்த நாடுகளை சோவியத் யூனியனுக்கு விரோதமாக்குவதையும் அரசியல் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தொழில் நிலையங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் இடையே பொருளாதாரப் பிணைப்புகளை மேம்படுத்துவதும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரிப்பதும் ஒன்றிணைவதைக் ''கீழேயிருந்து'' மேம்படுத்தும் என்று சமீப ஆண்டுகளில் பூர்ஷ்வா பத்திரிகைகள் தெளிவான குறிப்புகளை வெளியிட்டன.

மேலும், ஒன்றிணையும் ஆய்வுரையிலிருந்து பூர்ஷ்வா தத்துவவாதிகள் ''சித்தாந்தத் துறையில் நிராயுதபாணி'' அல்லது குறைந்த பட்சம் சித்தாந்தங்களின் சமாதான சகவாழ்வின் தவிர்க்க முடியாத தன்மையை வற்புறுத்துகின்றனர். முதலாளித்துவமும் சோஷலிசமும் ஒன்றுடன் ஒன்று நெருங்கி வருவதால் ''சமரசப்படுத்த முடியாத'' கம்யூனிச சித்தாந்தத்தை சோஷலிசம் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை (அப்பொழுது தான் பூர்ஷ்வா சித்தாந்தம் சோஷலிச நாடுகளுக்குள் ஊடுருவுவதற்கு அவசியமான சுதந்திரத்தைப் பெறும்) என்று இத்தகைய தத்துவங்களின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். பூர்ஷ்வா சமுதாயத்திற்கும் சோஷலிச சமுதாயத்திற்கும் ஒரே ஆன்மீக, கலாச்சார நிலைகள் என்ற நோக்கத்தைப் பற்றிய வெவ்வேறு தோற்றங்கள் சித்தாந்த சகவாழ்வின் ஆதரவாளர்களிடையே பிரபலமாகியுள்ளன. சோஷலிச சமுதாயம் சோஷலிச கலாச்சாரத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பொதுவான மனித கலாச்சாரமாக மாற வேண்டும் என்ற கோரிக்கைகள் இந்தக் கருத்துக்களின் சாரமாகும். இந்தப் பொதுவான மனித கலாச்சாரம் அதனுடைய ஆதரவாளர்களின் வர்ணனைப்படி

நவீன பூர்ஷ்வாக் கலாச்சாரத்தின் மாதிரிக்கு வியக்கத் தக்க முறையில் மிகச் சரியாகப் பொருந்துகிறது.

ஒன்றிணையும் தத்துவத்தின் பல கூற்றுகளின் வேறுபாடுகள் முதலாளி வர்க்கத்திற்குள்ளேயும் இணைக்கப்பட்ட சமூகப் பிரிவினரிடையேயும் உள்ள பல்வேறு கோஷ்டிகளின் அரசியல் மற்றும் சித்தாந்த நிலைகளுக்கு இடையிலான வேறு பாடுகளைப் பிரதிபலிப்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களில் சிலருக்கு ஒன்றிணைந்த சமுதாயமானது சிறிதளவு வர்ணம் பூசப்பட்டு ஒப்பனை செய்யப்பட்ட முதலாளித்துவமாக இருக்கிறது. இடதுசாரி பூர்ஷ்வா மற்றும் குட்டி முதலாளித்துவ சித்தாந்தவாதிகளின் பெரும் கோஷ்டியை உள்ளிட்ட மற்றவர்களுக்கு அது, முதலாளித்துவ சமுதாயத்தில் சமூக சீர்திருத்தங்களின் வழியே மேலும் முன்னேறுவதற்கான முயற்சியாகவுள்ளது.

ஒன்றிணையும் தத்துவங்கள், சித்தாந்தப் போராட்டத்தின் தற்கால கட்டத்தினுடைய பல அடுக்கான, இயக்க வியல் தனிச்சிறப்பியல்பைப் பிரதிபலிக்கின்றன. ஏகாதிபத்தியத்திற்கு அதிக பாதகமாக மாறிக் கொண்டிருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் முயற்சியில் அவை பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

அறுபதுக்களின் ''தொழில்துறைவாதத்திற்குப் பிந்திய'' கொள்கையைப் பற்றிய எதிர்கால நம்பிக்கை அலை பொருளாதார நெருக்கடியால் தகர்க்கப்பட்டது.

மனிதகுலத்திற்கு வரவிருக்கும் இடையூறுகளைப் பற்றிய தொடர்ந்த முன்னறிவிப்புகளால் எழுபதுக்களில் தோன்றிய ''தொழில்நுணுக்க அவநம்பிக்கையைப்'' பற்றிய புதிய அலையானது மேற்கில் நிலவுகின்ற அபாய எச்சரிக்கை, நிச்சய மற்றத் தன்மை ஆகியவற்றை ஆழப்படுத்தியிருக்கிறது. ஆனல் ''தொழில்நுணுக்க அவநம்பிக்கையானது'' ''தொழில் துறைவாதத்திற்குப் பிந்திய'' கொள்கையைப் போலவே இந்த நிலைமையிலிருந்து தப்புவதற்கு ஒரு வழியைக் காட்ட வல்லதல்ல என்பதை நிரூபித்துவிட்டது.

தற்காலத்தில் இரு கருத்தோட்டங்களின் கதம்பவாத இணைப்பாக்கம் மூலமாக ஒரு தீர்வை சில தத்துவவாதிகள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவரான ஏ.டோஃப்லர் 1975ல் வெளிவந்த தன்னுடைய *The Eco-Spasm Report* என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு எழுதி

ஞர்: ''உண்மையில் இன்று நாம் பார்த்துக் கொண்டிருப்பது வெறும் பொருளாதார நெருக்கடியல்ல, ஆனுல் அதை விட ஆழமான ஒன்று, மரபு வழியான பொருளாதாரக் கட்டுக் கோப்பிற்குள் புரிந்து கொள்ளப்பட முடியாத ஒன்று. அதனுல் தான் அதிகமாகத் திகைப்படைந்துள்ள பொருளாதார நிபுணர்கள் 'பழைய விதிகள் இனிமேல் பயன்படாது' என்று குறைகூறுகின்றனர். நாம் பார்த்துக் கொண்டிருப்பது தொழில்துறைவாதத்தின் பொதுவான நெருக்கடி, முதலாளித்துவத்திற்கும் சோவியத் பாணி கம்யூனிசத்திற்கும் இடையிலான வேறுபாடுகளே அகற்றுகிற ஒரு நெருக்கடி, நம்முடைய சக்தி அடித்தளத்தை, நம்முடைய மதிப்பு அமைப்பை, அண்டவெளி, காலம் ஆகியவற்றைப் பற்றிய நமது உணர்வைத் தகர்த்துக் கொண்டிருக்கும் நெருக்கடி. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ருல் பூமியில் தொழில்துறை நாகரிகம் அநேகமாகத் தகர்க்கப்படுகிறது, ஒட்டு மொத்தமாக ஒரு புதிய, நாடகத்தன்மை கொண்ட, வேருன சமூக முறையின் முதல் பகுதி தோன்றுகிறது, அதாவது தொழில் நுணுக்கப் பூர்வமான ஆனுல் தொழில்துறையல்லாத, தொழில்துறைக்கு மேலான நாகரிகம் தோன்றுகிறது.''*

இவ்வாருக, இந்த முறை டோஃப்லர் ''தொழில்துறைக்கு மேலான நாகரிகம்'' என்று பெயரிடுகிற ''தொழில்துறை முன்னேறியதற்குப் பிந்திய சமுதாயத்தைப்'' பற்றிய பழைய முன்னறிவிப்பை நாம் மீண்டும் சந்திக்கிருேம். ஆனுல், பெல்லும் பிஷெஸின்ஸ்கியும் இந்த சமுதாயத்திற்கான மாற்றத்தை ஒரு தடங்கலற்ற பரிணுமமாக, ஏற்கெனவே வளமடைந்துகொண்டிருக்கும் ஒரு ''தொழில்துறை'' முதலாளித்துவத்தை இன்னும் அதிகக் கவர்ச்சிகரமான உயர்நிலேகளுக்குச் செல்லும் இணக்கமான மலேயேற்றமாகப் பார்த்தனர். ''மேலான தொழில்துறை'' கட்டத்திற்கான டோஃப்லரின் அணுகுமுறையானது இப்பொழுது முதலாளித்துவத்தை ஆட்டிக் கொண்டிருக்கும் பொருளாதார மற்றும் அரசியல் எழுச்சிகளின் விளேவு என்று வெளிப்படுத்தப்படுகிறது. ''தொழில்நுணுக்க அவநம்பிக்கை மனப்பான்மை கொண்டவர்களின்'' அருள் வாக்கான முன்னுணர்வுகள் ''மேலான தொழில்துறைவாதத்திற்கு'' மாறுவதற்கான

---

* A. Toffler, *The Eco-Spasm Report*, New York, 1975, p. 3.

ஊக்கங்கள் என்ற டோஃப்லரின் கருத்தோட்டத்துடன் பொருந்துகின்றன.

இனி ஏற்படப்போவதாகக் கருதப்பட்ட முதலாளித்துவத்தின் ''பொற்காலத்தைப்'' பற்றி அறுபதுக்களில் இருந்த ''தொழில்துறைக்குப் பிந்திய கொள்கைவாதிகள்'' அழியா ஓவியம் ஒன்றைத் தீட்ட எல்லாவித முயற்சிகளையும் செய்தனர். ஆனால் ''தொழில்துறைக்கு மேலான நாகரிகத்தைப்'' பற்றிய வருணனை அதைப் போலன்றி குறைவான விவரங்களை உடையதாக உள்ளது என்று குறிப்பிட வேண்டும். டோஃப்லர் சில கூறுகளைப் பற்றி வருணிப்பதற்கு அப்பால் செல்வதில்லை. அக்கூறுகள் அநேகம் அபாய எச்சரிக்கையைக் கொண்டுள்ளன. அவர் எதிர்காலத்தை, மாபெரும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் ராஜ்யமாக, அரசுகளும் தேசங்களும் காலத்திற்குப் பொருத்தமற்றவையாகத் தோன்றுகிற ஒன்றாகப் பார்க்கிறார்.

''மேலான தொழில்துறைவாத'' மாற்றத்தை அடைவதற்கான போர்த்தந்திரத்தினைப் பற்றிய டோஃப்லரின் கூற்றுகள் ''ஜனநாயகத்தின் குறிப்பிடத்தக்கதான இழப்பிற்கு'' இட்டுச் செல்கிற ''பன்னாட்சி நிர்வாகப் பொறியமைவை'' அமைப்பதை எதிர்நோக்குகின்றன. ஒரு ''பன்னாட்டுப் பொருளாதார அமைப்பின்'' மூலம்—பிற தேசங்களால் அல்ல—சில நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு''மேலான காலனியாதிக்கத்தின்''தோற்றத்தினைக் கூட டோஃப்லர் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். இவ்வாறாக டோஃப்லரால் எதிர்நோக்கப்படும் எதிர்கால வளம் மிக ஊக்கமளிப்பதாக இல்லையென்பது தெளிவு. ஆனால் அது முழு விஷயமல்ல.

இதுவரை கண்டிராத வேலையில்லாமையையும் உணவு, சக்தி, கச்சாப் பொருள் ஆகியவற்றின் தட்டுப்பாடுகளையும் கூட ''தொழில்துறைக்கு மேலான நாகரிகம்'' எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று டோஃப்லர் முன்னதாகவே எதிர்நோக்குகிறார்.

அவருடைய கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் உழைப்பையும் இயற்கை மூலவளங்களையும் உலக அளவில் கட்டுப்படுத்துதல், திட்டமிடுதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் தீர்க்கப்படலாம். ஆனால் மீண்டும் அவர், ''மேலான தொழில்துறைக்'' கட்டத்தில் கூட தொடர்ந்து

இருக்கும் தனியார் சொத்தின் அடிப்படைகளைத் தொடு வதில்லை.

டோஃப்லரின் தத்துவம் ஒன்றிணையும் கருத்தோட்டத் தின் பண்புக் கூறுகள் எல்லாவற்றையும் தக்கவைத்துக் கொள்ளுகிறது. அவருடைய கண்ணோட்டத்தில் அது சோஷ லிசம், முதலாளித்துவம் இரண்டையும் சமமாக உள்ளடக்கு கிறது. இருப்பினும், அவர் ஒன்றிணையும் தத்துவவாதிகள் எல்லோரையும் போலவே எந்த ஸ்தூலமான விவாதங்களா லும் தன்னுடைய கூற்றை உறுதிப்படுத்துவதில்லை. ''ஒன்றிணை யும்'' தத்துவத்தின் பிற ஆதரவாளர்களைப் போலவே டோஃப்லரும் இணைக்க முடியாததை இணைக்க முயலுகிறார். அதாவது பொருளாதாரம், பிற வாழ்க்கைத் துறைகள் ஆகியவற்றின் உலகரீதியாக மையப்படுத்தப்பட்ட திட்ட முறையைத் தனியார் சொத்தின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்புடன் இணைக்க முயலுகிறார்.

மொத்தத்தில் பூர்ஷ்வா சித்தாந்தத்தைப் போல் ஒன்றிணையும் தத்துவங்களும் இப்பொழுது நெருக்கடிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவை ஏற்கெனவே முற்றிலும் ஒய்ந்துவிட்டன என்று கருதுவது தவறாகும். ஒன் றிணையும் தத்துவங்கள் மாற்றங்களுக்கு உட்படும் உயிர்ப் பாற்றலையும் திறமையையும் பெற்றுள்ளன என்பதைக் கடந்த இருபது ஆண்டுகள் காட்டுகின்றன.

டோஃப்லரின் தத்துவம் மற்றொரு அம்சத்திலும் குறி யடையாளமாக இருக்கிறது. சமீப காலத்தில் மேற்கு நாடு களில் மிகவும் விரிவாகப் பரவியுள்ள ''தீவிர ஏகாதிபத் தியக்'' கருதுகோள்களின் எண்ணற்ற பதிப்புகளோடு ஏதோ சில பொதுவான அம்சங்களை அது கொண்டிருக்கிறது. லெனின் அவரது காலத்திலேயே ''தீவிர ஏகாதிபத்தி யத்தைக்''கோட்பாட்டளவில் நெறிப்பட்ட விமர்சனத்துக்கு உட்படுத்தினார். ஆனால் நம் காலத்தில் இந்தக் கருதுகோள் கள் புதிய அம்சங்களையும் புதிய தோற்றத்தையும் அடைந்து கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவ உலகத்தில் ஒரு பக்கத்தில் அரசுகளுக்கு இடையிலும் மறுபக்கத்தில் ஏகபோக நிறுவனங்களுக்கு இடையிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு நிகழ்வுப் போக்குகளை பூர்ஷ்வா நிலைகளிலிருந்து விளக்கிக் கூறவும் முன்னறிவிப்பதற்கும் உசிதமான அளவில் இயக்கு

வதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்கு நாடுகளிலிருந்து வெளியாகின்ற நூல்களும் இதழ்களும் பத்திரிகைகளும் ஒரு ''ஒற்றை உலக அமைப்பின்'' ''தேசியத்தைக் காட்டிலும் உயர்ந்த'', ''அரசைக் காட்டிலும் மேன்மையான'' அதிகார அமைப்பின் சாதகங்களை விவாதிப்பதில், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களைப் பற்றியும் உலகப் பொருளாதாரத்தில் அவற்றின் ''ஆக்கபூர்வமான பாத்திரத்தையும்'' புகழ்ந்து பேசுவதில் இன்று எத்தகைய புதுமையும் கிடையாது. ஆகவே சர்வதேச முதலாளித்துவத்தின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலமாகவும் மற்ற நாடுகளின் மீது அதன் சித்தத்தையும் முடிவுகளையும் சுமத்துவதன் மூலமாகவும் முதலாளித்துவ சமூகத்தில் ஏற்பட்டுள்ள கூர்மையான மற்றும் மென்மேலும் ஆழமடைந்து வருகின்ற முரணியல்புகளைத் தீர்க்க முடியும் என்று நம்பப்படுகிறது. ஆகவே உணவு, சக்தி மற்றும் கச்சாப் பொருள்களின் பற்றாக் குறையினால் அல்லது புறச்சூழல் தூய்மைக் கேட்டினால், இதரவற்றினால் ஏற்படக்கூடுமென்று அவர்கள் கருதுகின்ற எதிர்கால உலக நெருக்கடிகளைப் பற்றிய பல விதமான''படப்பிடிப்புகள்'' தயாரிக்கப்படுகின்றன. ''உலக அமைப்பை சர்வதேச ரீதியில் திருத்தியமைப்பது'' தவிர்க்க முடியாதது என்று எடுத்துக் காட்டுவதாக அவற்றின் ஆசிரியர்கள் கருதுகின்ற இந்தப் ''படப்பிடிப்புகள்'', மேற்கு முதலாளித்துவ நாடுகளின் நலன்கள் அனைத்து மனிதகுலத்துக்கு ஜீவாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதைப் போல எடுத்துக் கூறப்படுகின்றன.

இத்திட்டங்களின் ஆசிரியர்கள் மேற்கு நாடுகளில் உண்மையில் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் மத்தியப்படுத்துதல் மற்றும் மூலதனக் குவிப்பு நிகழ்வுப் போக்குகளிலும் செல்வாக்குடைய ஆளும் கோஷ்டிகள் அரசியல் ரீதியில் சர்வதேச முதலாளித்துவ சக்திகளை ஒன்றிணைவதற்குச் செய்கின்ற முயற்சிகளிலும் நம்பிக்கை வைக்க முற்படுகிறார்கள்.

காலப்போக்கில் முதலாளித்துவ ஒருங்கிணைப்பின் முரண்பாடான மற்றும் பிற்போக்குத் தனமான தன்மை மென்மேலும் தெளிவாக வெளிப்படுகிறது. அரசுகளுக்கு இடையிலான அடிப்படையில் வளர்ச்சியடைவதில் இத்தகைய ஒருங்கிணைப்பு மிக அதிகமான சிக்கல்களை எதிரிடுகிறது.

ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (EEC) ஒருங்கிணைப்பு வேகம் குறைந்துவிட்டது. ஏகாதிபத்தியக் கூட்டணிகளை யும் கோஷ்டிகளையும் பலப்படுத்துவதற்கு இனியும் செய்யப் படுகின்ற முயற்சிகள் முதலாளித்துவ அரசுகளில் உள்ள பலம்பொருந்திய சமூக சக்திகளிடமிருந்து தொடர்ச்சியாக எதிர்ப்பைச் சந்திக்கின்றன. பொருளாதார நெருக்கடி என்ற நிலைமையின் கீழ் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலே உள்ள முரண்பாடுகள் கூர்மையடைதல் இந்தக் கடமையை அதிகச் சிக்கலானதாக்குகிறது. முதலாளித்துவ உலகத்தில் அமெரிக்காவின் ஆதிக்கமான பாத்திரம், உதாரணமாக, இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய முதல் பத்தாண்டு களில் இருந்ததைப் போல நிலையானதாகவும் சந்தேகமற்ற தாகவும் இனியும் இல்லாதிருப்பதால் இது அதிகச் சிக்கலான தாகியிருக்கிறது.

இன்று பொருளாதார மற்றும்—குறைந்த அளவுக்கு— அரசியல் ரீதியில் அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் கடமைகளை நிறைவேற்றுவது முதலாளித்துவ உலகத்துக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உண்மையைச் சொல்வ தென்றால், சமீப வருடங்களில் இந்தத் துறையில் கணிசமான விளைவுகள் ஏற்படவில்லை.

ஆகவே மாபெரும் சர்வதேசத் தொழில்துறை மற்றும் நிதித்துறை கார்ப்பரேஷன்களின் சுற்றுவட்டத்துக்குள்ளாக சர்வதேச மூலதனத்தை ஒருங்கிணைக்க அதிகமான முயற்சி கள் செய்யப்படுகின்றன. இந்தத் தலைப்பில் எண்ணற்ற புத் தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன, பலவகையான திட்டங் களும் கருதுகோள்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச ஏகபோகங்கள் மாபெரும் பொருளாதார சக்தி யாகிவிட்டன. உலகத்தின் மொத்த வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்குகளுக்கும் அதிகமான அளவு அவற்றிடம் இருப் பது இதை எடுத்துக்காட்டப் போதுமான ஆதாரமாகும். 1974ல் *L'Express* பத்திரிகை தேசிய வருமானங்கள் மற்றும் மொத்த வர்த்தக அளவுகளின் அடிப்படையில் நூறு நாடுகள் மற்றும் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களின் பட்டியலைத் தயாரித்த பொழுது கார்ப்பரேஷன்கள்தான் அதில் பெரும்பான்மையான இடங்களைப் (51 இடங்களை) பெற்றன; நாடுகள் 49 இடங்களை மட்டுமே கொண்டிருந் தன. மிகப் பெரிய பத்து கார்ப்பரேஷன்கள் ஐ. நா. சபை

யில் உறுப்பினராகவுள்ள மூன்றில் இரண்டு பங்கு நாடுகளின் தனிப்பட்ட தேசிய வருமானங்களுக்கும் கூடுதலான மொத்த வர்த்தக அளவைக் கொண்டிருக்கின்றன.*

முதலாளித்துவப் பொருளாதாரத்தையும் அதோடு சேர்த்து மொத்த பூர்ஷ்வா அமைப்பையுமே நிலையான, நம்பகமான அடிப்படையில்—அதன் சாராம்சத்தை மாற்றுமல் தான்—திருத்தியமைக்கக் கூடிய கருவியாகப் பன்னுட்டுக் கார்ப்பரேஷன்கள் பயன்படும் என்று பல பூர்ஷ்வா பிரமுகர்களும் தத்துவாசிரியர்களும் நம்பிக் கொண்டிருந்தார்கள், இன்னும்கூட நம்பிக் கொண்டிருக்கிறுர்கள்.

அனைத்து மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடிய, தன்னுடைய சொந்த நோக்கங்களைப் பின்பற்றும் பொழுதே மொத்த உலகப் பொருளாதாரத்துக்கும் சேவை செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனம் உலகப் பொருளாதாரத்துக்கு அவசியம், அத்தகைய ஸ்தாபனம் பன்னுட்டுத் தொழில் நிறுவனமாகவே இருக்குமென்று அமெரிக்காவின் பிரபல நிர்வாகவியல் தத்துவாசிரியரான பீட்டர் டிராகெர் 1969ம் வருடத்தில் எழுதினுர்.

இத்தகைய கருத்துக்களை இன்றும் நாம் கேட்க முடியும், ஆனுல் அவை எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கின்றன. அவற்றின் அழுத்தம் வெகுவாகக் குறைந்திருப்பது இன்னும் முக்கியமானதாகும். மறு பக்கத்தில் பன்னுட்டுக் கார்ப்பரேஷன்களைப் பற்றி மென்மேலும் தீவிரமாக விமர்சிக்கப்படுகிறது. அவற்றின் ஆதிக்கம் மனிதகுலத்தின் முன்னேற்றத்துக்கு உதவவில்லை. அது முன்னெப்போதும் கண்டிராத வகையில் தேசியச் செல்வங்களைக் கொள்ளையடிப்பதில் முடிந்திருக்கிறது, தனிப்பட்ட நாடுகளிலும் உலகச் சந்தைகளிலும் பொருளாதாரத் துறையில் ஸ்திரமற்ற நிலைமை அதிகரித்திருக்கிறது, பணவீக்கமும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்குமாறு செய்கிறது, செலாவணி கொந்தளிப்புக்களையும் புறச்சூழல் தூய்மைக் கேட்டையும் நாடுகளின் சுதந்திரம், அரசுரிமைக்கு நேரடியான ஆபத்தையும் ஏற்படுத்துகிறது.

பன்னுட்டுக் கார்ப்பரேஷன்களின் வாய்ப்புக்கள் எல்லையில்லாதவை அல்ல. அவை நவீன முதலாளித்துவத்தின் வரையறைகளுக்கு உட்பட்ட சக்தியினுல் நிர்ணயிக்கப்படுகின்றன.

* *L'Express*, 6-12 mai 1974, p. 30.

அந்த சக்தியும் சுருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கார்ப் பரேஷன்கள் மேலும் வளர்ச்சியடைவதற்கு உலக முழுவதிலும் எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த வளர்முக நாடுகளில் பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களுக்குப் பலமான அடி கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நாடுகள் தங்கள் பொருளாதாரத்திலுள்ள கேந்திரமான துறைகளைத் தேசியமயமாக்கிக் கொண்டிருக்கின்றன, பன்னாட்டுக் கார்ப் பரேஷன்களின் எதேச்சாதிகாரத்தை கட்டுப்படுத்தக் கூடிய மற்ற நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வருகின்றன. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலும் கூட இக்கார்ப் பரேஷன்களின் சுயநலமிக்க, கொள்ளைக்காரப் போக்குகளுக்குப் பொது மக்களுடைய எதிர்ப்பு ஏற்படுவதோடு அரசாங்க வட்டாரங்களிலும் அதிகமான அச்சங்களைத் தூண்டியிருக்கிறது. அதனால் அந்த வட்டாரங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றன. கடைசியாகப் பார்க்கும் பொழுது, அந்நிய ஏகபோகங்களின் ஆதிக்கம் ஒரு அளவைத் தாண்டிவிட்டால் இந்த நாடுகள் சுதந்திரமான முறையில் தங்களுடைய பொருளாதாரங்களை நிர்வகிப்பது அரித்தழிக்கப்படும் என்று *L'Express* என்ற பிரெஞ்சுப் பத்திரிகை எழுதியது. பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களுக்கும் தேசிய அரசுகளுக்குமிடையே சீக்கிரத்திலேயே மோதல் ஏற்படப்போகிறது என்று ஜி. போல் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இன்றைய கட்டத்தின் விளைவாகத் தோன்றியிருக்கும் ''தீவிர ஏகாதிபத்தியக்'' கருதுகோள்களின் மிகவும் சமீப காலப் பதிப்புகள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய அவற்றின் முன்னோடிகளைப் போலவே விஞ்ஞானத்துக்குப் புறம்பானவையாகவும் உண்மைக்கு மாறானவையாகவும் இருக்கின்றன.

1915ம் வருடத்திலேயே லெனின் பின்வருமாறு எழுதினார்: ''எல்லாத் தொழில் நிறுவனங்களையும் எல்லா அரசுகளையும் விதிவிலக்கில்லாமல் ஒற்றை உலக டிரஸ்டுக்குள் கொண்டு வருவதை நோக்கி வளர்ச்சிப் போக்கு செல்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த வளர்ச்சி இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், இப்படிப்பட்ட வேகத்தில், இத்தகைய முரண்பாடுகள், மோதல்கள், கொந்தளிப்புகள்—பொருளாதார ரீதியில் மட்டுமின்றி அரசியல், தேசிய, இதரவை—

மூலம் நடைபெறுவதால் தேசிய நிதி மூலதனங்கள் உலகளாவிய விதத்தில் ஒன்றிணைகின்ற ''தீவிர ஏகாதிபத்தியம்'' ஏற்படுவதற்கு முன்பே, ஒற்றை உலக டிரஸ்ட் ஏற்படுவதற்கு முன்பே ஏகாதிபத்தியம் தவிர்க்க முடியாத விதத்தில் வெடித்துவிடும், முதலாளித்துவம் அதற்கு எதிரிடையானதாக மாற்றப்பட்டுவிடும்.''*

இன்று அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கட்டமைப்பு இன்னும் அதிகமான அளவுக்கு கனமடைந்துவிட்டது. முதலாளித்துவ சமூகத்தில் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அது கீழ்ப்படுத்திவிட்டது, முதலாவதாக, உற்பத்தியின் சமூகமயமாக்கல் மற்றும் மத்தியப்படுத்தும் நிகழ்வுப் போக்கை அது மிகவும் பெரிய அளவுக்கு வளர்த்திருக்கிறது.

ஆகவே, முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையான முரண்பாடாகிய சமூக உற்பத்திக்கும் அந்த உற்பத்திப் பொருளைத் தனிமுறையில் ஒதுக்கிக் கொள்ளுவதற்கும் இடையே உள்ள முரண்பாட்டை அது மிகத் தீவிரமான முனைக்கோடிக்குக் கொண்டு வந்துவிட்டது. பல நாடுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற இராட்சச ஏகபோக நிறுவனங்களடங்கிய குழுக்கள் ஒரு சில கோடீசுவரர்களின் உடைமையாக இருக்கின்றன.

அரசு-ஏகபோக நிர்வாகம் ஓரளவுக்கு மட்டுமே சில பிரச்சினைகளின் தீர்வைச் சுலபமாக்க உதவுகிறது, முதலாளித்துவ வளர்ச்சியின் நாசகரமான விளைவுகளைச் சிறிது காலத்துக்குத் தாமதப்படுத்த உதவுகிறது. அரசுகளுக்கு இடையில் அல்லது ஏகபோகங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு என்ற வடிவத்தில் சர்வதேச மட்டத்தை அடைந்த பிறகு அரசு-ஏகபோக முதலாளித்துவம் சில முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சிப் பாதையில் தோன்றியுள்ள நெருக்கடிகளை வெற்றி கொள்ள முயற்சிகளைச் செய்கிறது. அதன் மூலம் முதலாளித்துவ முரண்பாடுகள் என்ற முறுக்கை இன்னும் சிக்கலாக்கிவிடுகிறது.

இவ்வாறு ஒழுங்குபடுத்துவது மோதலைத் தள்ளி வைக்க உதவலாம், ஆனால் அது ஆழமான பொருளாதார நெருக்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 22, p. 107.

கடிகளையும் சமூக ரீதியான மோதல்களையும் தவிர்க்க முடியாததாகச் செய்துவிடுகிறது.

முதலாளித்துவச் சுற்றுவட்டத்தின் கீழ் விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சி முடிவில்லாதபடி வளர்ச்சி அடையப் போவதில்லை என்பதில் சந்தேகமில்லை. அந்தச் சுற்றுவட்டம் நவீன உற்பத்தியை எந்த அளவுக்குத் தடை செய்கிறது என்பதை எழுபதுக்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மறுபடியும் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டது. நவீன உற்பத்தியின் உலகளாவிய தன்மையும் அளவும் தனி உடைமையின்—அது இராட்சச கார்ப்பரேஷன்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தாலும் — குறுகிய பொருளாதார எல்லைகளுக்குள் பொருந்த மாட்டா.

விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சி தவிர்க்க முடியாத வகையில் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும். விஞ்ஞான தொழில்நுணுக்க வளர்ச்சியின் அடிப்படையான பிரச்சினைகளை முதலாளித்துவத்தின் மூலமாகத் தீர்ப்பதற்காக பூர்ஷ்வா பொருளியலாளர்களும் சமூகவியலாளர்களும் செய்யும் முயற்சிகளால் பலன் ஏற்படப் போவதில்லை.

## ''சித்தாந்தத்தைக் கைவிடுவதா''? அல்லது ''சித்தாந்தத்தைப் பலப்படுத்துவதா''?

பூர்ஷ்வா சீர்திருத்தவாதப் போதனைகள் பூர்ஷ்வா விஞ்ஞானத்தால் அதனுடைய எஜமானரின் சமூகக் கட்டளைப்படி உருவாக்கப்பட்டன. அவற்றின் ஸ்தூலமான உள்ளடக்கம் எவ்வளவு வேறுபாடானதாக இருப்பினும் இந்தப் போதனைகள் ஒரே சித்தாந்த அடிப்படையைக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம், முன்பு போல் தனியார் சொத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் அதே நேரத்தில் வர்க்கப் பகைமையிலிருந்து அதிசயிக்கத்தக்க விதத்தில் விடுதலை பெற்றதாகவும் அதன் விளைவாக சமரசப்படுத்த முடியாத வர்க்கப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றதாகவும் இருக்கும் ஓர் ''இணைக்கப்பட்ட சமுதாயமாக'' முதலாளித்துவ சமுதாயத்தை உருமாற்றம் செய்வதற்கான உபாயங்களைக் காண முயலுகின்றன.

ஆனால் இந்தத் தூய சித்தாந்த போதனைகள் ஐம்பதுக்களிலும் அறுபதுக்களிலும் தோன்றி விஞ்ஞானத்தை மட்டு

மல்லாமல் எல்லா சமூக வாழ்க்கையிலும் ''சித்தாந்தத்தைக் கைவிடுதல்'' என்ற விசேஷமான கோஷத்தின் கீழ் பொது மக்களுக்கு முன்னளிக்கப்பட்டன. ஒரு ''தொழில்துறை'' சமுதாயத்தில், முக்கியமாக ''தொழில்துறை முன்னேறியதற்குப் பிந்திய'' சமுதாயத்தில் சித்தாந்தமானது காலத்திற்குப் பொருத்தமற்ற ஒன்ருக, தேவையற்ற தீங்கான குப்பைகூளமாக அறிவிக்கப்பட்டது. அது ''விஞ்ஞானபூர்வ'' சிந்தனையால், அதாவது ''ஒருதலைப்பட்ச'' சித்தாந்தத்தைப் ''புறவய'' விஞ்ஞானத்திற்கு வழிவிடச் செய்யும் ''சித்தாந்தத்திற்குப் புறம்பான'', ''நடுநிலை'' சிந்தனையால் மாற்றீடு செய்யப்படும்.

சித்தாந்தத்தை ஒழிப்போம்! சித்தாந்தவாதிகள் மற்றும் வெறியர்களின் அலைக்கழிக்கும் கருத்துக்கள் கண்டுபிடிப்புகள், கற்பனைகள் ஆகியவற்றிலிருந்து மனிதகுலம் விடுதலையைக் கோருகிறது. இந்தக் கோஷங்கள் மிலானில் 1955ல் நடைபெற்ற கருத்தரங்கில் பிரகடனப்படுத்தப்பட்டன. அதைச் சித்தாந்தத்தைக் கைவிடுவதற்கான இயக்கத்தின் ஆரம்பமாக மேற்கத்திய ஆராய்ச்சி கருதுகிறது. சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கருத்தரங்கத்திற்கும் இதை நடத்திய ''கலாச்சார சுதந்திரத்திற்கான மாநாடு'' என்னும் ஸ்தாபனத்திற்கும் அமெரிக்க மத்திய உளவுத் துறை (சி. ஐ. ஏ.) நிதியுதவி செய்தது என்பது தெரிய வந்தது.

அதே சமயத்தில் ஆர். அரோன் சித்தாந்தத்தை ''அறிவு ஜீவிகளின் மயக்க மருந்து'' என்று இழிவாகப் பெயரிட்டார். ''சர்வவியாபக செழிப்புடைய அரசு'', ஆட்சியதிகாரம் பரவலாக்கப்படுதல், கலப்பான பொருளாதாரம் மற்றும் அரசியல் பன்மைவாதத்தின் ஓர் அமைப்பிற்கான அவசியம் ஆகியவை போன்ற அந்நாளின் முக்கிய அரசியல் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் மேற்கத்திய அறிவுஜீவிகளின் உயர்குழாம் மத்தியில் ஏற்கெனவே ஒப்பந்தமாகியிருந்ததால் சித்தாந்தம் ஓய்ந்துவிட்டது என்பதை நிரூபிக்க முயற்சிக்கும் ஒரு நூலை பத்தாண்டுகளுக்குப் பிறகு டி. பெல் எழுதினர்.

எஸ். லிப்செட் என்பவர் சமூக அறிவின் ''சித்தாந்தத்தைக் கைவிடுதலை'' ஆதரிக்கையில், மார்க்சியவாதிகள் அரசியல் மற்றும் சட்டபூர்வ மேற்கட்டுக்கோப்பின் மீது பொருளாதார அடித்தளத்தின் செல்வாக்கைப் பற்றி முரண்பாடு

டையவர்களாகவும் அதைக் குறைத்து மதிப்பிடுபவர்களாக வும் இருப்பதாகக் குற்றம் சாட்டினுர். தொழில்நுணுக்க வளர்ச்சியின் மட்டம் உயர உயர சித்தாந்தத்திற்கான தேவை குறையும் என்றும் அதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியானது தவிர்க்க முடியாமல் ஒட்டு மொத்தமாக சித்தாந்தம் எல்லாவற்றிற்கும் முடிவு கட்டும் என்று லிப் செட் வாதிட்டார்.

''நிலையான செழிப்புமிக்க ஜனநாயகங்களுக்குள் வர்க்கப் போராட்டத்தைத் தாங்கிப் பிடிக்க சித்தாந்தமும் மன வெழுச்சியும் இனிமேல் அவசியம் இல்லை'' என்றும் ''...ஜன நாயகபூர்வ வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடக்கும், ஆனுல் அது சித்தாந்தங்கள் இல்லாத, செங்கொடிகள் இல்லாத, மே தின அணிவகுப்புகள் இல்லாத ஒரு போராட் டமாக இருக்கும்''* என்றும் கூறினுர்.

அந்தக் காலத்தில் ''சித்தாந்தத்தின் இறுதி'' சமூகவிய லாளர்களால் மட்டுமன்றி அதிக செல்வாக்குள்ள நபர்களா லும் விவாதிக்கப்பட்டது. உதாரணமாக, 1962ல் அமெரிக்க ஜனுதிபதி ஜான் கென்னடி பின்வருமாறு அறிவித்தார்: ''இன்று நம்முடைய பொருளாதார முடிவுகளில் எது அடிப் படையாக இருக்கிறது என்ருல் பகைமையான சித்தாந்தங் களுக்கிடையே பொதுப் போராட்டம் அல்ல, ஆனுல் நவீன பொருளாதாரத்தின் நடைமுறை நிர்வாகம் தான். நமக்குத் தேவை என்னவெனில், சித்தாந்த சின்னங்களும் காது புளித்துப் போன சொற்களும் அல்ல, ஆனுல் மாபெரும் பொருளாதாரப் பொறியமைவு முன்னேறிச் செல்வதற்குரிய நுட்பவியல் பிரச்சினைகளைப் பற்றிய அதிகமான அடிப்படை விவாதமே.''**

ஐம்பதுக்களும் அறுபதுக்களும் மேற்கு நாடுகளில் உற் பத்தி வளர்ச்சிக்கும் ஒப்பீட்டடிப்படையில் உயர் வேலை வாய்ப்பு நிலைகளுக்கும் மக்கள் தொகையின் பரந்த பகுதி யினரின் மத்தியில் வாழ்க்கைத் தரங்கள் சிறிதளவு உயர் தலுக்கும் குறிப்பிடத்தக்க ஆண்டுகளாகும். இந்த நிலைமை கள் வர்க்கப் போராட்டம் அழியும், குறிப்பாக சித்தாந்தங் களின் போராட்டம் ஆபத்தில்லாத மட்டத்திற்குக் குறைக்கப்

* S. M. Lipset, *Political Man. The Social Bases of Politics*, New York, 1963, pp. 456, 445.

** J. F. Kennedy, *Commencement address at Yale University*, June 1962.

பட முடியும் என்ற நம்பிக்கையை மேற்கத்திய ஆளும் வட்டாரங்களுக்கு அளித்தன.

இந்த அடித்தளத்திலேயே சித்தாந்தத்தைக் கைவிடுதலைப் பற்றிய பழைய மாயைகள் புத்துயிர் பெற்றன. கடந்த நூற்றுண்டில், முதலாளித்துவத்தின் ஏறுமுக வளர்ச்சி அழிவிற்கு வழிவிட்ட போதும் முதலாளித்துவ ஒழுங்குமுறை எந்நாளும் நீடித்திருக்கும் என்ற நம்பிக்கை தூள் தூளான பொழுதும் அவை முதலில் தோன்றின. இருபதாவது நூற்றுண்டில் பூர்ஷ்வா விஞ்ஞானத்தில் ஆதிக்கம் செலுத்திய நேர்க்காட்சிவாத சிந்தனை முறை அப்பொழுதுதான் முதலில் தோன்றியது. சித்தாந்தத்தைக் கைவிடுதல் என்ற கருத்தின் தத்துவஞான வேர்கள் நேர்க்காட்சிவாதத்தில் உள்ளன.

இயற்கை மற்றும் தொழில்நுணுக்க விஞ்ஞானங்களின் மூலம் பெற்ற ''அனுபவ'' விவரங்களையும் முதலாளி வர்க்கம் மிகவும் ஆர்வமுடையதாக இருக்கும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான உடனடி முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் விவரங்களையும் மட்டுமே நேர்க்காட்சிவாதம் அங்கீகரிக்கிறது. நேர்க்காட்சிவாதம் இயற்கை விஞ்ஞானங்களின் கண்டுபிடிப்புகளுக்கு ''விரோதமாக இல்லை'', ஆனுல் இத்தகைய கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒரு உலகக் கண்ணேட்ட முடிவுகளுக்கு அல்லது மிகச் சரியாகச் சொன்னுல் இயக்கவியல் பொருள்முதல்வாத உணர்வுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ''எதிராகவுள்ளது''. நேர்க்காட்சிவாதமானது ''துல்லியமான'' ஆராய்ச்சி முறைகளின் வரையறைகளுக்கு அப்பால் இருக்கின்ற வாழ்வின் எல்லா அம்சங்களையும் விளக்கும் ஏகபோக உரிமையை தயக்கமின்றி மதத்திற்கு அளிக்கிறது.

நேர்க்காட்சிவாதமானது சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் புறவய ஒழுங்குத் தன்மையைக் கோட்பாட்டளவில் மறுக்கிறது. எனவே சமூக வளர்ச்சியைப் பற்றிய ஒரு விஞ்ஞான பூர்வ தத்துவத்தின் சாத்தியப்பாட்டையும் மறுக்கிறது. அது ''அனுபவ சமூகவியலை'' மட்டுமே அங்கீகரிக்கிறது. ''சமூகவியல்'' பரந்த பொதுமைப்பாடுகளை உருவாக்க வல்லதல்ல, நம்பத்தகுந்த வழிகாட்டிகளைக் கொண்டதல்ல. விஞ்ஞான உலகக் கண்ணேட்டம் ஒன்று இருப்பதை அங்கீகரிக்காத நேர்க்காட்சிவாதம் தத்துவஞானத்தை ஒரு விஞ்ஞானமாகக் கருதவில்லை. எல்லா சித்தாந்தங்களும் விஞ்ஞான

அறிவின் வீச்சிற்கு அப்பாற்பட்ட இயக்கமறுப்பு இயலாகும் என்று அது அறிவிக்கிறது. இத்தகைய நேர்க்காட்சிவாதம் முதலாளி வர்க்கத்தின் வர்க்கத் தேவைகளுக்குச் சிறந்த முறையில் பொருந்தியிருக்கிறது. ஏனெனில் ஒரு உண்மையான விஞ்ஞான பூர்வ தத்துவஞானக் கருத்து நிலையிலிருந்து சமூகப் பிரச்சினைகளை ஆராயும் ஓர் அணுகுமுறையானது முதலாளித்துவத்திற்கு எதிர்காலத்தைப் பற்றிய எந்த நம்பிக்கையையும் தரவில்லை.

நேர்க்காட்சிவாத அணுகுமுறை ஒரு முழுமையான உலகத்தினைப் பற்றிய கருத்தை முற்றிலும் இல்லாமற் செய்ய முற்படுகிறது. அது ஒரே ஒரு வரலாற்று நிகழ்ச்சிப் போக்கை எண்ணற்ற ''நாகரிகங்களாக'', ''கலாச்சாரங்களாகத்'' துண்டு துண்டாக்குகிறது. அவற்றில் நவீன ''மேற்கத்திய நாகரிகம்'', அதாவது முதலாளித்துவம் மனிதனுக்கு மிகப் பூர்ணமானதும் தகுதியுடையதுமாகும் என்று இயல்பாகவே அறிவிக்கப்படுகிறது.

ஒரு முழுமையான சமூக நிகழ்ச்சிப் போக்கு இல்லாத ஆய்வுரையிலிருந்து, வரலாற்று முன்னேற்றத்தை மறுப்பதிலிருந்து சமூக வளர்ச்சியில் சோஷலிசம் என்பது வெறும் தற்செயலான நிகழ்ச்சி மட்டுமே என்ற முடிவு—முதலாளி வர்க்கத்திற்கு ஆறுதலளிப்பதும் பிற்போக்குவாதப் பிரச்சாரத்திற்கு வசதியானதுமான முடிவு—தொடருகிறது. அதே உணர்வில் தேசிய விடுதலை இயக்கமானது சமூகப் பொருளாதார மற்றும் வரலாற்று ரீதியாக நிர்மாணிக்கப்படுகிற ஒன்ருக விளக்கப்படாமல் உணர்ச்சிமயமான உளவியல் புலப்பாடாக விளக்கப்படுகிறது.

சமூக நிகழ்ச்சிப் போக்குகளை மதிப்பிடுவதற்கான, நேர்க்காட்சிவாத அகவய, ஆழமற்ற அனுபவ பூர்வமான அணுகுமுறை என்னும் ஊட்டத்தின் மூலம் பன்மைவாதத் தத்துவங்கள் என்றழைக்கப்படுபவை முதலாளித்துவ சமூகவியலில்—குறிப்பாக போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளில்—செழிப்படைந்துள்ளன. விஞ்ஞானத்தின் தேவைகளைச் சந்திக்கிற வரலாற்று வளர்ச்சியினைப் பற்றிய ஒற்றைக் கருத்தை உருவாக்குதல் நேர்க்காட்சிவாத தத்துவக் கூறுகளின்படி ஆரம்பத்திலிருந்தே பொருளற்றதாகும் என்றளவில் உலகக் கண்ணோட்டப் பன்மைவாதம் என்றழைக்கப்படுவது இயல்பான அழியாத விஷயமாக அறிவிக்கப்படுகிறது. இப்பதமானது,

சமூக நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய நேரடியான ஒன்றுக்கொன்று எதிரான விளக்கங்கள் (அவற்றில் ஒவ்வொன்றும் உண்மையானது என்று சம அடிப்படையில் உரிமை கொண்டாடக் கூடியவை) உள்ளிட்ட விரிந்த பல்வகையான கண்ணோட்டங்களின் சகவாழ்வைக் குறிக்கிறது.

இந்தக் கண்ணோட்ட வழியில் பூர்ஷ்வா, குட்டி முதலாளித்துவ, வலதுசாரி திருத்தல்வாதத் தத்துவஞானிகள் உண்மையைப் பற்றிய பன்மைவாதக் கருத்தைக் குழப்புகின்றனர்; பூர்ஷ்வா சமூகவியலாளர்கள் பல்வகை நேரடியான வளர்ச்சியைப் பற்றிய கருத்தை முன்வைத்திருக்கின்றனர்; பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் பொருளாதார வளர்ச்சியை நிர்மாணிக்கும் காரணிகளின் பன்மைவாதத் தன்மையைப் பற்றிய ஆய்வுரையை முன்வைத்திருக்கின்றனர்.

இயல்பாகவே, பொருளாதார வளர்ச்சி, எடுத்துக்காட்டாக, பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு காரணியும் சோதிக்கப்பட வேண்டும். ஆனால் பிற காரணிகள் எல்லாவற்றினுடைய செல்வாக்கின் அளவையும் பரஸ்பர செயலின் வகையையும் தீர்மானிக்கிற முக்கியமான காரணி ஒன்று, அதாவது பொருளாயத நலங்களை உற்பத்தி செய்யும் முறை என்ற காரணியே அது. எனினும், ''காரணிகளின் பன்மைவாதத் தன்மையை'' ஆதரிப்போர்கள் இந்தக் காரணிகள் எல்லாம் சமமான முக்கியத்துவம் உடையதாகவும் உள்ளாற்றல் ரீதியாக ஒத்தவையாக இருப்பதாகவும் கருதுகின்றனர். இத்தகைய அணுகுமுறை வெவ்வேறு சம்பிரதாய முன்மாதிரிகளும் திட்டங்களும் நிர்மாணிக்கப்படுவதற்கு அனுமதிக்கிறது, ஆனால் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் மூலத்தை, உண்மையான குணும்சத்தை அல்லது எதிர்கால வளங்களைப் புரிந்து கொள்ளுவதற்கு உதவி செய்ய முடியாது.

பன்மைவாதக் கருத்து நோக்கிலிருந்து பார்த்தால் மனித குல அறிவின் சாதனைகள் எல்லாம் போட்டியிடுகின்ற கருதுகோள்களின் ஒரு குவியலைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதும் அந்தக் குவியலிலிருந்து ஒவ்வொருவரும் தனக்கு மிகப் பொருத்தமான கருதுகோளைத் தேர்ந்தெடுக்க முடியும் என்பதும் நிரூபணமாகிறது.

மனிதன் பொருள்களின் சாராம்சத்தை அறிந்துகொள்ள வல்லவனல்ல, அவற்றைப் பற்றிய சரியான அறிவைப் பெற்

றிருக்க முடியாது என்ற பூர்ஷ்வா தத்துவஞானத்தில் நிலவும் அகவயக் கருத்துமுதல்வாதக் கருத்தோட்டங்களுடன் சித்தாந்தப் பன்மைவாதம் முழுமையாக ஒத்துப் போகிறது. செயலளவில் பன்மைவாதம் என்பது சமூக வளர்ச்சியின் விதிகளையும் எதிர்கால வளங்களையும் அறிந்து கொள்ள மறுத்தல் என்பதாகும். சமூக நிகழ்ச்சிப் போக்குகளை மதிப்பிடுவதற்கான ஒரு விஞ்ஞான பூர்வ அணுகுமுறையின் சாத்தியப்பாட்டை அது ஒதுக்குகிறது. அது கதம்பவாதத் தன்மையுடையதாகவுள்ளது. ஏனெனில் அது இணைக்க முடியாததை இணைக்க, எதிரிடையான போதனைகளையும் போக்குகளையும் சமரசப்படுத்த முயலுகிறது. கதம்பவாதம் எல்லா நேரங்களிலும் அரசியல் வலுவற்ற தன்மை, ஆன்மீகத் தரக்குறைவு ஆகியவற்றின் சித்தாந்த வெளிப்பாடாக இருக்கிறது. நம்முடைய காலத்தில், பூர்ஷ்வா சமூக சிந்தனையின் எல்லாத் துறைகளும் கதம்பவாதத்தில் தோய்ந்திருக்கின்றன. அதனுடைய வறட்சிக்கும் வலுவற்ற தன்மைக்கும் இது ஒரு நிச்சயமான அறிகுறியாக இருக்கிறது.

இயற்கையைப் பற்றிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட போதனைகளானவை எப்படி இயற்கையை மாற்றுவதற்கான ஓர் அடித்தளமாக சம அளவில் வெற்றிகரமாகப் பணிபுரிய முடியாதோ அதைப் போல சமுதாயத்தை மாற்றுவதைப் பற்றிய ஒன்றுக்கு மேற்பட்ட உண்மையான போதனைகள் இருக்க முடியாது. சமூகத் துறையிலும் ஒரே ஒரு விஞ்ஞான புறவய உண்மை மட்டுமே இருக்கிறது.

இயல்பாகவே, தத்துவார்த்த விவாதங்கள் இல்லாமல், பல்வகை கருத்து நிலைகளை ஒப்பிடாமல் உண்மையைத் தேடுதல் என்பது சாத்தியமில்லை. ஆனால் இந்த விவாதங்கள் வரலாற்றாலும் சமூக நடைமுறையாலும் உறுதி செய்யப்பட்ட விஞ்ஞானக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட வேண்டும். உண்மைக்கும் தவறுக்கும் இடையில் ஒருபொழுதும் சமத்துவம் இருக்க முடியாது.

சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றிய போதனையானது மார்க்சியத்தின் தோற்றத்தால் ஓர் உண்மையான விஞ்ஞானமாகியது. அதிலிருந்து, மனிதகுலமானது சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் சிக்கலான இயக்க ஆற்றலில் தன்னைத் திசையமைத்துக் கொள்ளுவதற்கு மட்டுமல்லாது வரலாற்று

வளர்ச்சியின் போக்குகளையும் கட்டங்களையும் முன்னறிவதற்கும் ஓர் உண்மையான சாத்தியப்பாடு புலப்படுகிறது.

அதற்கு மாருக, பன்மைவாதம் சமூக வளர்ச்சியின் விதிகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் ஆகியவற்றை அறிவதை நடைமுறையில் மறுக்கிறது; சமூக நிகழ்ச்சிப் போக்குகளை மதிப்பிட ஓர் உண்மையான விஞ்ஞான அணுகுமுறையின் சாத்தியப்பாட்டை அது விலக்குகிறது.

முதலாளித்துவத் தத்துவவாதிகள், தங்களுடைய சொந்த முகாமில் உள்ள சித்தாந்தக் குழப்பத்தையும் தங்களுடைய பல தத்துவஞானப் போக்குகளுக்கு மத்தியில் உள்ள தெளிவான முரண்பாடுகளையும் தனியார் சொத்தின் அடிப்படையிலான சமுதாயத்தின் சித்தாந்த வளத்துக்குச் சாட்சியமாக விளம்பரப்படுத்துகின்றனர். தங்களுடைய சொந்த அணியில் நிலவுகின்ற ஆன்மிகக் குழப்பத்தை இயல்பான ஆன்மிகப் போட்டியாக அவர்கள் விளக்குகின்றனர். பூர்ஷ்வா உணர்வின் நெருக்கடியின் கூர்மையையும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் சாராம்சத்தைப் பகுத்தாய்வு செய்ய அதனுடைய கையாலாகாதத் தன்மையையும் பிரதிபலிக்கும் சித்தாந்த முரண்பாடுகள் ஒரு சுதந்திரமான ஜனநாயக சமுதாயத்தின் இன்றியமையாத அறிகுறியாகக் இருக்கின்றன.

''சித்தாந்தத்தைக் கைவிடுதல்'', ''சித்தாந்தவாத எதிர்ப்பு'' ஆகியவற்றை அடைவதற்காக பன்மைவாதத்திலிருந்து ஒரே ஒரு சிறு அடி எடுத்து வைக்கப்பட வேண்டும். ஒரு சித்தாந்தத்தையும் உண்மையானது என்று கருத முடியாவிடில் எந்தச் சித்தாந்தமும் இல்லாமல் காரியமாற்றலாம்; எல்லா சித்தாந்தங்களும் சமம் எனில், அதாவது சமமாகப் பொய்யானவை எனில் சித்தாந்தம் இருக்கிறது என்பது பொதுவாக அர்த்தமற்றது; சித்தாந்தம் என்பது ஒரு மாயையாவது மட்டுமே சாத்தியம் என்ருல் எல்லா மாயைகளும் இல்லாமல் செய்துவிடுவது நல்லதல்லவா?

எதார்த்தத்தில், சித்தாந்தவாத எதிர்ப்பைப் பற்றிய கருத்தோட்டங்களானவை எந்த ஒரு பூர்ஷ்வா போக்கையும் போல் சித்தாந்த பூர்வமானதாகவும் ஒருதலை சார்பானதாகவும் இருக்கின்றன, ஏனெனில் அவை ஒரு வர்க்கத்தின் நலன்களை, அதாவது ஆளும் முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் முற்றிலும் திட்டவட்டமான சமூகப் பணியை நிறைவேற்றுகின்றன.

‘‘சித்தாந்தத்தைக் கைவிடுதல் குலேத்தல்’’ என்ற தத்து வத்தை உருவாக்கியவர்கள் எந்தக் குறிக்கோள்களால் வழி நடத்தப்பட்டாலும் கவலேயில்லே. அதிகாரிகள் வட்டாரங் களில், செல்வாக்குள்ள பத்திரிகைகளில் அவர்கள் தங் களுக்குச் சாதகமான ஆதரவைப் பெறுகின்றனர், ஏனெனில் இந்தக் கருத்துக்கள் பரவுதலானது மக்களே ஓர் உண்மை யான விஞ்ஞானபூர்வ உலகக் கண்ணேட்டத்தைத் தேடு வதிலிருந்து தடுக்க உதவும் என்று முதலாளி வர்க்கம் நம்பு கிறது.

இன்றுள்ள காலாவதியான சமூக உறவுகளின் அமைப்பை அகற்றுவதன் மூலம் ஆன்மிக நெருக்கடியிலிருந்து வெளி வரும் வழியைக் காட்டுகிற புரட்சிகர சித்தாந்தம் மனிதர் களின் உள்ளங்களில் ஊடுருவுவதைத் தடுக்கும் ஒரு பாது காப்பான கேடயத்தின் பங்கை சித்தாந்தத்தைக் கைவிடும் கருதுகோள் நிறைவேற்றுகிறது. சித்தாந்தவாத எதிர்ப் பானது, முதலாளித்துவம் தான் இருப்பதை நியாயப்படுத்து வதற்கான வழியைக் கண்டுபிடிக்க இயலவில்லே என்பதைக் காட்டும் மற்றுமொரு அறிகுறியாக உள்ளது.

அடிப்படையான சமூக நிகழ்ச்சிப் போக்குகளே மதிப் பிடுவதற்கான நேர்க்காட்சிவாத அணுகுமுறை பயனற்ற தாக இருக்கிறது. உள்ளுணர்வுவாத, மெய்மை மறுப்பு சூனியவாத நிலேகளிலிருந்து இந்த நிகழ்ச்சிப் போக்குகளுக்கு அளிக்கப்படும் விளக்கத்தைப் போலவும் நேர்க்காட்சிவாதத் திற்கு எதிரானதாக முதல் தோற்றத்தில் தோன்றும் பிற பகுத்தறிவுவாதத்திற்கு ஒவ்வாத பல கருத்தோட்டங்களே அல்லது வெளிப்படையான இறையியல் கருத்தோட்டங் களேப் போலவும் இந்த அணுகுமுறை பயனற்றதாக இருக் கிறது. இரண்டாவது உலகப் போரின் அதிர்ச்சிகள் மூலம் உயிர்ப்பிக்கப்பட்டதும் வாழ்வின் குறிப்பிட்ட அதிக நுட்ப உணர்வுடைய, பகுத்தறிவுவாதத்திற்கு ஒவ்வாத அம்சங்களே வலியுறுத்துவதுமாக உள்ள இந்தக் கருத்தோட்டங்கள் சமூக நிகழ்ச்சிப் போக்குகளுக்கும் இயற்கை நிகழ்ச்சிப் போக்கு களுக்கும் இடையில் நுழைய முடியாத சுவர் ஒன்றை எழுப் பும் முயற்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில் முந்தியவை‘‘உணர்வு’’,‘‘சித்தம்’’,‘‘உள்ளுணர்வு’’இதரவை களின் செயலின் பிரதிபலிப்புகளாக மட்டுமே பார்க்கப்படு கின்றன. இந்தக் கருத்தோட்டங்கள் உணர்ச்சிமயமான ஒழுக்க

நெறி மறுப்புகளைக் கொண்டு மார்க்சிய-லெனினியத்தின் விஞ்ஞான விளக்கத் தன்மையை எதிர்க்கின்றன. இந்த மறுப்புகள் சூட்சும மனிதாபிமானம், 'நல்லதிற்கும் கெட்டதிற்கும் இடையிலான முடிவிலாப் போராட்டத்தைப் பற்றிய கருத்து, மார்க்சியத்தின் விரோதிகளின் சமூக வர்க்க நிலைகளை வெளிப்படுத்துகிற, ஆனால் உண்மையான விஞ்ஞானத்துடன் எந்த உறவுகளையும் கொண்டிராத தனிமுதலான ஒழுக்கப் படிவங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. அவை விஞ்ஞான பூர்வமற்றவை. ஏனெனில் அவை வாழ்க்கையின் உண்மையான விதிகளைத் தனிமனிதனுக்கு எதிராக நிறுத்துகின்றன; ஏனெனில் அவை மனிதன், சமுதாயம் மற்றும் இயற்கைக்கும் இடையிலான அழிவார்ந்த, நம்பிக்கையற்ற மோதலை உணர்த்துகின்றன.

சந்தர்ப்பம் வரலாறு மற்றும் எல்லா சமூக வாழ்வின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற தத்துவக் கூறை அடிப்படையாகக் கொண்ட நேர்க்காட்சிவாத அனுபவவாதத்திலிருந்து பகுத்தறிவை விட சித்தத்திற்கு முதலிடம் கொடுக்கக் கூடியதும் வாழ்வின் புறவய விதிகளை அங்கீகரிக்காததுமான பகுத்தறிவற்றவாதத்துக்கு ஒரே ஒரு படி மட்டுமே உள்ளது. இவ்வாறாக நேர்க்காட்சிவாதமும் பகுத்தறிவற்றவாதமும் தங்களுடைய உண்மையான சாரத்தில் கருத்துமுதல்வாதத்தின் இரு வடிவங்களாகத் தோன்றுகின்றன. நேர்க்காட்சிவாதம், பகுத்தறிவற்றவாதம் ஆகிய இரண்டும் காரணகாரியத் தொடர்பையும் வரலாற்றுப் பூர்வ நியதிவாதத்தையும் வலியுறுத்துவதற்குப் பதிலாக சந்தர்ப்பத்தின் ஆதிக்கத்தை வலியுறுத்துகின்றன அல்லது சிறப்பாக அனுபவ அறிவை பொதுமைப்படுத்துவதை வலியுறுத்துகின்றன. அகவயத்தன்மைவாதம் பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் அடிப்படையையே அரித்தழிக்கிறது. அதற்கு மிக முக்கியமான விஞ்ஞான அளவுகோலை அளிக்க மறுக்கிறது, சமூக நிகழ்ச்சிப் போக்குகளை அறியும் சாத்தியப்பாட்டினை விலக்குகிறது.

அதே நேரத்தில், இத்தகைய அறிதலின் அவசியம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. மனிதகுலத்தின் பரந்த பகுதியினரைச் செயலுக்குத் தூண்டும் உலக சமூக நிகழ்ச்சிப் போக்குகளின் இதுவரை காணாத வீச்சு, சிக்கலான தன்மை, இயக்க ஆற்றல் ஆகியவை அதைக் கோருகின்றன. புரட்சிகரமான எழுச்சிகள், காலனி ஆதிக்க சாம்ராஜ்யங்களின்

முடிவு, அணு ஆயுதப் போரின் அபாயம், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நெருக்கடி ஆகியவை மனிதகுலத்தின் வளர்ச்சியைப் பற்றிய உலகளாவிய பிரச்சினைகள் மீதும் நாகரிகம், மனிதகுலம் ஆகியவற்றின் எதிர்காலத்தின் மீதும் கவனத்தை ஒருமுனைப்படுத்துகின்றன. விரிவான சமூக மாற்றங்களுக்கு இட்டுச் சென்றிருக்கிற, இட்டுச் செல்கின்ற இயற்கை மற்றும் தொழில்நுணுக்க விஞ்ஞானங்களின் அடிப்படையான கண்டுபிடிப்புகள் தத்துவரீதியாகப் புரிந்து கொள்ளப்படுவது அவசியம்.

இருபதாவது நூற்றுண்டில் அகவயக் காரணிகளின் முக்கியத்துவத்தின் பொதுவான எழுச்சியுடன் சித்தாந்த போதனைகளின் பங்கும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. பல வகையான வேலைத்திட்டங்களின் அடிப்படையிலும் சமூக நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றி தாங்கள் சொந்தமாகப் புரிந்து கொண்டு விளக்குவதன் அடிப்படையிலும் செயல்படுகின்ற அரசியல் கட்சிகள், அரசு மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள், இயக்கங்கள் ஆகியவை இந்த அகவயக் காரணிகளாகும். வர்க்கச் சக்திகளின் அரசியல் போர்த்தந்திரத்தை நிர்ணயிக்கவும் ஒரு பெரிய கட்சிக்கு, ஸ்தாபனத்திற்கு அல்லது சமூகப் போக்கிற்கு ஒரு நீண்டகால நடவடிக்கைப் போக்கை நடைமுறையில் உருவாக்கவும் அவசியம் ஏற்பட்ட உடனேயே சித்தாந்தத்தைக் கைவிடுதல் என்ற கருதுகோள் உண்மையானதல்ல என்பது தெளிவாக நிரூபணமாகிறது.

வர்க்கப் போராட்ட எழுச்சியின் போது மக்கள் திரளினர் மென்மேலும் சித்தாந்தத்தைக் கைவிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று கூறும் எந்தப் பேச்சும் நகைப்பிற்கிடமானதே. முதலாளித்துவத்தின் சித்தாந்த மற்றும் அரசியல் நெருக்கடியானது அரசியல் அக்கறையின்மை, ஆன்மீக இழப்பு, ஒழுக்கச் சரிவு ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லுகிறது என்பது உண்மை. அந்த நெருக்கடி லஞ்சம், குற்றத்தின் வளர்ச்சி, போதைப் பொருளுக்கு மக்கள் அடிமையாதல், பலாத்காரத்தின் வெறி, நச்சிலக்கியம், சுற்றுப்புறத்தைக் கெடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய, எப்பொழுதையும் விட அதிகம் அச்சுறுத்துகின்ற அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

இயல்பாகவே, இந்த வளர்ச்சிகள் எல்லாவற்றிற்குமான

காரணங்களை, பல மேற்கத்திய சமூகவியலாளர்கள் கற்பனை செய்வது போல் ''தொழில்துறை'' நாகரிகத்தின் கேடு களிலோ அல்லது தொழில்நுணுக்கத்தின் ஆதிக்கத்திலோ தேட வேண்டியதில்லை. வியத்நாம் போர், ''வாட்டர்கேட் விவகாரம்'' மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் நிர்வாகத்தினைப் பற்றிய நம்பிக்கையில் ஏற்பட்ட விரிசலின் விளைவாக பகைமையும் நெஞ்சீரமற்ற தன்மையும் பொது வானவையாகியுள்ளன என்று அமெரிக்க தொழிலதிபர்களின் ஏடான *Wall Street Journal* நிலைமையை மிக அடக்கமாக வர்ணித்தது.

எனினும் முதலாளித்துவ உலகில் அரசியலைப் பற்றி அக் கறையற்ற தன்மையும் ஒழுக்கச் சரிவும் நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே உருவாக்குகின்றன. மறு புறம்,மனிதத் தன்மையற்ற முதலாளித்துவ அமைப்பின் மேல் கடுமை யான வெறுப்பு அதிகரித்தல், அரசியல் அனுபவம் அதிகரித்த தோடு சமூகக் கேடுகளின் வேர்களைப் பற்றி நன்றாகப் புரிந்து கொள்ளும் தன்மை ஆகியவை புலப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்குகள் பெரும்பாலும் மறைவாக வுள்ளன. ஆனால் அவை மிக அடிக்கடி வெளித்தோன்றி எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் அமைப்புரீதியான நடவடிக்கைகள் மூலம் தமது சக்தியை உணரச் செய்கின்றன. உலகத்தில் உள்ள ஒவ்வொரு இடத்தையும் போல மேற்கு நாடுகளில் உள்ள மக்கள் திரளினரிடம் சித்தாந்தமயமாதல் என்ற ஒரு செயல் உண்மையாகியிருக்கிறது. பத்திரிகைகளோ அரசியல் கட்சிகளோ அரசாங்கங்களோ இனிமேல் இதைப் புறக் கணிக்க முடியாது.

சமீப ஆண்டுகளில் பிரசுரமான பொது மக்கள் அபிப் பிராய வாக்கெடுப்பின் முடிவுகள் இந்த விஷயத்தில் குறிப் பிடத் தகுந்தவை. எடுத்துக்காட்டாக, 1976ல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இயக்கத்தின் போது வாக்களித்தவர் களில் 57 சதவீதத்தினர், ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி இரண்டும் பெரும் மூலதனத்தின் நலன்களுக்குப் பணி புரிந்தன, உழைக்கும் மக்களின் நலன்களுக்கு அல்ல என்று அறிவித்தனர். 68 சதவீதத்தினர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் இடைவிடாது தேசத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தனர் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். மேலும், எதார்த்தத்தில் அமெரிக்க

அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் மக்களின் தேவைகளைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்று தாங்கள் நம்புவதாக மூன்றில் இரு அமெரிக்கர்கள் கூறினார்கள்.

இவ்வாறாக அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் தங்களுடைய சொந்த நாட்டிலுள்ள மக்களின் உள்ளங்களின் நிலையைப் பற்றிக் கவலைப்படுவதற்கான ஆதாரங்களைக் கணிசமான அளவு பெற்றுள்ளன.

மேற்கு ஐரோப்பாவின் சித்திரமும் இதே மாதிரியானது தான். இளைஞர்கள் மத்தியில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் சில முடிவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இத்தகைய வாக்கெடுப்புகள் சார்பு மதிப்பை மட்டுமே பெற்றவை என்ற போதும் அவை பிரதான போக்குகளையும் மனோபாவங்களின் பரிணாமத்தையும் நன்கு உய்த்துணர ஒரு வாய்ப்பை வழங்குகின்றன. பொதுச் சந்தை நாடுகளில் முதலாளித்துவ நிறுவனங்களின் புள்ளிவிவரங்களின்படிகூட எழுபதுக்களில் இளைஞர்களில் 30 முதல் 35 சதவீதத்தினர் பூர்ஷ்வா வர்க்க அமைப்பின் மீது ஒரு விமர்சன அணுகுமுறையைக் காட்டினார்கள்.

1974ல் மேற்கு ஜெர்மனியில் கோன்ராட் அடினுவரின் நிதி என்னும் ஸ்தாபனம், வாக்களித்த 15 முதல் 30 வயது வரையுள்ள இளம் தொழிலாளிகளில் 70 சதவீதத்திற்கும் மேல் அரசியலில் பெரும் ஆர்வத்தைக் காட்டினார்கள் என்று கூறியது.

இந்த ஆர்வம் முக்கியமாக, முதலாளித்துவத்தின் சமூக உறுதியற்ற தன்மை, திருப்திப்படுத்தப்படாத சமூகத் தேவைகளும் கல்விக்கான கோரிக்கையும், வருவாய்களின் சமமற்ற வினியோகம், உழைக்கும் இளைஞருக்கான வரையறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் ஆகிய எல்லாவற்றிலும் அவர்கள் ஏமாற்றமடைந்தனர் என்ற உண்மையால் தெளிவாக உருவாக்கப்பட்டது.

மற்றொரு மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சி நிறுவனத்தின் விவரங்களின்படி இளம் உழைக்கும் மக்களில் 90 சதவீதத்தினர், தொழிலதிபர்களை முற்போக்கு, ஜனநாயக மற்றும் நியாயமான செயலுக்குத் தகுதியற்ற பழமைவாத சக்தியாகக் கருதுகின்றனர்.

இளைஞர்கள் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு அதிகமான அறிவைப் பெற்றார்களோ அந்த அளவுக்கு சமூகப் பொரு

ளாதார முறையின் மேல் அதிக அதிருப்தி அடைந்தனர் என்றும் அவர்களுடைய பார்வையில் தொழிலதிபர் மென் மேலும் புல்லுருவியாகிக் கொண்டிருக்கிறார் என்றும் சமீப ஆண்டுகள் காட்டுகின்றன என்று இளைஞர் பிரச்சினைகளுக் கான மியூனிக் நிறுவனம் தன்னுடைய 1974ம் ஆண்டு அறிக் கையில் குறிப்பிட்டது. அதிக எண்ணிக்கையிலான இளைஞர் கள் இப்பொழுது இருக்கும் சமூக அமைப்பிற்கான ஒரே மாற்றை பெரும் தொழில் நிலையங்களைத் தேசியமயமாக்கு வதிலும் சோஷலிசத்திலும் காணுகின்றனர்.

சித்தாந்தத்தைக் கைவிடுமாறு வற்புறுத்தும் தத்துவ வாதிகள், செய்முறையாளர்கள் ஆகியோரின் முயற்சிகள் மக்கள் திரளினரின் ஆன்மிக மேம்பாட்டின் நிகழ்ச்சிப் போக் கை நிறுத்தவில்லை, அவர்களுடைய அரசியல் நடவடிக்கையை அழிக்கவில்லை, எதார்த்தத்தைச் சாத்தியமான அளவுக்கு ஆழமாக மதிப்பீடு செய்யும் அவர்களுடைய முயற்சியையும் அவர்களைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண அவர்கள் எடுக்கும் முயற்சியையும் அழிக்கவில்லை. சித்தாந் தத்தைப் பலப்படுத்துவதும் இன்னும் தெளிவாகச் சொன் ஞல் சித்தாந்த பூர்வமாகவும் அரசியல் பூர்வமாகவும் இடது சாரியாக மாறுவதும் உழைக்கும் மக்களிடையேயான முத லாளித்துவ எதிர்ப்பு உணர்ச்சிப் பாங்குகளின் அதிகரிப்பும் அடக்க முடியாதபடி வளர்ந்து கொண்டுள்ளன.

எனவே, இந்த நிகழ்ச்சிப் போக்கில் பங்கு கொள்ள, அதற்குத் தலைமை தாங்க, அதை உண்மையான சோஷலிசத் திற்கு எதிராகவும் மார்க்சிய-லெனினியத்திற்கு எதிராகவும் திசை திருப்ப முதலாளி வர்க்கத்தால் முயற்சிகள் செய்யப் படுகின்றன. எனவே ''சித்தாந்தத்தைப் பலப்படுத்து வதற்கு'', அதாவது முதலாளித்துவத்தைக் காப்பாற்றுவதற் கான செயலுக்கு அழைப்பு விடப்படுகிறது. இந்தத் தடவை ''சித்தாந்தத்தைக் கைவிடுதல்'' என்ற வேடத்தின் கீழ் அல்லாமல் வெளிப்படையாக சித்தாந்த பூர்வமான கோஷத் தின் கீழ் அழைப்பு விடப்படுகின்றன.

முதலாளித்துவத்தைப் பாதுகாத்து வலுவாக்க வேண் டிய அவசியத்தைப் பற்றிய திடநம்பிக்கையை மக்களிடம் எப்படிப் பயனுள்ள வழியில் கற்பிப்பது என்ற கருத்தை மேற்கத்திய நாடுகளில் விஞ்ஞான நூல்களும் பத்திரிகை களும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கின்றன.

1974ல், மேலே குறிப்பிட்ட மியூனிக் நிறுவனமானது, Shell என்னும் சர்வதேசிய எண்ணெய் நிறுவனத்தின் சார்பாகத் தொகுக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டது. அதன் முகவுரையில் ஆசிரியர்கள், இளம் தலைமுறையினரின் உள்ளங்களில் முதலாளித்துவப் பொரு ளாதாரத்தைப் பற்றி ஒரு புதிய சித்திரத்தை உருவாக்கும் பணி ஒரு முக்கியமான பிரச்சினை என்று நேர்மையாக அறி வித்தனர். அவர்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் ஏகபோக, சிலராட்சித் தன்மையை மறைப்பதற்கான அவசியத்தை, முதலாளித்துவத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடை யிலான வெல்ல முடியாத முரண்பாட்டிற்கு முகமூடியிடு வதற்கான அவசியத்தை, பொது மக்கள் சமுதாயம் என் றழைக்கப்படும் முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள வர்க்க சமரசத்தைப் பற்றிய கருத்தைப் பரப்புவதற்கான அவ சியத்தை வலிமையாக வற்புறுத்தினர்கள். முதலாளித்துவ சமுதாயத்தில் அரசு மற்றும் தொழிலதிபர்களின் பய னளிக்கக் கூடிய தனிப்பட்ட பங்கையும் ''பகைமையான கம்யூனிசத்தைப்'' பற்றி உணர்ச்சி ததும்பும் சித்திரத்தைத் தீட்டுவதற்கான அவசியத்தையும் முன் எப்பொழுதையும் விட அதிகமாக மேலே கூறிய ஆராய்ச்சிக் கட்டுரையின் ஆசிரியர்கள் வலியுறுத்தினர்கள்.

முதலாளித்துவத்தின் ''அழியா மதிப்புகளைப்'' பாது காக்கவல்ல, அரசியல் ரீதியாக ஈடுபட்டிருக்கும் மக்களைப் பயிற்சி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிய கருத்தைப் பலவகையான போக்குகளையுடைய பூர்ஷ்வா செய்தித்தாள் கள் ஆதரிக்கின்றன. ஷ்பிரிங்கெருடைய நிறுவனத்திற்குச் சொந்தமான மேற்கு ஜெர்மானிய *Die Welt* என்ற சஞ்சிகை, ''மேல் மட்டத்திலிருப்பவர்களுக்கும் அடி மட்டத்திலிருப் பவர்களுக்கும் இடையில் ஒரு தொடர்பை வழங்கும், சமுதாயத்திற்கு ஆன்மிகக் கட்டுக்கோப்பை அளிக்கும், தனிப் பட்டவரின் உணர்வில் சமுதாயம் முழுவதன் பெயரில் (பூர்ஷ்வா சமுதாயத்தின் பெயரில்—ஆ-ர்) செயல்படுவதற் கான அவருடைய பொறுப்புத்தன்மையை உண்டாக்கும்'' ''ஒரு பிரதான ஆன்மிக சக்தியை'' உருவாக்கும் அவசியத்தை வலியுறுத்தியது.*

---

* *Die Welt*, 9/10. März 1974, S. 4.

இத்தகையதொரு ''ஆன்மிக சக்தியை'', அதாவது ஒரு புதிய ஏற்றுக் கொள்ளத்தக்க பூர்ஷ்வா சித்தாந்த அமைப்பை உருவாக்குவதை வலியுறுத்தும் அதே நேரத்தில் *Die Welt* சஞ்சிகையிலுள்ள கட்டுரை ஆசிரியர், இந்தச் சக்தி ''எல்லா பன்மைவாத விதிகளுக்கும் எதிர்மாருகச்'' செயல்பட வேண்டும் என்று வற்புறுத்தினர் என்பதைக் குறிப்பிடுவது சுவையானதாக இருக்கிறது.

உண்மையில், முதலாளித்துவத்தைச் சிறந்த முறையில் பாதுகாக்க வல்ல ஒரு சித்தாந்தத்தின் வளர்ச்சியானது சித்தாந்த பூர்வமான பன்மைவாதத்துடனும் ஒரே நேரத்தில் வெவ்வேறு உள்ளடக்கத்தைக் கொண்ட பல சித்தாந்தக் கருத்தோட்டங்களுடனும் எந்த விதத்திலும் ஒத்துப் போகக் கூடியதாக இல்லை. ஆனால் சமூக எதிர்ப்புகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் பன்மைவாதத்தை எப்படி ஒழிப்பது? ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமே போட்டிப் பிரிவினராகவும் கோஷ்டிகளாகவும் பிளவுபட்டிருக்கும் பொழுது ஒரே ஒரு சித்தாந்தத்தை எப்படி வளர்ப்பது? பன்மைவாதமானது புறவய முதலாளித்துவ எதார்த்தத்தாலேயே உருவாக்கப்பட்டது என்ற ஒரே காரணத்தால் பூர்ஷ்வா சமூகவியலில் அது பிரதானமான ஆய்வுமுறைக் கோட்பாடாகியது.

சந்தைப் பொருளாதாரத்தில் தோன்றிய மனித மற்றும் பொருளாதார மதிப்புகளைப் பற்றிய கருத்தோட்டங்களின் இணைக்கப்பட்ட ஓர் அமைப்பை இயக்கவியல் பொருள்முதல்வாதத்துக்கு எதிராக நிறுத்துவதில் முதலாளித்துவ மேற்கு நாடுகள் வெற்றி பெறும் என்ற மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த Robert Bosch என்னும் நிறுவனத்தின் தலைவரான மெர்க்கிளே என்பவருடைய நம்பிக்கை இன்னமும் நிறைவேறுத ஒன்றுகவுள்ளது.

எனினும் முதலாளித்துவ முறையை சித்தாந்த பூர்வமாக நியாயப்படுத்துவதற்கான அவசியம் அதிக அவசரமானதாகிக் கொண்டிருக்கிறது. பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளையும், எடுத்துக்காட்டாக, இப்பொழுது நடைமுறையில் மிகவும் அதிகமாகவுள்ள போக்கான எதிர்காலவியல் உள்ளிட்ட எல்லாத் துறைகளையும் அது பாதிக்கிறது. சமூக, விஞ்ஞான மற்றும் தொழில்நுணுக்க வளர்ச்சியை முன்னறிவிப்பதில் துல்லியமான விஞ்ஞானங்களின் ஆய்வு முறையையும் முன்னறிவிக்கும் முறைகளைக் கணிதமயமாக்கு

வதையும் சூத்திரமாகக் கொடுப்பதையும் மட்டுமே பின் தொடர வேண்டும் என்ற விருப்பம் காலத்தின் சோதனையை எதிர்த்து நின்று கொண்டிருப்பதில்லை. பிரதான சமூகக் காரணிகளை, அதாவது சமூக நிகழ்ச்சிப் போக்கு வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கும் சமூக அமைப்பின் தன்மையைப் புறக்கணிப்பதானது கடுந்தவறான கணக்கீடுகளுக்கு இட்டுச் சென்றிருக்கிறது. பல்வேறு அரசியல் வகைகளைத் தங்களுடைய சிந்தனையில் புகுத்தவும் வெவ்வேறு சமூக அமைப்புகளின் விசேஷங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவும் பூர்ஷ்வா எதிர்காலவியலாளர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

சித்தாந்தமயமாக்கலின் நிகழ்ச்சிப் போக்குகள் குறிப்பாக மேற்கு சமூகவியலில் தெளிவாக உள்ளன. அதனுடைய பல போக்குகள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல விரிந்த காரணிகளால் தீவிரமாக வளர்க்கப்பட்டிருக்கின்றன.

பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் முதல் இடத்திற்கு சமூகவியலை மேம்படுத்துவதை ஊக்குவித்து உறுதியளித்த ஆளும் வர்க்கத்தால் இடப்பட்ட சமூகக் கட்டளையானது ஒரு முக்கியமான காரணியாக இருந்தது. முதலாளி வர்க்கம் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை ஈடுகட்ட, சமூகவியலை அதனுடைய சித்தாந்த பூர்வமற்ற, சம்பிரதாய புள்ளிவிவர ஆராய்ச்சி முறைகள் என்று கூறப்பட்டவற்றுடன் முன்னுக்குக் கொணர்ந்தது.

அறுபதுக்களின் ''தொழில்நுணுக்க வல்லுனர்களின் ஆட்சியைப் பற்றிய நன்னம்பிக்கை'' பற்றிய தத்துவங்களும் அவற்றை அப்புறப்படுத்திய எழுபதுக்களின் ''உலகளாவிய அவநம்பிக்கைக்'' கருத்தோட்டங்களும் செயலளவில் உண்மையான சித்தாந்தங்களாக இருந்தன. இவை முதலாளித்துவம் மற்றும் சோஷலிசத்தைப் பற்றிய மார்க்சிய போதனைக்கு ஒரு முதலாளித்துவ மாற்றை உருவாக்க முயன்றன.

இயற்கை விஞ்ஞானிகளின் மத்தியில் இதைப் போன்ற போக்குகள் காணப்படுகின்றன. அவர்களில் அநேகர் தங்களைச் ''சுத்த விஞ்ஞானம்'' என்ற கூட்டுக்குள் அடைத்துக் கொள்வதில்லை, சர்வதேச விவகாரங்களையும் தங்களுடைய சொந்த நாடுகளின் உள் வளர்ச்சியையும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் ஒரு செயலூக்கமான அரசியல் மற்றும் சித்தாந்த நிலையை எடுக்கின்றனர், பொதுவாழ்வில்

செயலூக்கமுடையவர்களாகவுள்ளனர். பிரபஞ்சத்தில் நிகழ்கிற அடிப்படையான நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்கிற விஞ்ஞானத்தின் வளர்ச்சியைப் பற்றிய தர்க்கவியலானது ஆராய்ச்சியாளரை உலகக் கண்ணோட்டத்தையும் சித்தாந்தத்தினையும் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நேரடியாகக் கொண்டுவருகிறது.

அணு ஆயுதப் போரைப் பற்றிய அபாயம் அல்லது புறச்சூழல் அசுத்தமாதலைப் பற்றிய அபாயம் ஆகியவை விஞ்ஞானத்துடன் நேரடியாகத் தொடர்புடைய பிரச்சினைகளாகும். அதே நேரத்தில் அவை உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவராசியையும் பாதிக்கின்றன, எல்லா நாகரிகத்தின் எதிர்காலத்தையும் இன்னலுக்குட்படுத்துகின்றன; எனவே இந்தப் பிரச்சினைகளுக்காக தங்களுடைய சமூக நிலைகளை, அதாவது சித்தாந்த நிலைகளை விஞ்ஞானிகள் நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

இயல்பாக, சித்தாந்த பூர்வ சுயநிர்ணயமானது பல்வகை வழிகளில் நடைபெறுகிறது. சில விஞ்ஞானிகள் தீவிர வலதுசாரியான, வெளிப்படையாக கம்யூனிச எதிர்ப்பான, மார்க்சிய எதிர்ப்பான நிலைகளை ஏற்கின்றனர். மிகப் பொதுவானவர்கள் மிதவாதக் கருத்துடையவர்கள், அதாவது சூட்சும மனிதாபிமானம், ''சுத்த'' ஜனநாயகம், அமைதிவாதம் ஆகிய உணர்வின் கருத்துக்களையுடையவர்களாகவுள்ளனர். ஏகபோக எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு நிலையை எடுக்க முயற்சிக்கும் விஞ்ஞானிகளும் உள்ளனர். அவர்கள் எண்ணிக்கையில் சிலரல்ல, பலர்.

முதலாளித்துவ சமுதாயத்தின் எண்ணற்ற ''மூளை கேந்திரங்களும்'' அரசியல் ஸ்தாபனங்களும் உயர்மட்டப் பிரிவினரும் தற்பொழுது சித்தாந்தக் கோட்பாடுகளுக்கான ஒரு தேடலில் ஈடுபட்டுள்ளனர். சிலர் ''சீர்திருத்தப்பட்ட'' முதலாளித்துவத்தின் வழக்கமான கூற்றுகளைக் குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் பிறர் ஒன்றிணையும் புது உபாயங்களைத் தேடவோ அல்லது நாத்திகத்தை நோக்கி அதிகமாகத் திரும்பிக் கொண்டிருக்கும் நவீன உலகத்திற்கு ''கிறித்துவ மதிப்புகளை'' எப்படித் தகவமைப்பது என்பதைப் பற்றி விவாதிக்கவோ செய்கின்றனர். இந்தத் தேடல் எப்பொழுதையும் விட மிகத் தீவிரமாக இருக்கிறது. ஆனால் அதன் பலன்கள் மிகவும் குறைவானவையாகவே இருக்கின்றன.

இந்த நிலைமையில், முக்கியமான மேற்கத்திய தொழிலதிபர்களும் பிரதான தொழில்துறை மற்றும் நிதி கார்ப்பரேஷன்களின் இயக்குநர்களும் இதுவரை முதலாளித்துவ முறையை தத்துவார்த்த ரீதியாக நியாயப்படுத்தும் வேலையைப் பேராசிரியர்கள், பத்திரிகை எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரிடம் ஒப்படைத்துவிட்டுப் பின்னணியில் இருக்க விரும்பினுலும் சமீப ஆண்டுகளில் அதிகமான அளவில் சித்தாந்த விவாதங்களில் ஈடுபாடு கொண்டவர்களாகியிருக்கின்றனர் என்பது மிகத் தெளிவான உண்மையாகும். பொதுமக்களில் பல பகுதியினர்களின் மத்தியில் வளர்ந்து கொண்டேயிருக்கும் முதலாளித்துவ எதிர்ப்பு உணர்வுப் பாங்குகளாலும் முதலாளித்துவத்தின் உறுதியான தன்மை, மாருத தன்மையின் மீது பொதுமக்கள் கொண்ட நம்பிக்கை வீழ்ச்சியடைந்ததாலும் தொழிலதிபர்களும் இயக்குநர்களும் இன்று மிகவும் கலக்கமடைந்துள்ளனர்.

மேற்கு நாடுகளில் தனியார் தொழில் அமைப்பும் தனியார் சொத்தும் தொடர்ந்து இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிய அடிப்படைப் பிரச்சினையில் பொதுமக்களின் கருத்து அச்சுறுத்தத்தக்க அளவு சரிந்து கொண்டேயிருந்தது என்று 1971ல், பெரும் பாங்கரும் ஜெர்மன் பாங்கின் மேற்பார்வையாளர் கவுன்சிலின் தலைவருமான ஜி. ஆப்ஸ் என்பவரைத் தலைவராகக் கொண்டிருக்கும் மேற்கு ஜெர்மனியின் தொழிலதிபர்களின் ஸ்தாபனம் ஒன்று குறிப்பிட்டது. தனியார் சொத்தைப் பற்றிய ''புனிதமான மரபுகளுக்கான'' மரியாதை உணர்வைப் பொதுமக்களுக்கு போதிப்பதைத் தீவிரப்படுத்த விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மேற்கு ஜெர்மன் தொழிலதிபர்கள் அப்பொழுது கோரினுர்கள்.

எவ்வாருயினும், இந்த அழைப்புகள் விரும்பிய விளைவுகளுக்கு இட்டுச் செல்லவில்லை. 1972ல் அதே ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட ஒரு புதிய அறிக்கையில் ஏற்கெனவே பீதிக் குறிப்பு ஒன்று காணப்பட்டது. அந்த வேளையில் நிலைமையை மதிப்பிடுவதில் மேற்கு ஜெர்மன் செய்தித்தாள்கள், ''தனியார் தொழில் அமைப்பைப் பற்றி எப்பொழுதையும் விட அதிகமான விமரிசன நிலையை எடுத்துக் கொண்டிருக்கும் சுற்றுப்புற உலகில் அது தன்னையே மீண்டும் உறுதிப்

படுத்திக் கொள்ள முடியும் என்ற ஒரு புதிய திசையமைவைப் பொதுமக்கள் கருத்திற்குக் கொடுப்பது'' அவசியமாக இருந்தது என்று எழுதின.

வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றின் தொழிலதிபர் வட்டாரங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கமிஷனின் முடிவுகளிலிருந்து பொதுமக்கள் கருத்தை எந்தத் திசையில் மறு திசைமுகப்படுத்த விரும்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க முடியும். இந்தக் கமிஷன் 1973ல் வியத்நாம் போருக்குப் பின்னால் அமெரிக்கக் கோடீஸ்வரரான டி. ராக்பெல்லரின் முன்முயற்சியால் அமைக்கப்பட்டது. இக்கமிஷனில் வெவ்வேறு நாடுகளிலுள்ள பெரும் பாங்குகள், கம்பெனிகளின் தலைவர்கள் சேர்ந்திருந்தார்கள் (அமெரிக்க Coca-Cola மற்றும் Bank of America, பிரெஞ்சு Banque de Paris et des Pays Bas மற்றும் St.-Gobain, இத்தாலிய Fiat, பிரிட்டிஷ் Barclays Bank, ஜப்பானிய Mitsubishi மற்றும் Nippon Steel ஆகும்).

1976ல் இந்தக் கமிஷன் ஜனநாயக சமுதாயத்தை நிர்வாகம் செய்வது சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டது. மொத்தத்தில் அந்த அறிக்கை வட அமெரிக்கா, ஜப்பான், குறிப்பாக மேற்கு ஐரோப்பாவில் பூர்ஷ்வா ஜனநாயகம் ஆழமான நெருக்கடி நிலையில் இருந்தது என்பதை உறுதி செய்தது. சமூகக் கட்டுப்பாட்டின் மரபு வழிகள் முழுமையாகத் தோல்வியடைந்துவிடுவது, மக்கள் அரசியல் அதிகாரத்தின் சட்ட பூர்வத் தன்மையை மறுப்பது, கீழ்த்தட்டு மக்களிடமிருந்து கோரிக்கைகள் வெள்ளம் போல வருவது ஆகியவற்றின் விளைவால் சந்தேகத்திடமின்றி சமீப ஆண்டுகளில் பூர்ஷ்வா ஜனநாயகம் முடிவுக்கு வந்துவிட்டது என்று இந்த அறிக்கையின் ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். எனவே, முன்னுளில் அரசியலில் பங்கு பெறுவதிலிருந்து தடுக்கப்பட்ட, இப்பொழுது செயல் புரிய விழிப்புப் பெற்றுக் கொண்ட கீழ்த்தட்டு மக்களின் வெள்ளம் போன்ற கோரிக்கைகளினுல் அல்லது வேறு வார்த்தைகளில் கூறினுல் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் வர்க்கப் போராட்டத்தினுல் இந்த நெருக்கடி அடிப்படையிலேயே உண்டாக்கப்பட்டது.

சமுதாயத்தின் எந்தப் பகுதியினருக்கு ஜனநாயகத்தை விரிவுபடுத்த அனுமதிக்கலாம் என்பதனைக் குறிப்பிட்டு எல்லை

கள் வகுக்க சரியான நேரம் அது என்று அந்த அறிக்கையைத் தொகுத்தவர்கள் ஊகித்தனர். ஜனநாயகத்தை எல்லைக்குட் படுத்துவது என்ற பிரச்சினை கீழ்த்தட்டு மக்களுக்குத் தான் என்பது சொல்லாமல் புரிகிறது. ஏனெனில் அவர்களின் உணர்ச்சிப் பாங்குகளும் நடவடிக்கைகளும் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறியப்போவதாக அச்சுறுத்துகின்றன.

ஜனநாயக அரசாங்கங்கள் முதலாளித்துவ ஏகபோகங் களுக்குக் கீழ்ப்பட்டவை என்று பலரால் சொல்லப்பட்ட அபாயத்தை, இந்த அறிக்கையைத் தொகுத்தவர்கள் வலி யுறுத்தினார்கள். இதிலிருந்து அவர்கள், பூர்ஷ்வா ஜனநாய கத்தின் எந்த விரிவும் அபாயமானது என்ற முடிவிற்கு வந்தனர். ஏனெனில் அது ''கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றும் அபாயத்தை'' அதிகரிக்கும்.

கட்டுப்படுத்தும் ஜனநாயகம் என்ற யோசனைகளின் அர்த்தத்தைப் பற்றி சுவிட்சர்லாந்து பாங்குகளின் யூனிய னின் தலைவரான ஏ. ஷேஃபர் என்பவர் மிகத் தெளிவான விளக்கம் தந்தார். 1976ம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் ஆற்றிய உரையில் ஷேஃபர், சமூக சேமநலம், பொது சுகாதாரம், சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக அரசு செலவு களை எல்லைக்குட்படுத்துவதைப் பற்றிய கருத்தை ஆதரித் தார். தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வுகளை எந்தச் சூழ்நிலைகளிலும் அரசாங்கம் வழங்கக் கூடாது; அதற்குப் பதிலாக அது தொழிலதிபர் களின் கோட்பாடுகளுடன் ஒத்திசைவாத இருக்கும்படி தன் னுடைய செயல்களை அதிகமாகத் திட்டமிட வேண்டும் என்று அவர் கூறினர்.

முதலாளித்துவத் தனியார் சொத்தை அரசு ஏற்றுக் கொள்வதால் உண்டாகும் அனுகூலத்தைப் பற்றி அரசு-ஏகபோக முதலாளித்துவம் சான்று அளிக்க முடியுமாதலால் அதைக் கண்டு கூட ஷேஃபர் அஞ்சுகிறார். சுதந்திரமான தொழில் அமைப்பு தனிநபர் சுதந்திரத்தின் அடித்தளமாகும் என்ற கருத்தை ஷேஃபர் கொண்டிருக்கிறார்.

காலம் காத்திருக்காது என்பதையும் சீர்திருத்தங்கள் கூட ஆபத்தாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும் அறிந்து கொண்டு பெரும் தொழிலதிபர்கள் எல்லா மரபு வழக்கங் களையும் கைவிடுகிறார்கள், அரசியல் எச்சரிக்கையை அலட் சியப்படுத்துகிறார்கள்.

இவ்வாறாக அமெரிக்காவில் நடைபெற்ற ஆடம் ஸ்மித்தினுடைய நூலின் இருநூறாவது ஆண்டு விழாவில் ஒரு விவாதத்தில் பங்கு பெற்றவர்கள், முதலாளித்துவம் சோஷலிசத்திற்குச் ''சரிந்து விடாமல்'' தன்னுடைய சொந்த அடித்தளத்திலேயே நின்று கொண்டு தன்னுடைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைத் தேட வேண்டும் என்று கோரினார்கள். செயலளவில் இந்தக் கோரிக்கையானது முதலாளித்துவ உலகம் அழிவு எல்லையை மேலும் மேலும் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்கிற போர்க்குணமிக்க பெரும் மூலதனத்தின் குரலாக இருந்தது.

தற்காலத்தில், முதலாளித்துவ உலகத்திலேயே கூட ஒவ்வொன்றும் முதலாளித்துவ ஏகபோகங்களின் எஜமானர்களைச் சார்ந்திருக்கவில்லை. அங்கே அந்த எஜமானர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத சக்திகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

சித்தாந்த அரங்கத்தில் முதலாளித்துவ உலகத்தினுடைய தலைவர்களின் தீவிர செயல்கள் இப்பொழுது இருக்கும் வர்க்க நிலைமைகளைத் தெளிவுபடுத்த உதவுகின்றன, சித்தாந்தப் போராட்டத்தில் பொதுவான பிரிக்கும் வழியை அழுத்தமாக வரையறுக்கின்றன. முதலாளித்துவமா, சோஷலிசமா? இது தான் இன்றையப் பிரச்சினை.

பூர்ஷ்வா சமுதாயத்தின் அவசரத் தேவைகளை ''சித்தாந்த ரீதியில் பலப்படுத்தும்'' போக்குகள் வெளிப்படுகின்றன. வர்க்கப் போராட்டம் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு அவை சான்றுகளாகும்.

''சித்தாந்தத்தை பலப்படுத்துவதும்'' சித்தாந்தத்தைக் கைவிடுவதும் நேரடியாக ஒன்றுக்கொன்று எதிரான போக்குகள் அல்ல; ''சித்தாந்தத்தை பலப்படுத்துவதற்கான'' அழைப்புகளின் அர்த்தம் கடந்த காலத்துடனும் ''எல்லா சித்தாந்தத்தையும் நிராகரிக்கும்'' குறிப்பிட்ட காலகட்டத்துடனும் ஒரு துண்டிப்பை ஏற்படுத்துவது என்பதும் அல்ல.

சித்தாந்தம் இருப்பது அங்கீகரிக்கப்பட்டாலும் அங்கீகரிக்கப்படாவிட்டாலும் அது இருக்கிறது. பதினைந்து அல்லது இருபதாண்டு காலகட்டத்தில் பூர்ஷ்வா பேராசிரியர்கள் சித்தாந்தத்தைக் கைவிடுதல் என்ற மங்கலான திரையை மாட்டிக் கொண்டிருந்தாலும் மனச் சோர்வு அடைந்த குட்டி முதலாளித்துவ தத்துவவாதிகள் ஏமாளியான மக்களுக்கு

''சித்தாந்தத்தின் இறுதிக்'' காலம் வந்து விட்டது என்று உறுதியளித்துக் கொண்டிருந்த போதும் பூர்ஷ்வா சித்தாந்தக் கருத்தோட்டங்களின் ஒரு புதிய தொடர் வரிசை தோன்றியது. பல சமயங்களில், சித்தாந்தத்தைக் கைவிடுவதற்கான ஆரவாரமான அழைப்புகளை விடுத்துக் கொண்டிருந்த அதே நபர்கள் தான் இந்தச் சித்தாந்தக் கருத்தோட்டங்களின் ஆசிரியர்கள். ''தொழில்துறைவாத'' மற்றும் ''தொழில் துறைவாதத்திற்குப் பிந்திய'' தத்துவங்களை வாசகருக்கு மீண்டும் நினைவுபடுத்தினுல் போதுமானது. அவற்றின் ஆசிரியர்கள் இதை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல் இருந்த போதிலும் அவை தனிமாதிரியான சித்தாந்த நிர்மாணங்களேயாகும்.

முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்ற கற்றறிந்தவர்கள் எதார்த்தத்திற்கு நெருக்கமாகவும் கம்யூனிஸ்டு உலகக் கண்ணேட்டத்திற்கு ஈடுகட்ட வல்லதாகவும் உள்ள மிகப் பயனுள்ள சித்தாந்த கருத்தோட்டங்களை வளர்க்க வேண்டும் என்று அந்தக் காலத்தில் கூட முக்கியமான பூர்ஷ்வா நபர்கள் தீவிரமாக வலியுறுத்தினர்கள்.

வளர்ந்து வரும் சோஷலிசக் கருத்துக்களின் செல்வாக்கிற்கு எதிராக முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது, சித்தாந்தத்தைக் கைவிடும் கோஷத்தின் உள்நோக்கமாக இருந்தது. ஆனுல், பூர்ஷ்வா கருத்துக்கள் ''சுத்த விஞ்ஞானம்'' என்ற வேடத்திலோ அல்லது ஒரு மாயாவாத இறையியல் போர்வையிலோ பரவுவதை அது ஒரு பொழுதும் தடுத்ததில்லை. ''சித்தாந்தத்தைப் பலப்படுத்துவதைப்'' பற்றிய குழப்பமெல்லாம் இருப்பினும், சோஷலிச நாடுகளுக்கு எதிரான பிரச்சாரத்தில் ''சித்தாந்தத்தைக் கைவிடும்'' நாதங்கள் இன்றுகூட மிக நன்ருகக் கேட்கும்படியாகவுள்ளன. உள்நாட்டில் மிகப் பொருத்தமான சித்தாந்தத் தத்துவங்களை உருவாக்குவதற்காக அறைகூவல் விடுத்த பிற்போக்கான வெகுஜன செய்தித் தொடர்புகள் அதே நேரத்தில் சோஷலிச நாடுகளிலுள்ள மக்களைச் சித்தாந்த ரீதியாக நிராயுதபாணியாக்குவதையும் மார்க்சியத்தைப் பற்றிய அவநம்பிக்கையை விதைப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

முதலாளித்துவ நாடுகளில் கூட சித்தாந்தத்தைக் கைவிட வேண்டும் என்னும் கருத்தோட்டங்கள் இன்னமும்

உயிருடன் இருக்கின்றன. அவை கல்விக் கழக நூல்களிலும் பத்திரிகைகளிலும் (முன்பு போல அடிக்கடி இல்லையெனினும்) தொடர்ந்து வெளியாகின்றன. நேர்க்காட்சிவாத மற்றும் பன்மைவாத ஆய்வுமுறை இன்னமும் பூர்ஷ்வா சிந்தனையின் அடித்தளத்தை உருவாக்குகிறது. இதே அடித்தளத்தின் மீது சித்தாந்தத்தைக் கைவிட வேண்டும் என்ற கருத்துக்கள் தர்க்கரீதியாகத் தோன்றி வளர்ந்தன.

''சித்தாந்தத்தைப் பலப்படுத்துதல்'' என்பது செயலளவில், செயல்தந்திரங்களில் ஒரு மாற்றமே, வேறு முறைகளின் மூலம் விஞ்ஞான சோஷலிசத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியே ஆகும். சித்தாந்தத்தைக் கைவிடுதலின் கீழ் இருந்த கணக்கீடுகள் எவ்வளவு ஆதாரமற்றவையோ அந்த அளவுக்கு இதன் போராட்டமும் பலனில்லாதது. மாறிக் கொண்டிருக்கும் நிலைமைக்கு முதலாளித்துவத்தைத் தகவமைப்பதற்கான திருப்திகரமான எந்தத் திட்டங்களையும் பூர்ஷ்வா சிந்தனை கூறவல்லதாக இல்லை. ''சித்தாந்தத்தைப் பலப்படுத்துதல்'' முதலாளித்துவத்தின் சித்தாந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வழிகாட்டவில்லை, அதற்கு மாறாக அதை அதிகரித்து தத்துவார்த்தப் போராட்டத்தின் உண்மையான வர்க்க அர்த்தத்தை மிகத் தெளிவாக வெளிக் கொணருகிறது.

அத்தியாயம் நான்கு

## ஒரு “சித்தாந்த மேற்கட்டுக்கோப்பைத்” தேடிக்கொண்டிருக்கும் சமூக-ஜனநாயகவாதிகள்

சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வெகுஜன அடித்தளத்தை உருவாக்குகிற தொழிலாளர்களையும் மத்தியதரப் பிரிவினரையும் உலக வளர்ச்சியில் ஏற்படுகிற மாற்றங்கள் கடுமையாக பாதித்திருக்கின்றன. சோஷலிசத்தின் சாதனைகளும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் எல்லாப் படைகளின் சாதனைகளும் பூர்ஷ்வா சமூக அமைப்பின் நெருக்கடியின் அதிகரிப்பும் மேலே கூறிய கோஷ்டிகளை இடதுசாரியாக மாற்றவும் சமூக-ஜனநாயகவாதிகளின் அணிகளிடையே அரசியல் வேறுபாட்டை ஏற்படுத்தவும் காரணமாயின.

ஏகபோக மூலதனத்தினுடைய மேலாதிக்கத்திற்கு எதிராக, தேசங்களிடையே சமாதானம் மற்றும் ஒத்துழைப்பிற்காகவும் நெருக்கடியிலிருந்து வெளி வரும் ஜனநாயகப் பாதைக்காகவும் சமூக சீர்திருத்தங்களுக்கு இட்டுச் செல்லும் பாதைக்காகவும் நிற்கின்ற வெகுஜன சக்திகள் எல்லாவற்றையும் ஐக்கியப்படுத்துவதற்காக கம்யூனிஸ்டுகள் விடுத்த வேண்டுகோளுக்கு மேலே குறிப்பிட்ட மக்கள் பிரிவினரிடையே செயலூக்கமான ஆதரவு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

சோஷலிச அகிலத்தின் தலைவர்கள் தங்களுடைய கட்சிகளின் சித்தாந்த மற்றும் அரசியல் போக்கைப் புதிய நிலைமைகளுக்கு எப்படித் தகவமைப்பது மக்கள் திரளினரின் மீது தங்களுடைய செல்வாக்கை எப்படித் தக்கவைப்பது ஆகியவற்றைப் பற்றிய சிரமமான பிரச்சினையைச் சமாளிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளனர்.

‘‘ஒரு கருத்து நமக்கு அவசியம்’’* என்று மேற்கு

---

* *Die Neue Gesellschaft*, Nr. 2, 1969, S. 171.

ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் மத்திய அங்கமான *Die Neue Gesellschaft* ஒப்புக் கொள்ளுவது இதயத்தின் ஆழத்திலிருந்து வரும் குரலைப் போல் ஒலிக்கிறது. மற்ற நாடுகளில் உள்ள சமூக-ஜனநாயகப் பத்திரிகைகள் வெவ்வேறு சொற்களில் அதைத் திரும்பத் திரும்பச் சொல்கின்றன. சோஷலிசத் தலைவர்கள் உற்சாகமூட்டும் சித்தாந்தப் பதாகை ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் எச்சரிக்கை ஒலியை எழுப்புகின்றனர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் வந்த பத்தாண்டுகளில் சீர்திருத்தவாதத் தலைவர்கள், தங்களுடைய கட்சிகள் ''எதார்த்தம்'' என்ற பெயரில் ''சித்தாந்தத்திலிருந்து தங்களை நிரந்தரமாக விடுவித்துக் கொண்டன'' என்று சோர்வில்லாமல் திரும்பத் திரும்பக் கூறினர். கம்யூனிஸ்டுகளின் ''தத்துவார்த்த வறட்டுச் சூத்திரவாதத்தினைப்'' பற்றி அவர்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பேசினார்கள், மார்க்சியம் ''முடிவாகப் புதைக்கப்பட்டு விட்டது'' என்று அறிவித்தார்கள்.

இப்பொழுது தங்களுடைய சொந்த அணிகளிலேயே ஒரு சித்தாந்த நெருக்கடி நிலவுகிறது என்பதை அவர்கள் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. ஆஸ்திரியாவின் சோஷலிசக் கட்சியின் தலைவர் புருனோ கிராய்ஸ்கி என்பவர், ''ஒரு சித்தாந்த மேற்கட்டுக்கோப்பைப் பற்றிய விவாதத்தைச் சமூக-ஜனநாயகவாதிகள் மீண்டும் தொடங்க வேண்டும்'' என்றும் மார்க்சிய-லெனினியத்திற்குச் ''சரியான மாற்று ஒன்றைத் தயாரிப்பது'' தலையான முக்கியத்துவமுடைய பணியாக உள்ளது என்றும் அறிவித்தார்.*

சமூகத் தத்துவத்தைப் பரம்பரையாகப் புறக்கணிப்பதைப் பற்றி விசேஷமாகப் பெருமை கொள்ளுகின்ற இங்கிலாந்தின் லேபர் கட்சி உறுப்பினர்கள் கூட *New Statesman* என்னும் வாரப் பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்கள்: ''லேபர் கட்சி எப்பொழுதும் அதிகமான தத்துவத்தினால் இன்னலுறவில்லை, ஆனால் குறைவான தத்துவத்தால் இன்னலுறுகிறது; இந்தத் தத்துவப் பஞ்சம் குறிப்பாக அறுபதுகளின் ஆரம்பத்திலிருந்து தெளிவாகியுள்ளது.''**

---

* *Die Neue Gesellschaft*, 1. Mai 1969, S. 90.

** *New Statesman*, 2 February 1968, p. 130.

சமூக-சீர்திருத்தவாதத்தின் சித்தாந்த நெருக்கடி இனி மேலும் மறைக்க முடியாதபடி ஆழமாக வேர்விட்டிருக்கிறது. இது சமூக-ஜனநாயகவாதிகள் செயலளவில் தங்களே இணைத்திருக்கும் முதலாளித்துவ அமைப்பின் பொது நெருக்கடியின் விளைவாகும். தற்போதைய சித்தாந்த நெருக்கடி சமூக-ஜனநாயகக் கட்சிகளின் பல ஆண்டுகாலத்துக்கு முந்திய வரலாற்றினுல் உண்டாக்கப்பட்டது. இந்தக் கட்சிகள் மார்க்சியத்தை விட்டு முறையாக விலகுவதற்கு வெகுநாட்களுக்கு முன்பே படிப்படியாக சந்தர்ப்பவாத நிலேகளுக்குச் சரிந்து கொண்டிருந்தன.

இரண்டாவது அகிலத்தின் ''வைதீக'' சக்திகள் வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி ஆகியவற்றைப் பற்றிய மார்க்சிய தத்துவக் கூறுகளைப் பகிரங்கமாகக் கைவிடுவதா வேண்டாமா என்று தீர்மானிக்காத அந்த நேரத்தில் அவை மார்க்சியத்தின் தத்துவஞான அடிப்படையான இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைத் திருத்துவதற்குத் தயாராக இருந்தன. அவற்றின் ஊக்கத்தினுல் சமூக-ஜனநாயகத்தின் தத்துவஞான''நடுநிலேமைத் தன்மை'' பற்றிய கூற்று 1900க்களின் ஆரம்பத்தில் பரவலாகியது.

மார்க்சியப் பொருளாதாரத் தத்துவமும் சோஷலிசத்தின் தவிர்க்க முடியாத வெற்றியைப் பற்றிய மார்க்சியப் போதனேயும் பொருள் முதல்வாத இயக்கவியலேச் சாராத ''சுயேச்சையானவை'' என்றும் அவை கருத்துமுதல்வாதத் தத்துவஞானக் கருத்தோட்டங்களுடன் முழுமையாக ''ஒத்துப்போகக்''கூடியவை என்றும் ஒட்டோ பௌவர் என்பவர் அறிவித்தார். சமூக-சீர்திருத்தவாதத் தலைவர்கள் தத்துவஞானச் சிந்தனேயின் மிக உயர்ந்த சாதனேயான இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை மார்க்சியத் தத்துவஞான அமைப்பின் ''குறுகிய தன்மைக்கு'' ஓர் எடுத்துக்காட்டாகவும் சமூக-ஜனநாயகவாதத்துடன் நெருங்கிச் செல்ல விரும்பிய குட்டி முதலாளித்துவ அறிவுஜீவிகள், மத்தியதர வகுப்பினர் ஆகியோர் மத்தியிலுள்ள ''விமரிசன ரீதியாகச் சிந்தனே செய்யும் நபர்களின்'' வழியில் ஒரு தடையாகவும் கருதினுர்கள்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு மீண்டும் நிலே நாட்டப்பட்ட சோஷலிச அகிலத்தின் தலேமை தத்துவஞான ''நடுநிலேமைக்'' கருத்தோட்டத்தை உறுதிப்படுத்தியதோடு

மட்டுமன்றி அதை விரிவுபடுத்தியது. வலதுசாரி சமூக-ஜன நாயகவாதிகள் தத்துவஞான ''நடுநிலைமைத் தன்மையை'' மட்டுமல்ல உலகக் கண்ணோட்ட ''நடுநிலைமையைக்'' கூட அறிவித்தனர். இது மார்க்சியத் தத்துவஞானத்தை மட்டு மன்றி, மார்க்சியம் ஒரு சித்தாந்தம் என்பதையும் அது தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டம் என்பதை யும் ஒட்டு மொத்தமாக மார்க்சியத்தையும் கூட மறுப் பதற்குச் சமமாக இருந்தது. எல்லா சித்தாந்தங்களிலிருந் தும் சமூக-ஜனநாயகத்தை ''விடுவித்தல்'' என்ற கோஷத்தின் கீழ் சமூக-ஜனநாயகக் கட்சிகள் மார்க்சியத்திலிருந்து பகிரங் கமாக விலகிச் சென்றன. அவற்றின் விளக்கத்தின் படி, சித்தாந்தம் என்பது சமூக வளர்ச்சிகளின் சிக்கல்களுக்கு ஏற்ப ஒவ்வொரு விவகாரத்திற்கும் வெவ்வேறாக நிர்ண யிக்கப்பட்ட பாகுபாடான சீர்திருத்தங்களைப் பற்றிய நடை முறைக் கொள்கையின் தகுதியான மற்றும் முக்கியமான பணிகளில் மட்டுமே கவனத்தை ஒருமுனைப்படுத்துவ திலிருந்து அவற்றைத் தடுக்கின்ற வெறும் பயனற்ற குப்பை கூளமாக இருந்தது என்பதாகும். 1968ல் மேற்கு ஜெர்மனி யில் டிரியர் என்ற இடத்தில் பேசுகையில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவரான வி. பிராண்ட் பின்வரு மாறு கூறினார்: ''1946ல் குர்த் ஷுமாகெர் கூறியதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன்: 'பொருளாதாரப் பகுத்தாய் வைப் பற்றிய மார்க்சிய முறையின் மூலமோ அல்லது தத்துவ ஞானத்தின் வழியிலோ அல்லது ஒழுக்க ஆதாரங்களின் மூலமோ அல்லது உபதேச உணர்வின் மூலமோ—எதன் மூலமாகவேனும்—ஒருவர் சமூக-ஜனநாயகவாதியாக மாறி னும் வித்தியாசம் ஒன்றுமில்லை'.'' மேற்கு ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர்கள் சொன்னபடி இந்தக் கருத்து ''உணர்வு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் காடஸ் பெர்க் வேலைத்திட்டத்திற்கு இட்டுச் சென்றது.''* இன்று காடஸ்பெர்க் வேலைத்திட்டம் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அதிகார பூர்வ மேடையாகவுள்ளது.

''உலகக் கண்ணோட்ட நடுநிலைமைத் தன்மை'' என்பது தொழிலாளி வர்க்கத்திற்குள் முதலாளி வர்க்கத்தின் மிக முக்கியமான சித்தாந்த மற்றும் அரசியல் முட்டுக்கட்டை யாகத் தாழ்ந்துபோகும் சமூக-ஜனநாயகக் கட்சிகளினுடைய

* *Vorwärts*, 9. Mai 1968, S. 1.

பொது நிகழ்ச்சிப் போக்கின் ஒரு சித்தாந்த வெளிப்பாடாக இருக்கிறது.

இன்று, சமூக-ஜனநாயகவாதிகளின் தத்துவஞானக் கருத்துக்கள், ஏதாவது ஒரு சீர்திருத்தத் தத்துவவாதியின் விருப்பங்களைச் சார்ந்து பல்வகையான சேர்மானங்கள் மற்றும் விகிதாச்சாரங்களில் அளிக்கப்பட்ட முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டங்களின் பல் வகைப்படுத்தப்பட்ட கலப்பைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றன. சமூக-சீர்திருத்தவாதத் தத்துவஞானிகள் பூர்ஷ்வா தத்துவஞான நடைமுறையின் எல்லாக் கோணல் மாணல் களையும் மீண்டும் செய்கின்றவர்களின் தரத்திற்கு மேல் எந்தப் பிரச்சினையிலும் உயர்வதில்லை.

வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் கடுமையான எதார்த் தத்தை விட ''ஒழுக்க நெறியிலான சோஷலிசத்தின்'' ஆய்வுப் பொருளைப் பற்றிய உணர்ச்சிமிக்க வகைகளை விரும்புகின்ற னர். ஒழுக்க நெறியிலான சோஷலிசமானது மனித இயல் பின் உள்ளார்ந்த ஒழுக்கத்தைப் பூரணத்துவம் அடையச் செய்யும் அவாவை சமூக வளர்ச்சியின் இயக்கும் சக்தியாக அறிவிக்கிறது. ''ஒழுக்க நெறி சோஷலிசவாதிகள்'' என் றழைக்கப்படுவோரின் அடிப்படையான கருத்து உற்பத்தி உறவுகளில் தீவிர மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சமூகப் புரட்சியை உள்ளடக்கவில்லை, ஆனால் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் சர்வவியாபகமான சமத்துவத்தை நோக்கிய முடிவற்ற ''ஒழுக்கப் பரிணாமத்தை'' உள்ளடக்கி யுள்ளது. கடந்த நூற்றாண்டின் குட்டி முதலாளித்துவ போதனைகளின் மரபுகளை வாரிசாகப் பெற்றிருக்கிற இந்தப் போதனை குட்டி முதலாளித்துவ அறிவாளியைக் கவர்கிறது. ஏனெனில் அது சமூக உறவுகளின் வர்க்கக் குணாம்சத்தைக் கறைப்படுத்துகிறது, அதற்குப் பதிலாக பொதுவாக ''சுதந் திரத்தையும்'' ''சமத்துவத்தையும்'' ''நெருங்கியவர்களை நேசிப்பதையும்'' பிற வாய்மொழி இயல்புகளையும் போதிப் பதைக் கொள்கிறது.

உலகக் கண்ணோட்டப் பிரச்சினைகளில் தத்துவஞானக் கதம்பவாதமானது, சித்தாந்தத்தை ஒரு புராணக்கதையாக, தான் தோன்றித்தனமாக உருவாக்கப்பட்ட, புறவய எதார்த் தத்தை உண்மையில் பிரதிபலிப்பதாக உரிமை கொண்டாட

முடியாத கருத்துக்களின் அமைப்பாக வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் புரிந்து கொள்ளக் காரணமாகிறது. விஞ்ஞானத்தில் அனுபவ ரீதியாகப் பெறப்பட்ட ஒரு பகுதியான உண்மைகள் மட்டுமே மதிப்பிடத்தக்கவையாக அறிவிக்கப்படுகின்றன.

வலதுசாரி சமூக-ஜனநாயகத்தால் அறிவிக்கப்பட்ட ''சித்தாந்தத்திலிருந்து சுதந்திரம்'' என்ற கோஷமானது, வர்க்கச் செயல்களைப் பற்றி சுயேச்சையான தெளிவுள்ள ஒரு கொள்கையைத் தொடர இயலாத அதனுடைய குட்டி முதலாளித்துவத் தன்மையிலும் ஆளும் முதலாளி வர்க்கத்துடன் பேரங்கள் செய்தல், சமரசங்கள் செய்தல் என்ற பெயரில் தன்னுடைய சொந்தக் கோட்பாடுகளைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதிலும் வேர்விட்டிருக்கிறது. முதலாளி வர்க்கம், தொழிலாளர்களைச் சித்தாந்த ரீதியாக நிராயுதபாணியாக்குவதில் தனக்குச் சாதகமான இந்த கோஷத்தை தயக்கமின்றி ஆதரிக்கிறது.

குட்டி முதலாளித்துவ மாயையைத் தங்களுடைய சொந்த ஒழுக்கத்தினைப் பற்றிய ஒரு கோட்பாட்டின் அந்தஸ்திற்கு சமூக-ஜனநாயகம் உயர்த்தியது. ஆனால் மாயையானது மாயையாக நிலைத்திருக்கிறது. சமூக-ஜனநாயகவாதிகள் சித்தாந்தத்திலிருந்து விடுதலை பெறவில்லை. அவர்கள் வெறுமனே பூர்ஷ்வா சித்தாந்தத்திடம் சரணடைந்தனர்; ''சோஷலிஸ்டு சித்தாந்தத்தை எந்த விதத்தில் சிறுமைப்படுத்தினாலும், அதிலிருந்து இழையளவேனும் விலகிச் சென்றாலும் முதலாளித்துவச் சித்தாந்தத்தைப் பலப்படுத்துவதாகவே பொருளாகும்''* என்ற லெனினுடைய சொற்களின் மாபெரும் நியாயத்தைத் தங்களுடைய சொந்த நடைமுறையால் மீண்டும் உறுதி செய்தனர்.

முதலாளித்துவத்தின் முரண்பாடுகளின் அதிகரிப்பைப் பற்றிய கருத்தில் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் முடிவை எதிர்க்கவும் ஏகாதிபத்தியமானது செத்துக் கொண்டும் அழிந்து கொண்டுமிருக்கும் முதலாளித்துவம் என்ற லெனினின் போதனையை எதிர்ப்பதற்காகவும் முதலாளித்துவத்தின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கங்கள் 253-254.

''ஏறுமுக பரிணமத்தின்'' எதிர்கால நல்வாய்ப்பைப் பற்றி வலதுசாரி சோஷலிசத் தத்துவவாதிகள் அறிவித்தனர்.

பெர்ன்ஷ்டைனின் ''முற்போக்கு முதலாளித்துவம்'', குனேவின் ''நிதி மூலதனத்தின் புதிய பொருளாதார சகாப்தம்'', காவுத்ஸ்கியின் ''தீவிர ஏகாதிபத்தியம்'', ஹில்பெர்டிங்கின்''ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவம்'' ஆகியவை அதே அர்த்தத்தைக் கொண்ட அடுத்தடுத்து வந்த கருத்தோட்டங்களே; முதலாளித்துவத்தின் சாத்தியப்பாடுகள் ''முற்றிலும் தீர்ந்துவிடவில்லை'' என்று இவை வானளாவப் புகழ்கின்றன. இவற்றின் வாதத்திற்குரிய ஆர்வம் சோஷலிசப் புரட்சியின் பயனற்ற தன்மையையும் தொழிலாளர்களுக்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையேயான வர்க்க ஒத்துழைப்பின் பயனுள்ள தன்மையையும் நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னல் ''நவீன முதலாளித்துவத்தைப்'' பற்றிய புராணக்கதை—முதலாளித்துவத்தின் ''உருமாற்றத்தைப் பற்றிய'' பூர்ஷ்வா கருத்தோட்டங்களின் ஒரு கூற்று—''ஏறுமுக முதலாளித்துவத்தினைப்'' பற்றிய தத்துவங்களின் ஒரு நேரடியான தொடர்ச்சியாக இருந்தது.

அறுபதுக்களிலும் எழுபதுக்களின் ஆரம்பத்திலும் வளர்ச்சியுற்ற சில முதலாளித்துவ நாடுகளில் அரசு-ஏக போகப் போக்குகளின் வளர்ச்சிக்கும் ஒப்பீட்டடிப்படையிலான உயர்ந்த பொருளாதாரச் செயலுக்கும் முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமான விளக்கம் தருகையில் வளர்ச்சியின் தற்போதைய கட்டத்தில் முன்பு தீர்க்க முடியாது என்று கருதப்பட்ட மோதல்களையும் முரண்பாடுகளையும் சமாளிக்க வல்ல தன்மையை முதலாளித்துவம் அடைந்திருக்கிறது என்று ''நவீன முதலாளித்துவத்தைப்'' பற்றிய கருத்தோட்டத்தின் ஆசிரியர்கள் ஆயிரமாவது தடவையாக மீண்டும் அறிவிக்கின்றனர்.

இயல்பாகவே, இந்த வனப்புமிக்க சொல்லோவியத்தில் போராட்டத்தின் புரட்சிகர முறைகளுக்கு வழியில்லை. மேலும் உற்பத்திச் சாதனங்களில் தனியார் சொத்தை ஒழிப்பதைப் பற்றிய மையப் பிரச்சினையும் முழுமையாக மறு ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. பூர்ஷ்வா விஞ்ஞானத்துடன் முழுமையாக உடன்பட்டு தற்போதைய ''உருமாற்றப்

பட்ட'' முதலாளித்துவத்தின் கீழ் பரம்பரையான முதலாளித்துவச் சொத்து மறைகிறது என்பதைப் பற்றியதும் உற்பத்தியை எந்த விதத்திலும் கடுமையாகப் பாதிக்காத எண்ணற்ற பங்குதாரர்களின் மறைவான பொதுச் சொத்தாக அது மாறுவது இதரவைகளைப் பற்றியதுமான கற்பனைகள் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன.

இந்த அடிப்படையில் சொத்தைப் பற்றிய பிரச்சினை முக்கிய பிரச்சினையாக அறிவிக்கப்படவில்லை, ஆனால் பொருளாதார செயலைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான பிரச்சினைகள் அல்லது ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் காடஸ்பெர்க் வேலைத்திட்டம் அவற்றைப் பெயரிட்டுக் கூறுவதைப் போல் ''பொருளாதார அதிகாரத்தைப்'' பற்றிய பிரச்சினைகள் முக்கியமானவையாக அறிவிக்கப்படுகின்றன.*

''நிர்வாகவாதம்'' என்றும் தத்துவத்தின் உணர்வில்—லியோன் பிலும் என்பவர் வலதுசாரி சோஷலிஸ்டுகளால் அத்தத்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகப் பெருமையுடன் கருதப்படுகிறார் — தொழில் நிலையங்கள், மற்றும் கார்ப்பரேஷன்களின் நிர்வாகிகள், மூத்த அலுவலக ஊழியர்கள், நிபுணர்கள் மற்றும் இதர தொழில் நுட்பவாதிகள் ''பொருளாதார அதிகாரத்தைத்'' தாங்குபவர்களாக அறிவிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு எதிராகத்தான் சமூக-ஜனநாயகவாதிகள் தங்களுடைய எல்லா வசைமாரிகளையும் பொழிகின்றனர். அதற்கு மாறாக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உண்மையான எஜமானர்களான ஏகபோகவாதிகளும் மூலதனத்தின் பெரிய தனக்காரர்களும் பின்னணியில் பத்திரமாக இருக்கின்றனர்.

ஆனால் நவீன பொருளாதாரத்தில் தகுதியான மையப் படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாமல் காரியமாற்றுவது சாத்தியமல்ல என்பதனால் ''பொருளாதார அதிகாரத்தைப்'' பற்றிய பிரச்சினையானது தொழில் நுட்பவாதிகளின் செயலின் மீதான கண்காணிப்பு என்ற அளவிற்குக் குறைக்கப் படுகிறது. இனிமேல் பொருளாதார அதிகாரம் சொத்தைப் பற்றிய ஒரு பிரச்சினையாக இல்லாமல் போகிறது. அது நிர்வாகம் பற்றிய தீங்கற்ற பிரச்சினையாக மாறுகிறது.

வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், விஞ்ஞான தொழில்

---

* *Grundsatzprogramm der SPD*, Köln, 1959, S. 15 பார்க்க.

நுணுக்க முன்னேற்றத்தின் போக்கில் அதிகக் கூர்மை யடைந்து கொண்டிருக்கும் முக்கியமான வர்க்கப் பிரச்சினை களுக்கு ஓர் உறுதியான தீர்வை விரும்புவதில்லை. எனவே விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் எதிர்கால வாய்ப்பு கள், விளைவுகள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் சம்பந்தப் பட்ட சமூக அவநம்பிக்கைவாதமானது சமூக-ஜனநாயக சித்தாந்தத்தில் ஆழமாக ஊடுருவியிருக்கிறது. ஆஸ்திரேலிய லேபர் கட்சியின் தலைவரான இ. விட்லெம் என்பவர், ''விஞ் ஞானமும் ஜனநாயகமும் முன்னேற்றத்தின் இயல்பான உறுப்பு களாகவும் பங்குதாரர்களாகவும் இருக்கின்றன என்பதை நாங்கள் இனிமேல் உண்மையென்று ஏற்பதற்கில்லை, எங் களில் மிகவும் நம்பிக்கையில்லாதவர்கள் விஞ்ஞான தொழில் நுணுக்கப் புரட்சியை ஜனநாயகம் கண்காணிக்க முடியுமா? நிலைத்துப் போக முடியுமா? என்று கூட சந்தேகப்படலாம்''* என்று கூறினர்.

மனிதனுடைய இயற்கைச் சூழ்நிலையிலுள்ள அழிவு நிகழ்ச்சிப் போக்குகள், உதாரணமாக காற்று மற்றும் நீர் அசுத்தமாதல், நகரங்களின் அதீத வளர்ச்சி—இவை சமு தாயத்தின் சாபக்கேடுகளாகிக் கொண்டிருக்கின்றன என்று விட்லெம் கூறுகிறார்—ஆகியவை மனிதனின் மீது தொழில் நுணுக்கத்தின் வளர்ந்து வரும் கொடுங்கோன்மையைப் பற்றிய பரவலான அபிப்பிராயத்தை சமூக-ஜனநாயக வட் டாரங்களில் உண்டாக்கியுள்ளன.

இந்தக் கொடுங்கோன்மையை அகற்றுவதற்காகப் பல் வகை உபாயங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின் றன. ஆனல் அவற்றின் சாராம்சம் என்ன? எடுத்துக் காட் டாக, ''இப்புரட்சி (விஞ்ஞானத்திலும் தொழில்நுணுக்கத் திலும்—ஆ-ர்) எந்த வழிகளில் நடத்தப்பட்டுக் கொண்டிருக் கிறதோ அதே வழிகளில் தான் அதனுடைய பிரச்சினைகளை முன்னறிவிக்க முடியும், தீர்க்க முடியும்... கம்ப்யூட்டர்கள் வேலையின்மையை உருவாக்க முடியும், ஆனல் அதே பிரச் சினையை முன்னறிந்து திட்டமிட்டுத் தீர்ப்பதிலும் கூட அவை உதவ முடியும்''** என்று விட்லெம் அனுமானிக்கிறார்;

---

* *Socialist International Information*, Vol. XVII, No. 24-25, 1967, p. 236.

** *Ibid.*, p. 237.

வேலையின்மையைப் பற்றிய பிரச்சினையையும் அதே போல முதலாளித்துவத்திற்குப் பிந்திய எல்லாப் பிரச்சினை களையும் கம்ப்யூட்டர் தீர்க்கும் என்ற நம்பிக்கைகள் சமூக-ஜனநாயகவாதத்தின் குறியடையாளமாகும். ''நம்முடைய வாழ்க்கை முறையையும் நம்முடைய அரசாங்கங்களின் கொள்கைகளையும் உருவாக்குவதில் மேலும் அதிகமாகப் பங் காற்றிக் கொண்டிருக்கின்ற விஞ்ஞான தொழில்நுணுக்கத் தின் முக்கியத்துவத்திலிருந்து—ஒரு வேலை ஆதிக்கம் செலுத் தும் பங்கிலிருந்து'' விட்டெலம் தொடர்வதாக அவரே கூறு கிறார்.* அரசியல் பிரச்சினைகளைத் தொழில்நுணுக்க வழி களில்—அரசியல் வழிகளில் அல்ல—தீர்க்கலாம் என்று அவர் நம்புகிறார். வேலையின்மையைப் பற்றிய பிரச்சினையைத் தீர்ப் பதில் அவர் கம்ப்யூட்டரின் உதவியை நாடுகிறார். அப்படி யானால் ஏற்கெனவே போதுமான அளவு கம்ப்யூட்டர்களைப் பெற்றிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் இதர மேற்கத்திய நாடுகளில் இன்று வேலையின்மையை அகற்றுவதை எது தடுக்கிறது? கம்ப்யூட் டர்களின் எண்ணிக்கையும் அவற்றைப் பயன்படுத்தும் சாத் தியப்பாடுகளும் இறுதியாகப் பொருளாதாரத்தில் அரசு-ஏகபோகக் குறுக்கீட்டிற்கான சாத்தியப்பாடுகளும் அதி கரித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் எல்லாப் பழைய பிரச்சினைகளும் உதாரணமாக வேலையின்மை, உற்பத்தியில் வீழ்ச்சி, பணவீக்கம், இந்த நிலைமைகளில் வர்க்கப் போராட் டம் கூர்மையடைதல் ஆகியவை இன்னமும் நீடித்திருக் கின்றன; முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படைகளை அசைத்துக் கொண்டும் பலவீனப்படுத்திக் கொண்டுமிருக் கின்றன. பூர்ஷ்வா சமூக அமைப்பின் அடிப்படையில் அவை தீர்க்கப்பட முடியாதவை என்பதால் அவை நீடித்திருக் கின்றன.

தனிப்பட்டவரின் ஆன்மீக அடிமைத்தனத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட் சியின் விளைவுகளுக்கும் அதே காரணத்தைத்தான் கூற வேண் டும். சமூக-ஜனநாயக இலக்கியத்தில் இவையும் தொழில் நுணுக்கக் கொடுங்கோன்மையின் தவிர்க்க முடியாத விளைவு களாக வருணிக்கப்படுகின்றன. உதாரணமாக, லேபர் கட்சி யின் வாரப் பத்திரிகையான *New Statesman* எழுதியபடி,

* *Ibid.*, p. 236.

மண்ணிலோ அல்லது விண்ணிலோ ஒலி பெருக்கி மற்றும் புகைப்படக் கருவிகள் மூலம் மனிதன் மீது கண்காணிப்பது, செய்தித் துறையின் மீது கண்காணிப்பு அதிகரித்துக் கொண்டே இருப்பது, பௌதிக மற்றும் இரசாயனக் குறுக்கீடு மக்களின் மனநிலையைக் கட்டுப்படுத்துவதைச் சாத்திய மாக்கும் அபாயம் அதிக எதார்த்தமாகி கொண்டே இருப்பது ஆகியவை இந்தப் பிரச்சினையின் அம்சங்களாகும்.*

பூர்ஷ்வா சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கை மற்றும் வேலை மீது இத்தகைய கண்காணிப்பு வழிகள் ஓர் உண்மை யான விஷயமாகிக் கொண்டிருக்கின்றன. எந்த பூர்ஷ்வா பத்திரிகையானாலும் அதனுடைய ஒவ்வொரு இதழிலும் இதற்குப் பொருத்தமான சாட்சியத்தைக் காண முடியும். ஆனால் இந்த வழிகள் எந்த விதத்திலும் தொழில்நுணுக்கக் கொடுங்கோன்மையின் விளைவுகளல்ல. சரியாகச் சொன்னால் அவை மனிதன் மீது மனிதன் செலுத்தும் கொடுங்கோன் மையின் விளைவே. பகை வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்தில் அவை செயலளவில் முதலாளி வர்க்க ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் ஒரு கருவியாக உள்ளன. ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளையும் கூட அதிகமாகச் சூழ்ந்து கொள்ளுகிற வளர்ந்து வரும் கண் காணிப்பு வலையமைவு முதலாளித்துவ சமுதாயத்தின் சமூக நிலைமைகளின் விளைவாகும், அதனுள்ளேயே ஏற்பட்ட தொழில்நுணுக்க வளர்ச்சியின் விளைவல்ல. பெரும் மூல தனத்தின் கரங்களில் இருக்கும் அரசு இயந்திரம் ஆளும் முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக மிக நவீனமான தொழில்நுணுக்கக் கருவிகளைப் பயன்படுத்துகிறது.

ஆகவே என்ன செய்ய வேண்டும் எனில் தனிப்பட்ட வரை அடிமைப்படுத்தும் சமூக நிலைமைகளை மாற்ற வேண் டும்; புதிய சமூக நிலைமைகளை உருவாக்கிய பிறகு பொது முன்னேற்றத்திற்காகவும் இந்த விஞ்ஞான, தொழில்நுணுக்க மதிப்புகளைக் கருத்தாலும் கரத்தாலும் உற்பத்தி செய் கின்றவர்களின் நலன்களுக்காகவும் விஞ்ஞானம், தொழில் நுணுக்கத்தின் வளர்ச்சிக்காகவும் ஏற்பாடு செய்ய வேண் டும்.

ஆனால் லேபர் கட்சியின் பத்திரிகை இத்தகைய பிரச் சினையை முன்வைக்கக் கூடத் தயங்குகிறது. அதிகாரவர்க்

* *New Statesman*, 6 February 1970, p. 177 பார்க்க.

கத்தினர், கொடுமைக்காரர்கள் ஆகியோரின் உரிமைகளுக்குச் சவால் விட வேண்டும் என்பது தான் அது கூற முடிந்த ஆலோசனையாகும்.

ஆனால் மக்களினுடைய தலைவிதியின் எஜமானர்கள் என்ற உரிமையை ஆட்சியதிகாரத்திலிருப்பவர்களிடமிருந்து பறிப்பது எப்படி? அக்கட்டுரையின் ஆசிரியர் அரசாங்க நடவடிக்கைகள் மீது பொது மக்களின் கண்காணிப்பையும் இந்த நடவடிக்கைகளைப் பகிரங்கமாக்குவதையும் ஆதரிக்கிறார். ஆனால் மூலதனம் எஜமானராக இருக்கும் சமுதாயத்தில் இத்தகைய கண்காணிப்பை உண்மையில் எப்படி அடைய முடியும்? இதைச் செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்பது தெளிவு; மூலதனத்தின் ஆட்சியை அகற்றுவதன் மூலமே அதை அடைய முடியும்.

ஆனால் மேலே கூறிய கட்டுரையானது இத்தகையதொரு செயல் முறையை எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. அதிக பட்சமாக, அது பிரச்சினையைத் தீர்க்க முடியாத அரைகுறை நடவடிக்கையாகத்தான் இருக்கும்.

அக்கட்டுரையின் ஆசிரியரே ஆறுதலளிக்காத முடிவுகளுக்கு இறுதியாக வருகிறார் என்பது வியப்பில்லை. ''எதிர்காலத்தில் குற்றங்களுக்குப் பலியாகக் கூடியவர்களுக்கு தொழில்நுணுக்க ரீதியாக முன்னேற்றமடைந்த போலீஸ் படை ஒரு வரப்பிரசாதமாக இருக்கும், ஆனால் சட்டம் மோசமாக இருக்க முடியும், போலீஸ்காரர்கள் இலஞ்சப் பேர்வழிகளாக இருக்க முடியும்'' என்று அவர் ஊகித்தார். இந்த அச்சங்கள் ஆதாரபூர்வமானவையாகும், பூர்ஷ்வா சமுதாயத்தின் முழு நடைமுறையால் அவை நன்கு நிலைநிறுத்தப்படுகின்றன. ''இன்றுள்ள சக்திமிக்க தொழில் நுணுக்கங்களைச் சிந்திக்கும் பொழுது நல்ல சட்டங்களையும் நேர்மையான போலீஸ்படையினரையும் பெற்றிருப்பதைத் தவிர வேறு சிறந்த வழி ஒன்றுமில்லை'' என்ற முடிவிற்கு ஆசிரியர் வருகிறார்.

நல்ல நோக்கத்தையுடைய மக்களின் எல்லா முயற்சிகளும் இருப்பினும் முதலாளித்துவ அமைப்பு கண்ணியமற்ற போலீஸ்படையினரையும் தனிநபரின் உரிமைக்கு உத்திரவாதமளிக்கத் தவறுகிற சட்டங்களையும் ஏன் தொடர்ந்து உருவாக்குகிறது என்ற கேள்வியை மேலே கூறிய முடிவு எழுப்புகிறது. இங்கு கூட இதற்கான காரணத்தை முத

லாளித்துவத்தின் சமூக அடித்தளத்தில் தேட வேண்டுமே யொழிய தொழில்நுணுக்கத்திலோ பொது வாழ்வின் வேறு எந்தக் குறிப்புகளிலுமோ தேட வேண்டியதில்லை என்பது தெளிவு.

விஞ்ஞான தொழில்நுணுக்கப் புரட்சியின் விளைவுகள், முக்கியமாக விஞ்ஞானம், தொழில்நுணுக்கம் ஆகியவை யாருடைய கரங்களில் இருக்கின்றன என்பதையும் எந்தச் சமூக நலன்களின் பெயரில் வளர்ச்சியடைகின்றன என்பதை யும் சார்ந்துள்ளன என்ற அடிப்படையான செயலுண் மையை நடைமுறை பன்முறை சுட்டிக் காட்டியிருக்கிறது.

இடதுசாரி லேபர் கட்சியினரின் வாரப் பத்திரிகையான Tribune இயற்கைச் சூழலைப் பற்றிய பூர்ஷ்வா கருத் தோட்டங்களுக்குப் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் எதிரடி கொடுத்துக் கொண்டிருப்பது வளர்ந்து வருவதைக் குறிப் பிட்டது. அக்கருத்தோட்டங்கள் தூய்மையான, நன்கு சம நிலைப்படுத்தப்பட்ட சுற்றுப்புறத்தை வழங்கும் சாக்குப் போக்கில் பொருளாதார வளர்ச்சியைத் தாமதப்படுத்தும் அவசியத்தை ஆதரிக்கின்றன. பல பிரிட்டிஷ் தொழிலாளர் கள் தங்கள் வாழ்க்கைத் தரங்கள் உயர்வதைத் தடுக்கும் ஆளும் வர்க்கத்தின் ஒரு முயற்சியாக இந்த இயக்கத்தைப் பார்க்கின்றனர் என்று Tribune கட்டுரை ஆசிரியர் எழு தினார். அவர் தொடர்ந்து கூறியதாவது: சூழ்நிலையைப் பற்றிய விவாதத்தில் இது வரை கணிசமான அளவு வலி யுறுத்தப்படாதது என்னவெனில் உலகம் வறுமையில்லாது எப்பொழுதும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற உண்மையான அக்கறை வெளிப்படுத்தப்பட வேண்டுமானால் ''செல்வத்தையும் வருமானங்களையும் மறு வினியோகம் செய் வதற்குத்'' தீவிர நடவடிக்கைகள் அவசியமாகும்.*

குறைந்த சுரண்டல், அதிகமான கூலி என்ற பகுதியளவு கோரிக்கைகளை வைப்பதில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள் ளாத வெகுஜனத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கவனத் தில் எடுத்துக் கொள்ளும்படி சீர்திருத்தவாதத் தலைவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். மேற்கு நாடுகளில் தொழி லாளர்கள், அலுவலக ஊழியர்களின் பரந்த பகுதியினர் தொழில் நிலையங்களையும் கார்ப்பரேஷன்களையும் பொறுத்த

* *Tribune*, 25 February 1972, p. 11.

முக்கிய பிரச்சினைகளைப் பற்றி—உதாரணமாக, உற்பத்தியின் ஒழுங்கமைப்பு மற்றும் நிர்வாகம், இலாபங்களையும் கூலிகளையும் வினியோகித்தல், வேலைவாய்ப்பு, விலைவாசிகள், இதரவைகளைத் தவிர தேசியப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிய பிரச்சினைகளைப் பற்றி—தீர்மானங்கள் எடுப்பதில் நேரடியாகப் பங்கு கொள்ளும் உரிமையைத் தாங்களே பெறுவதற்கு முயலுகின்றனர். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது அடிப்படை சமூக மாற்றங்களுக்கும் முதலாளிகள் இல்லாத ஒரு சமுதாயத்திற்கும் மாறுவதில் ஒரு கணிசமான பங்கை ஆற்ற முடியும். ருஷ்யாவிலும் பிற நாடுகளிலும் வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிகளின் போது, தொழிலாளர்களின் கண்காணிப்பின் முக்கியத்துவம் நன்கறிந்த செயலுண்மையாகும்.

பொருளாதாரத்தின் மீது ''ஜனநாயகக் கண்காணிப்பு'', பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்வில் தொழிற்சங்கங்களும் பிற ஸ்தாபனங்களும் பங்கு பெறுதல் ஆகியவை பற்றி வலதுசாரி சோஷலிசத் தலைவர்கள் பகட்டான சொற்றொடர்களைப் பயன்படுத்துவதை விட்டு வைக்கவில்லை. ஆனால் கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் நடந்ததைப் போல் உழைக்கும் மக்களின் போர்க் குணமிக்க கோரிக்கைகள் எல்லாவற்றையும் தணிக்கத் தங்களால் இயன்ற ஒவ்வொன்றையும் அவர்கள் செய்கின்றனர். அவர்களுடைய கருத்தில், தொழிற்சங்கங்களும் பிற ஸ்தாபனங்களும் பங்கு பெறுவதானது அரசு-ஏகபோக அமைப்பில் தொழிலாளி வர்க்கத்தை இணைக்கும் சீர்திருத்தவாதக் கொள்கையில் மற்றுமொரு நடவடிக்கையாகும், புரட்சிகர நடவடிக்கையிலிருந்து தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பிரிக்கும் ஒரு வழியாகும்.

பொருளாதார நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுதல் என்ற கோஷத்தை அறிவிக்கும்படி வலதுசாரி சீர்திருத்தவாதத் தலைவர்களை உழைக்கும் மக்கள் கட்டாயப் படுத்தியதனுல், அவர்கள் தொழிலாளர்களின் ஸ்தூலமான கோரிக்கைகளைக் குறைப்பதற்குத் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்கின்றனர். மீறக் கூடாத தனியார் சொத்துரிமையையும் கூலி உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் ''சட்டபூர்வமான இலாபங்களைப்'' பெறும் உரிமையையும் மீறுவதாகக் கருதப்படும் எல்லாவற்றையும் தவிர்க்க அவர்கள் மிகுந்த கவனம் எடுக்கின்றனர்.

அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் அரசின் வளர்ச்சி யடைந்து கொண்டிருக்கும் பங்கானது முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் ''வர்க்க ஒத்துழைப்பின்'' நிச்சயமான அறிகுறியாக முன்வைக்கப்படுகிறது. இவ்வாறாக சமுதாயம் முழுவதன் மீது கொண்ட அக்கறையின் பேரில் சமூக மோதல்களைத் தீர்க்கக் கூடிய, வர்க்கத் தன்மைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியாக பூர்ஷ்வா அரசு அறிவிக்கப்படுகிறது.

சமூக-ஜனநாயகக் கொள்கைக்கும் பூர்ஷ்வா கொள்கைக்கும் இடையிலான எல்லைகள் எல்லாம் இங்கே அடிக்கடி முற்றிலும் அகற்றப்படுகின்றன. சமூக-ஜனநாயகவாதிகள் தங்களுடைய சொந்த உருவாக்கமாகக் கருதுகிற ''பொதுவான சேம நல அரசு'' என்ற கோஷத்தை கிறித்துவ-ஜனநாயகவாதிகள் தங்களுடையதாக உரிமை கொண்டாடிய போது மேற்கு ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர்கள் தங்களுடைய கடும் சினத்தை மறைக்கவில்லை. பெரும் மூலதனக் கட்சியான கிறித்துவ-ஜனநாயகவாதிகள் தங்களுடைய தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளில் எந்த மாற்றங்களையும் புகுத்தாமல் ஒரு சமூக-ஜனநாயகக் கோஷத்தை எழுத எப்படி முன்வந்தனர் என்று கேட்பது தர்க்க ரீதியானதாகத் தோன்றும்.

இதைப் பற்றி புருனோ கிராய்ஸ்கி நம்பிக்கையான விளக்கம் ஒன்றை அளித்தபோது கூறியதாவது: ''எல்லா ஜனநாயகக் கட்சிகளும் (அதாவது சமூக-ஜனநாயகவாதிகளின் சொற்றொடரின்படி கிட்டத்தட்ட எல்லா பூர்ஷ்வா கட்சிகளும்—ஆ-ர்) சமூக-ஜனநாயகத்தின் சமூக அரசியல் கோரிக்கைகளைப் படிப்படியாக ஓரளவுக்கு அங்கீகரித்துள்ளன''.* இந்த அங்கீகாரமானது முதன்மையாகவும் முக்கியமாகவும் ''ஜனநாயகக்'' கட்சிகள், அதாவது பூர்ஷ்வா கட்சிகள் சமூக-ஜனநாயகவாதிகளின் நிலைக்கு ''உயர்ந்துவிட்டன'' என்பதால் அல்ல, ஆனால் சமூக-ஜனநாயகம் பூர்ஷ்வா கருத்துக்களின் நிலைக்குத் தாழ்ந்து விட்டது என்பதனால் சாத்தியமாகியது.

தற்கால எதார்த்தமானது ''நவீன முதலாளித்துவத்தின்'' பாதுகாவலர்களுக்குப் பெரும் ஏமாற்றங்களை ஏற்படுத்துகிறது. அவர்களுடைய ஜோசியங்களுக்கு மாறாக

* *Die Neue Gesellschaft*, Nr. 3, Mai/Juni 1970, S. 290.

முதலாளித்துவ உலகத்தில் பொருளாதார முரண்பாடுகளும் சிரமங்களும் குறைக்க முடியாத அளவிற்கு மிக அதிகமான தாகவும் சிக்கலானதாகவுமாகிக் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படை முரண்பாடுகளை அரசு-ஏகபோக முதலாளித்துவத்தால் அகற்ற இயலவில்லை. நவீன முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் போக்கில் அதன் சமூக அரசியல் மோதல்கள் மாறுகின்றன. ஆனால் எந்த விதத்திலும் அவை கூர்மையடைவது குறைவதாக இல்லை. பிரச்சினையின் சிக்கலானது முதலாளித்துவ அமைப்பின் எந்தக் குறிப்பிட்ட குறைபாடுகளிலும் இல்லை, ஆனால் வரலாற்று வளர்ச்சியின் தேவைகளுடனான அதனுடைய அடிப்படை முரண்பாட்டில் இருக்கிறது என்பதை உணர முதலாளித்துவ நாடுகளிலுள்ள பொதுமக்களுக்கு இதெல்லாம் உதவியாக வுள்ளது.

சமூக-ஜனநாயகவாதிகளிடையேயும் அவர்களைப் பின் தொடர்வோரிடையேயும் எப்பொழுதையும் விட அதிகமாக ''நவீன முதலாளித்துவ மாயைகளைப்'' பற்றிய விமரிசனம் அடிக்கடி கேட்கப்படுகிறது. பொருளாதாரத்தில் தொழிலாளர்களின் பயனுள்ள மற்றும் நடைமுறைக் கண்காணிப்பை நிறுவுவதற்கான இடதுசாரி சக்திகளின் கோரிக்கையானது அதிகார பூர்வ சமூக-ஜனநாயகக் கட்சியை விட அதிக இடதுசாரிப் போக்குடைய தொழிற்சங்கங்களின் ஆதரவையும் ஸ்தல சமூக-ஜனநாயகக் கட்சி ஸ்தாபனங்கள், சோஷலிஸ்டுகளின் செல்வாக்கின் கீழ் உள்ள இளைஞர் ஸ்தாபனங்கள், இன்னும் பிறவற்றின் ஆதரவையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் ஆஸ்திரிய சோஷலிசக் கட்சியின் மூத்த தலைவரான ஜூலியஸ் பிரெளன்தாலின் பின்வரும் முடிவை சமூக-ஜனநாயகவாதிகள் பலர் ஏற்றுக் கொள்ளுகின்றனர்: ஒரு சோஷலிச சமூக முறைக்கு உற்பத்திச் சாதனங்களைச் சமூகமயமாக்குவது அடிப்படை முன் நிபந்தனையாக இனிமேல் காணாத சோஷலிசக் கட்சிகள் போக்கிடமில்லாமல் முட்டிக் கொள்ளும் ஒரு நிலைக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டன.

சந்தர்ப்பவாதத்தின் சரணாகதியடையும் தன்மையானது குறிப்பாக சோஷலிசத்தைப் பற்றிய பிரச்சினையில் தெளிவாகிறது. சமூக-ஜனநாயகவாதிகள் பன்முறை அரசாங்கங்களை அமைத்த போதிலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்

மையைப் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒரு நாட்டில் கூட உழைக்கும் மக்களை சோஷலிசத்திற்கு இட்டுச் சென்றதில்லை. வலதுசாரி சோஷலிசத் தலைவர்கள் புரட்சிகர அலையைத் தடுப்பதிலும் பல்வகையான சலுகைகளுக்காகவும் சீர்திருத் தங்களுக்காகவும் முதலாளி வர்க்கம் பேரம் பேசக் கூடிய ஒரு வழியில் அதைத் திருப்பி விடவும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்திற்காகவும் தங்களுடைய ஆற்றல் அனைத்தையும் எப்பொழுதும் ஏவினார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் மற்றும் சோஷலிச அரசுகளின் ஐக்கியத்தை அரித்தழிப்பதற்காக, அவற்றை ஒன்றுக் கொன்று எதிராக அமைப்பதற்காக, முதலாவதாக அவற்றை சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் யூனியனுடன் குழப்புவதற்காக சமூக-சீர்திருத்தவாதத்தின் சித்தாந்திகளால் எடுக்கப்பட்ட முயற்சிகளின் அவர் களுடைய கம்யூனிச எதிர்ப்பு முற்றிலும் வெளிப்படையாகிக் கொண்டிருக்கிறது.

மேற்கத்திய முதலாளித்துவ சக்திகளின் ஐக்கியம் ஒன்றை வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் ஆர்வத்துடன் ஆதரிக்கின்றனர். உண்மையில் மேற்கு ஐரோப்பிய ஒருங் கிணைப்பு பற்றிய கருத்திற்கும் ''அட்லாண்டிக் ஒருமைப் பாட்டிற்கும்'' அவர்கள் பல முதலாளி வர்க்கத்தினரை விட அதிகச் சாதகமாக இருக்கின்றனர். ஆனால் அது சோஷலிச அரசுகள் அல்லது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையிலான உறவுகளைப் பற்றிய ஒரு பிரச்சினையானவுடனேயே வலது சாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள் தேசியத் தனிமைப்படு தலினால் கிட்டும் அனுகூலங்கள், பயன்கள் ஆகியவற்றையும் இந்த நாடுகள் மற்றும் கட்சிகளின் நலன்களின் பரஸ்பர முரண்பட்ட தன்மையையும் ஆவேசத்தோடு நிரூபிக்க ஆரம்பிக்கின்றனர். அவர்கள் ''தேசியக் கம்யூனிசத்தின்'' கேடுகெட்ட கருத்துக்களைத் தயக்கமின்றிப் புகழ்கின்றனர்.

சோஷலிச சமுதாயத்தின் அரசியல் அடிப்படைகளையும் சோஷலிச ஜனநாயகத்தின் கோட்பாடுகளையும் தாக்குவதில் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் தனிச் சிறப்பான ஆர் வத்தைக் காட்டுகின்றனர். எனினும் அவர்களுடைய பிர சாரத் தாக்குதல்களின் தீவிரத் தன்மையால் கார்ல் காவுத்ஸ் கியின் காலம் முதல் சீர்திருத்தவாத, திருத்தல்வாதப் போக்கு களையுடைய வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் இந்தத் துறை

யில் அடிப்படையிலேயே புதிதாக எதையும் சாதித்துவிட இயலவில்லை என்ற உண்மையை மறைக்க முடியாது. சோஷலிச நாடுகளிலுள்ள அரசியல் அமைப்பின் ''சர்வாதிகாரத் தன்மை'', ஜனநாயகமும் ''கம்யூனிச சர்வாதிகாரமும்'' ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போக முடியாத தன்மை, சோஷலிச நாடுகளில் ''தனியார் சுதந்திரம் நசுக்கப்படுதல்'' இதைப் போன்ற விஷயங்களை மக்கள் நீண்ட காலத்திற்கு முன்பே வெறுத்த போதிலும் இன்று கூட அவர்கள் அவற்றைப் பற்றித் தொடர்ந்து எழுதுகின்றனர். 1918ல் நடந்தது போல், ''தொழிலாளர்களை ஏய்க்க விரும்பும் ஒரு மிதவாதியின் பொய்யான தொடர்''* என்று லெனின் கூறிய ஒரு ''பொதுவான'', ''சுத்தமான ஜனநாயகத்தை'' அவர்கள் ஜனநாயகத்தின் வர்க்கத் தன்மையைப் பற்றிய மார்க்சிய தத்துவக் கூறுக்கு எதிராக்குகின்றனர்.

சோஷலிச அகிலத்தைச் சார்ந்த பல கட்சிகளின் வேலைத் திட்டங்கள் இன்று வரலாற்று வளர்ச்சியில் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பங்கைப் பற்றி குறிப்பிடக் கூட இல்லை. இதன் இயல்பான விளைவால் இந்தக் கட்சிகளில் குட்டி முதலாளித்துவ சக்திகளையும் பாட்டாளி அல்லாத சக்திகளையும் ஒப்பிடுகையில் தற்போது தொழிலாளர்கள் மிகக் குறைந்த சதவீதத்தினரே உள்ளனர்.

முதலாளித்துவ சமுதாயத்தின் நடுத்தரப் பிரிவினரின் மத்தியில் தொழிலாளி வர்க்கம் படிப்படியாகத் தவிர்க்க முடியாதவாறு கலந்து விடும் என்று கூறப்படும் நிகழ்ச்சிப் போக்கைப் பற்றி தற்போது வலதுசாரி சமூக-ஜனநாயக வாதிகள் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளுடன் ஒரே குரலில் பேசுகின்றனர், எழுதுகின்றனர். எனவே இத்தகையதொரு வர்க்கத்தை ஒரு புரட்சிகர சக்தியாகக் கருதுவது அர்த்தமற்றதாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். சோஷலிசப் புரட்சி என்ற கருத்தே ஆதாரமற்றதாகிக் கொண்டிருக்கிறது என்றும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே எதிர்கால நல்வாய்ப்பு முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பிற்குள்''அடங்குவது'' ஒன்று தான் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 29.

இப்பொழுது இந்த யூகங்களெல்லாம் விஞ்ஞான தொழில் நுணுக்கப் புரட்சியின் செல்வாக்கின் கீழ் பொருளாதார வளர்ச்சியடைந்து முதலாளித்துவ நாடுகளில் பூர்ஷ்வா சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கட்டமைப்பிலும் கூலி உழைப்பாளர் படையின் கட்டமைப்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புறநிலையான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கரத்தாலும் கருத்தாலும் உழைக்கும் கூலி உழைப்பாளர்களிடையே வளர்ந்துவரும் நெருக்கத்தாலும் அவை அதிகப்படுகின்றன.

ஆனால் விஞ்ஞானத்திலும் தொழில்நுணுக்கத்திலும் ஏற்படும் முன்னேற்றங்கள் ஒவ்வொரு இடத்திலும் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லுகின்றன, நவீன உற்பத்தியால் புதிய தொழில்களை உருவாக்குவது இதற்கு உதவுகிறது. எனவே பகைமை சீராக உயரும் என்பதற்கும் மக்களில் பெரும்பான்மையினருக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய ஏகபோகங்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி மேலும் விரிவடையும் என்பதற்கும் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கு தொடர்ந்து வளர்ச்சியடையும் என்பதற்கும் உண்மையான எதிர்கால நல்வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலைமையில் முதலாளித்துவ ஒடுக்குதலிலிருந்து எல்லா உழைக்கும் மக்களையும் விடுவிக்கும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கானது மிக சக்தி வாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட முற்போக்கு சக்தியாக மென்மேலும் உயர்த்தப்படும்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் சமூக-சீர்திருத்தவாதிகள், முதலாளித்துவ சமுதாயத்தைப் புரட்சிகரமாக உருமாற்றம் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட போக்கிற்கு மாற்ருக ''ஜனநாயக சோஷலிசம்'' என்றழைக்கப்படும் வேலைத்திட்டங்களை வைக்கின்றனர். அவர்கள் அப்பொழுது அறிவித்த சித்தாந்த நடுநிலைமையை மனதில் கொண்டு சமூக-ஜனநாயகத் தலைவர்கள், ''ஜனநாயக சோஷலிசத்தின்'' வேலைத்திட்டம் எந்த விதத்திலும் சித்தாந்த பூர்வமானதல்ல, உலகக் கண்ணேட்டமுடைய போதனை அல்ல என்பதை அழுத்திக் கூறுகின்றனர்.

எனினும் இத்தகைய அறிக்கைகள் விமரிசனத்திற்கு ஈடு

கொடுப்பதில்லை. அதற்கு மாருக ''ஜனநாயக சோஷலிசத்தைப்'' பற்றிய கருத்தோட்டமானது நவீன சமூக-சீர்திருத்தவாதத்தின் சித்தாந்த அடித்தளத்தையும் திசையமைவையும் பற்றிக் கணிசமான அளவு தெளிவாகப் புரிந்து கொள்ள வழி வகுக்கிறது. சமூக வளர்ச்சியின் அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றிய சமூக-சீர்திருத்தவாத நிலையை அது பிரதிபலிக்கிறது, சமூக-ஜனநாயகவாதத்தினுல் ஆலோசனை கூறப்பட்ட சமூக வளர்ச்சியின் ''மூன்ருவது வழி'' என்றழைக்கப்படுவதனைப் பற்றிய குணும்சத்தை வெளிப்படுத்துகிறது.

''மூன்ருவது வழியைப்'' பற்றிய தத்துவம் ''கலப்புப் பொருளாதாரம்'' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அதில் தனியார் முதலாளித்துவ ஏகபோகங்கள் அரசு சொத்து, கூட்டுறவு சொத்து, குட்டி முதலாளித்துவ சொத்து ஆகியவற்றுடன் ''ஒரு சட்டபூர்வ அடிப்படையில்'' ஒருங்கே இருக்கின்றன.

அரசியல் துறையில் ஆட்சியதிகாரத்திலிருந்து பெரும் உடைமையாளர்களின் வர்க்கத்தை அப்புறப்படுத்துவதைப் பற்றி ''ஜனநாயக சோஷலிசம்'' சிந்திப்பதில்லை. உண்மையில் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்புக்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பூர்ஷ்வா ஜனநாயக நிறுவனங்களின் உதவியுடன் அவ்வர்க்கத்தினரின் மீது தடைகளை மட்டும் அது திணிக்கும்.

இவ்வாருக, ''செம்மையாக்கப்பட்ட'' முதலாளித்துவத்தின் மற்றுமொரு பதிப்பாக ''ஜனநாயக சோஷலிசம்'' இருக்கிறது. செயலளவில் அது நன்கறிந்த ஒன்றிணையும் தத்துவத்தின் ஒரு வகையாகும். இந்தத் தத்துவமானது முதலாளித்துவத்தின் ஆழமான வேர்கள், பூர்ஷ்வா சட்ட ஒழுங்கின் ஆதாரங்களைப் பாதுகாப்பதையும் அதே நேரத்தில் முதலாளித்துவத்தினுடைய இயற்கையில் நீக்க முடியாத அடிப்படையான முரண்பாடுகளை (எப்படியோ தெரியாது). நீக்குவதையும் எதிர்நோக்குகிறது. தொழிலாளர் இயக்கத்தின் இறுதிக் குறிக்கோள்களை மறுப்பதை மறைக்கவே சோஷலிசம் என்பது குறிப்பிடப்படுகிறது.

இரு அமைப்புகளுக்கிடையிலான போராட்டம், உலக சோஷலிசத்தின் உதாரணம், முதலாளித்துவ உலகத்தின் உறுதியற்ற சமூக மற்றும் பொருளாதார நிலைமை ஆகியவையெல்லாம் சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்குள் உள்ள

இடதுசாரி சக்திகளைச் செயலூக்கத்துடன் இயங்கச் செய்வதிலும் இக்கட்சிகளின் தலைமையின் கொள்கையிலும் பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன. சமூக-ஜனநாயக அரசாங்கங்களின் அயல்நாட்டுக் கொள்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் சமீபத்தில் நடைபெற்றுள்ளன.

சோவியத் யூனியன், போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லொவாக்கியா ஆகிய நாடுகளுடன் உறவுகளைச் சகஜமாக்கும் ஒப்பந்தங்களில் சமூக-ஜனநாயகவாதிகளால் ஆதிக்கம் செலுத்திய மேற்கு ஜெர்மனி அரசாங்கம் கையொப்பமிட்ட பொழுது அரசியல் எதார்த்தவாதத்தின் கை மேலோங்கியது. மேலும், சமூக-ஜனநாயகக் கட்சிகள் ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு பற்றிய ஹெல்சின்கி மாநாட்டையும் வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வின் கோரிக்கைகளுக்கேற்ப அது ஏற்றுக் கொண்ட ஆவணங்களையும் ஆதரிக்க முன்வந்தன.

சோஷலிச அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனுன உறவுகளின் பிரச்சினையைப் பற்றிய விவாதங்களின் அரங்கமாகியது. தொழிலாளர் இயக்கத்தின் ஐக்கியத்திற்கான சோஷலிசத் தொண்டர்களின் கோரிக்கைகளை அதனுடைய தலைமையின் கணிசமான பகுதியினர் இனிமேலும் புறக்கணிக்க முடியாது என்பதை இந்த விவாதங்கள் காட்டின.

பல வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் சோஷலிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் பல்வேறு மட்டங்களில் தொடர்புகள் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில விஷயங்களில் அவை தேர்தல் இயக்கங்களில் ஒத்துழைப்பைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. மற்ற விஷயங்களில் அவை தேசிய சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாகத்திற்கான ஒரு பொது நிலையைத் திட்டமிடுவதை அல்லது வெகுஜன கூட்டு செயல்கள், கூட்டு நடவடிக்கைகள் மற்றும் இதர ஒழுங்கமைப்பைக் குறிக்கோளாகக் கொண்டன.

பின்லாந்தில் கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் பலமுறை அரசாங்கத்தில் கூட்டாகப் பங்கேற்றனர். 1982ல் பிரான்சில் கம்யூனிஸ்டு மற்றும் சோஷலிஸ்டு கட்சிகளும் இடதுசாரி தீவிரவாதிகளும் தேர்தலில் அடைந்த வெற்றிக்குப் பிறகு இடதுசாரி அரசாங்கத்தைத் தோற்று

வித்தனர். கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் தொழிற் சங்க, இளைஞர் மற்றும் பிற வெகுஜன ஸ்தாபனங்களில் அடிக்கடி இன்னும் அதிகமான செயலூக்கத்துடன் ஒத்துழைக்கின்றனர்.

எழுபதுக்கள், சோஷலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் பிற நாடுகளில் உள்ள (உதாரணமாக பின்லாந்து, பெல்ஜியம், ஜப்பான், ஸ்வீடன், ஸ்பெயின் ஆகியவற்றில்) சோஷலிஸ்டு மற்றும் சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்கும் இடையிலான உறவுகள் அதிகரித்துக் கொண்டே இருந்த ஆண்டுகளாகும். சமூக-ஜனநாயக தொழிற்சங்கங்களுக்கும் சோஷலிச நாடுகளின் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவுகள் மென்மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

கூர்மையான உள் போராட்ட நிலைமைகள் மற்றும் வெளியிலிருந்து வரும் பிற்போக்குச் சக்திகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் சமூக-ஜனநாயகக் கொள்கையில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சோஷலிச அரசுகளுடனும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனுமான உறவுகளை மேம்படுத்துவதற்காக சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தலைமையால் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் முரண்பாடுகளும் கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகளும் எதார்த்தமான சோஷலிசத்திற்கு எதிரான தாக்குதல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

போர்த்துகல் நாட்டில் பாசிச சர்வாதிகாரத்தைக் கலைத்த பின் கூர்மையான போராட்ட நிலைமைகளின் கீழ் போர்த்துகல் சோஷலிசக் கட்சியின் தலைமையானது தொழிலாளர் இயக்கத்தில் பிளவைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுப்பதைத் தடுத்ததோடுமட்டுமல்லாது அதை ஆழப்படுத்திக் கொண்டுமிருக்கிறது என்பதை நிகழ்ச்சிகள் காட்டியிருக்கின்றன.

இன்று கூட எல்லா பிரதான பிரச்சினைகளையும் பற்றிய பூர்ஷ்வா கொள்கை வழியை சமூக-சீர்திருத்தவாதக் கட்சிகளின் வலதுசாரித் தலைவர்கள் நிலையாகப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். நேட்டோவையும் பிற ஏகாதிபத்திய கூட்டணிகளையும் மேலும் வலுவாக்குவதை அவர்கள் ஆதரிக்கின்றனர், தங்களுடைய சொந்த நாடுகளில் முதலாளித்துவத்தின் அடிப்படைகளைப் பாதுகாப்பதைக் குறிக்கோளாகக்

கொண்ட ஒரு கொள்கையைப் பின்பற்றுகின்றனர்.

அதே நேரத்தில் சமூக-ஜனநாயகத் தொண்டர்களிடம் முதலாளித்துவ எதிர்ப்பு உணர்வுப் பாங்குகள் அதிகரித்துக் கொண்டேயுள்ளன. இந்த உணர்வுப் பாங்குகள் வர்க்கப் போராட்டத்தைப் பூர்ஷ்வா சமுதாயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாக அங்கீகரிப்பதிலிருந்து தோன்றுகின்றன, எதார்த்தமான சோஷலிசத்தை நோக்கிச் செல்லுகின்றன.

சமூக-ஜனநாயகத் தொண்டர்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் மார்க்சிய-லெனினியத்தின் புரட்சிகர போதனையின் மீதான அக்கறை வளர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சில சோஷலிசக் கட்சிகளில் பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகளைத் தேசியமயமாக்குவதற்கான கோரிக்கையைப் பற்றிய கூர்மையான விவாதங்களில் இது குறிப்பிடத்தக்க முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த உணர்வுப் பாங்குகள் கணிசமான அளவு முரண்பாடற்றதாகவோ உறுதியானதாகவோ அல்லது ஒழுங்கமைக்கப்பட்டதாகவோ இல்லாத போதும் கூட வலதுசாரி சோஷலிசத் தலைவர்கள் அவற்றைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் அவர்களுடைய வேலைத்திட்டம் அதே பழைய ''ஜனநாயக சோஷலிசத்தின்'' எல்லைகளைத் தாண்டிப் போகவில்லை; உதாரணமாக, அவர்கள் ''ஜனநாயக சோஷலிசத்தின்'' ''ஒழுக்க மதிப்புகளை'' (சுதந்திரம், நேர்மை, ஒருமைப்பாடு இதரவை) ஆழமாக்குவதற்கான அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகின்றனர்.

சமூக-ஜனநாயகத் தத்துவவாதிகளின் கருத்து நிலையின்படி சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் நடவடிக்கைக்குக் கிடைக்கும் நிறைவேற்றக் கூடிய மாற்றீடுகளின் ஒரு மொத்தமாக வரையறுக்கப்படுகிறது, நீதி என்பது எல்லோருக்கும் சம வாய்ப்பு என்பதாக வரையறுக்கப்படுகிறது. ஆனால் ஒரு பெரும் தொழிலதிபரினுடைய நடவடிக்கைச் சுதந்திரத்திற்கும் அவருடைய தொழிலாளியின் அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டு அதனால் பிழைக்க வழியில்லாது இருக்கும் ஒரு வேலையில்லாதவரின் நடவடிக்கைச் சுதந்திரத்திற்கும் இடையில் ஏதேனும் ஒப்பீடு இருக்க முடியுமா? முதலாளித்துவ ஒழுங்குமுறை அப்படியே முழுமையாக இருக்கும் பொழுது ஒரு தொழிலதிபருக்கும் ஒரு

தொழிலாளிக்கும் சம வாய்ப்பு என்பதைப் பற்றி எப்படிப் பேச முடியும்? இந்தக் கேள்விகளுக்கு ஏற்றுக் கொள்ளத் தக்க பதில்கள் எதையும் சமூக-ஜனநாயக ஆவணங்கள் வழங்கவில்லை.

''ஜனநாயக சோஷலிசத்தின்'' ''ஒழுக்க மதிப்புகளை ஆழமாக்குவது'' என்ற கருத்தோட்டமானது, சமீப ஆண்டுகளில் மிகவும் பிரபலமாயிருக்கிற ''வாழ்க்கையின் தன்மை'' என்ற கருத்துடன் மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது; இந்தக் கருத்தே பூர்ஷ்வா இலக்கியத்திலிருந்து கடன் வாங்கப்பட்டு, குறிப்பாக எழுபதுக்களின் ஆரம்பத்தில் சமூக-ஜனநாயக வட்டாரங்களில் பரவலாகியது.

புதிய மோஸ்தரான இந்தப் பதத்தைப் பற்றி கணிசமான ஆரவாரமும் விளம்பரமும் இருப்பினும் அதனை ஆதரிப்பவர்கள் மிகத் தெளிவற்ற, புரியாத முறையில் அதன் பொருளை விளக்குகின்றனர். ''வாழ்க்கையின் தன்மை'' என்பதைப் பற்றிய பேச்சானது ஒவ்வொரு அரசியல் கோஷ்டியும் அந்தப் போர்வைக்குள் தன்னுடைய சொந்த அரசியல் சாராம்சத்தைத் தயாரிப்பதைச் சாத்தியமாக்குகிறது என்பதை ஆஸ்திரிய சமூக-ஜனநாயக சஞ்சிகை ஒன்று குறிப்பிட்டது.*

ஒரு வர்க்க சமுதாயத்தில் ''வாழ்க்கையின் தன்மையுடன்'' தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வர்க்க வழிகளைத் தேடக் கூடாது தேடவும் முடியாது, ஆனால் ''பொதுவான மனித'' வழிகளைத் தேட வேண்டும், தேட முடியும் என்றும் இந்த ''வழிகள்'' முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் சமூக-ஜனநாயகத் தத்துவவாதிகள் மக்களுக்கு உறுதியளிக்கின்றனர். இருப்பினும் உற்பத்தி முறையிலும் உற்பத்திச் சாதனங்களின் சொத்து அமைப்பிலும் அடிப்டையான மாற்றங்கள் செய்தால் மட்டுமே வாழ்க்கையின் ஓர் உண்மையான புதிய தன்மையை அடையலாம். பழைய முதலாளித்துவ விதிகளும் மக்களின் வாழ்க்கைக் கோட்பாடுகளும் தொடர்ந்து நிலவுவதால் முதலாளித்துவக் கட்டமைப்புக்குள் செய்யப்படும் பகுதியளவான

* *Die Zukunft*, Nr. $^{20}/_{21}$, 1973, S. 45 பார்க்க.

மாற்றங்கள் புதிய தன்மையைக் குறிப்பிட முடியாது.

சோஷலிசம் மட்டுமே வாழ்க்கையின் ஓர் உண்மையான புதிய தன்மையாகும். அது மட்டுமே எல்லா மக்களுக்கும் சகஜமான வாழ்க்கைச் சூழ்நிலைமைகளை உருவாக்க வல்லதாக இருக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் வாழ்க்கையின் ஒரு ''புதிய தன்மையைப்'' பற்றிய விவாதங்கள், நவீன வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப புதியதான சமூகக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே முதலாளித்துவத்தை உருமாற்றுவதற்கான அவசியத்தின் அடிப்படைப் பிரச்சினையைத் தவிர்க்கும் முயற்சிகளாகும். அவற்றின் புறநிலையான சமூக அர்த்தம் இதில் இருக்கிறது.

சமூக-ஜனநாயகவாதிகள் மத்தியிலும் அவர்களுக்கு வாக்களித்த மக்கள் திரளினர் மத்தியிலும் முதலாளித்துவ எதிர்ப்பு உணர்வுப் பாங்குகளின் வளர்ச்சியானது வலதுசாரி சோஷலிசத் தலைவர்களை, அவர்கள் ''ஜனநாயக சோஷலிசம்'' என்ற பதத்தைப் பயன்படுத்தும் போது ''சோஷலிசம்'' என்ற சொல்லிற்கு அதிகமான அழுத்தத்தைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்துகிறது. உண்மையில், முதலாளித்துவம் குறைகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதால் வலதுசாரி சோஷலிஸ்டுகள் அதை அடிக்கடி கண்டிக்கின்றனர், அது சோஷலிசத்தால் மாற்றீடு செய்யப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் கூறுகின்றனர். ஆனால் இந்த அறிவிப்புகளின் உண்மையான சாராம்சம் அதே பழைய குட்டி முதலாளித்துவ சீர்திருத்தவாதத்தின் கட்டுக்கோப்பைத் தாண்டிச் செல்லுவதில்லை.

நவீன நிலைமைகளில் சமூக-ஜனநாயகத்தின் போர்த்தந்திர மற்றும் செயல்தந்திரங்களைப் பற்றிய விவாதம் எழுபதுக்களின் ஆரம்பத்தில் முக்கிய சமூக-ஜனநாயக சஞ்சிகைகளால் ஆரம்பிக்கப்பட்டது இதன் தனிச்சிறப்பாகும். இந்த விவாதத்தின் போது, சமூக-ஜனநாயகத் தத்துவவாதிகளும் அரசியல்வாதிகளும் தங்களுடைய சீர்திருத்தவாதக் கொள்கையின் சோஷலிசப் போக்கை நிரூபிக்க முயன்றனர்.

ஒவ்வொரு முறையும் அவர்கள் சொற்களிலிருந்து செயல்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும் போது வலதுசாரி சோஷலிசத் தலைவர்களின் உறுதி வேகமாகக் குறைவது தெரிகிறது. உண்மையில், சமூக-ஜனநாயகவாதிகள் ஆட்சியதிகாரத்திலிருக்கும் எந்த ஒரு நாட்டிலும் அவர்களுடைய சீர்திருத்த

நடவடிக்கைகள் பூர்ஷ்வா சட்ட ஒழுங்கு அனுமதிப்பதை விட ஓர் அங்குலம் கூட அதிகம் போவதில்லை. அதற்கு மாறாக, சமூக-ஜனநாயகத் தலைவர்கள் ஆளும் சக்தியான பெரும் மூலதனத்திற்குத் தங்களுடைய விசுவாசத்தைச் சோர்வில்லாமல் வலியுறுத்துகின்றனர். அரசியலில் கூட அவர்களுடைய செயல்கள் பொருளாதார மற்றும் சமூகக் கொந்தளிப்புகளிலிருந்து முதலாளித்துவம் குறைந்தபட்ச இழப்புக்களோடு தப்பிவருவதற்கு உதவுவதைக் குறிக்கோளாகக்கொண்ட பிரத்யட்சமான சீர்திருத்தங்களுக்கு அப்பால் ஒருபோதும் செல்வதில்லை.

இன்று, சமூக-ஜனநாயகவாதிகளின் கம்யூனிச எதிர்ப்பு மிக எச்சரிக்கையான மாறுவேட வடிவத்தில் அடிக்கடி செயல்படுகிறது. கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு நடவடிக்கை என்பதன் மீதான அதிகார பூர்வமான தடை இன்னமும் சில சமூக-ஜனநாயகக் கட்சிகளில் அமுலிலுள்ளது. பூர்ஷ்வா கட்சிகளுடனான தொடர்புகளுக்கு எந்தத் தடைகளும் இல்லை, தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினிய கட்சிகளுடன் ஒத்துழைப்பு இல்லை—இவையே இடதுசாரி ஐக்கியத்தின் எதிரிகளுடைய செயல்களின் வழியும் வர்க்க சாராம்சமுமாகும். வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் இடதுசாரி ஐக்கியத்திற்கான கொள்கையைத் தொடருவதற்குப் பதிலாக அடிக்கடி கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்திலும் மூலதனத்தின் ஆதிக்கத்திற்கு எதிராக ஏவப்பட்ட இடதுசாரி கருத்துக்களைப் பற்றிய அவதூறு செய்வதிலும் பிற்போக்கு சக்திகளுடன் போட்டி போடுகின்றனர்.

தொழிலாளி வர்க்க ஐக்கியத்திற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தீர்க்கமான முக்கியத்துவமளிக்கின்றன. உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களுக்கான போராட்டத்தில் சமூக-ஜனநாயகவாதிகளுடன் ஒத்துழைப்பதை அவை ஆதரிக்கின்றன. இயல்பாகவே, இந்தக் கூட்டுப் போராட்டத்தைப் பயனுள்ளதாகச் செய்ய சமூக-ஜனநாயகக் கட்சிகள் முதலாளி வர்க்கத்துடனான தங்களுடைய வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையை உறுதியாக விட்டொழிக்க வேண்டும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரசில் மத்திய கமிட்டியின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டது:

''சமாதானம் மற்றும் ஜனநாயக இலட்சியங்களின் முன்

னேற்றத்துக்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் நாம் தீவிரமாக ஆதரிப்போம். சர்வதேச அரங்கில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைகளின் கீழ் போரைத் தடுப்பதற்காகவும் சமாதானத்தைப் பலப்படுத்துவதற்காகவும் சமூக-ஜனநாயகவாதிகள், தொழிற்சங்கங்கள், மதக் குழுக்கள், எல்லா வகையான ஜனநாயக மற்றும் சமாதான சக்திகளோடும் ஒத்துழைப்பது முக்கியமென்று நாம் கருதுகிறோம்.''

இடதுசாரிகளுடன் கூட்டுச் செயல் என்ற கம்யூனிஸ்டுகளின் கொள்கை வெகுஜனங்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறது. பல முதலாளித்துவ நாடுகளில் எல்லா உழைக்கும் மக்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு தொழிலாளி வர்க்கம் தொடுத்திருக்கும் போராட்டங்கள் ஏகபோகங்களின் ஆட்சியதிகாரத்தை அசைத்துக் கொண்டிருக்கின்றன, முதலாளித்துவ சமுதாயத்தின் உறுதியற்ற தன்மையைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உலக சமாதானத்திற்காகவும் மனிதகுலம் முழுவதற்குமான ஒளிமயமான எதிர்காலத்திற்காகவும் கூட்டு நடவடிக்கைகள் அவசியம் என்பதை பரந்த மக்கள் திரளினர் வர்க்கப் போராட்டத்தில் உணரத் தொடங்கியுள்ளனர்.

* * *

மார்க்சிய-லெனினிய கருத்துக்களும் எதார்த்தமான சோஷலிசத்தின் உதாரணமும் உலகத்தின் மீது அதிக ஆழமான சக்திமிக்க விளைவை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. வரலாற்று வளர்ச்சியின் போக்கில், மக்களின் உள்ளங்களில் மார்க்சிய-லெனினியத்தின் செல்வாக்கின் வீச்சுடனே அல்லது ஆழத்துடனே வேறு எந்தத் தத்துவத்தையும் ஒப்பிட முடியாது.

மார்க்சிய-லெனினியசித்தாந்தம்மட்டுமேமனிதகுலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஜீவாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க வல்லது என்றும் விரைவான சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கும் மனிதனை மனிதன் சுரண்டுகிற வடிவங்கள் எல்லாவற்றையும் ஒழிப்பதற்கும் உழைக்கும் மக்கள் திரளினருக்கு உயர்ந்த பொருளாயத மற்றும் கலாச்சார வாழ்க்கைத் தரங்களையும் சமாதானத்தையும் சர்வதேச பாதுகாப்பையும் உறுதிப் படுத்துவதற்

கும் ஒரே வழி என்றும் உறுதியாக நம்புகின்ற புது ஆதர வாளர்களை அது மென்மேலும் பெற்றுக் கொண்டிருக் கிறது.

கம்யூனிஸ்டுகள் உலகத்திற்கு வழங்குகிற ஆழமான மனி தாபிமானமிக்க வேலைத்திட்டத்திற்கு மாற்றாக பூர்ஷ்வா சித்தாந்தத்திடம் வேறு ஒன்றுமில்லை. மக்களினங்களை ஈர்க்க வல்ல எதிர்கால நல்வாய்ப்புகள், உயர்ந்த குறிக்கோள்கள் ஆகிய பிரதான விஷயங்களில் முதலாளி வர்க்கம் குறை பாடுடையதாக உள்ளது. ஆனால் வரலாற்று ரீதியாகவே அழிகின்ற அமைப்பான முதலாளித்துவம் இத்தகைய செல் வங்களைப் பெற்றிருக்க முடியாது. இன்று, முதலாளித்து வத்தின் எல்லாக் கேடுகள் மற்றும் அவசரமான உலகப் பிரச் சினைகளைத் தீர்க்க அதன் இயலாமை ஆகியவற்றுக்கு மனித வளர்ச்சியின் முழுப் போக்குமே காரணம் என்று காட்டு வதற்கு பூர்ஷ்வா சித்தாந்தம் தன்னுடைய அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு வழியையும் பயன்படுத்திக் கொண்டிருக் கிறது; சோஷலிச வழியில் சமுதாயத்தைப் புதுப்பிக்கும் சாத்தியப்பாட்டிலுள்ள நம்பிக்கை அனைத்தையும் அழிப் பதும் புரட்சிகரமான போராட்டத்தின் பயனற்றதன்மையை நிரூபிப்பதும் இதன் நோக்கமாகும்.

அல்வார் குன்யாலுடன் 1984 மேயில் நடந்த சந்திப்பின் போது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளரும் சோவியத் ஜனாதிபதியுமான கா. உ. செர்னென்கோ பின்வருமாறு கூறினார்: ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்த மட்டில் சமா தானத்தைப் பலப்படுத்துவதற்காகவும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் தக்க பதிலடி தந்து கொண்டே பதட்டத் தணிவிற்குத் திரும்பிச் செல்வதற்காகவும் தீவிரமாகப் போராடுவதில்தான் இது தனது சர்வதேசியக் கடமையைக் காணுகிறது. பிற்போக்கு மற்றும் ஏகாதிபத்தியத் திற்கு எதிராகப் போராடும் வீரர்களுடன் நமது ஒருமைப் பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இரு கடமை களும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பரஸ்பரம் தொடர்பு கொண்டவை. இவற்றில் ஏதாவது ஒன்றிலிருந்து விலகுவது என்பது கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த மட்டில் இவர்களின் அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்து விலகுவதாகும் என்று நாங்கள் கருதுகின்றோம்.''

எதிர்காலத்திற்கான உண்மையான ஒரே பாதையை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் போதனை காட்டுகிறது. சமாதானத்தையும் சுதந்திரத்தையும் சமூக முன்னேற்றத்தையும் விரும்புகின்ற உழைக்கும் மனிதகுலம் முழுவதன் அடிப்படை நலன்களை அது வெளிப்படுத்துகிறது.

**வாசகர்களுக்கு**

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

தலைமை அலுவலகம்

*41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098.*

ஷோ-ரூம்

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600 002.*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625 001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641 001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620 008.*
*செர்ரி ரோடு, சேலம்—636 001.*

விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*